உ

சிவமயம்

ஸ்ரீ சௌடாம்பிகை துணை

# முத்துக்காமாக்ஷி

225384

ஓர் சிறந்த செந்தமிழ் நாவல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 OCT 1913
MADRAS.

இஃது

அருப்புக்கோட்டை சைவபாநு க்ஷத்திரிய
சேக்கண்டரி பாடசாலை முதல் உதவி உபாத்தியாயர்
தேவாங்கர்குலம்
யஸ். நாகலிங்கம் செட்டியாரால்
இயற்றப்பட்டு

சென்னை :
"கார்டியன் அச்சியந்திரசாலையில்"
பதிப்பிக்கப்பட்டது

1913

[...அணா 12] [Price As. 12

PRINTED AT THE GUARDIAN PRESS
MOUNT ROAD, MADRAS

2336
894.8113

# முகவுரை

நெடிய கடல் சூழ்ந்த உலகமும், அவ்வுலகின் கண்ணுள்ள சகல சராசரங்களும், மற்றும், மாயாசக்தியினால் சாமான்னியர்களுக்கு நித்தியமாகத் தோன்றும். அதிலும், இக்கலிகாலத்தில், இல்லாதவைகள் அனைத்தும் உள்ளனபோலவும் உள்ளன வெல்லாம் இல்லாதன போலவும் காணுவதியற்கை. இதற்கிணங்க, "நேர்நின்று காக்கை வெளிதென்பார் என்சொலார், தாய்க்கொலை சால்புடைத்தென்பாரு முண்டு" எனவான்றோர் வாக்கியமும் ஏற்பட்டிருக்கின்றது. இஃதன்றியும் அளவிறந்த காதலுக்குரிய சுற்றத்தார், நாடோறும் இறந்து படுவதை நேரில் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்ப் பார்த்தும், மாந்தர்கள் ஒவ்வொருவரும், சாஸ்வதமாய் என்று மிருந்து வாழக்கூடியவரென மதித்து நடக்கின்றனர். ஆனால் உண்மையான பேரறிவுடைய மகான்கள் மாத்திரம், அவையெல்லாம் அழிந்துபோமெனவும், சுருதி, யுக்தி, யநுபவங்களால் தெள்ளிதினுணர்ந்து, பகவான் அருளை நாடிப் பேரின்பவீட்டிற்குப் பாத்திரராக நிற்பர்.

ஆகவே, நாம், புறத்தோற்றத்தினால் ஒன்றையும் நிச்சயிக்கலாகாது. "கண்ணாரக்காண்பதும் பொய், காதாரக்கேட்பதும் பொய், தீரவிசாரிப்பது மெய்" என்னும் நீதிக்கிணங்க எதையும் ஆராய்ந்தறிந்த பின்னரே நிச்சயிக்கவேண்டும். அங்

னமின்றேல், பலவிதத் துன்பங்களுக்காளாகி வருந்த வேண்டியதாகவரும்.

ஆனதினலே, இத்தன்மையை ஒரு கதைமூலமாக விளக்கக்கருதி, ஆங்காங்கு பலநீதிகளுடனும், பொதுவாய் நடமவர் எளிதில் வாசித்தறியக்கூடியதாகத் தெள்ளிய நடையிலும், இந்த நாவலை எழுதலுற்றேன். இது விஷயத் என்னை யுற்சாகப்படுத்திய நண்பர்களுக்கு நன்றி பாரா கிறேன்.

பலவித துன்பங்களுக்கிடையில் இது எழுதப்பட்டதனுல், சிற்சிலபாகங்கள், என் மனதிற்கே திருப்திகரமாயிருக்கவில்லை. ஆயினும் இதை வாசிக்கும் கனவான்கள், இதிலுள்ள குற்றமனைத்தும்நீக்கி, குணத்தை மாத்திரம் கிரகித்து, என்னை மேன்மைப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

யஸ். நா.

22

# அட்டவணை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | விருத்தாந்தம் | 1 |
| 2. | சம்வாதம் | 10 |
| 3. | தாரகர்கள் | 17 |
| 4. | தபால் வண்டி | 23 |
| 5. | நிச்சயதாம்பூலம் | 32 |
| 6. | காதலரியல்பு | 42 |
| 7. | கபடாலோசனை | 53 |
| 8. | ஆரவாரம் | 59 |
| 9. | பிரயாணம் | 65 |
| 10. | கல்யாண வீடு | 75 |
| 11. | ஆசுப்பத்திரி | 81 |
| 12. | பரமானந்தர் | 87 |
| 13. | மலைக்கோட்டை | 92 |
| 14. | பூஜைமடம் | 99 |
| 15. | பெரிய கார்த்திகை | 106 |
| 16. | நேசர் வருகை | 114 |
| 17. | கண்காட்சி | 119 |
| 18. | உண்மை விளக்கம் | 125 |
| 19. | சந்தேக நிவர்த்தி | 133 |
| 20. | கலியாணம் | 140 |
| 21. | கமலா | 148 |
| 22. | சாமி கும்பிடு | 156 |
| 23. | சிங்காரத் தோப்பு | 164 |
| 24. | சம்பாஷணை | 174 |
| 25. | லீலா | 179 |
| 26. | கும்பாபிஷேகம் | 185 |
| 27. | முடிவு | 196 |



S. NAGALINGAM CHETTIAR

# MUTHUKKAMAKSHI

# முத்துக்காமாக்ஷி

## 1-வது அத்தியாயம்

### விருத்தாந்தம்

பார்மகள் தனக்கோர் திலகமா யிலங்கும் பாண்டிய நாட்டின்கண், நீர்வள நிலவளங்களிற் சிறந்த "திருநல்லூர்" என்று பெயர்விளங்கிய அருப்புக்கோட்டை என்னும் ஒரு ஊர் இருக்கிறது. இவ்வூரைச் சுற்றி நாலு பக்கமும் வேலி போல, மல்லிகை, பிச்சி, இருவாட்சி, சண்பகம் முதலிய நறுமணங் கமழும் மலர்கள், நாடோறும் யதேஷ்டமாய் புஷ்பிக்கும் நந்தன வனங்கள் பல வுண்டு. தினந் தினம் இந்த வனங்களிற் கிடைக்கும் பூவரும்புகள் கோட்டை யளவாய் குவியப்பெறுதலால் இவ்வூருக்கு "அருப்புக்கோட்டை" என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று போலும். இத்தகைய சிறப்புவாய்ந்த நகரத்தின் மத்தியில் "ஸ்ரீசௌடாம்பிகையின்" திருக்கோயில் ஒன்று விளங்குகின்றது. இஃது, சிவபெருமான் திருநுதலில் உற்பவித்த தேவலமுநிவரின் மரபினரால் கட்டப்பட்டு, அன்னவர்களால் இவ்வாலயம் அனுதினமும் பரிபாலிக்கப் பெற்று வருகின்றது. இந்தத் திருக்கோவிலுக்குத் தென்பாரிசத்தில், புராதனமாய் "பெரியவீடு, பெரியவீடு" என்று சொல்லப்பட்டு வரும் ஒரு அழகிய மாளிகையில், இந்த ஊர் ஏற்பட்ட கால

முதல் வம்மிச பாம்பரையாய் தனவந்தர்களாயும், செல்வாக் குடையவர்களாயும், தருமசிந்தை, தேவதாபக்தி, அடியார் பூசை இவைகளில் மிகவும் சிரத்தை யுடையவர்களாயு முள்ள மேன்மையான குடும்பம் ஒன்று இருந்து வருகின்றது. ஆனல் நம் கதாரம்பத்தில் இந்தக் குடும்பத்திற்கு இராமலிங்கம் செட்டியார் என்பவர் தலைவரா யிருந்தார். அவருக்கு வயது ஏறக்குறைய நாற்பத்தைந்து இருக்கலாம். இவர் பருத்த வுடலும், விசாலமான நெற்றியும், திரண்ட தோள்களும், கம்பீர மான தோற்றமும் படைத்தவர். இவருடைய நற்குணங்களும், சற்சன சகவாசமும், நல்லொழுக்கமும் வியக்கத் தக்கனவே. களங்கமற்ற மனதுடையவர். வஞ்சகமென்பது இவரிடம் கொஞ்சமும் கிடையாது.கல்வி விஷயத்தில் இவருக்கு இலக்கிய இலக்கணப் பயிற்சி யில்லாவிட்டாலும், குடும்ப காரியங்களை செவ்வையாய் நடத்துதற் கேற்ற படிப்பும்,சாமர்த்தியமும்,இவ ரிடத்தில் உண்டு. இவரது மனைவி, உருவத்திலும், அழகிலும், குணத்திலும் மிகுந்தவள். லட்சுமி யென்பது அவளுடைய் நாமதேயம்.எல்லா விதத்திலும் இப்பெயர் இவளுக்குப் பொருந் தியதே. மதுரையில் தெற்குமாசி வீதியில் ஓர் சிறந்த மாளி கையில் வசிக்கும் பெருமாள் செட்டியார் இவளுடைய பிதா. இவர் மிகுந்த பணக்காரர். நாலா விதங்களிலும் வியாபாரம் செய்து ஏராளமாகப் பொருள் சம்பாதித்தவர். இப்படிப்பட்ட செல்வவானின் ஒரே அருமைப்புத்திரியாகப் பிறந்து, அதிலும் அதிக ஐசுவரியம் படைத்த இராமலிங்கம் செட்டியாரை மணந்த இந்த லட்சுமிக்கு, வேளைக்குவேளை பற்பல நூதன வுடைகள் தரித்துக்கொள்ளுவதிலும், விலையுயர்ந்த ஆபரணங் கள் அணிந்து கொள்ளுவதிலும் அதிகம் பிரேமை யேற்பட் டிருந்தது ஆச்சரியமல்ல. இந்தக் குணம் இவளுக்கு மட்டுமி

ரம் உரியதன்று. பொதுவாய் எல்லா தேசத்துப் பெண்களுக்கும் உள்ளதே. மிகவும் எளியவர்களுங்கூட இது விஷயத்தில் அதிக ஆசை யுடையவர்களா யிருந்தால் பணக்காரப் பெண்டுகளைப் பற்றிக் கேட்பானேன்? எத்தனைப் பெண்கள் தங்கள் குடும்ப ஸ்திதியை யோசாமல் அல்லும் பகலும் தங்கள் கணவரை இவைகளினிமித்தம் அல்லற் படுத்துகிறார்கள்! இதினாலல்லவோ

"நன்மனைதோறும் பெண்களைப்படைத்து
நமனையுமென்செயப் படைத்தாய்"

என்று ஆன்றோர் வாக்கியமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸ்திரீகளினும் எமனை ஒருவிதத்தில் நல்லவ னென்றே சொல்ல வேண்டும், எப்படியென்றால், இயமனாவது சொற்பநேரம் உயிர்களை வாட்டாநிற்பான். ஆனால், இவர்களோ, கொண்ட ஏழை நாயகனை இரவும் பகலும் "இது வாங்கிக்கொடுக்கவேண்டும், அதற்குப் பணம் எப்போ கொடுக்கிறீர்கள்" என்று சித்திரவதை செய்யாமற்செய்து வருகின்றனர். பகலெல்லாம் வெளியே போய் வயிற்றுத்திரத்தி னிமித்தம் வெயர்வை சிந்த உடல் வருந்திப் பாடுபட்டு எப்போது வீட்டுக்குப்போய் சற்று களைப் பாறுவோம் என்றெண்ணி வருபவனுக்கு இம்மாதிரியான மனக் கவலைகளை ஓயாமற் கொடுத்துக் கொண்டிருந்தால் எவ்வணம் பொறுப்பான்? நிற்க.

இந்த லட்சுமியம்மாள் ஏற்கனவே நல்ல குடும்பத்திற் பிறந்து, இவ்விகத்துக்குரிய சகல லட்சணங்களும் வாய்ந்த ஓர் புருடனுக்குப் பாரியாகி, தன் குடும்பத்திலுள்ள எல்லாக் காரியங்களையும் தானே நிர்வகித்து நடத்திவந்து, சகல விதத்திலும் தன்னாயகனாகிய இராமலிங்கம் செட்டியாருக்கு இயைந்த

வாழ்க்கைத் துணைவியாய் நின்றனள். ஆகவே,இம்மையில் சகல போக போக்கியங்களையும் குறைவில்லாமல் அனுபவித்து வரும் நம்முடைய பெரிய வீட்டுத் தலைவருக்கு அழகில் நிகரற்ற "முத்துக்காமாக்ஷி" என்னும் பெயரோடு கூடிய ஒரு புத்திரியை யல்லாது வேறு மக்கட்பேறில்லை. ஆண்மகவில்லாக் குறையினால் அவர் படைத்த எல்லாச் செல்வங்களும் அவருக்கு இல்லாதன போலவே தோன்றின.

"பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்
றென்னுடைய ரேனுமுடையரோ,"

என்று பலகால் வருந்தி மனம் புண்படநின்று பெருமூச்செறிவார். பிதிர்க்கடனியற்றும் உரிமை பெண்களுக்கில்லாததினாலே, "புத்" என்னும் நரகத்தினின்றும் என்னை மீட்டும்படியான வொரு புத்திரனைப்பெறாத பாவியானேனே" என்று துக்கமிகுதியினால் சிலவேளை கண்ணீரும் சிந்துவார். இதற்காக அநேக தான தருமங்களைச் செய்தும், தீர்த்தயாத்திரை போய் அநேக புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தும், அவருடைய காரியம் சித்தி பெறவில்லை. "மேலைத் தவத்தளவே யாகுமாந் தான் பெற்ற செல்வம்" என்ற முதுமொழிக் கிணங்கப் பூருவத்திற் புண்ணியஞ் செய்திருந்தா லல்லவோ அவரது எண்ணங் கைகூடும்! ஆனால் இந்தப் பெருங் குறைவையும் ஒருவாறு நிவிர்த்தித்துக் கொள்ளும்படியான மார்க்கம் ஒன்று பிற்பாடுண்டானது. எப்படியென்றால்

இவர் வசிக்கும்படியான தெருவின் மேற்குக் கடைசியில் ஒரு பெரிய வீட்டில் இவருடைய அருமைச் சகோதரியின் புருஷன் சுந்தரம் செட்டியார் வசித்துவந்தார். எல்லா விஷயங்களிலும் அவரை நம்முடைய இராமலிங்கம் செட்டியாருக்கு

அநேகமாய்த் தாழ்ந்தவரல்ல வென்றுதான் கூறவேண்டும். ஆனால் கல்வியிற் சிறந்தவர். இவர் வியாபார விஷயமாய் அடிக்கடி வெளியூர்களுக்குப் போய் வருவதுண்டு. இவரது வீட்டில், இவருடைய பாட்டனார் சோமசுந்தரம் செட்டியார் காலமுதற்கொண்டு, கள்ளர் குலத்திற் பிறந்தோராயினும், இவர்களுக்கு மனப்பூர்வமான விசுவாசத்துடன் ஊழியஞ் செய்துவரும் ஒரு குடும்பமும்,இவர்களுடைய ஆதரவிலிருந்துவருகிறது. அந்தக் குடும்பத்திற்கு இப்பொழுது தலைவனாயிருக்கிற வீரன் என்பவன், தன்னெஜமானான சுந்தரஞ் செட்டியார், அயல்நாடுகளுக்குப்போக நேரிடுங் காலங்களில், இவருடைய வீட்டினுள்ள சகல கார்யங்களையும் தானே மேற்பார்த்து நடத்திவருவான். எஜமான் குடும்பத்தில் எதாவது கஷ்டம் வரும்போது இந்தப் பண்ணைக்காரன், தன்னுயிரையும் மதியாமல் கொடுக்கத் தயாராயிருப்பான். குலந்தான் கள்ளர் குலமேயொழிய குணமெல்லாம் வெள்ளை. இப்படிப்பட்ட உண்மையான வேலைக்காரனையடைந்திருக்கிற எசமானுக்கு என்ன குறைவுண்டாகும்? நிற்க.

இந்தச் சுந்தரம் செட்டியாருக்கு “ சங்கரன் ” என்னும் இரண்டு வயதுடைய குமாரன் ஒருவன் இருந்தான். அவனைத் தாய் தந்தையர்கள் அருமையாக வளர்த்து வருங்காலத்தில், சுந்தரம்செட்டியார் வியாபார சம்பந்தமாய் திடீரென்று கொளும்புக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். வெகுகாலமாக அவர் யாதொரு கடிதப் போக்குவரவும் வைத்துக்கொள்ளாததினாலே, அவர் எந்த இடத்தில், என்ன ஸ்திதியிலிருக்கிறார் ? என்று ஒருவருக்கும் தெரியாமற் போய்விட்டது. அவர் போன மூன்று மாதத்தில், அவரது நேசமனைவியும், இராமலிங்கம் செட்டியாருக்கு அருமைச் சகோதரியுமான நம்முடைய சங்கரன் தாய், தன்னுயகனுடைய நிலைமை தெரியாத ஏக்கத்தினால், நோயில்

விழுந்து படுத்த படுக்கையாய்க் கிடந்து சில நாளில் இவ்வுலக வாழ்வை நீத்துப் பாகதி யடைந்தனள். அதனுல் தாய் தந்தை யரை யிழந்த சங்கரனை இராமலிங்கம் செட்டியார் வளர்த்து வந்தார். இந்த சங்கரனுக்கு ஆறு வயதாகும்போது தான், இராமலிங்கம் செட்டியாருக்கு முத்துக்காமாக்ஷியம்மை பிறந்தாள். இவர்கள் இரண்டு பேரும் ஒரே வீட்டில் நேசமாய் வளர்ந்து வந்தார்கள். சங்கரன் இவ்வூரிலுள்ள "ஹிந்து தேவாங்கர் ஸ்கூலிலும்," பிற்பாடு "க்ஷத்திரிய வித்தியா சாலையிலும்" கொஞ்சகாலம் வாசித்து கல்வியில் தேறி பின்பு மதுரையில் சிலநாள் வாசித்துக்கொண்டிருந்து மெற்றிக்குலேஷன் பரீக்ஷை தேறி இப்போது சென்னையில் யப். ஏ. வகுப்பில் படித்து வருகிறுன்.

ஆனுல் முத்துக்காமாக்ஷியோ இளமைதொட்டு மிகவும் செல்வமாக வளர்ந்து வந்தனளாதலால், கஷ்டம் என்பதின்ன தெனக் கனவிலும் அறியாதவளாயிருந்தாள். அவள் இக்காலத்து நாகரீகத்திற் கிசைந்த கல்விப் பயிற்சி பெற்று மங்கைப் பருவ மடையும் ஸ்திதியி லிருக்கிறுள். இவள் இளமையில் கல்வி யட்பியசிப்பதற்குக் காரணம் இவளது அத்தை மகனுகிய சங்கரன் தான். எப்படியென்றுல், அவன் இவ்வூர் ஸ்கூல்களில் வாசித்துக் கொண்டிருக்கும்போது, முத்துக்காமாக்ஷி அடிக்கடி அவனிடம் போய், "அத்தான் நீங்கள் நல்ல நல்ல கதைப் புஸ்தகங்களெல்லாம் வாசிக்கிறீர்களே, நானுமப்படி வாசிக்க வேண்டுமானுல் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டு வந்தாள். அதற்கு சங்கரன் "காமாக்ஷி, நீயும் என்னைப்போல உபாத்தியாயர்களை யடுத்துப் படிக்கவேண்டும்" என்றுன். அதன்பேரில் முத்துக்காமாக்ஷி "நீங்கள்தான் எனக்குச் சொல்லிக் கொடுக்கலாகாதா?" என்று கேட்டாள். ஆகவே

அவள் கருத்தின்படியே சங்கரன் உடன்பட்டுத் தனக்குச் சாவகாசம் வாய்த்த போதெல்லாம் அவளுக்குப் போதித்து வந்தான். நாளுக்குநாள் முத்துக்காமாக்ஷிக்குக் கல்வியாசை வளர வளரத், தானும் போய் பள்ளிக்கூடத்தில் வாசிக்கத் தனக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று தன் பெற்றோர் களை மன்றாடிக் கேட்டாள். ஏனென்றால் அவர்கள் பெண் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கலாகாதென்ற கொள்கையுடைய வர்கள்.ஆயினும் தங்களுக்கு வேறு ஆண்குழந்தை யில்லாதது பற்றி, இவளுடைய விருப்பப்பிரகாரம் இவளை ஸ்கூலுக்கு அனுப்பி வைத்தார்கள். பிரைமரி பரீக்ஷை தேறியவுடன் மேல் படிப்பதற்கு இவள் வாசித்து வந்த கல்விச்சாலையில் இடமில் லாததினாலும், பருவம் சம்மதிக்காத படியினாலும், வீட்டிலே தானே தங்கிவிட நேர்ந்தது. ஆனபோதிலும் அம்மட்டோடு நிறுத்திவிடாமல் சாவகாசம் வாய்த்த போதெல்லாம், பெண்க ளுக்குரிய நீதி, ஒழுக்கம் இவைகளை நன்றாய்ப் போதிக்கும்படி யான அருமையான நூல்களை வாசித்து வந்தாள். இவளுக்கு மேல் வாசிக்கும் எண்ணம் தடைப்பட்டதெனினும், தன்னு டைய அத்தான் சங்கரனாகிலும் உயர்தரக் கலாசாலைகளிற்படித் துப் பெரிய பரீக்ஷைகளில் தேறியிருக்க வேண்டுமென்பது அவ ளுடைய அந்தரங்கமான கருத்து. இது காரணமாய் சங்கரன் சென்னைக்குப் போனபிறகுங்கூட தான் அவனுக்கு எழுதுங் கடிதங்களி லெல்லாம் அவனுடைய கல்வித் தேற்சியைப்பற்றி யெழுதிக்கேட்டு அடிக்கடி விசாரித்து வந்தாள்.

சுபாவத்தில் காமவல்லிக்கொடி போன்ற நம்முடைய முத்துக்காமாக்ஷியம்மை, பேதும்பைப்பருவங் கடந்து மங்கைப் பருவத்தை யணுகுந் தறுவாயில், அவளைக் கண்டவர்கள் அவ ளுடைய அழகைப்பற்றி வியந்து பேசாதிருந்திருக்கமாட்டார்

கள். முற்றுந் துறந்த முநிசிரேஷ்டர்களுங்கூட இவளைக் கண்ணுற்ற மாத்திரத்தில் தம்மனதைக் கொள்ளைகொள்ள விடாதிருக்கமாட்டார்கள். ஏனெனில் சூல்கொண்ட மேகத்தைப் பழித்த அவளது அளகபாரத்தையும், பிள்ளைமதியை யொத்த நெற்றியையும், வில்லுக்கிணையான இரண்டு புருவங்களையும், காவிபோன்ற கண்களையும், குமிழ மலருக்குச் சரியான மூக்கையும், செவ்வல்லிப் புஷ்பத்தை நிகர்த்த இதழ்களையும், பவளப் பாத்திரத்தில் தெரிந்தெடுத்த முத்துக்களை வரிசைப் படக் கோர்த்து வைத்தாலொப்ப பல்வரிசைகளையும், பூர்ண சந்திரனுக்குச் சமானமான முகத்தையும், இதர அங்கங்களையும் கண்டோர்கள், இவள் திருப்பாற்கடல் விட்டிங்கெழுந்தருளி யிருக்கும் பால லட்சுமியென்று உறுதியாய்க் கூறுவார்களென்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இவ்வித மிருக்கையில், இவள் மங்கைப் பருவ மடையு முன்னமே இவளை மணஞ்செய்து கொடுப்பது இவளுடைய மரபோருக்கு வழக்கமாயினும், இவளுக்குத் தகுந்த நாயகனை விரைவில் தேடவேண்டும் என்ற எண்ணம் இவளுடைய பெற்றோர்களுக்கு அணுவளவுங் கிடையாது. ஏனென்றால் இராமலிங்கம் செட்டியாருக்குத் தன் மருகனான சங்கரனுக்கு இவளைக் கலியாணஞ் செய்துவைத்து தனக்குப்பின் தன் குடும்பத் தலைவனாக்க வேண்டுமென்ற நோக்க மிருந்து வந்தது. அதற்கிணங்க, "இன்னும் இரண்டு மாதத்துக்குள் சங்கரன் பரீக்ஷை முடிந்து போய்விடும். அவனும் ஊருக்கு வந்து விடுவான். வந்தவுடன் விவாக காரியத்தை முடித்துக் கொள்ளலாமென்று" நினைத்திருந்தார். ஆனால் இவரது மனைவி லெட்சுமியம்மாளின் நோக்கம் வேறாயிருந்தது. அதாவது மதுரையில் அவளுடைய சிறிய தகப்பனார் மகனான இராமசாமிக்குத் தன் மகள் முத்து

காமாக்ஷியை மணமுடித்து வைக்கவேண்டு மென்பது அவளு டைய அந்தரங்கமான உத்தேசம். இராமசாமிக்குப் படிப் பென்பதே தெரியாது. நிழலுக்காகவாவது ஒரு நாளாயினும் சரிவர எந்தப் பள்ளிக்கூடத்திலும் தங்கி யிருந்திருக்க மாட் டான். ஆனால் இப்படிப்பட்ட தற்குறியாசாமிக்குத் தன் னேக புத்திரியை லெட்சுமி யெப்படிக் கொடுக்க இசைந்திருந் தாளென்றால், அவன் பணக்காரனா யிருக்கிறான்.

"கல்லானேயானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வார்,"

என்ற கொள்கை யுடையவள். செல்வமானது ஒரு இடத்தில் நிலையாக நிற்கமாட்டாது. செல்வம், செல்வம் என்று கொண்டேயிருக்கும் என்கிற தன்மை அவள் நன்று யுணர்ந்திருந்தும், லெட்சுமிக்கு ஆண்மக வில்லாதது பற் றித் தனக்குப் பிற்காலத்தில் தன்னுடைய குடும்பப் பொருளனைத்தும் தன் பெற்றோர் வழியிற் போய்ச் சேரவேண்டு மென்பது அவளுடைய உட்கருத்தா யிருந்தது. இஃதை நிறை வேற்ற நினைத்துத் தனக்குச் சமயம் வாய்த்த போதெல்லாம் காரண மில்லாமலே சங்கரனை யடிக்கடிக் கோபித்துவந்தாள். ஆனால் இதனையெல்லாம் சங்கரன் பொறுமையுடன் கேட்டுச் சகித்துவந்தான். தனக்குப் பெற்றோர் உதவியில்லா திருப்பதி னாலே சகித்துக்கொண்டிருக்கிறானென்றல்ல, தான் யாதொரு குற்றமும் செய்யாதிருக்கப் பிறர் எப்படிக் கடிந்துகொண்டால் தானென்ன என்கிற எண்ணமே யொழிய வேறில்லை. ஆகவே எதற்கும் மறுமொழி சொல்லாம லிருந்து விடுவான். ஆனால் இந்தமாதிரி காரண மில்லாமல் சினந்துகொள்ளுங் குணம் நம் முடைய முத்துக்காமாக்ஷிக்கு ஒருபோதும் பிடிக்காது. ஆனதி

ளூலே தன்னுற் கூடியவளவு தன்னுடைய தாயாருக்குப் பலவித மான நீதிகளை எடுத்துக்காட்டி சங்கரன் மனக் களிப்படையும் வண்ணம் சமாதானஞ் செய்து வருவாள். லெட்சுமியம்மாள் இம் மட்டோடு நிற்காமல் சங்கரன் சென்னபட்டணம் போனபிறகு கூட, முக்கியமாய் தன்னுடைய மகளின் கலியாணம் சீக்கிர மாகவேண்டுமென்று நினைத்து "சங்கரன் படிப்பில் கொஞ்ச மேனும் அக்கரை வைக்காமல் கெட்ட தோழருடன் கூடி நாட கம் பார்க்கப்போவதும், தாசி லோலனுகத் திரிவதுமா யிருக் கிறுன். அவனுக்கு மாசவாரி ஐம்பது ரூபா அனுப்பிவருவது வீண். இந்தத் தொகை விருதாவிற் செலவிடப்படுவ தல்லாம லும், சங்கரனை நாளுக்குநாள் கெடுத்துக்கொண்டே வருகிறது" என்று அடிக்கடித் தன்னுயகனிடஞ் சொல்லி அவருடைய மனதைக் கொஞ்சங் கொஞ்சமாய் தனக்கிசையத் திருப்பிவந் தாள். இயற்கையில் பிறருடைய துற்போதனைகளுக் கிடங் கொடாத நம்முடைய இராமலிங்கம் செட்டியார் மனமும் நாளடைவில் லெட்சுமியின் அபிப்பிராயத்திற் கிணங்கி நிற்ப தைப் பார்த்தால் பெண்களின் சாமர்த்தியத்தை என்ன சொல்வது!

---

## 2-வது அத்தியாயம்

### சம்வாதம்

ஒருநாள் இரவில் சுமார் எட்டுமணி யிருக்கலாம். வீட்டி லுள்ளார் யாவரும் சாப்பிட்டாய் விட்டது. முத்துக்காமாக்ஷி தன்னறைக்குள் தனிமையாக உட்கார்ந்துகொண்டு சாவித்திரி கதையில் முதனுள் படித்தது போக மீதியிருந்த பாகத்தைக் கொஞ்ச நேரத்தில் வாசித்து முடித்தாள். தான் வாசித்த கதை

யில் சாவித்திரி தன்னுடைய நாயகனுக்காக எடுத்துக்கொண்ட பிரயாசைகளையும், அனுசரித்த நோன்பு விரதங்களையும் மனதில் நினைக்கலானாள். படிப்படியாய் சங்கரனைப்பற்றிய எண்ணமும் தன் மனத்துள் புகுந்தது. சங்கரன் இவள்மீது காட்டிய அன்பும், சினேகமும் வரவரக் காதலாய் மாறி பல சமயங்களிலும் பலவிதமான இன்ப வார்த்தைகள் பேசின தும், கடைசியாய் "காமாக்ஷி நீயே என்னுயிர் நிலை" என்று சுருக்கமாய்ச் சொன்ன இனிய வாசகமும் கடலின் அலை போல் ஒன்றன்பின் னொன்றாய் அவளுடைய மனதில் வந்து கொண்டே யிருந்தன. அப்பொழுது இவள் தேகத்தில் ஒரு நாளுமில்லாத ஒருவித புளகாங்கித முண்டாயிற்று. மெய்ம் மறந்தவள்போலக் கடைசி வாக்கியத்தைத் திரும்பத் திரும் பச் சொல்லிப் பாவசமுற்று ஆனந்தமேலீட்டால் அப்படியே கட்டிலிற் சாய்ந்தாள். நித்திரையே வரவில்லை. பின்னெழுந்து தன்னறைக்குள் இங்கு மங்குமாய் உலாவினாள். இனிய குரலிற் குயிலும் நாணும்படியாகப் பாடினாள். அறையில் வைத்திருந்த கடிகாரம் மணி பதினொன்று அடித்தது. அந்தச் சமயத்தில் யாரோ தன்னறைக் கதவைத் தட்டினது போலிருந்தது. திடுக் கென் றெழுந்துவந்து கதவைத் திறந்தாள். அப்பொழுது தன்னைப் பெற்ற தாய் வந்து நிற்பதுகண்டு ஆச்சரியப் பட்டா ளாயினும் அதை வெளிக்குக் காட்டாமல், "ஏனம்மா இவ் வளவு நேரத்துக்குப் பிறகு இங்கே வந்தது, ஏதாவது விசேஷ முண்டோ?" என்று கேட்டாள்.

லெட்சுமி.—"அப்படிக் கொன்றுமில்லை கண்ணே. சாதாரண மான ஒரு விஷயத்தைப்பற்றி உன்னிடங் கலந்துபேசி உன்னபிப்பிராயமுந் தெரிந்து கொண்டு போகலாமென்று வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே அறைக்குட்

பிரவேசித்து அங்கே போட்டிருந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

காமாக்ஷி.—அவளருகில் உட்கார்ந்துகொண்டு, "என்னபிப்பிராயத்தை விரும்பிய விஷயத்தைச் சொல்லுங்கள்."

லெட்சுமி.—"என்னருமைச் செல்வமே! நீயோ மங்கைப்பருவம் அடையுந் தருவாயி லிருக்கிறாய். நம்முடைய குலாசாரப்படி உனக்குச் சீக்கிரம் விவாகம் முடிக்கவேண்டும். உனக்கிசைந்த நாயகன் யாரென்பதாக ஒரு தீர்மானமுமாகாமல் உனது பிதாவும் நானுமாகப் பலநாளா யோசித்துக் கொண்டிருந்தோம். அப்படி யிருக்கும்போது "பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல," உன் அம்மான் மகன் இராமசாமிக்கு உன்னை விவாகத்திற்கு நிச்சயிக்க வேண்டுமென்று மதுரையிலிருந்து இன்றுதான் ஒரு கடிதம் வந்தது. அவர்களெல்லாம் நிச்சயதாம்பூலம் செய்துவிட்டுப் போக அடுத்த வாரத்தில் வருகிறார்களாம். இந்தச் சம்பந்தம் கிடைத்ததைப்பற்றி உன்னுடைய தந்தைக்கும் எனக்கும் உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. இது சங்கதியை உனக்குந் தெரிவித்து உன்னபிப்பிராயமுந் தெரிந்துகொண்டு போகலாமென்று வந்தேன். இதுதான் விசேஷம். வேறொன்றுமில்லை."

முத்துக்காமாக்ஷி.—"தீர்மானித்துவிட்டீர்களா? வேண்டியதுதான்! ஆனால் தீர்மானித்த பிறகு என் அபிப்பிராயம் எதற்கு வேண்டும்?"

லெட்சுமி.—"அப்படியுண்டா. உன் மனமு மிசைந்திருந்தால் அதிக விசேஷமல்லவா?"

முத்துக்காமாக்ஷி.—"அம்மா என் மனம் உங்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒத்திராதென்று உங்களுக்கு ஏற்கனவே தெரியுமோ? ஏன் தெரியாது! நீங்கள் உங்கள் அன்

பார்ந்த புத்திரியின் நடவடிக்கைகளைப் பலதடவைகளி லும் கவனித்திருப்பீர்கள்!"

**லேட்சுமி.**—"கண்மணி, இது விஷயத்தில் பெண்கள் மனதின் நிலைமையைக் கண்டுபிடிப்ப தசாத்தியம். அவர்கள் மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேருகவும் இருக் கும். ஒட்டியும் ஒட்டாமலே பேசுவார்கள். அவர்கள் மனம் கடலி னீரைப்போல அடிக்கடி மாறிக்கொண்டே வரும். ஆதலால் அவர்களின் க்ஷேமத்தை விரும்பும் பெற்ருேர் அபிப்பிராயப்படி செய்துகொள்ளுதலே உசிதம்."

**முத்துக்காமாக்ஷி.**—"அம்மா அவ்வித மெண்ணவேண்டாம். கடல்நீரும் மேற்பரப்பில் மாத்திரம் அலைரூபமாகப் பெயர்ந்து செல்வதாய்த் தோற்றுமே யொழிய ஆழத்தில் அசையாத பெருமையை உடைத்தாய், களங்கம் சிறிது மின்றித் தெளிவாகவே யிருக்கும். அதுபோலப் பெண்கள் மனமும் அடிக்கடி மாறுவதாக மேலாகத் தோற்றுமே யன்றி, அவர்களுடைய சிந்தை ஆழ்ந்த மனதில் சலனப் படாமலே நிற்கும். பெற்ருேர்கள் தம்மருமைப் பெண்க ளின் க்ஷேமத்தை நாடக்கூடியவர்களே. ஆனல் அது என் விஷயத்தில் மாத்திரம் ஒத்திருப்பதாகத் தெரிய வில்லை. ஏனென்ருல் இளமைதொட்டே (சங்கரனை நினைத் துக்கொண்டு) அத்தானவர்களுக்கும் எனக்கு முள்ள பாலிய நேசம் நாளடைவில் விருத்தியாகிக் காதலாய் மாறி ஒருவர் மனம் ஒருவரிடத்தில் லயித்திருப்பதை, நீங்கள் பலகால் கண்ணுரக் கண்டிருந்தும் (கண்களில் நீர் ததும்ப) எனக்கு இன்னெரு வரனைத் தேடுவது நியாயமாகுமோ?"

**லேட்சுமி.**—"குழந்தாய் நீயோ சின்னஞ்சிறியவள். நீ உல

கியலை நன்கு யறிய மாட்டாய். நாங்கள் எப்பொழுதும் உன்னுடைய நன்மையைத்தான் நாடுவோம். உன் க்ஷேமத்தை நாடுவதில் எங்களைவிட உனக்கு அருகர் யாரிருக்கிறார்கள்?"

முத்துக்காமாக்ஷி.—"வேறுயார் இருக்கிறார்கள், யார் இருப்பார்கள்? நீங்களே அதற்கு உரித்தானவர்கள்."

லெட்சுமி.—"அப்படியானால் அந்தப் பெற்றோர் சொற்படியிணங்கி நடந்து அவர்கள் மனங்களிக்கச் செய்யவேண்டுவது புத்திரிகளின் கடமையல்லவோ?"

முத்துக்காமாக்ஷி.—"கடமைதான். ஆனால் சகல யோக்கியதைகளும் குறைவில்லாமற் பொருந்தி, இளம்பிராயமா யிருக்கும்பொழுதே "இவர்கள் தாம் சதிபதிகள்" என்று பெற்றோர் சிலதுகாலத்திற்குமுன் வரையிலும் எண்ணியிருந்த ஒருவன்மீது, அந்தப் புத்திரி காதல்கொண்டு அவனை மணந்துகொள்ள விரும்பினால், அவள் கருதியதும் நியாயமென்று நினைத்து அன்னவளைப் பெற்றோர்கள் களிக்கச் செய்யவேண்டுவதும் கடமைதானே?"

லெட்சுமி.—"கிரமந்தான். ஆனால் விவாகமாகப் போகிற தருணத்தில்இருக்கும் நிலைமையைக் கவனிக்கவேண்டாமோ?"

முத்துக்காமாக்ஷி.—"நிலைமைக்கு என்ன வந்தது? முன்னிருந்த நிலைமையைப் பார்க்கிலும் இப்பொழுது என்ன குறைந்து போனது? ஆலோசிக்கப்போனால் சகலவிதத்திலும் அதிகமாகத்தான் இருக்கிறதே யல்லாமல் ஒருவிதமான குறைகள் ஒன்றும் ஏற்படவில்லையே!"

லெட்சுமி.—"கண்மணி, இருந்தபோதிலும் நீ கொண்ட எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. ஒரு பெண்ணை எத்தனை மாப்பிள்ளைகளுக்கோ வந்து கேட்பார்கள். அவர்களில்

தம் மனதிற்கிசைந்தவனைத்தவிர மற்றவர்களை யெல்லாம் தள்ளிவிட வேண்டியது அவசியம். ஆகையால் எந்த விதத்தில் யோசித்தாலும் இராமசாமி உனக்குத் தகுந்தவனே. ஆளில் குறைவா, பணத்தில் குறைவா?"

முத்துக்காமாக்ஷி.—"பாக்கியத்துக்கு என்ன குறைவு, சாப்பாட்டுக்குத்தான் விதியில்லை" என்றாற்போலச் செக்குலக்கைபோற் பருத்து வளர்ந்திருந்தாற் போதுமானது! கல்வியிற் பிரகஸ்பதிதான். குணத்திலோ கேட்கவேண்டியதில்லை. பணமாத்திரம் இருந்தாற் போதுமா? பரம தரித்திரர்களும் சந்தோஷமாயிருந்து காலங் கழிக்கிறார்களே!"

லெட்சுமி.—"இந்தக் காலத்தில் படிப்பை யார் கவனிக்கிறார்கள்? பணத்தைத்தான் மதிக்கிறார்கள். "பணம் பந்தியில் குலம் குப்பையில்," என்னும் பெரியோர் சொல்லையும் நீ கேள்விப்பட்டதில்லையா?"

முத்துக்காமாக்ஷி.—"தாயே நான் சொல்லுவதைச் சாவதானமாய்க் கேட்கவேண்டும். என்னுடைய மனதை ஒருவர் கொள்ளை கொண்டபின் இன்னொருவர்மேல் நான் எப்படி மனமாரக் காதல்கொள்ள முடியும்? ஒருபோதும் முடியவே முடியாது. அப்படி உங்கள் பிடிவாதத்திற்காக நான் ஒருவேளை இணங்கி நடந்தாலும் அது பொய்க் காதலே யன்றி மெய்க்காதலாகுமோ? அதனாலே அந்தக் குடும்பத்திற்கு ஒருபோதும் சந்தோஷம் ஏற்படாது. நாடோறும் ஓயாத் துக்கமே வந்து சேரும். "மனப் பொருத்தம் இல்லாதது மணப்பொருத்தம் ஆகாது." இவைகளை யெல்லாம் நான் சொல்ல நேரிட்டது எதினாலென்றால் நீங்கள் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்

டதினுற்ருன். வேண்டுமானுல் நான் சுருக்கமாய்ச் சொல்லு கிறேன். நான் மனதார மணந்த புருடனைத் தவிர மற்றவர் யாரையும் நான் புருடராகவே பாவிக்கவில்லை."

லெட்சுமி.—(கோபத்துடன்) "படித்து விட்டோமென்று இந்த விதமான பிஞ்சிற்பழுத்த பேச்சுகள் பேசுகிருயோ? உன்னுடைய நியாயங்களை யெல்லாம் அப்புறம் கட்டிவை. எங்கள் மனப்படியே செய்துமுடிப்பது திண்ணம்."

முத்துக்காமாக்ஷி.—"அப்படிச் செய்வதாயிருந்தால் நீங்கள் உங்கள் புத்திரியை வீணுக இழந்து விடுவீர்கள்."

லெட்சுமி.—"நீ குறித்த வரனையே மாலைசூட்டு மார்க்கம் ஏற்படாவிட்டால் என்ன செய்வாய்?"

முத்துக்காமாக்ஷி.—"என்றும் கன்னிகையாயிருப்பேன்" என்று முகத்தின்மீது முத்துப்போல் கண்ணீரை உதிர்த்துக் கொண்டு அரைகுறையாய்ப் பதிலுரைத்தனள். உடனே லெட்சுமியம்மாள் தன் காரியம் தற்சமயம் கைகூடவில்லை யென்று கண்டு மேலொன்றும் பேசாமல் திடீரென் றெழுந்து நடந்து தன்னிருப்பிடம் சேர்ந்தாள்.

லெட்சுமியம்மாள் காமாக்ஷியம்மையின் அறைக்கு வெகு நேரஞ்சென்று வந்ததினுல், வெளியிற் படுத்திருந்த வீரன் சிறிது சந்தேகங்கொண்டு படுத்தபடியேதாய்க்கும் மகளுக்கும் உண்டான சம்வாத மனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்து பின் வருமாறு சொல்லிக்கொண்டான், "ஐயோ இதென்ன அணியாயம். நம்ப சின்ன எசமானுக்கு குடுக்கணுமின்னு வச்சிருந்து இப்போ இப்படியா நடக்கப்போகுது! நம்ப பெரிய எசமான் சுந்தரம் செட்டியாரு இருந்தாக்கி இப்படியெல்லாம் வருமா? ஆளு இல்லெண்ணு பாத்துக்கிட்டாகளா? பய வீரன் நினைச்சா எது முடியாது? சின்ன எசமான் வந்து

"ஏ வீரா நீ யிருந்துமா கலியாண முடிக்கப் பாத்திருந்தே" ண்ணு கேட்டா நான் முளிக்கத்தானே வேணும். ஆனால் சின்ன, அம்மா பேருலெ குத்தமில்லெ. வேறே எந்த மாப் புள்ளை வாரான் பாப்போம். எப்படியும் இவா களியாணத்தை நிறுத்தாமெ போனுக்கி நான் ஒரு ஆம்புள்ளையா? பாப்போம். இருக்கட்டும் பாத்துக்கிடுவோம்" என்று பலவாறாக பிதற் றிக் கொண்டிருந்து கடைசியில் அப்படியே தூங்கிப்போய் விட்டான்.

---

## 3-வது அத்தியாயம்

### தரகர்கள்

ஓர் ஊரில் ஏதேஷ்டமாய் உண்டாகிற பொருளை வாங்குங் காலத்திலோ அல்லது விற்பனை செய்யுங் காலத்திலோ, வாங்கு கிறவர்கள், விற்கிறவர்கள் ஆகிய இருதிறத்தாருக்கும் ஒத்தா சையாக நின்று அதன்பொருட்டுக் கூலி வாங்குகிறவர்களே தரகர்கள் எனப் படுவார்கள். இவ்விதமான தரகர்கள் இல்லா விட்டால், உடையவர்களே வந்து வாங்கவும், கொடுக்கவும் செய்கிறதென்றால் மிகவும் கஷ்டமாய் முடியும். அதற்காகவே தங்கள் பிரயாசையைக் குறைத்து உதவி புரிபவர்களா யிருப்பதினால், ரூபாய்க்கு இத்தனை என்றாவது, அல்லது இன்ன அளவுக்கு இவ்வளவு என்றாவது இருதிறத்தாரும் இவர் களுக்குக் கொடுப்பது வழக்கம். இம்மாதிரித் தரகர்கள் அவர்கள் செய்கிற வியாபாரத்திற்குத் தகுந்தபடி மாட்டுத் தரகு, ஜவுளித்தரகு, நெல்லுத்தரகு, கடலைத்தரகு, பஞ்சுத் தரகு என்று பலவிதமாய்க் கூப்பிடப்படுவார்கள். இவர்கள் இம்மட்டோடு நிற்காமல், இப்பொழுது மாப்பிள்ளைத்

தாகு, பெண் தாகு என்றும் ஏற்பட்டிருக்கிறார்கள். இப்படி ஏற்பட்டதினாலே, பூருவத்தில் நம் முன்னோர்கள் அநுசரித்து வந்த "பெற்றோர் அபிப்பிராயம்", "சுயம்வரம்", முதலிய பூர்வீக விதிகளைத் தற்காலம் நடந்துவரும் விவாக காரியங்களுக்கு அவசிய மில்லாததாகச் செய்துவிட்டார்கள். அதாவது ஒருபெண் கொடுக்கல் வாங்கல் செய்வதற்குப் பெண்ணைப் பெற்றோர்களின் மனக்கொள்கைப்படி நடத்திக்கொள்ளுவதற்கு இடமில்லாமல், பொருளாசையால் ஏற்பட்ட இந்தத் தாகர்களுடைய வாக்குச் சாதுர்யங்களுக்குப் பெற்றோர்கள் இணங்கி நடக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகவே, இந்தத் தாகர்கள், மாப்பிள்ளை, பெண்களுக்கு இல்லாத குணங் குற்றங்களை இருக்கிறதாக வாயடி யடித்து, மூடப் பெற்றோர்களை ஏமாற்றி அவரிடமிருந்து பொருள் பறித்து ஜீவனோபாயம் பண்ணுகிறார்கள். இவர் செய்கிற தீமைகள் இம் மட்டோ! இவர்களுடைய ஜீவனோபாயவழி எத்தனை குடும்பங்களுக்குத் தீராத வசையும், பழியும், துக்கமும் உண்டுபண்ணிவிடுகிறது! இந்தக் கொடிய குற்றவாளிகளுக்கும் ஒருதண்டனை சட்டப் புத்தகத்தில் ஏற்பட்டிருந்தால் மிகவும் நலமாயிருக்கும். ஆகையினாலே ஒருவரோடொருவர் சம்மந்தஞ் செய்துகொள்ள விரும்புகிறவர்கள், அவர்களே நேரிற் சென்று மாப்பிள்ளை, பெண்களைப்பார்த்து விவாகம் நடத்திக்கொள்ளுவது அதிக விசேஷம். அப்படிக்கில்லாமல் அண்டப்புரட்டர்கள், ஆகாசப் புரட்டர்கள், ஜெகஜாலப்புரட்டர்கள் ஆகிய இந்தத் தாகர்களுடைய பேச்சில் நம்பிக்கை வைத்து, பெற்றோர்களே, உங்கள் அருமைக் குழந்தைகளின் க்ஷேமத்தை வீணாய்க் கெடுத்துவிடாதீர்கள். நிற்க.

நம்முடைய இராமசாமிக்கு மதுரையில் அநேக நண்பர்க

ளுண்டு. இவர்களெல்லாம் டம்பாச்சாரியின் தோழர்களைப் போன்றவர்கள். இவர்களில் அதிக முக்கியஸ்தர்கள், நாராயண பிள்ளை, பலவேசம் பிள்ளை, சங்குவையர் இவர்களாம். ஒரு நாள் இராத்திரி நல்ல சந்திரிகை வீசிக்கொண்டிருக்கும்போது வையையாற்று மணலில் இவர்களும் இராமசாமியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நாராயணபிள்ளை.—(இராமசாமியைபார்த்து) "இன்று மத்தியானம் உங்கள் பெரியய்யா பெருமாள் செட்டியார் அவசரமாக உன்னை வரச்சொல்லி ஆளனுப்பியிருந்தாரே, எதற்கு ?"

இராமசாமி.—"அருப்புக்கோட்டையிலிருந்து இன்று ஒரு கடிதம் வந்தது. அதிலுள்ள சங்கதி சம்பந்தமாய் என்னிடம் கலந்து பேசுவதற்கு."

சங்குவையர்.—"அதில் எந்த விஷயத்தைப்பற்றி எழுதியிருந்தது ?"

இராமசாமி.—"எனக்கு-எனக்குக்-கலியாணம் செய்யும் விஷயமாகத்தான்" என்று சிறிது நாணமுற்றவனாகச் சொற்களை இழுத்துக் கூறினான்.

பலவேசம் பிள்ளை.—(சிரித்துக்கொண்டு) "பலே பேஷ்! இராமசாமிக்கு, உம், யோகந்தான்! சமையத்தில் அப்படியல்லவாய்க்கணும்!"

இராமசாமி.—(சற்று வெட்கத்துடன்) "என்ன பலவேசம் இப்படிக் கூடிவிட்டாய் ?"

நாராயண பிள்ளை.—"கூடுகிறதென்ன? இது யாவருக்கும் சகஜம்தானே."

சங்குவையர்.—"சபாஷ் ! உள்ளதுதானே ! சீட்டு அப்படி யல்லோகிளம்பவேண்டும்! பெண் தீர்மானம் ஆய்விட்டதோ?"

இராமசாமி.—"இல்லை, இல்லை. அருப்புக்கோட்டையில் என்னுடைய அத்தை மகள் முத்துக்காமாக்ஷியைப் போய்ப் பேசிமுடிக்க வேண்டியதாயிருக்கிறது."

பலவேசம் பிள்ளை.—"இராமசாமி, நீ அந்தப் பெண்ணை எப்பவாவது பார்த்திருக்கிறாயா? ரொம்ப லெச்சணமுள்ளவதானா?"

இராமசாமி.—"அதிக அழகுடையவள்தான்."

நாராயண பிள்ளை.—"இராமசாமி, எப்போ கலியாணம்? கலியாணத்துக்கு எங்களைக் கூப்பிடுவாயா, நாங்கள் வரவேண்டாமா?"

இராமசாமி.— நீங்கள் பேசுவதைப் பார்த்தால், "பிள்ளைப் பெறுமுன் பெயரிட்ட கதையாகவல்லவோ இருக்கிறது!"

சங்குவையர்.—"சந்தேகமென்ன இதிலே? அந்தப் பொண்ணை நோக்குத்தானே கலியாணம் பண்ணிவைப்பார்கள்!"

இராமசாமி.—"அதென்ன நிச்சயம்? என்னுடைய அம்மானுக்கு அவருடைய தங்கை புதல்வன் சங்கரன் என்று ஒருவனிருக்கிறான். அவன் இப்பொழுது சென்னபட்டணத்தில் பெரிய வகுப்பில் வாசிக்கிறான். அவனுக்குத்தான் மணஞ்செய்து கொடுப்பார் என்று தோன்றுகிறது."

பலவேசம் பிள்ளை.—"அவன் ரொம்பப் பணக்காரனா?"

இராமசாமி.—"அதிகப் பணக்காரன் இல்லை யென்றாலும், அவனிடத்தில் விசேஷமான கல்வியிருக்கிறதல்லவா?"

நாராயணபிள்ளை.—"கல்வியுங் கில்வியும் இப்போ ஆர் தேடுகிறார்கள், அந்தப்பெண் பெயரென்ன?"

இராமசாமி.—(சற்றுத்தாமதித்து) "முத்துக்கா-மா-க்ஷி"

சங்குவையர்.—"அவளைக் கட்டிக்கொள்ள நோக்குச் சம்மதந் தானே?"

இராமசாமி அதற்கொன்றும் பதிற் சொல்லாமல் மௌனம் சாதித்து நின்றான்.

பலவேசம் பிள்ளை.—"என்ன சாமி இதுகூடத் தெரியாதா? சும்மாவிருப்பதே சம்மதமென்று தெரியவில்லையா? இதுவும் உங்களுக்குச் சொல்லவாவேணும்?"

நாராயணபிள்ளை.—"அப்படியிருந்தால் சொல்லு, இராமசாமி! உனக்கே அவளைக் கலியாணம் பண்ணி வைக்கிறோம், தடையில்லை. உன் சம்மதமட்டுமிருந்தால் போதுமானது."

இராமசாமி.—"அவளுக்கு அந்தச் சங்கரன்மேல்தான் பிரியம்."

சங்குவையர்.—"அதையெல்லாம் ஆர் கண்டா? நாராயணபிள்ளை சொன்னது போல நோக்குமாத்திரம் பிரியமிருந்தாற் சொல்லு, நாங்களேயிருந்து உன் கலியாணத்தை முடித்து வைக்கிறோம். நாங்கள் மூன்றுபேரும் ஒன்று சேர்ந்தால், எங்களாலாகாத காரியங்களும் உலகத்திலுண்டோ? வேண்டுமானால் மணலையுங் கயிறாகத் திரித்துக்காட்டுவோம்!"

பலவேசம் பிள்ளை.—"நாங்கள் இதுக்கு இப்பவே எத்தனம் செய்கிறோம். அந்த விசயமா நீ யோசிக்கவேண்டியதில்லை. ரெம்பப் பிரயாசமான காரியமிது. ஆனாலும், உனக்காக நாங்கள் அவ்வளவு முயற்சிகூட எடுக்காமலிருப்போமா?"

நாராயண பிள்ளை.—"இராமசாமிக்கு அதுகூடத் தெரியாதா? கலியாணம் பண்ணிவைக்கிறதென்றால் இலேசான காரியமா? அதிலும் முத்துக்காமாக்ஷியைப்போல ஒரு பெண்ணென்ன, கிள்ளுக்கீரையா! அதையெல்லாம் அவன் பார்த்

துக்கொள்ளுவான் சுவாமி. போகட்டும், நாமிதுவரை நம்முடைய இராமசாமிக்காக எத்தனையோ காரியங்களெல்லாம் முடித்து வைத்திருக்கிறோமே, அவைகளுக்கெல்லாம் அவன் பிரதிப் பிரயோஜனம் எப்பொழுதாவது செய்யாமல் இருந்ததுண்டா ?"

சங்குவையர்.—"கொடுத்ததை யார் இல்லேங்கிறு? இதில் பொண்ணுக்கும் பொண்ணைப்பெற்ற தோப்பனருக்கும் சம்மதமில்லேங்கிறபோது, அதை சரிக்கட்டி வைக்கிறது ரொம்பக் கஷ்டமாச்சுதே! அவர்களையெல்லாம் திருப்தி செய்தல்லவோ, நம்முடைய எண்ணத்தை முடிக்கவேண்டும்? ஆனதினுலே பிரயாசத்தைக் கவனிக்கட்டும் என்று தான் சொன்னேன்"

பலவேசம் பிள்ளை.—"நாளைக்காலமே புறப்பட்டுப்போய் முன்னைக்கூட்டி அணைபோட்டு வைக்கணுமே. வளிச்செலவுக்கு மூணுபேருக்கும் குறைஞ்சது பத்து ரூபாயாவது வேண்டாமா சாமி ?"

இராமசாமி.—"அப்பாடி! இதற்குத்தானு வந்தது! வீட்டுக்குப் போனவுடனே ரூபாய் பதினைந்து தருகிறேன். அப்புறம் நீங்கள் ஊருக்குப் போனதும் கடுதாசி யெழுதினுல் செல்லும் செலவுக்குப் பணம் அனுப்பிவைக்கிறேன். ஆனுல் காரியமட்டும் முடியாமலிருக்கக்கூடாது. அவள் ரொம்ப கருவக்காரி."

நாராயணபிள்ளை.—"சரி, அப்படியே செய்துவைக்கிறோம்." என்று தீர்மானித்துக்கொண்டு எல்லாரும் எழுந்திருந்து அவரவர் வீட்டைநோக்கி நடந்தார்கள்.

---

## 4-வது அத்தியாயம்

### தபால் வண்டி

மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்குத் தினந்தோறும் ஓடுகிற தபால்வண்டி ஒன்று இருக்கிறது. இதற்கு ஆபீசுகள் மதுரையில் தெற்குமாசி வீதியிலும், அருப்புக் கோட்டையில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு வடபாரிசத்திலும் இருக்கின்றன. முக்கியமான, மேற்சொன்ன இரண்டு ஆபீசுகள் அல்லாமலும், காரியாபட்டியிலும் ஒரு ஆபீசு உண்டு. தலைமை அல்லது சாதாரணமாகச் சொல்லிக்கொள்ளுகிறபடி, "கஸ்பா" ஆபீசுகளில் பொதுமான ஆட்களோ, பாரமோ கிடைக்காவிட்டால், இந்த சப் ஆபீசிலும் பாரம் ஏற்றுவார்கள். பிரதி தினமும், கஸ்பா ஆபீசுகளிலிருந்து காலை ஆறுமணிக்கு வண்டிகள் புறப்படும். ஆனால் சில வேளைகளில், பிரயாணிகளின் சௌகரியத்திற்கேற்றவாறு இரண்டுமணிநேரம் முந்தியாவது பிந்தியாவது புறப்படுவதும் உண்டு. இதற்கு ஏற்பட்ட வண்டிகளோ, உன்னதமான கூண்டுகள் கட்டப்பட்ட பலமான கட்டை வண்டிகள். மதுரையிலிருந்து வருங்காலத்தில், மாடுகள் மாற்றும்படியான கெடிகள், கஸ்பா நீங்கலாக, வலையங்குளம், ஆயூர், காரியாபட்டி, கற்குறிச்சி யிவைகளே. இதில் பிரயாணஞ் செய்கிறவர்களுக்குச் சாதாரணமாய் ஏற்பட்ட சார்ஜ் ஆறு அணா. ஆனால் பிரியகாலத்தில் சார்ஜ் அதிகமாகவுங்கூடும். இந்த வண்டியில் பிரயாணிகள் மாத்திரம் போவதாயிருந்தால், மிகுந்த கஷ்டத்துடன், எட்டுப்பெயர்கள் உட்கார்ந்து போகலாம். ஆபீசுகளில் அதிகம் பாரம் கிடக்குங்காலத்தில், வண்டிக்கூண்டு வெகு வுன்னதமாய்க் கட்டப்பட்டிருப்பதினாலே, பாதி உயரம் வரைக்கும் பாரத்தையேற்றி, அதற்குமேல் எட்டுப்பெயர்களை

யும் உட்காரவைத்து விடுவார்கள். "இப்படிச் செய்யலாமா? என்று யாரும் துணிந்து கேட்கவுமாட்டார்கள்; அப்படிக்கேட்டபோதிலும், "நீங்கள் சுமக்கிறதென்ன? வண்டிப்பாரம் பூமியிலே, நீங்கள் உட்காருவதற்கு இடமிருந்தால் சரிதானே," என்று சொல்லிவிடுவார்கள். மதுரையில் சித்திரைமாதம் ரதோற்சவம் நடந்து ஒருவாரமாகிறது. விடிகிறதற்கு ஐந்து நாழிகைப் பொழுதிருக்கும். மதுரையிலிருந்து தபால் வண்டி போடும்பொழுது, வண்டிமட்டத்திலிருந்து பாதியுயரம் வரைக்கும் தூற் பெட்டிகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின்மேல் கைச் சாமான்கள் சகிதம் எட்டுப்பெயர் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களில், பாலையம்பட்டியில் இறங்கிக்கொள்ளும்படியான செட்டியார் ஒருவர். இவர் ஸ்தூலித்த சரீரமும், பருத்த தொந்தியு முடையவர். மூவர், இராமசாமியின் நண்பர்களான நாராயணபிள்ளை, பலவேசம் பிள்ளை, சங்குவையர் இவர்கள். வேறு இரண்டுபெயர்கள், சுமார் நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் மத்தியிலுள்ள இரண்டு ரெட்டிப்பெண்கள். இந்த இரண்டு பெயர்களும் விதவைகளே. மீதியான இரண்டு பெயர்களும், பொன்வேலை செய்யும் ஆசாரிமார்கள். இவர்களில் ஒருவருக்குச் சுமார் நாற்பது வயதிருக்கலாம். காசநோயால் மெலிந்தவர். மற்றவன் பதினாறு வயதுள்ள அவருடைய மகன்.

மதுரை டவுன் தாண்டிவரும்வரைக்கும், மண் எண்ணெய் விளக்கெரிந்து கொண்டிருந்த அழுக்குலாந்தர் ஒன்று வண்டிச் சட்டத்தில் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. லாந்தரின் பிரகாசமோ சொல்லவேண்டியதில்லை. யாதாமொரு விசேஷ காலங்களில், சிறுவர்கள் மெல்லிய காகிதங்களிற்செய்து, தெருக்களில் தோரணத்தோடு கட்டிவிட்டிருப்பதைப் பார்த்தால், எவ்வளவு பிரகாசமாய்த் தெரியுமோ அவ்வளவு பிரகாசந்தான் அந்த

விளக்கு கொடுத்துக் கொண்டிருந்தது. சுருக்கமாகச் சொல்லப்போனால், அந்த விளக்கு பெயருக்குத்தான் கட்டிவிடப்பட்டிருந்ததேயன்றி, உபயோகத்தைக்கருதி வைக்கப்படவில்லை என்று சொல்லவேண்டும். டவுனைக் கடந்து வந்தவுடன், விருதாவில் எண்ணெயைச் செலவழிப்பானேன், என்று நினைத்து வண்டிக்காரன் அதனை அணைத்துவிட்டான். இதனாலே வண்டிக்குள்ளிருக்கும் பிரயாணிகளுக்கு ஒருவிதமான கஷ்டமும் உண்டாகவில்லை. ஏனென்றால், விளக்கு எரிந்துகொண்டிருந்தாலும், எரியாதிருந்தாலும், வண்டிக்குள்ளிருப்பவர்களுக்கு இருட்டு இருட்டுத்தான். வண்டியோ மிகவும் பளுவான தபால்வண்டி. ஏற்றியிருந்த பாரத்தைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஐயோ, ஏழை எருதுகள் எப்படித்தான் இழுத்துச்செல்லும்! பிள்ளையார்பாளையம் வரையிலும், ரஸ்தா சற்று மேடுபள்ளம் இல்லாதிருந்ததினால், வண்டி பருநடையில் போய்க்கொண்டிருந்தது. அதற்கிப்பால் ரோட்டு ஒழுங்கு கேடாயிருந்தபடியால், வண்டி அங்குமிங்கும் லொடக், லொடக் என்று விழ வாரம்பித்தது. ஏழைபெருதுகள் தங்களாலான மட்டும் இழுத்துக்கொண்டுதான் போகின்றன. வண்டி கப்பலசைவதுபோல அசைவதினால், உள்ளேயிருந்த பிரயாணிகளுக்கு அநேகமாய்த் தொட்டிலாட்டினது போலிருந்தது. வண்டியிலிருந்த ஆடவர் அனைவரும் பாதித்தூக்கத்தில் இருக்கிறார்கள். அந்தப் பெண்டுகளுக்கு மாத்திரம் நித்திரை வாராததால் அவர்கள் தங்களுடைய குடும்ப விவகாரங்களைப் பற்றிப் பேசவாரம்பித்தனர்.

**ஒருஸ்திரீ.**—நம்ப சுப்பய்யன் எங்கிட்டுப் போயிருக்கான்? காணமின்னு சொன்னுங்களே!"

**மற்றவள்.**—"நாத்தம்முடா? ரெங்கோனுக்குப் புறப்பட்டுப்

போயிட்டாண்ணு சொல்லுறுக. பாவிப்பய ஆருகிட்டெ சொல்லிட்டுப் போனுன்? மச்சுவீட்டிலெ இருந்த ரெண்டு ஜெபமாலே மணியி, அவன் தங்கே சுப்பம்மாப்புள்ளே காலுத்தண்டே இம்புட்டுந் தூக்கிக்கிட்டுப் போயிட்டா னில்லே."

முதலாம் ஸ்திரீ.—"வீட்டிலெ சண்டைப் பிடிச்சாங்களா? இந்த வேலே ஏன் செஸ்ஸிட்டுப் போனுன்?"

இரண்டாம் ஸ்திரீ.—"சண்டையும் கிண்டையும் அந்த எளவை யாரு கண்டா? அம்மாடி சும்மா சொல்றதா! என்னமோ நம்ப விதி!"

முதல் ஸ்திரீ.—"இவன் நாலஞ்சு நாளா காட்டுவேலேக்குப் போகாமே யிருந்தானும், மேக்கே போயிருந்த அவ மூத் தண்ணே வாயிலெ வந்தபடி வஸ்ஸாருண்ணு எதிர்வீட்டு லெச்சிமி சொன்னுளே."

இரண்டாம் ஸ்திரீ.—"அந்த நீலிமுண்டே பேச்சைக் கேளு? அவுசாரிச்சிறுக்கி. அவளாலேதானே இதெல்லாம் வந் திச்சி."

என்று இவ்விதமாய் இவர்கள் உரத்த சத்தத்தில் பேச வும், வண்டியில் நித்திரையி லிருக்கிறவர்களுக்கு மிகவும் இம் சையாயிருந்தது. அதனுல் பலவேசம்பிள்ளே, சற்றுப் பா பரப்புடன் "ஏம்மா சளசளெண்ணுக்கிட்டு, இருக்கிறிய, வாயெ சும்மா வச்சுக்கிட்டிருந்தா லென்ன" என்று சொன்னவுடனே, ஆசாரியார் "பெட்டைகள், உம் உம், கூடின இடம், உம், உம், வெட்டைதானே" என்றூர். இதற்குள் ஒருத்தி "ஆம்புள் ளேங்க பேசமாட்டாங்களா அவா வாயி தச்சா வச்சிருக்கு?" என்று சொன்னுள்.

"இப்படித்தான் சளசளண்ணு ஒலேப்பாயிலெ நாமோண்

டதுபோலெ பேசுருகளோ ? பத்துப்பேர் ஆம்பிள்ளேகளாவது கூடியிருக்கலாம், ரெண்டு பெம்பிள்ளே கூடுனு இந்த எளவும் போராட்டமுந்தானே" என்று பலவேசம்பிள்ளே மறுபடியும் உக்கிராவேசத்துடன் சொல்லவும், மற்றவள், "அண்ணே, வண்டிக்காரண்ணே, கேட்டுக்கிட்டியா இந்த மனுசன் பேச்சி, நீயி சாக்கி, எல்லாத்துக்கும் விடியட்டும் பாத்துக்கிடுவம்" என்று மும்முரமாய்க் கூக்குரலிட வாரம்பித்தாள். இதற்கெல்லாம் கடைசியில் உட்கார்ந்திருந்த செட்டியார் கண் திறக்கவுமில்லே, வாய்திறக்கவுமில்லே. பலபல வென்று விடிந்தது. இவர்கள் வாய்ப்போரும் ஒருவிதத்தில் நின்றது. காரியாபட்டிக்கு பகல் பத்து மணிக்கு வண்டி வந்துசேர்ந்தது. வண்டியை விட்டிறங்கி அவரவர்கள் தங்கள் கைமூட்டைகளே எடுத்துக்கொண்டு ஆற்றில் போய் பல் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிட்டுத் திரும்ப ஒருமணி யாயிற்று. காரியாபட்டி ஆபீசு ரயிட்டர் இந்த வண்டிக்குள் பாரமேற்றப் பார்த்தார். ஆனல் பிரயாணிகளின் கூச்சலினுலும் வண்டிக்காரனுடைய இதவார்த்தையாலும், அங்கே பாரம் ஏற்றப் படவில்லே. முதலில் கோச்சை யடுத்து அந்த இரண்டு ஸ்திரீகளும் எதிரெதிர் உட்கார்ந்துகொண்டார்கள். ஆசாரியும் அவர் மகனும் அதற்கு அடுத்து உட்கார்ந்திருந்தார்கள். அதற்கிப்புறம் செட்டியார் இருந்தார். கடைசியில் நாராயண பிள்ளேயும் அவர் கூட்டாளிகளும் உட்கார்ந்திருந்தார்கள். சித்திரை மாதத்து வெயிலின் கொடூரம் சகிக்கமுடியவில்லே. செட்டியாருக்கு மேலெங்கும் வேர்வை தாரை தாரையாய் வடிந்துகொண்டிருக்கிறது. "அப்பா, தம்பிமார்களே என்னேக் கொஞ்ச நேரத்துக்குக் கடைசியில் உட்காரவைத்தால் உங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு" என்று கெஞ்சாத வண்ணமாய்ச் சொல்லவும்,

செக்கிலகப்பட்டு அரைபடுவதுபோல் அவர் மிகவும் கஷ்டப்படு கிறதைக்கண்டு, அவரைக் கடைசியில் உட்காரவைத்து இவர்கள் உள்ளே தள்ளியுட்கார்ந்துகொண்டார்கள். வண்டி மெல்லமெல்ல அசைந்து போவதினுலும் வெயில் வெப்பத்தின் மிகுதி யினுலும், சிறிது நேரத்திற்குள் வண்டியிலிருந்த ஒவ் வொருவரும் அப்படியே சோர்ந்து தூங்கிப் போய்விட் டார்கள். ஒருவருக் கொருவர் தூக்க மிகுதியால் முட் டிக் கொள்ளுவதுகூடத் தெரியவில்லை. வக்கணங்குண் டுக்கு இப்பால் கண்மாய்க் கரையோரத்தில் ஒரு பெரிய ஆலாவிருக்ஷ மிருக்கிறது. அதன் நிழலில் இரண்டு கிழவி கள் வெள்ளரிக்காய் விற்றுக்கொண்டிருக்கிறுர்கள். வண்டிக் காரன் வண்டியை விட்டுக் கீழே யிறங்கி அவர்களிடம் போய் அரைத்துட்டுக்கு வெள்ளரிப் பிஞ்சு வாங்கித் தின்றுவிட்டு, தன் மடியிலிருந்த வெற்றிலைபாக்கு எடுத்துப் போட்டுக் கொண்டு அவசரமாய் வண்டியில் வந்து ஏறினுன். வண்டி இப்பொழுது இருக்குமிடத்திலிருந்து தோணுகால் ஆறு வரைக்கும் ரோட்டு பள்ளமாயிருந்தபடியால், வண்டிக்காரன் மாடுகளை முறுக்கவும், நின்றிருந்த வண்டி திடீரென்று ஓடவே, கடைசியில் உட்கார்ந்திருந்த செட்டியார் தொப்பென்று கீழே விழுந்தார். வண்டிக்குள் ளிருந்தவர்க ளெல்லாரும், "செட்டியார் விழுந்துவிட்டார், செட்டியார் விழுந்துவிட்டார், வண்டியை நிறுத்து, வண்டியை நிறுத்து" என்று கூச்சலிட்டார்கள். வண்டி வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. மறுபடியும் எல் லாரும் வண்டிக்காரனைக் கோபிக்க, அவன் சினத்துடன், "பள் ளத்திலெ வண்டி எப்படிய்ய நிக்கிம், சும்மா சத்தம் போடா யளே" என்று சொல்லிவிட்டான். அங்கே செட்டியார் என்ன ஸ்திதியில் இருக்கிறுர் என்று கவனிப்போம். செட்டியார்

கீழே விழுந்தெழுந்து தரையின் சூடு பொறுக்க முடியாமல் புழுத் துடித்தாற் போலத் துடித்தெழுந்து வண்டியின் பின் ஓடிக்கொண்டே "அடே அப்பா வண்டிக்காரா, அடே வண்டிக் காரா, அடே அப்பா நிறுத்துடா வண்டியை, நான் என்ன, ஓசியாய் வண்டி ஏறி வந்தேனா? பலகைபோல ரூபாய் எடுத்துக் கொடுக்கவில்லையா, ரூபாயை வாங்கிக்கொண்டு இந்தமோசம் பண்ணலாமா? இந்தக் காசு நிலைக்குமா? ஐயோ! அப்பா! பொசுக் குதடா கீழே," என்று காலைக்காலைமாற்றி உதறவும், மாத்தடி யில் உட்கார்ந்திருக்கிற கிழவிகளில் ஒருத்தி, "அந்த ஐயா பூசணிப்பளம் போலெ விளுந்து கிடக்காரு, வண்டியை ஓட் டிக்கிட்டுப் போறுகளே, இதென்ன அணியாயம்" என்று உரத் துப்பேசிப் பரிதாபப்பட்டாள். செட்டியாருக்கு ஓடவும் முடிய வில்லை. "வெப்பங்கொண்ட புழுதியில் இப்படியே நின்றிருந் தால் அப்பளம் பொரிந்தாற் போல் பொரிந்து போவோம்" என்று நினைத்து வண்டியின் பின்னாலே ஓடத் தொடங்கினார். "அடே, அப்பா, புண்ணியமாய்ப் போகுதடா" என்று கூச்ச லிட்டுக்கொண்டே, உடல் குலுங்கித் தள்ளாட ஓடியோடிப் பார்க்கிறார். வண்டியும் ஆற்றிலிறங்கி நிற்கிறது. செட்டியா ரும் வருத்தப்பட்டு வேர்த்து விருவிருக்து தத்திப் பித்தித் தள்ளாடி அப்படியு மிப்படியுமாய் ஆறு வந்து சேர்ந்தார்.

ஆற்றுமத்தியில் கொஞ்சதூரம் வரையிலும் முழங்காலள வுத்தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. செட்டியாரும் தண்ணீரில் வந்து நின்று கை கால் முகம் சுத்தம் பண்ணிக்கொண்டு ஓடி வந்த ஆயாசம் தீரும்படிக்கு நீரை இருகையாலும் அள்ளி அள்ளிக்குடித்தார். களைப்பு நீங்கவும் மெல்ல நடந்து ஆற்றைக் கடந்து கரையேறி ஒரு புளியமாத்தடியில் நின்றார். இதற்குள் வண்டியும் கரையேற்றப்பட்டு நின்றது. செட்டியாரையுந்

தூக்கி உள்ளே போட்டார்கள். வண்டியிலிருந்த நாராயணபிள்ளை முதலானவர்களுக்குச் சிரித்துச் சிரித்து வயிறெல்லாம் புண்ணாய்ப் போய்விட்டது. அதிலும் அந்த ஸ்திரீகள் நகைத்தது அவருக்கு அதிக விசனத்தைக் கொடுத்தது. செட்டியாருக்கு இப்படி வந்ததேயென்ற துக்கமொருபக்கம், எல்லாரும், முக்யமாய்ப் பெண்டுகள் உள்படச் சிரிக்கலாச்சுதே என்ற வெட்கம் ஒருபக்கம், சொல்லச்சொல்ல வண்டிக்காரன் கேட்காமல் வண்டியை வேகமாய் ஓட்டிக்கொண்டு வந்து இந்த நடுவெயிலில் இவ்வளவு தூரம் இந்தப் பாரமானவுடலைத் தூக்கிக்கொண்டு ஓடிவரச் செய்தானே என்ற கோபம் ஒருபக்கம், உண்டாக, அவர் மிகுந்த அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார். கண்ணீர் விடாத குறைதான் ஒன்றுண்டு.

சங்குவையர்.—“செட்டியாரவாள், நீங்கள் முதலாவது இருந்த இடத்தில்தானே இருந்தால், இப்படியெல்லாம் வருமா? கடோசிக்குப் போகத்தானே இவ்விதம் நேர்ந்தது?”

செட்டியார்.—“வேர்க்கிறது என்று நினைத்துக் கடைசியில் போயுட்கார்ந்தால் கொஞ்சம் காற்றோட்டமாயிருக்கும் என்றெண்ணிப்போக இப்படி வந்தது. தூக்கம் சண்டாளம், இம்மட்டோடேயாவது போச்சே! அதுதான் நல்லது.”

பலவேசம்பிள்ளை.—“ஐயா பெரியவரே, படவேண்டியதைப் பட்டுத்தானே தீக்கவேணும். படமாட்டேனிண்ணு விடுமா? அப்படி யில்லாட்டா நாங்களாவது தூங்காமலிருந்து உம்மைப் பிடிச்சுக்கிடமாட்டோமா?”

ஸ்திரீகள்.—“ஐயோ! பெரிய மனிசன் பாவம்! வெயிலிலெ புளுத் துடிச்சாப்பிலெ துடிச்சுப்போனாரு.”

ஆசாரி.—(மகனைப் பார்த்து) “பாத்துகிட்டயா, உம்-உம், நீயும்

கடைசியி லிருக்கணுமிண்ணேயே, உம், உம், இருந்தா— உம், நீயும் அவரைப்போலெதானே-உம்-உம்-விளுந்துகிடப்பெ" என்று சொல்லி, அந்தவிதம் நோரதகைப்பற்றி மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். இப்படியாக ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்தமட்டில் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

வண்டிக்காரன்.—“ நான் என்ன செய்வேன்? தும்பை யிளுத்து இளுத்துத்தான் பாத்தேன்! பள்ளமாச்சா? அதிலெயும் முழுப்பாரம் ஏத்தியிருக்கு! வண்டி கடகடண்ணு உருண்டுக்கிண்டே வந்திடுச்சி. எம் பேரிலே என்னய்யா குத்தம்? நீங்க எல்லாரும் பாத்துக்கிண்டுதானே இருந்திய", என்று இந்தவிதமாகப் பேசிக்கொண்டு வர மாலை ஐந்தரை மணிக்கு வண்டி அருப்புக்கோட்டை வந்து சேர்ந்தது.

நாராயணபிள்ளைக்குச் சொந்த அத்தான் முத்துச்சாமிப் பிள்ளை இந்தவூரில் இருப்பதால், அவர் வீட்டுக்கு இராமசாமியின் சிநேகிதர்கள் மூன்று பெயரும் போய்த் தங்கள் சாமான்களைக்கொண்டுபோய் வைத்தார்கள்.

சங்குவையர்.— “ பெருமாள் செட்டியாரை எப்போ போய்ப் பார்க்கிறது?

நாராயணப் பிள்ளை.—“ நாம் எல்லாரும் சாப்பிட்டுவிட்டு இராத்திரிக்குச் சாவகாசமாய் அவரைப் போய்ப் பார்க்கலாம். போனாலும் குறைந்தது நாலு நாழிகையாவது செல்லுமல்லவா ?"

பலவேசம்பிள்ளை.—“ அதுதான்சரி. அப்படித்தான் செய்யணும் அது இருக்கட்டும்—இண்ணைக்குத் தபால்வண்டி வேடிக்கையே வேடிக்கை!"

## 5-வது அத்தியாயம்

### நிச்சயதாம்பூலம்

இரவு சுமார் ஒன்பது மணி இருக்கலாம். பெரிய வீட்டுக்கு எதிராயுள்ள காரை வீட்டில் பெருமாள் செட்டியார் உட்கார்ந்திருக்கிறார். அவர் சாப்பிட்டானபடியால், அவர் முன் ஒரு அழகான தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு நிரம்ப வைத்திருக்கிறது. அவர் வெற்றிலை போட்டுக்கொண்டு சாவகாசமாயுட்கார்ந்திருக்கையில், அவருடைய புத்திரியாகிய லட்சுமியம்மாள் சற்று தூரத்தில் வந்திருந்துகொண்டு, "ஐபா, உங்களுடைய பேத்தி, முத்துக்காமாக்ஷி மங்கைப் பருவமடையுந் தறுவாயி லிருக்கிறாளே. சீக்கிரம் கலியாணமாகவேண்டுமே, இதற்கென்ன ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறீர்கள்," என்று உங்கள் மருமகனைக் கேட்டால், "இரண்டு மாதம் போகட்டும்" என்று சொல்லுகிறார்கள். ஏனெனில், "அதற்குள் சங்கரன் பரீக்ஷை முடிந்து வந்துவிடுவான், வந்தவுடன் நிச்சயதாம்பூலம் வழங்கி, ஆனிமாதத்திற் கலியாணம் வைத்துக்கொள்ளலாம்," என்பது அவாளுடைய நோக்கமாயிருக்கிறது." "அப்படி யொருவேளை முடிகிறதாயிருந்தால், தங்களுக்குப் பிற்காலம் தங்களுடைய வீட்டுக்கு நான் எப்படிக் கூசாமல் வந்து போக முடியும்? எனக்கும் ஒரு ஆதாவு இருந்தால்தானே நல்லது. ஒருவேளை (தன்னைக் குறித்து,) "இவள் வந்தால்தானென்ன, வாராமற்போனால்தான் என்ன" என்ற நோக்கம் உங்களுக்கு இருக்கிறதோ,என்னமோ யார்கண்டார்கள்?" என்று கண்ணீர் வடித்துக்கொண்டு பேசினாள். பெருமாள் செட்டியார் தம்மருமைப் புதல்வியின் விசனகரமான வார்த்தைகளைக் கேட்டவுடன், அப்படியே மதிமயங்கிச் சற்று நேரம் மௌன

மாயிருந்து, "என் கண்ணே! நான் உன்னைப்போல ஒரு ஆண் குழந்தையைப் பெறாத பாவியாய்விட்டேனே! அப்படிப் பெற்றிருந்தால், நீ இவ்விதமாக இப்பொழுது என்முன் நின்று கலங்கிக் கண்ணீர்விட வருமா?" என்று பெருமூச்செறிகையில், ஒரு வேலைக்காரன் வந்து "ஐயா, ஐயா, இரண்டு மூன்று பேர்கள் வந்து வாசலில் நிற்கிறார்கள். மதுரைக்காரர்களாம். உங்களைக் கண்டு பேசவேண்டுமென்று சொல்லுகிறார்கள்," என்றான்.

அப்பொழுதே செட்டியார் முகமலர்ச்சியுடன் உட்கார்ந்து கொண்டு "அவாளை வாச்சொல்லு" என்றார். லெட்சுமியம்மாளும் எழுந்து அடுத்த அறைக்குட் புகுந்தாள். அவர்கள் உள்ளே வரவும்.

பெருமாள் செட்டியார்.—"வாங்கோ, வாங்கோ, உட்காருங்கோ, எப்போ வந்தது?"

நாராயண பிள்ளை.—"இன்று சாயங்காலம்தான் வந்தோம். இவ்வூரில் எங்கள் அத்தான் வீட்டில் நாளை ஒரு விசேஷம். அதற்காக வந்தோம். நீங்களும் இங்கே வந்திருப்பதாகச் சற்று நேரத்திற்கு முன்புதான் கேள்விப்பட்டோம். ஆனதினாலே உங்களையும் கண்டு பேசிவிட்டுப் போகலாமென்று வந்தோம்."

பெருமாள் செட்டியார்.—"அப்படியா? ரொம்ப சந்தோஷம்."

சங்குவையர்.—"செட்டியாரவாள், தாங்கள் ஒருமாதிரி கொஞ்சம் வாட்டமுற்றவாள் போல இருக்கிறயளே?"

பெருமாள்.—(சற்று சிரித்த பாவனையில்) "அப்படிக்கொன்றுமில்லை."

பலவேசம் பிள்ளை.—"நம்ம ராமசாமிக்கு எப்போ கலியாணஞ்

செய்ய நினைச்சிருக்கிறிய. அவன் விவாகத்தை முடிச்சு வைக்கவேண்டியது, உங்க கடமைதானே."

பெருமாள்.—(கொஞ்சம் யோசனைபண்ணி)"நம்முடைய கடமை தான்—ஆனால், ஆனால்—ஒரு யோசனை இருக்கிறது—"

நாராயண பிள்ளை.—" பெண்ணைப்பற்றிய யோசனையோ ?"

சங்குவையர்.—" பெண்ணுக்கென்னய்யா வந்தது? இராம சாமிக்கு எத்தனை பெண் வேணுமானாலும் கிடைக்கும். பணக்காராளுக்கு எதுதான் கிடையாது ? இந்தக் காலத் தில் பணக்காராளுக்குப் பெண்ணு பஞ்சம் !"

பலவேசம்.—" சொந்தத்திலே பெண்ணிருக்குதா? அன்னியத் திலே பாக்கணுமா ?"

பெருமாள்.—" சொந்தத்திலுமிருக்கிறது, அன்னியத்திலும் பார்க்கலாம்."

சங்குவையர்.—"சொந்தப் பெண்ணிருக்கும்போது, அன்னி யத்தில் போய் என் சம்பந்தம் செய்யவேண்டும்? இதா னல் ஒண்ணுக்குள்ளே ஒண்ணு."

நாராயண பிள்ளை.—"நம்முடைய இராமசாமியைத்தவிர அந்தப் பெண்ணுக்கு வேறே சொந்த மாப்பிள்ளைமார்களும் உண்டோ ?"

பெருமாள் செட்டியார்.—" உம். அப்படியும் இருக்கிறார்கள்."

சங்குவையர்.—" ஆனால் அந்தப் பொண்ணேது ? அதற்கு வேறே மாப்பிள்ளை யார் ?"

பெருமாள்செட்டியார்.—" நம்ம பேத்திதான்.—சங்கரன் தான்."

பலவேசம் பிள்ளை.—"பெண்ணுக்குத் தகப்பனுரை விசாரிச்சா எல்லாம் வெளியாகுது," என்று சொல்லிக்கொண்டிருக் கும்போதே இராமலிங்கம் செட்டியாரும் அங்கே வந்தார். அவர் இவர்களை யெல்லாம் பார்த்துவிட்டு " இவர்கள்

யார் தெரியவில்லையே" என்று சொல்லவும், "நம்ப ஊர் தான், நம்ப ஊர்தான்" என்று பெருமாள் செட்டியார் விரைவாய்ப் பதிலுரைத்தார்.

இராமலிங்கம்.—"அப்படியா! ரொம்ப சந்தோஷம், வெற்றிலை போடுங்கள்" என்று உபசாரம் பண்ணினர்.

நாராயண பிள்ளை.—"நாங்கள் இராமசாமிக்கு உங்கள் பெண்ணைப் பேசித் தீர்மானிக்கலாமென்று இருக்கிறோம். உங்களுடைய உத்தேசம் எப்படியோ? தெரியவில்லை."

இராமலிங்கம்.—"என் தங்கையின் புத்திரன் சங்கரனுக்கே என்னுடைய மகள் முத்துக்காமாக்ஷியைக் கொடுக்க வேண்டுமென்று நிச்சயித்திருக்கிறேன்."

பலவேசம்.—"அப்படியா? ஆனால் சந்தோஷம். நல்லா இருக்க வேண்டியதுதான். ஆனல்—ஆனல் — அதைத்தான் நாமேன் சொல்லவேணும்?"

இராமலிங்கம்.—"என்ன! என்ன! என்ன சங்கதி?"

சங்குவையர்.— (பலவேசம் பிள்ளையைப் பார்த்து) பொண் கொடுக்கிறவாளிஷ்டம், எடுக்கிறவாள் இஷ்டம்—நோக்கென்ன?

நாராயண பிள்ளை.—"அப்படி யுண்டா? இஷ்டர்கள் விஷயத்தில் நன்மையை நாடவேண்டிய தவசியமல்லவா? தெரியாமற்போனல் போகட்டும்—தெரிந்திருக்கிறபோது சும்மாப் பார்த்துக்கொண்டிருக்கலாமா? விளக்கைப் பிடித்துக்கொண்டு யாரும் கிணற்றில் விழச் சம்மதிப்பார்களா?"

இராமலிங்கம்.—(ஆத்திரத்துடன்), "நீங்கள் சொல்லுவதொன்றும் எனக்கு விளங்கவில்லையே."

சங்குவையர்.—"இல்லை, இல்லை, உங்கள் மருமகன் பெய

ரென்ன? சங்கரனு! பார்வைக்கு வெகு அழகாயிருப்பார். சாதுமாதிரியாய்த் தெரியும். நாலுபேர் உட்கார்ந்திருக்கிற இடங்களுக்குப் போகமாட்டார். தலை குனிந்து கொண்டே பேசுவார். ஆனல், நாமென்ன காரியத்துக்குச் சொல்லுகிறோம். ஒருவேளை உங்கள் கட்டாயத்துக்கிணங்கிச் சொல்லுகிறோம் என்று வைத்துக்கொள்ளுவோம். உங்களுக்கிசைந்திருந்தால்தான் போகிறது. அல்லாவிட்டால் உங்கள் மனசுக்கு வருத்தம்தானே."

இராமலிங்கம்.—(மிகுந்த அவசரத்துடன்) "எனக்கு வருத்தம் உண்டாகாது. உள்ளதைச் சொல்லுங்கள். சங்கதி ஒன்றும் தெரியாமல், இருட்டு வீட்டுள் நுழைந்தவனைப் போலிருக்கிறேனே."

பலவேசம்.—"அங்குமிங்கும் கண்டபடித் திரிகிருன் என்று கேள்வி."

இராமலிங்கம்.—(அதிக பரபரப்புடன்) "என்ன! என்ன சொல்கிறீர்கள்?"

சங்குவையர்.—(பலவேசம் பிள்ளையைப் பார்த்து) "நீ என்ன ஒட்டைவாயனு யிருக்கிருய். சொல்லவேண்டாமென்று தான் சொன்னேனே. நேக்குத் தெரியாதா. செட்டியாரவாளுக்குக் கோபம் வருகிறுப்போலிருக்கிறது."

இராமலிங்கம்.—"அங்குமிங்குமாய்த் திரிகிருன் என்ருல் அருத்தம் விளங்கவில்லையே. உள்ள யதார்த்தத்தைக் கூறுங்கள், எனக்குக் கோபம் வராது."

நாராயண பிள்ளை.—"இல்லை—தாசி வோலனுகத் திரிகிருனும். எங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னேம். அப்பால் உங்கள் இஷ்டம். எப்படியும் தம்பதிகள் சந்தோஷமாக வாழ்ந்திருந்தால் நல்லதுதான். இல்லாத பக்ஷத்

தில் பின் நொந்துகொள்ளவேண்டியது வரும். நல்லா யிருந்தால் உங்களுக்கும், எங்களுக்கும், மற்ற இதரா ளுக்கும் சந்துஷ்டியாயிருக்கும். எங்களுக்கு இதிஞ லாகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. தெரிந்ததைச் சொன்னோம்."

பெருமாள்.—"அவனுடைய நடவடிக்கைகளைப்பற்றி உங்க ளுக்கு எவ்விதம் தெரியவந்தது? அதை விவரமாகச் சொல்லுங்கள்."

நாராயண பிள்ளை.—"மதுரையில் சங்கரன் வாசித்துக்கொண் டிருக்கும்போது உள்ள சங்கதிகளெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். பட்டணம் போனபின் நடக்கிற விஷயங்களைக் குறித்து சாமியவர்கள் நேரில் கண்டதை, நீங்கள் விரும்பிக் கேட்டால சொல்லுவார்."

இராமலிங்கம்.—(மனதுள்)"இஃதென்ன கோலமாயிருக்கிறது! சங்கரன் அப்படிப்பட்டவன் அல்லவே. அவன் நட வடிக்கைகள் நான் அறிந்தமட்டிலும் பேதகமா யிருக்க வில்லையே. எதையும் நன்றாய் விசாரித்தால் வெளியாகி றது. (சங்குவையரைப் பார்த்து) நீங்கள் பட்டணத்தில் நேரில் கண்டதாக, நாராயண பிள்ளை சற்று நேரத்துக்கு முன் சொன்னாரே, அதனை உள்ளது உள்ளபடி யதார்த்த மாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்."

சங்குவையர்.—"நீங்கள் கட்டாயமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறபடியால், நான் கண்ணுற் கண்டதைச் சொல்கிறேன். போனவாரத்துக்கு முந்தின வாரம் நான் என் மாமனுருடைய அப்பீல் கேசு விஷய மாய்ப் பட்டணம் போயிருந்தேன். இரண்டு மூன்று நாளாகக் கடற்றுறையில் சாயங்காலவேளை வேடிக்கை

பார்க்கப் போயிருந்தேன். உங்கள் மருமகன் முதல்நாள் இரண்டு லேடிகளுடன் கடற்கரையில் வெகு வுல்லாச மாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, வண்டியேறி வீட்டுக் குத் திரும்பக்கண்டேன். சங்கரன் அங்கே ஏதாவது உயர்ந்த உத்யோகத்தில் இருக்கிறுனே என்று மதித்துக் கொண்டேன். மதுரையி லிருக்கும்போது என்னுடன் அவன் பலதடவை பேசியிருந்தும், அங்கே என்னைக் கண்டவுடன் ஒரு வார்த்தையும் பேசாமலே போய்விட் டான். அவன் அப்பொழுது இருந்த ஷோக்குக்கு என் னிடம் எப்படிப்பேசுவான்? மறுநாளும் அப்படியே வந்து போகப்பார்த்தேன். ஆனுல் அன்றைக்கு ஒரு ஸ்திரீ மாத்திரம் கூடவந்திருந்தாள். இதுதான் நான் நேரிற் கண்டது."

இராமலிங்கம்.—(ஒருவித படபடப்புடன்,) "அவன் கெட்ட நடவடிக்கைக்காரன் என்று ரூபிக்கமுடியுமா?"

பலவேசம்.—"இதோ ரூபிக்கிறேன், பாருங்கள், இது யாரு டைய கையெழுத்தென்று" என்று ஒரு கடிதத்தை நீட்டினுன்.

இராமலிங்கம் செட்டியாருக்கு அதைக் கையில் வாங் கும்பொழுதே உடல் நடுங்க வாரம்பித்தது. வாசிக்கும்போது கண்களில் நீர் ததும்பிநின்றது. அந்தக் கடிதத்தை மடி யில் வைத்துக்கொண்டு ஒன்றும் பேச வாயெழாமல் மதிமயங் கிப் பிரமைகொண்டவர் போலிருந்தார். கொஞ்சநேரத்துக்குப் பிறகு பெருமூச்சுடன், "இது அந்தச் சண்டாளன் கை யெழுத்துத்தான், நிச்சயம்" என்ருர்.

நாராயண பிள்ளை.—"இராமசாமி எங்களுடைய சிநேகிதன். அவன் மூலமாகவே (பெருமாள் செட்டியாரைச் சுட்டிக்

காட்டி) இவர்களும் பழக்கம். இவர்களைப் பார்க்க வந்த விடத்தில், தற்செயலாய் சங்கரனைக் குறித்துப் பேச நேர்ந்தது, உங்களுடைய புத்திரியின் அதிர்ஷ்டமே யொழிய வேறில்லை. நல்லவர்களுக்கு ஒருபோதும் கெடுதி உண்டாகாது."

இராமலிங்கம் செட்டியார் மனமுடைந்து வருந்திப்பின் சற்றுத்தெளிந்து, "நம்மாலாவதொன்றில்லை. எல்லாம் தெய்வ சங்கல்பத்தின்படியாகிறது" என்று தேறியிருந்தார். அப்பொழுது அடுத்த அறையிலிருந்த லெட்சுமியம்மாளுக்கு உண்டான மகிழ்ச்சிக் கோரளவில்லை. "கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல," "இவர்கள் சமையத்தில் வந்து என் கோரிக்கையை நிறைவேற்றினார்களே. இவர்களுக்கு நான் எவ்விதத்தில் கைம்மாறு செய்யப்போகிறேன்" என்று மனதில் நினைத்துக்கொண்டாள். வேறொருவரும் அப்போது அங்கே இருந்திராதபக்ஷத்தில், அவர்கள் செய்த வுபகாரத்துக்குத் தகுந்த பரிசாகத் தான் அப்பொழுது போட்டிருந்த கழுத்தணியையுங்கூடக் கழற்றிக் கொடுத்திருப்பாள். அவ்வளவு உற்சாகம்! அவ்வளவு ஆனந்தம்!

இராமலிங்கம்.—"இப்போது இராமசாமிக்குத்தானே நிச்சயிக்க வேண்டியதிருக்கிறது?"

சங்குவையர்.—"அது உங்கள் இஷ்டம் எங்களுக்கென்ன தெரியும்?"

இராமலிங்கம்.—"இராமசாமியின் நடவடிக்கைகள் எப்படி?"

நாராயண பிள்ளை.—(பெருமாள் செட்டியாரைக் குறிப்பிட்டு) "இவாளுக்குத் தெரியாததா எங்களுக்குத் தெரியப் போகிறது? ஆனாலும் எங்களுக்குத் தெரிந்தமட்டிலும் அவனைக் கெட்டவனென்று சொல்ல முடியாது. ஆனால்

சங்கரனைப்போலப்பெரிய வகுப்புவரைக்கும்படிக்கவில்லை. அதொன்று இருக்கிறது. இதெல்லாம் நாங்கள் சொல்லுவானேன். பெண்ணெடுக்கிறவர்கள் இதோ இருக்கிறார்கள். கொடுக்கிறவர்களும் அதோ இருக்கிறீர்கள். உங்களிஷ்டம்போல் யோசித்து முடித்துக்கொள்ளுங்கள். இது விஷயத்தையும் அவர்களே தூண்டினபடியால், அதைப் பற்றி நாங்களும் பேச நேர்ந்தது. இல்லாவிட்டால் எங்களுக்கென்ன? இன்று தபால் வண்டியில் வந்த அலுப்பு ஜாஸ்தியாயிருக்கிறபடியால், போகவேண்டும் அனுமதி கொடுங்கள்" என்று திரும்பிவிட்டார்கள். சங்கரனை நீக்கிவிட்டால் இராமசாமியைத் தவிர வேறே மாப்பிள்ளைகள் சமீபத்தில் இல்லை யென்பதை அவர்கள் நன்றாயறிந்திருந்தபடியால், இராமசாமிக்கு அனுகூலமாக இவர்கள் அதிகமாய்ப் பேசாமல், மற்றக் காரியங்களை யெல்லாம் பெருமாள் செட்டியார் தலையிற் போட்டுவிட்டு உடனே வீட்டுக்குத் திரும்பினார்கள்.

* * *

இரவில் யார்யார்களோ வந்து தன்னை இராமசாமிக்கு முடிவு செய்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று கேள்விப்பட்ட முத்துக்காமாக்ஷியம்மாள் நடுநடுங்கித் தன்னை இயமன் கையில் ஒப்புவிக்கவந்த தூதர்களோ என்று அவர்களை மதித்தாள். இது விஷயத்தில் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்ட தன்னருமைத் தாயாரையும் தாயென்று மதிக்கவும் அவளுக்கு மனம் வரவில்லை. இதுகாறும் தான் நம்பியிருந்த தந்தையும் தன்னைக் கைவிட்டுவிட்டாரே என்று கலங்கினாள். "என்னை இவ்வுலகில் அருமையாகப் பெற்று வளர்த்த தாய்தந்தையரும் என்னை இத்தருணத்தில் கைவிட்டுப் பகைமை ஸ்தானத்தில் நிற்கிறார்

களே. சங்கரா, நீயே எனக்குற்ற துணை," யென உரக்கக் கதறினாள். "இதுவரை நான் எண்ணியிருந்த எண்ணமனைத்தும் போனதே. இனி யெவ்வாறு இந்த வுலகிலிருந்து வாழப் போகிறேன்.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு"

என்றபடி, ஒப்பற்ற கல்வி யழகில்லாத மூடனையா நான் காதல் கொள்ள வேண்டியதிருக்கிறது! ஒருவேளை நான் என்னுடைய பெற்றோர்களுக்கிணங்கி, மதுரையிலிருக்குமந்த மாபாவியை மணந்தாலும், என்னருமை பெருமைகளைக் கவனியாமல் கேவலம் மிருகத்தைப் போலல்லவா நடத்துவான்! கல்வியில்லார்க்கு நியாயம் ஏற்குமா? பிடிவாதமல்லவோ பெரிதாயிருக்கும். ஆனால், சங்கரனுக்கென்று நான் மனமார அர்ப்பணம் பண்ணின இந்த வுடலை இன்னொருவர் கைக்கொள்ள உடன்படுவதைப் பார்க்கிலும் உயிரை விட்டுவிடுவது மேலானதல்லவா? ஆனால் தற்கொலை செய்துகொள்ளுவதும் மிகுந்த பாதகமாச்சுதே! ஆகவே அதுவும் கூடாது. ஜகதம்பிகையின் திருவுளம் எவ்வாறிருக்கிறதோ? அதை யார் கண்டார்கள். ஆனால் இஃதொன்று திண்ணம். "நம்பினவரை அம்பிகை கைவிடாள்," அவளையே கதியென்றிருப்பேன். பின் விதியின்படியாகிறது. அதற்காக இப்பொழுதிருந்தே வருந்துவதிற் பயனில்லை," என்று துக்கத்தைத் தன் மனதில் அடக்கிக் கொண்டிருந்தாள்.

* * *

மறுநாள் காலை பத்துமணிக்கு நிச்சயதாம்பூலம் வழங்கு

கிறது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால், ஊர் மிராசுதார்களும் மற்ற ஜாதியாரும் வந்து சேர்ந்தார்கள். பெண்ணைச் சார்ந்த பெற்றார் உற்றார் அனைவருடைய சம்மதமும் கேட்டு, இராமசாமிக்கு மணமுடிப்பதாக நிச்சயித்து, வந்திருந்த எல்லா ஜனங்களுக்கும் வரிசை தப்பாமற் சர்க்கரையும் தாம்பூலமும் வழங்கப்பட்டன. பிலவங்கஹு ஆனி மாதம் கல்யாணமென்றும், அருப்புக்கோட்டையில் பெரிய வீட்டில் வைத்து நடத்திக் கொள்ளுகிறதென்றும், கலியாணத்துக்கு வரக்கூடியவர்களை உபசரிக்கும் மார்க்கங்களும் செவ்வையாக பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. அதற்கென்று ஏற்பட்ட ஊர்ப்பணமும் பெருமாள் செட்டியாரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். எல்லா ஜனங்களும் குறைவற வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டார்கள். வந்திருந்த பெண்டுகளுக்கெல்லாம் தவறுமல் லெட்சுமியம்மாள் உபசாரம் சொல்லியனுப்பினாள். சிலருக்கு மாத்திரம் முத்துக்காமாக்ஷியை சங்கரனுக்கு மணமுடித்து வைக்காமல் இப்படித் தீர்மானம் செய்ததைப்பற்றி ஆச்சரியமுண்டாயிற்று. "சங்கரனுடைய தாய் தந்தையர் தற்காலம் இருந்திருந்தால் இப்படி வேறு பக்கம் பெண் பேசவருமா" என்று தம் மனதில் எண்ணிக்கொண்டாராயினும், பெற்றோர் நோக்கத்தை யனுசரித்து அவர்களும் சந்தோஷமாகவே திரும்பினார்கள்.

---

## 6-வது அத்தியாயம்

### காதலரியல்பு

சென்னையில் கிறிஸ்தவக் காலேஜில் நமது சங்கரன் எப். ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருக்கிறான் என்பதை

நம்முடைய நேயர்கள் யாவரும் அறிவார்கள். அவன் சென்னையைச் சேர்ந்த பழைய வண்ணாரப்பேட்டையில் மிகவும் பிரசித்திபெற்ற கனவானுகிய ஜெகந்நாதம் செட்டியார் மகன் கோபாலனோடு மிக்க நேசம் பூண்டு, அன்னோர் இருவரும் மேற்படிக் கலாசாலையில் ஒரே வகுப்பில் வாசித்து வருகிறார்கள். தவிரவும், சங்கரன் கோபாலனுடைய வீட்டுக்கு அடுத்த மேற்குப் பங்களாவில் மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் குடிக்கூலி கொடுத்து அதில் தங்கி வருகிறான். அவர்கள் இருவரும் இணைபிரியாத தோழர்களா யிருக்கிறார்கள். பார்த்தவர்கள் அவர்களைச் சகோதரர்களென்றே மதிப்பார்கள். ஆனால் கோபாலன் சற்றுப் புதுநிறமானவன். இந்த நிற வித்தியாசமும் நன்றாய் உற்று நோக்கினவர்களுக்குத்தான் புலப்படுமே யொழிய மற்றவர்களால் கண்டுபிடிப்பது அசாத்தியம். அவர்களுக்கு உடல் இரண்டு, உயிர் ஒன்று என்றுதான் கூற வேண்டும். இத்தகைய பிராண சிநேகிதர் இருவரும், முந்தின அத்தியாயத்தில் சொல்லப்பட்ட நிச்சய தாம்பூலம் நடந்த நாலா நாள், வழக்கம்போற் சாயங்காலம் கடற்கரை யோரம் உலாவித் திரிந்துவிட்டுப் பின் வீட்டுக்குத் திரும்பினார்கள். கோபாலன் தன்னுடைய வீட்டுக்குப் போய்விட்டான். சங்கரன் மாத்திரம் தான் இருக்குமாளிகையில் ஒரு சோபாக் கட்டிலின் மேற் சாய்ந்துகொண்டு ஏதோ ஒரு ஆழ்ந்த யோசனையிலிருந்தான். அவனுடைய அப்போதைய நிலைமையைக்கண்டோர், ஐம்புலன்களையும் அடக்கி, ஏகாக்கிர சித்தத்தோடு பரமனடித் துணைகளை நாடி நிற்கும் யோகியென்றே அவனைத் திட்டமாய்ச் சொல்லுவர். சிறிதுநேரம் போனபின்பு, அவன் தன்னுடைய மனதில் அடியில் வருமாறு நினைக்கலானான். "ஒருநாளுமில்லாத சஞ்சலம் இன்று அகாரணமாய் என் மனதில் உண்

டாகும் முகாந்தரம் தெரியவில்லையே. அருப்புக்கோட்டையில் என்னருமைக் கண்மணிக்கு ஏதாவது தீங்கு நேரிட்டிருக்குமோ! "க்ஷேமமா யிருக்கிறேன், தங்களைப்பார்க்க மிகவும் ஆவல்கொண்டிருப்பதால், பரீக்ஷை முடிந்தவுடன் ஊருக்குப் புறப்பட்டு வரவேண்டும்," என்று காமாக்ஷி அன்போடெழுதிய கடிதமும் நேற்றுத்தானே வந்தது! அந்தக் கடிதம் ஒரு வேளை வழியில் அதிகநாள் தங்கி யிருந்திருக்குமோ," என்று நினைத்து அந்தக் கடிதம் வரையப்பட்ட தேதியை விளக்கு வெளிச்சத்தில் நன்றாய்ப் பார்த்து "இந்தக் கடிதம் தாமசியாமல் மூன்றாம் நாளில் எனக்குக் கிடைத்திருக்கிறதே. ஆகையினாலே அப்படி யொன்றும் என் முத்துக்காமாக்ஷிக்கு நேர்ந்ததாகத் தோற்றவில்லை. பின் இந்த சஞ்சலம் எதற்கு? காரணம் தெரியவில்லையே! என்னுடைய பெற்றோர்கள் என்னை இளமைப் பருவத்தே தனிமையாக இவ்வுலகில் விட்டு நீங்கின துயரமும், காமாக்ஷி, உன் பொருட்டல்லவோ சகித்துக்கொண்டிருக்கிறேன். இவ்வூர் வந்து பெரிய வகுப்பில் சேர்ந்து நான் அதிக சிரத்தை யெடுத்து வாசிப்பதும் உன் பொருட்டன்றோ? நீ யில்லாவிடின் இந்த வுலகம் எனக்குத் துக்கமயமாகவல்லவோ இருக்கும்? "காதல்" என்பதொன்றில்லையேல், இவ்வுலகமெல்லாம் போர்க்களமாகவல்லவோ முடியும்! உன்னால் அல்லவா நான் இன்னும் உயிரை வைத்திருக்கிறேன். நின்னன்பில்லாவிடின் என்னுயிர் நிலைநிற்குமா? என் கண்ணே! என் கருத்தே!" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது "ஐயா," "ஐயா," என்ற சப்தம் வெளியே கேட்க, சங்கரன் திடீரென்று எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். கிருஷ்ணன் என்னும் சமையற்காரன், "இன்று சாயங்காலம் நீங்கள் வெளியே போயிருந்த சமையத்

தில் தபாற்காரன் இந்த இரண்டு கடிதங்களையும் கொண்டு வந்து கொடுத்துப் போனான்," என்று அவைகளை சங்கரன் கையிற் கொடுத்தான். அவன் அவைகளை விரைவிற் கைநீட்டி வாங்கிக்கொண்டு, "சமையல் சீக்கிரம் ஆகட்டும்," என்று சொல்லிவிட்டு, உள்ளே புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு கட்டிலிற் போயுட்கார்ந்து கடிதங்களின் விலாசங்களைப் பார்வையிட்டான். ஒன்று அம்மானுடைய கையெழுத்தா யிருந்தது. மற்றொன்று தன் இன்னுயிர்க்காதலியின் கையெழுத்தா யிருந்தது. பிந்தின கடிதத்தைத் தன் மார்புக்கு நேராயிருந்த சட்டைப்பைக்குள் பத்திரமாக வைத்துவிட்டு அம்மானுடைய கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் பின் வருகிற பிரகாரம் வாசிக்கலானான்.

அருப்புக்கோட்டை

பிலவங்கஹு சித்திரைமீ 20உ

சிரஞ்சீவி மருமகனுக்கு,

கல்வி விஷயத்தில் அணுவளவேனும் சிரத்தை வைக்காமல், கெட்ட நண்பருடன் கூடி, நீ வீண்காலம் போக்குவதாய் ருசுக் கிடைத்தபடியால், நான் உனக்கு இதுவரையிலும் படிப்புக்கென்று ஐம்பது ரூபாய் மாதா மாதம் அனுப்பி வந்ததை நிறுத்திவிட்டேன். இனிமேலாக யாதொரு உதவிக்கும் என்னை எதிர்பார்க்க வேண்டியதில்லை.

இப்படிக்கு

இராமலிங்கம் செட்டியார்.

கடிதத்தை வாசிக்கும்பொழுதே மேலெங்கும் இடியேறுண்ட சர்ப்பம்போல நடுங்கியது. துக்கத்தால் கண்ணீர் துளித் துளியாய் விழ வாரம்பித்தது. அப்படியே மூர்ச்சை

யடைந்து கட்டிலின்மேற் சாய்ந்தான். பிறகு கிடந்தபடியே, "ஐயோ! இந்த அபவாதத்திற்கு என்ன செய்வேன்! இது யாருடைய துற்போதனையோ? துற்போதனைகளுக்கு அணுவளவும் இடங்கொடாத என்னுடைய அம்மான் மனமும் இவ்விதம் மாறினது என் துரதிர்ஷ்டமேயொழிய வேறில்லை. அந்தோ! வெண்ணை திரளுகையில் தாழி யுடைந்தாற்போலாயிற்றே! தெய்வமே, தெய்வமே! நிரபராதியான என்மேல் இந்த வீணான பழி சுமத்தினவர்களுக்கு என்ன கதி கிடைக்குமோ. ஆ! ஆ! இதுவரையில் நல்லவனென்று பெயரெடுத்துவிட்டு இப்போது இச்சொல்லைக் கேட்கவும் வந்ததே விதி! இனிமேல் நான் இவ்வுலகில் எவ்வண்ணம் உயிருடனிருப்பேன். ஐயோ! இந்த வுடலே எனக்கு இப்போது பாரமாகத் தோற்றுகிறதே," என்று பலவாறு மனமுடைந்து புலம்பித் தவித்துக்கொண்டிருக்கும்போது, தன்னுடைய இடது கையானது தற்செயலாய் தன் சட்டைப்பையிற் புகவும், தன்னருமைக் காதலியின் கடிதம் கையிற் கிடைத்தது. நடுக்கடலிற் றிசை தப்பித் தத்தளித்துக்கொண்டிருந்த ஒரு மாலுமிக்கு அகஸ்மாத்தாய் ஒரு துறை தோற்றினால் எவ்வளவு மனக்களிப்பு அடைவானோ அதைவிட எண்மடங்கு சந்தோஷமடைந்து அந்தக் கடிதத்தையும் அவசரமாய்ப் பிரித்துப் பின் வருகிறபடி வாசிக்கலானான்.

க்ஷேமம் அருப்புக்கோட்டை

பிலவங்கஹு சித்திரைமீ 20உ

ஆருயிரினு மினிய அத்தானவர்களுக்கு,

காமாக்ஷி நமஸ்காரம்பண்ணி எழுதிக்கொண்டது, மதுரைவாசியாகிய இராமசாமிக்கு, என்னை மணஞ்செய்து கொடுப்பதாய், என் பெற்றோர்கள் வாக்களித்ததின்பேரில், நேற்று நிச்

சயதாம்பூலம் ஆய்விட்டது. ஆனி மாதத்தில் விவாகம் நடத்துவதாக நிச்சயித்திருக்கிறார்கள். நான் தங்களையே கதியென்று நம்பியிருக்கிறேன். அதற்குள் தாங்கள் இங்கே வந்து என்னைக் கைக்கொள்ளாவிட்டால், என்னை யப்புறம் கண்ணாற் காணமாட்டீர்கள்.

இப்படிக்கு,

அன்புள்ள காமாக்ஷி.

கடிதம் அரைகுறையாய் வாசித்து முடியவும், ஒருவிதமான மயக்கம் உண்டாகி அப்படியே அடியற்ற மரம்போலக் கட்டிலின்மேற் சாய்ந்தான். கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாய் வடிந்துகொண்டிருக்கிறது. கொஞ்சம் மயக்கம் தெளியவே, அவனுக்குண்டான துக்க மிகுதியால் பேசவும் நாவெழவில்லை. வாய் மிகவும் வறட்சியடைந்துபோனது. சுமார் பத்துநிமிஷம் வரையிலும் அந்த ஸ்திதியில் இருந்தான். பிற்பாடு கொஞ்சம் உணர்ச்சியும் திடமுமுண்டாக, "அம்மாளுடைய கடிதத்தை வாசித்து நொந்திருக்கிற என் மனம் சிறிதாவது ஆறுமென்றல்லவோ, என்னன்பார்ந்த காதலி! உன் கடிதத்தைப் பார்க்க அவாக்கொண்டேன், "இது புண்ணிற் புளிப்பெய்தது போலாய்விட்டதே," "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்," என்ற பழமொழியை இப்போதுதான் நான் அநுபவசித்தமாய் அறிந்தேன். இனித் தேறும் கதியொன்றும் தென்படவில்லையே.

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

என்றபடி, நான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்றல்லவோ நினைத்தது! நீயும் என்னை மறந்திடில் எனக்கு இவ்வுலக வாழ்க்கையாலாய பயனேதுளது? கண்மணி! நீமாத்திரம் எனக்குத் தைரியம் கொடுத்திராவிட்டால், என்னிதயம் அப்போதே பிளந்து போயிருக்கும்! உன்னை நான் எப்படி யடைந்து ஆனந்திக்கப் போகிறேன். நின்னைக் காக்கும் வகையொன்றும் காண்கிலேனே! இத்தனை பகைவர் மத்தியில் சிக்கி நீ எவ்வாறு தவிக்கிறாயோ? நீ அங்கிருந்து அவஸ்தைப்படவும், அதை நினைந்து நான் இங்கிருந்து புலம்புவதாலும் ஆகும்பயனொன்று மில்லையே. அன்பே! அமிர்தே! நின்னின்சொல் லமுதம் இனியென்று நான் பருகி என்னுடலம் பூரிப்பேனோ. சௌடாம்பிகே நீயே தஞ்சம். என்னுயிர்த்துணையைக் காப்பதுவும் உன் பாரம். என் செயலால் இனி யாதொன்றுமில்லை. எல்லாம் உன் செயலால் ஆகவேண்டியதே—ஆருயிர்க்காதலி! “இஃதொன்று திண்ணம். இந்தவுடல் உயிரோடு கூடி யிருக்குமளவும் உன்னைப் பிறர்பொருளாக்க இசையேன்,” என்று பலவிதமாய் பித்தனைப்போற் புலம்பித் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தான். மணியொன்பது அடிக்கவும், கிருஷ்ணன் அவனிடம் வந்து “ஐயா சமையல் தயாராய்விட்டது, சாப்பிடவாருங்கள்,” என்று அழைத்தான். அதற்கு சங்கரன் “இன்று ஒருவிதமான உணர்ச்சி எனக்கு உண்டாயிருப்பதால், உடம்புக்குச் சுகமில்லை, பசியுமில்லை, ஆகையினாலே விடிந்தபின் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன்,” என்றான். உடனே கிருஷ்ணன் ஆச்சரியமடைந்து, “கடற்கரையிலிருந்து திரும்பிவந்தவுடன், பசியாயிருந்ததினாலல்லவோ, என்னைப்பார்த்து “சமையல் சீக்கிரம் ஆகட்டும்,” என்று சொன்னவர்கள், இப்போது பசிக்கவில்லையென்று சொல்வதின் காரணம் தெரியவில்லையே. சமையல்

பிந்திவிட்டதென்று என்பேரில் கோபமிருக்குமோ? இதற்கு முன் எத்தனை தரமோ சமையல் தாமசித்து ஆனபோதெல்லாம், என்மேல் கொஞ்சமேனும் கோபங்கொள்ளாமல், பொறுமையுடன் என்னை யாதரித்தவர்கள், இன்று இவ்வளவு வெறுப்பாய் என்னுடன் பேசக் காரணமில்லையே. யோசித்துப் பார்க்கும்போது அவரது தோற்றம் சந்தோஷகரமா யிருக்காமல், ஏதோ துக்கத்தில் மூழ்கியிருப்பதாய்த் தெரிகிறது. காரணம் ஏதாயிருக்கலாம். ஒருவேளை, நான் கொண்டுவந்து கொடுத்த கடிதங்களில் அவர் மனம் வருந்தும்படியான சமாசாரங்கள் ஏதுவேனும் இருக்குமோ? அப்படித்தான் இருக்கவேண்டும்," என்று முடிவு கட்டிக்கொண்டு, "எதற்கும் விடியட்டும் பார்ப்போம், அதற்குள்ளேதான் அவரைத் தொந்தரவுப் படுத்துவானேன். தூங்கியெழுந்தால் துக்கமாறிவிடாதா," என்றிந்த விதமாக எண்ணமிட்டுக்கொண்டு போய், தான் சிறிதளவு அருந்திவிட்டு வழக்கம்போற் போய்ப் படுத்துறங்கினான். மறுநாள் அருணோதயமாவதற்குள் எழுந்து, சரேலென்று ஜகந்நாதம் செட்டியார் வீட்டுக்குப்போய்க் கோபாலனுக்கு இரவில் நடந்த சங்கதியைச் சொல்லவேண்டுமென்று போகுந்தறுவாயில், கோபாலன் தன் வீட்டுவாசலில் நிற்பது கண்டு, "ஐயா நம்மெசமான் நேற்றிராத்திரி சாப்பிடவேயில்லை. உணவு வேண்டாமென்று மறுத்துவிட்டார். காரணமும் இன்னதென்று தெரியவில்லை. நிரம்ப விசனமுற்றவராய்த் தெரிகிறது" என்று சொன்னான். கோபாலன் அப்படியே நேராய் சங்கரனுடைய ஜாகைக்கு வந்து அவனைப் பார்த்துப் பிரமித்து "இதென்ன விபரீதமாயிருக்கிறது! சிநேகிதா உன் முகம் ஒளியிழந்து நோயாளியைப்போல் காணப்படுகிறாயே? அன்றலர்ந்த செந்தாமரைப் புஷ்பத்திற்குச் சரியாக விருக்கும் உன்னுடைய

சுந்தர வதனம் இன்று பொலிவிழந்து வாடியிருப்பானேன்? உனக்கு என்ன சங்கடம் நேர்ந்தது? அதை என்னிடம் சொன்னால் நான் என்னாற் கூடியவளவு உனக்கு உதவிபுரியமாட்டேனா?

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு."

என்று பெரியோர்கள் கூறியிருப்பது மெய்யல்லவா? எவ்விதத் துன்பம் வந்தாலும் சரி, நானிருக்கிறேன். ஒன்றுக்கும் நீ யோசிக்கவேண்டியதில்லை, சீக்கிரம் சொல்வாயாக" என்றனன்.

சங்கரன்.—"அன்பனே, என் துயரை உன்னிடம் கூறாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன்; இதைப் பார்," என்று தன்னம்மான் தனக்கெழுதிய கடிதத்தைக் கோபாலன் கையிற்கொடுக்க, அதை யவன் வாங்கி சீக்கிரத்தில் படித்துவிட்டு அப்படியே ஒன்றும் பேசாமல் மதிமயங்கி நின்றான்.

சங்கரன்.—"என்னைப் பெற்ற தந்தைக்குப் பின் தந்தையாயிருந்து வளர்த்துவந்த என் அம்மானும், உண்மை யுணராமல், எனக்குப் பகையாய்விட்டார். இதை நினைக்கும் போது "அலங்கரித்து மூக்கரிந்த கதைபோல்," தோற்றுகிறது. இம்மட்டோடு நின்றதா? என் இன்னுயிரான காமாக்ஷியும் இடைஞ்சற்பட்டிருக்கிறாள்" என்று கண்ணீர் வடித்துக்கொண்டு, "என்னிதயத்தை யிருகூறாக்குவதற்கு வேறென்ன வேண்டும்?" என்று மற்றக் கடிதத்தையும் கோபாலன் கையிற் கொடுத்தான். கோபாலன் (அதையும் வாசித்துவிட்டு), "நண்பனே, இவ்வுலகத்தில் மனிதர்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் சில வேளை

களில் வருவதுண்டு. அவைகளைக் கடவுள் சோதனை என்று சொல்லுவார்கள். அந்தக் காலத்தில் தைரியமா யிருப்பதுவே ஆண்மைத்தனம். அஃதில்லையாயின் ஆட வருக்கும் பெண்களுக்கும் வித்தியாசமில்லாமற் போய் விடும். ஆகவே தைரியத்தைக் கைநழுவ விடாமல், நல்வழி யில் முயற்சி தேடினால், துக்கமாயேற்பட்டவைகளும் சுக மாகவே வந்து முடியும், நம்முடைய முயற்சியால் துக்கத் தையும் சுகமாக்கிக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மனமே முக்கிய காரணம். ஆகவே இந்த நீதிகளையெல் லாம் அறிந்த நீ, கேவலம் பெண்களைப்போலக் கண்ணீர் விடுவது அழகோ ?"

சங்கரன்.—“ சென்ற இரண்டு வருடங்களாக, அதாவது நான் சென்னைக்கு வந்தது முதல், நாம் இணைபிரியாத் தோழரா யிருந்து வருகிறோமே, என்னுடைய அம்மான் எழுதி யிருக்கிறபடி நான் எப்பொழுதாவது நடந்ததுண்டா ? நான் அவ்விதம் நடந்திருந்து இந்தமாதிரி நேர்ந்தாலும், நான் மனமாரச் செய்த குற்றத்திற்கு இது தகுந்த தண் டனை யென்று பொறுமையுடன் சகித்துக்கொள்ளு வேனே ! நிரபராதியான என்மேல் இல்லாத குற்றத் தைச் சுமத்தினதை எண்ண எண்ண என் மனம் புண் படுகிறதே !"

கோபாலன்.—“ அருமைத்தோழா, யார் யார் எப்படிக் கூறின போதிலும், நம்முடைய மனச்சாக்ஷிக்கு மட்டும் நாம் விரோதமில்லாமல் நடந்து வருவோமானால், கடவுள் நம்மை யொருக்காலும் கைவிடமாட்டார். இது நிச்ச யம். “ தருமம் தலைகாக்கும் ” என்பதை நீ கேள்விப் பட்டதில்லையா ? சில வஞ்சகர்களின் துற்போதனையால்

இது ஏற்பட்டிருக்க வேண்டும். அஃதிருக்கட்டும். பொருளுதவி யில்லாததைப்பற்றிக் கொஞ்சமும் கவலை யடைய வேண்டுவதில்லை. உனக்கு வேண்டிய உதவிகள் புரிவதற்கு என் பிதா சித்தமாயிருக்கிறார். எவ்விதமெனில், உனக்குப் பொருளுதவி வேண்டியிருந்தால், உடனே அவருக்குத் தாக்கல் கொடுக்கும்படி அநேக சந்தர்ப்பங்களில் அவர் என்னிடம் சொல்லியிருக்கிறார். நான் அவைகளை யெல்லாம் உன்னிடம் சொல்லாமல் இதுகாறும்மறைத்து வைத்திருந்தேன். இன்று சமயம் வாய்த்தபடியால் அதனை உன்னிடம் சொல்ல நேரிட்டது."

சங்கரன்.—"பாங்கனே, நீ அவைகளை என்னிடம் சொல்லாம லிருந்தாலும், நான் இவ்வூருக்கு வந்தவுடன், உன் தந்தையாரின் குணங்களைப்பற்றித் தெரிந்துகொண்டேன். அது விஷயமாக அதாவது பொருள் விஷயமாகக்கூட அத்துணைக்கவலை எனக்கு ஏற்படவில்லை. காமாக்ஷியைக் காக்கும் வகை தெரியாமலல்லவோ நான் கலங்கித் தவித்துக்கொண்டிருக்கிறேன்."

கோபாலன்.—"சிநேகிதா, நீ அது விஷயமாகவும் கவலைப் படவேண்டாம். அதற்கு வேண்டிய வழியை நாம் சீக்கிரம் தேடுவோம். முயற்சியெடுத்தால் ஆகாததும் உலகின்கண் இருக்கிறதோ?"

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்",

என்றபடி முயற்சியால் விதியையும் வெல்லுவார்."

சங்கரன்.—"நண்பா, காமாக்ஷியைக் காக்கும் வழியெது? எனக்கொன்றும் தெரியவில்லையே. நாமும் அங்கே போகக் கூடாது. வேறே யாரையாவது அனுப்பி வேண்டிய ஏற்

பாடு செய்யவேண்டும். எதற்கும் நம்மாலாவதென்ன? கடவுள் அனுக்கிரகமிருந்தால் தானே முடியும்," என்று பெருமூச்செறிந்தான்.

கோபாலன்.—"தோழா, நாம் இதில் சீக்கிரம் முயற்சி எடுக்க வேண்டும். இல்லாவிடில் அநியாயமாக ஒரு பெண்பழி வந்து சேருகிறது. முயற்சியின் நற்பயனே கடவுளின் அருளாய் முடியும். பிரயத்தனம் செய்யாவிட்டால் ஒரு காரியமும் ஆகாது.

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்,"

என்று நாயனார் தெரிவித்திருக்கிறார்.

எங்கள் வீட்டில் "சுப்பன்" என்று ஒரு உண்மையான வேலைக்காரன் இருக்கிறான். அவன் வெகு கைகார ஆசாமி. அவனைக்கொண்டு ஆகவேண்டியதை முடித்துக்கொள்ளுவோம்," என்று சொன்னவுடன், சங்கரன் "ஆனால் சரி," என்று ஒப்புக் கொண்டு எழுந்திருக்க, அவரவர்கள் வேலைகளில் எப்போதும் போலப் பிரவேசித்தார்கள்.

---

## 7-வது அத்தியாயம்

### கபடாலோசனை

அருப்புக்கோட்டைக்குத் தென்கீழ்த் திசையில் புராதனமாயுள்ள வாழவந்தம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோவிலுக்கெதிரில், திருச்சுழிகைக்குப் போகும்படியான கிழமேல் ரஸ்தாவிற்கு வடபாரிசத்தில் கல்மட மொன்றுண்டு. இந்த மடத்துக்கு அப்பால் மூன்று திசைகளிலும் பனந் தோப்பும், செவல்புஞ்சைக் காடுகளும் தவிர வேறே வீடுகளே

கிடையாது. இந்த மடமானது ஊருக்கு ஒதுங்கி யிருப்பதனல், அவ்வழியாய் வருகிற வழிப்போக்கர்கள் ஒருவேளை நடுப்பகல் நேரத்தில் சற்றுநேரம் தங்கி யிருப்பார்களேயொழிய, இவ்வூரார் யாரும் அங்கே போய்த் தங்குகிற வழக்கமில்லை. ஆனிமாதம் பன்னிரண்டாம் தேதி திங்கட்கிழமை இரவு சுமார் பதினொரு மணி இருக்கலாம். ஆளரவம் அநேகமாய் ஒடுங்கிவிட்டது. கூரிருள் எங்கும் குடிகொண்டது. ஆசைநாயகிகள்மேல் ஆர்வ மிகுந்த காமுகரும், உடல்வருந்தப் பாடுபட்டு ஜீவனம் பண்ணுமல் சோம்பேறித்தனமாய், யார் குடியை, எப்படிக் கெடுக்கலாம்? என்ற எண்ணத்தோடு திரியும் காதகரும், கூற்றுவனைப்போல நாடோறும் கொக்காட்டங் கொள்ளும் மனைவியர்பாற் சிக்கி வருந்தும் பேதையரும், தரித்திரக்கடலில் ஆழ்ந்த வறியவரும், சகிக்கொணு நோயால் கஷ்டப்படும் நோயாளிகளும், இராக்காலங்களில் களவாடலே முக்கிய கடமையெனக் கங்கணம் கட்டிக்கொண்டு திரியும் கடையர்களும் நீங்கலாக, மற்ற யாவரும் அயர்ந்து நித்திரை போயினர்.

இந்தச் சமயத்தில், மேற்சொன்ன மடத்தில் ஒருவன் நின்றுகொண்டு வேருெருவனை எதிர்பார்த்த வண்ணமாய் தெற்கு முகமாக நின்று மேற்கே அடிக்கடி எட்டி யெட்டிப் பார்ப்பதும், கொஞ்சநேரம் ஏதோ ஒரு ஆழ்ந்த யோசனையிலிருப்பவன்போலக் கீழ்நோக்கி நிற்பதும், சிறிது நேரம் அடுத்து நிற்போருக்குங் கேட்க முடியாத அவ்வளவு மெல்லிய குரலில் தானே பேசிக்கொள்ளுவதும், பழையபடியும் மேற்கே யெட்டிப்பார்த்து ஆள்வரவைப் பார்ப்பதுமாக இருந்தான். கொஞ்ச நேரத்தில் ஒருவன் அங்கே வந்து தன் கையிலிருந்த் இருப்புப்பூண் கட்டிய கம்பைக் கீழே வைத்துவிட்டு,

"ஏ கருப்பா!" என்றவுடன், "இருக்கேன் அண்ணே," என்று கருப்பன் பதில் உரைத்தான். மறுபடியும் "அண்ணே அய்யா வந்திட்டாகளா?" என்று கேட்டான்.

இரண்டாம் மனிதன், "ஆமா, நம்ப வீரன் வந்திட்டானு, கருப்பா?"

கருப்பன்.—"நிலா விளுந்து ரெண்டு நாளிக்குள்ளே வார மிண்டு சொல்லிட்டுப் போனவன், இன்னும் வல்லியே, ஆனு அண்ணே பய காரிய மில்லாமே இருக்க மாட்டான். இது நிச்சயம். எதுக்கும் இன்னம் கொஞ்ச நேரம் பாப்போம்."

முனியன்.—"ஆசாமி கொளுத்த பணக்காரரா, போனுக்கி சரியா வேட்டை கெடைக்குமா, எப்போ வாராகளாம்?"

கருப்பன்.—"அடியாத்தே, நல்லா யிருந்திச்சே! நாளு லெச்சத்துக்கும் திடமிங்கிருக, அதிலெயும், களியாணச் சமயம். நகைநட்டுக்குக் கேக்கவா வேணும்? கொள்ளேதேன்."

முனியன்.—"அதுதானே, அப்படியல்லாட்டிபோனு, வீரன் தான் வருவானு, அய்யாதான் வருவாகளா?"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே மேற்கே சற்று தூரத்தில் ஆள் நடந்துவரும் சத்தம் கேட்டது. கருப்பன், "ஆரோ வாராப்பிலெ இருக்கு" என்று சொல்லி வாய் மூடுமுன், முனியன் இருட்டு மடத்தில் விருட்டென்று பாய்ந்தான். கருப்பனும் ஒரு தூண் மறைவில் பதுங்கிநின்ருன். அப்போது அங்கே வரக்கூடியவனுடைய யோக்கியதையை நாம் இன்னதென்று சொல்லாமலே நம்முடைய நண்பர்கள் அறிந்து கொள்ளுவார்கள். இராத்திரி வேளையானதினுலும், செகப்பு வஸ்திரம் கட்டியிருந்ததினுலும், பெண்வேடம்போல் தோன்றிய அந்தப் புருஷன் மடத்தின் முன்னின்று, நாலாபக்கமுந்

திரும்பித்திரும்பிப் பார்த்து, ஆள் சந்தடி யில்லையென்று கண்டு "அண்ணே, அண்ணே," என்று மெலிந்த குரலிற் கூப்பிட்டான். உடனே, "வீரா" என்று சொல்லிக்கொண்டு, கருப்பன் முதலாவது வெளியே வந்தான்.

கருப்பன்.—(வீரனைப் பார்த்து) "காயா, பளமா ?"

வீரன்.—"பளந்தான். அதுக்கென்ன சந்தேகம்? அய்யா வந்திட்டாகளா ?"

கருப்பன்.—"வந்தாச்சி, அவுக இன்னொரு இடத்திலே இருக்காக. உன்னைக் கூட்டிக்கிண்டு போகத்தேன் நம்ப முனியண்ணனும் வந்திருக்கான். அவனும் நானும் உன்னைப் பத்தித்தேன் இதுவரை பேசிக்கிண்டிருந்தோம் (உள்ளே மடத்தை நோக்கி) "முனியண்ணே, வீரனைக் கூட்டிக்கிண்டு அய்யாட்டே போவோமா ?"

முனியன். — (உள்ளேயிருந்து வெளியே வரும்போதே) "போவோம் புறப்படுங்க."

வீரன்.—"அண்ணே, இத்தனைத் தோமும் இங்கேதானு இருந்தே, ஆளு கடுத்தவனு யிருக்கியே."

முனியன்.—"அப்படி யில்லாட்டிப்போனு இந்த வேலைக்கி உதவுமா? உனக்கென்ன தெரியும்? கிளக்கேப்பாத்து வெரசா நடப்போம்" என்றான். அப்போது முனியன் முன்னுகவும், வீரன் மத்தியிலும், கருப்பன் பின்னுகவும், கீழ்த்திசை நோக்கிப் பாதைகூடி நடந்தார்கள்.

இந்தச் சமையத்தில் வீரனுக்கு ஒருவிதமான பயமும் திகிலும் மேலிட்டு, தான் இன்ன இடத்துக்குத்தான் போகிறது என்றுகூடத் தெரியாமல் போயிற்று. அவனுடைய மனம் பலவிதமான யோசனையி லிருந்தபடியால், அவன் நடை வரவரத் தாழ்ந்துபோனது. பிந்தவும், அவனுக்குப் பின்

னல் போகிற கருப்பன், "வேகமா, வேகமா," என்று அடிக் கடி எச்சரிக்கை பண்ணிக்கொண்டு போவதையும் பார்த்தால், வீரனுடைய பாடு "பலிபீடத்துக்குத் தள்ளிக்கொண்டு போகப் படுகிற ஒரு ஆட்டுக்கடாவினதை," ஒத்திருந்தது. இத னாலே இவன் இதுவரையிலும் மற்றவர்களோடு சேர்ந்து, அவர்களுக்கு ஏற்பட்ட தொழிலில் பழகவில்லை யென்று தெரிகிறது. குற்றமான தொழிலிற் பழகாதவர்கள், முதலிற் கெட்ட செய்கை யாரம்பிக்கும்போது, உள்ளே கடவுள் சொரூபமாயிருக்கிற மனசாக்ஷி அவர்கள் மனதை வாதிக்கச் செய்யும். ஆனால் ஒரு தரம் பழகிவிட்டால், பிற்பாடு மன சாக்ஷியினால் தடுதலை எந்த வேளையிலும் உண்டாகாது. ஆகவே நம்முடைய வீரன் இந்த மனிதர்களுடன் கூடினதில் இது தான் முதல்த்தடவைபோலும்! அப்படி யெல்லாம் மன சாக்ஷிக்கு விரோதமாக இவன் இந்தப் பேர்வழிகளுடன்கூடக் காரணமென்ன என்பதைப் பின்னாலறிவோம். இருபது நிமி ஷத்தில் இவர்கள் எல்லாம் கட்டப்பெருமாள் ஊருணியை யடுத்தார்கள். வீரன் கடைசியாய் ஒருவிதத்தில் மனந் துணிந்து நாவறட்சி தீரும்படியாக ஊருணியிலிறங்கித் தாக சாந்தி செய்துவிட்டு ரஸ்தாவில் வந்து நின்றான். இவன் நிற்கும் இடத்துக்கு வடபாரிசத்தில் ஒரு பெரிய ஆலமரமும் அதையடுத்து கிழக்குமுகமாக ஒரு கல்மடமும் இருக்கிறது.

இந்த மடத்துக்குமுன் சற்று தூரத்தில் நாலைந்துபேர் சமையல் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த அடுப்பு நெருப்பின் வெளிச்சம் மடத்தினுள்ளும் சுமாராய்ப் பிரகாசித் துக்கொண்டிருந்தது. மடத்தில் ஒரு கருங் கம்பளமும், அதன்மேல் ஒரு ஜமுக்காளமும் விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் செவப்பு வர்ணம்தோய்த்த ஒரு சாயத்துண்டில்

வெற்றிலே பாக்கு வைத்திருந்தது. அதற்கு முன்னுக, கருத்த சரீரமும், வச்சிரவுடலும், ஆட்டுக்கடாக் கொம்புகளைப்போன்ற மீசைகளையுமுடைய ஒரு மனிதன் உட்கார்ந்துகொண்டு இருந்தான். அவன் தலையிற் கட்டிக்கொண்டிருக்கிற பாகையையும் அவனுடைய அங்கலட்சணங்களையும், கடூரமான பார்வையையும் கண்டவர்கள், அவனைக் கள்வர் தலைவன் என்று சந்தேகமறத் தெளிந்துகொள்ளுவார்கள். அவனை முனியன் தூரத்தில் நின்று வணங்கி, அடுத்துப்போய் அவன் காதில் சில வார்த்தைகளைச் சொன்னுன். உடனே அவன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, முகமலர்ச்சியுடையவனுகி, "அப்படியானுல் அவனை இங்கே கூட்டிக்கிண்டு வா," என்று சொல்லி வாய்மூடுமுன், முனியன் விரைந்தோடி வீரனிடத்திலும் ஏதோ சொல்லி விட்டு அவனை யிட்டுக்கொண்டு வந்து தலைவன் முன் விட்டான்.

தலைவன்.—"உன் பெயரென்ன வீரனு?"

வீரன்.—"ஆமய்யா, ஆம. வீரந்தான்."

தலைவன்.—"நீ யார் வகையாள்? விளங்கச் சொல்லு."

வீரன்.—"நான் மலைக்கோட்டை சொக்கத்தலைவரின் தாயாதிக்காரன்."

தலைவன்.—அப்படியா! ரெம்ப சந்தோஷம். எல்லாம் இணக்கம்தானே. எப்போ ஆரம்பிக்கவேண்டியது?"

வீரன்.—"கலியாணம் ஆனிமாதம் பதினுறும் தேதி வெள்ளிக்கிழமை, மாப்பிள்ளை வீட்டார் மருதைக்காரர்."

தலைவன்.—அவர்கள் எப்போ புறப்பட்டு வருகிறுர்களாம்?"

வீரன்.—"ரண்டொரு நாளைக்கு முன்னடியே புறப்படுவாக."

தலைவன்.—"ஆனுல் சரி, அதற்குள்ளே வேண்டிய ஏற்பாடு

கள் எல்லாம் ஒழுங்காய் நடக்கும். அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகலாம்."

வீரன்.—"வேண்டியதில்லை, சாப்பிட்டிட்டுத்தான் வந்தேன். ஆனால் உயிர்ச்சேதம் வாப்படாது. ரொம்பக் கவலையாயிருக்கணும்."

தலைவன்.—"அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். கலியாணம் பதினாறுந்தேதி நிச்சயந்தானே?"

வீரன்.—"நிச்சயந்தான் சரி போய்வாறேன்."

தலைவன்.—"சரி போய்வா, கருப்பா நீ கொஞ்சதூரம்வரைக்கும் கூடப்போய் வழியனுப்பிவிட்டு வா."

கருப்பன் கூடத் தொடர்ந்து வர, வீரன் வேகமாய் வீட்டை நோக்கி நடந்து வரலுற்றான். தன் மனதில் வெகு நாளாக அழுத்தி வருத்திக்கொண்டிருந்த பாரம் இறக்கியானதுபோலச் சந்தோஷத்துடன் நடந்துவந்தான். வாழவந்தம்மன் கோயிலை யணுகவும் கருப்பன், சொல்லிக்கொண்டு வந்தவழியே திரும்பிவிட்டான். வீரனும் ஒருவர் கண்ணுக்கும் தென்படாமல் வீடுவந்து சேர்ந்து தன்னிடத்தில் எப்போதும்போலப் படுத்துறங்கினான்.

---

## 8-வது அத்தியாயம்

### ஆரவாரம்

மதுரையில் தெற்கு மாசிவீதியிலிருந்து சொக்கநாதர் கோயில் சன்னிதிக்குப் போகும் வழியில், கிழக்கு வரிசையில் மேற்கு முகமாயுள்ள ஒரு பெரிய மாளிகையில் இராமசாமியும் அவனுடைய தாயாரும் இருக்கிறார்கள். இராமசாமி அதிக பால்யனாக இருக்கும்போது அவன் தகப்பனார் இறந்து

போனார். ஆகையினால் அவனை யடக்கி யாண்டு கல்விப்பயிற்சி செய்து வைப்பதற்கு அவன் தாய்மாத்திரம் என்ன செய்வாள்? இருப்பதெல்லாம் தனக்கு ஒரே குழந்தையானதுபற்றி இராமசாமியை அவனுடைய தாய் மிகுந்த செல்வத்துடன் வளர்த்து வந்தாள். எந்த விஷயங்களிலும் அவன் மனம் போனபடியெல்லாம் நடந்துவந்தாள். ஆகவே "நான் இன்று பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டேன்," என்று இராமசாமி சொன்னால், அவன் தாயார், "அப்பா நீ போகவேண்டாம், நீ அழாமல்மாத்திரம் இருந்தால் போதும்," என்று விட்டுவிடுவாள். ஏனென்றால் "சிறுபிள்ளைப் பள்ளிக்கூடத்துக்குப் போகப் பயப்படுகிறது வயசு வந்தால் பள்ளிக்கூடத்துக்குச் சரியாய்ப் போய் வருவான்" என்று எண்ணிக்கொண்டிருந்தாள். இளம்பருவத்தில் வளைக்காமல் விடப்பட்ட மூங்கில் நன்றாய்ப் பருத்தபின் எப்படி வளையமாட்டாதோ அதைப்போல, சிறு பிராயத்தில் தன் மனம்போன விதமெல்லாம் இராமசாமியை அவன் தாய் விட்டுவந்தபடியால், செல்ல மிகுந்து கொஞ்ச நாளில் அவன் தன் அருமைத்தாயின் வார்த்தைகளையுங்கூட நிராகரிக்கலானான். இராமசாமியின் தந்தை இறந்துபோனபடியினால்தான், இராமசாமி மூடன் என்று பெயர்வாங்க நேர்ந்தது. இளமையில் தந்தையையிழந்த இராமசாமி, தன்னை யடக்கியாள வேறொருவரு மில்லாமையால், தனக்குகந்த பல நேசருடன் கூடி வெகு உல்லாசமாய் காலம் போக்கி வருகிறான். சட்டமாய் வேளைக்கு வேளை தவறாமல் சாப்பிடுவதும், இட்டர்களுடன் திரிவதும் அவனுடைய முக்கியமான வேலைகள். பெரிய தந்தையாகிய பெருமாள் செட்டியார் வார்த்தைகளையும் அவன் எறிந்துவிடக் கூடியவன். ஆகையினாலே தான் அவனுக்குப் பெண்பேசும் விஷயத்திலுங்

கூட, அவர் கொஞ்சம் யோசனையிலிருந்தது. ஆனால் அவருடைய பந்துக்களும் சிநேகிதர்களும் அவரை இராமசாமி விஷயமாய்க் கவலையெடுத்துக்கொள்ளுகிறார் இல்லை என்று குறை கூறுவார்கள் என்று பயந்தே இம்மட்டும் பெண்பேசி நிச்சயப் படுத்தினார். கலியாணம் ஆனிமாதம் பதினாறுந்தேதியன்று நிச்சயமாய்விட்டபடியால் இராமசாமியினுடைய பந்துக்கள் வசிக்கும் பலவூர்களுக்கும் முறையே விவாக முகூர்த்தப் பத்திரிகைகள் அனுப்பப்பட்டன. கிராமமாய் சகலருக்கும் வெற்றிலைபாக்கும் வைத்தாய்விட்டது. ஆகவே சுற்றத்தாரெல்லாரும் கலியாணத்துக்குப் பத்து தினத்துக்கு முந்தியே இராமசாமி வீடு வந்து சேர்ந்தார்கள். கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீட்டார் சேகரிக்கவேண்டிய சகல சாமான்களும் தயாராய்விட்டன. விவாகத்துக்குப் புறப்பட்டுப் போகும் சமையம் வரையிலும், வந்த நண்பர்களுக்கும் பந்துசனங்களுக்கும் உபசாரஞ் செய்வதிலும், காலந்தவறாமல் அவர்களுக்கு உணவு முதலானவை யளிப்பதிலும், மும்முரமான வேலைகள் செய்வதற்கென்று பிரத்தியேகமாய் அநேக வேலைக்காரர்கள் நியமிக்கப் பட்டிருந்தபடியினாலே, சகல காரியங்களும் ஒழுங்காய் நடந்து கொண்டிருக்கின்றன. இப்படியிருக்க பதினாலாந்தேதி புதன் கிழமை மத்தியான வேளையில் ஒரு சாமியார் அவ்வழியாக வந்தவர், அங்கே நடக்கும் ஆரவாரத்தைக் கண்டு அதைக் கலியாண வீடென்று மதித்து, அங்கே போனால் வயிறு நிரம்பச் சோறும், துட்டு துக்காணிகளும் கிடைக்குமென்று கருதியோ அல்லது வேறென்ன உத்தேசங்கொண்டோ, அந்த வீட்டு வாசலில் நின்றுகொண்டு,

ஆனந்தக்களிப்பு

அஞ்சுகல்லா லொரு கோட்டை—அந்த
ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பது வாச

குஞ்சிக் குருதைமே லேறி—அதில்
குடியான ராவுத்தன் கோட்டை கொண்டாண்டி.

சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ.

என்று பாடிக்கொண்டு நின்றிருந்தான். அவனை வீட்டார் யாரும் கவனிக்கவில்லை. தொண்டை வலிக்கக் கத்திக் கத்திப் பார்த்தும், யாதொரு பிரயோஜனமும் ஆகாதது கண்டு, அந்த வீட்டாரைச் சாமியார் வாயில் வந்தபடி வையலானார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு முரட்டு வேலைக்காரன் ஓடிவந்து, "ஏண்டா பண்டாரப்பலே, கொளுத்துப்போச்சோடா?" என்று சொல்லிக்கொண்டே சாமியார் கன்னத்தில் படீரென்று ஒரு அறை வைத்தான். சாமியாருக்கு அப்பொழுது வந்த கோபத்திற்கு, சக்தி மாத்திரம் இருந்தால், அந்த க்ஷணமே தன்னை யடித்தவனையும், அந்த வீட்டாரையும் சாம்பராக்கி யிருப்பார். பின்பு என்ன காரணத்தை உத்தேசித்தோ பொறுமையோடு இருந்துவிட்டார். ஆயினும் விசனம் சகிக்க முடியவில்லை. "இப்படியும் பரதேசியை அடிப்பாங்களா? இதென்ன அனியாயம்! இந்த வீடு வெளங்குமா!" என்று பின்னும் வைதுகொண்டும், அந்த வீட்டுப்பக்கம் வந்ததைப்பற்றித் தன்னைத்தானே நொந்துகொண்டும், பலவாறாகக் கூச்சலிட்டார். இந்தக் கூக்குரலைக் கேட்ட, அடுத்த வீட்டுச் செல்லாத்தாளென்பவள், வெளியே வந்து பார்த்து சாமியாரென்று தெரிந்து, "சாமியாரே இங்கே வாருமய்யா, நம்ப வீட்டுக்கு வாரும்," என்று மிகுந்த உபசாரத்துடன் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாள்.

சாமியார்.—"இண்ணெய்க்குக் காலம்பிர எந்த மூதேவி மோத்

திலே முளிச்சேனே! இப்ப இந்த முரட்டுப்பய கையிலே அடிபட வந்திச்சி," என்று சொல்லிக்கொண்டு செல்லாத்தாள் வீட்டுத்திண்ணையில் போயுட்கார்ந்தார்.

செல்லாத்தாள்.—"சாமியாரே எங்க வூட்டிலே சுடுசாதம் இன்னம் சமைக்கல்லே—வேணுமானு பளையது இருக்கு கொண்டுவரட்டுமா?"

சாமியார்.—"அதுக்கென்ன தாயி அம்போடெ இத்தினி கூளு கொடுத்தாலும் போதும்," என்றவுடன் செல்லாத்தாள் என்னும் அந்தக் கிழவி கொஞ்சம் பழைய சாதம் கொண்டுவந்து கொடுக்கவும், சாமியாரும் அதிக சந்தோஷப்பட்டுக்கொண்டார்.

செல்லாத்தாள்.—"சாமியாரே உமக்கெந்த வூரு?"

சாமியார்.—"எனக்கா தாயி? நான் இருக்கிறது சென்னபட்டணம்."

செல்லாத்தாள்.—"அங்கே இருந்தா இங்கே பிச்சைக்கி வந்தீரும்.?"

சாமியார்.—"எனக்கென்ன அம்மணி! பரதேசிக்கு வேலேயென்ன? வூரூராச் சுத்தி வயித்தை வளக்க வேண்டியது தானே. இந்த வூருண்ணு அடையாளமா யிருக்குது. மருதையையும் பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தேன். வூரு நெல்லாத்தானிருக்குது!"

செல்லாத்தாள்.—"இந்த வூருக்கு வந்து எத்தனே நாளாச்சு சாமியாரே?"

சாமியார்.—"நானு தாயி? நான் வந்து ரெண்டு நாளாச்சுது. இண்ணைக்கித்தான் இந்தத் தெருப்பக்கமாக வந்தேன். அந்த வீட்டிலே சோறுகிறு மும்முரமாப் பரிமாறிக்கிண்டு இருக்கிறதைப் பார்த்து புத்தி கெட்டுப்போக,

இடி விளுவான் வீட்டுலே இப்படி வந்திச்சி. தாயி, அந்த வீட்டிலே என்ன விசேஷம்?"

செல்லாத்தாள்.—"அவா கலியாணக்காரா, மாப்பிள்ளை வீட்டுக்காரா அவா பந்துக்க எல்லாம் கலியாணத்துக்கு வந்திருக்காக."

சாமியார்.—"அப்படியா, அம்மணி! பந்தல் கிந்தல் போடக் காணமே? எப்போ கலியாணம்?"

செல்லாத்தாள்.—"கலியாணம் அருப்புக்கோட்டையிலெ,பெண் வூட்டுலெ நடக்கப்போகுது. போன மாதத்திலெதான் போய் நிச்சயதாம்பூலம் பண்ணிக்கிட்டு வந்தாக. இந்த மாதம் பதினொரும் தேதி கலியாணம். நாளை வார வெள்ளிக்கிழமை பகலு முளுத்தமாம் சாமியாரே."

சாமியார்.—"அப்படியா—நெல்லது. இந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர் எல்லாம்எப்போ கலியாணத்துக்கு புறப்படுகிறாக?"

செல்லாத்தாள்.—"வெள்ளிக்கிளமைபகலு முளுத்தமாச்சா? ஆ—இண்ணைக்கி என்ன கிழமை சாமியாரெ? புதன் கிளமையா—நாளை வியாளக்கிளமை மத்தியானம் போலெ எல்லாரும் புறப்பட்டுப்போயி காரியாபட்டியிலெ ராத் தங்கி சாப்புட்டுப்போட்டு, விடியச் சாமத்திலெ வண்டி போட்டு பலபலண்ணு கிளக்குவெளுக்க அருப்புக்கோட்டை போயிச் சேரப்போருகளாம்."

சாமியார்.—"அப்படியா தாயி? சந்தோசம்! இந்தா போருனே எருமைக்கடாப்போலெ, இந்தப்பயதான் வந்து அடிச்சிட்டுப்போனுன் தாயி—இருக்கட்டும்! "ஆனைக்கொரு காலம் வந்தா பூனைக்கொரு காலம் வராதா?"

செல்லாத்தாள்.—"இந்தச் சுப்பையனு வந்தடிச்சான் சாமி? அவன் கெட்ட பயலில்ல, அவன் கிட்டப் பேச்சுக்

கொடுக்காதியும்சாமி. அவனுக்கு எப்போதும் முக்கோபந் தான். இருந்தாலும் பிச்சைக்கு வந்தவரையா அடிக்கது? போகட்டும் சாமி".

சாமியார்.—"நான் போயிட்டுவாறேன் தாயி. வந்து ரொம்ப நேரமாச்சி" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்து நின்று,

ஆனந்தக்களிப்பு

"நந்தாவனத்தி லொராண்டி-அவன்
நாலாறுமாதமா கொசவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி-அதைக்
கூத்தாடிகூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.
சங்கர சங்கர சம்போ!"

என்று பாடிக்கொண்டே அடுத்த தெருவில் பிரவேசித்தார்.

---

## 9-வது அத்தியாயம்

### பிரயாணம்

ஆனிமாதம் பதினைந்தாம்தேதி வியாழக்கிழமையத்தினம் சூரியன் அஸ்தமித்து ஒரு நாழிகை நேரம் இருக்கும். மாலையிருட்டு, அதிலும், மழை மேகங்கள் ஆகாயத்தில் கவிந்து கொண்டிருந்தன. இடை இடையே சில நக்ஷத்திரங்கள் மாத்திரம் தங்களுக்குள் இரகசியம் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பதுபோலத் தோன்றின. ஆயூருக்குச் சற்று தெற்காய் பதின்மூன்று வண்டிகள் நிரம்பிய ஆட்களுடன் காரியாபட்டியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. அந்த வண்டிகளில் மொத்தம் ஆணும் பெண்ணுமாய் அறுபது பெயர் வரையிலும்

இருந்தார்கள். இவைகளில் முன்னுகப்போகிற இரண்டு வண்டிகளுக்கு மாத்திரம், மிகவும் திடகாத்திரமுள்ளதாயும், காற்றுப்போல் வேகமாய்ப் போகக்கூடியதாயும் உள்ள விலையுயர்ந்த எருதுகள் பூட்டப்பட்டிருந்தன. முதலாவது வண்டியில் புதுமாப்பிள்ளையாகிய இராமசாமியும், அவனது இணைபிரியாத் தோழனுன நாராயண பிள்ளையும் இருக்கிருர்கள். இரண்டு ட்ராங்கு பெட்டிகளும் அதில் வைக்கப்பட்டிருக்கின்றன. கோச் ஓரத்தில் பளிங்கு லாந்தர் ஒன்று பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இரண்டாவது வண்டியில், மதிப்பிலடங்கா ஆபரணங்களும், அந்தஸ்தான பட்டாடைகளும் அணிந்த நான்கு ஸ்திரீகள் உட்கார்ந்துகொண்டிருக்கிருர்கள். இராமசாமி தன் வண்டிக்காரனுன சுப்பய்யனைப் பார்த்து "அடே சுப்பையா, வண்டி அரைமணி நேரத்துக்குள்ளாக, காரியாபட்டி போய்ச் சேரவேண்டும், வேகமாய் விடு," என்று சொல்லி வாய் மூடு முன், சுப்பையன் தன் கையிலிருந்த சாட்டை வாரினுல், எருதுகளைப் பளிச் பளிச்சென்று மாட்டவும், அவை நோவுக்காற்ருது நாலுகாற் பாய்ச்சலில் பறக்க வாரம்பித்தன. இரண்டாம் வண்டி தவிர மற்றவைகள் எல்லாம் பிந்திப்போய் விட்டன. காரியாபட்டிக்கு இரண்டு மைலுக்கு வடக்கே இப்பொழுது பாழாய்க் கிடக்கிற சத்திரத்தை யடுத்து, "கல், கல்" என்ற மணியோசையுடன் இரண்டு வண்டிகள் மாத்திரம் போய்க்கொண்டிருக்கின்றன. சத்திரத்துக்கு வட கீழ்த் திசையில் சேமாங்குதிரை கட்டிவிடப்பட்டிருக்கிற கருப்பணசாமி கோயிலண்டையில் "விஸ்லில்" அடிக்கிற சத்தம் கேட்டது. அப்பொழுதே வண்டியின்மேல் கல்லுகள் வந்து விழத்தொடங்கின. அடுத்தாப்போல் திருடர்கள் இருபது பெயர் வரையில், முகத்தில் வர்ணம் பூசினவர்களாய், வண்டி

களின் முன்வந்து தாக்கினார்கள். அவர்களில் ஒருவன், தன் கையிலிருந்த பூண் கட்டிய நெற்றி முட்டுக்கோல் கொண்டு, தன்னுடைய வர்மத்தை தீர்த்துக் கொள்ளுகிறவனைப் போல, வண்டிக்கார சுப்பையனை ஒருபோடு போடவும், அவன், "அப்பா செத்தேன்" என்றலறிக்கொண்டு குப்புற விழுந் தான். இதற்குள் எருதுகள் கழற்றிவிடப்பட்டு வண்டியும் தலைகீழாய் விழுந்தது. வண்டியின் பின்புறம் மிருந்த அந் தஸ்தோடு, காலைச் சிறிது தொங்கவிட்டவண்ணமாய் அரைத் தூக்கத்திலிருந்த இராமசாமி தொப்பென்று கீழே விழுந்த தில், அவன் வலக்கால் ஒடிந்துபோயிற்று. அவன்மேல் விழுந்த நாராயண பிள்ளையை, அவர்களுள் ஒருவன், திடீ ரென்று புலிபோலப் பாய்ந்து அவனைப் பலமாய்க் கட்டிப்பிடித் துக்கொள்ள, இன்னொருவன் அவனுடைய இருகரங்களையும் பின்னாற் சேர்த்துக் கட்டிவிட்டு, அவன் மேல்வேஷ்டியையே சுருட்டி அவன் வாயில் திணித்துவிட்டான். இதற்குள் வண்டி யிலிருந்த ட்ராங்குப்பெட்டிகள் வெளியேறிவிட்டன. இரண்டா வது வண்டியையும் சுமார் பத்துப்பெயர் வரையில் தாக்கி, ஒருவன் வண்டிக்காரனை அடிக்க, அவன் பேச்சு மூச்சு இல் லாமல் அப்படியே சரிந்து விழுந்தான். மாடுகளை அவிழ்த்துக் கொண்டு வண்டியைத் தலைகீழாகத் தூக்கிவிட, உள்ளே யிருந்த நான்கு பெண்களும், நெற்சாக்குருண்டாற்போல, ஒருத்தி மேல்ஒருத்தி புரண்டுருண்டு விழுந்து எழுந்ததும், "குய்யோ, முறையோ" எனக் கூச்சலிட்டார்கள். நாலுபெயர்கள் அவர் களை யடுத்து நின்று, "பேச்சி மூச்சுக் காட்டப்பிடாது, நச்சிப் போடுவோம் நச்சி, களட்டுங்க சீக்கிரம்," என்று கைக்கம்பு களை யோங்கவும், அந்தப் பெண்கள், பலவர்ணமுடைய எம படாக்களைக் கண்டாங்கு நடுங்கி நாக்குளறி அவர்களைப் பாக்

கப் பயந்து தைரியமிழந்தவர்களாய், கீழே தரையைப் பார்த்த வண்ணமாக நின்றுகொண்டு, தங்கள் நகைகளையெல்லாம் கழற்றிக்கொடுத்தார்கள். வஸ்திரங்களும், மங்கிலியங்களும் நீங்கலாகி, மற்ற நகை நட்டுக்களையும் சாமான்களையும் பிடுங்கிக் கொண்டு குரவை முழக்கத்துடன் பாய்ந்து கிழக்கே தெரிகிற கண்மாய்க்கரை மேடேறிக் கடந்து மின்னலைப்போல் மறைந்தார்கள். இதெல்லாம் பத்து நிமிஷத்திற்குள் நடந்தது. இவர்கள் போய் ஒரு நாழிகைப்போதில், மற்ற வண்டிகள் வருகிற சத்தம் காதிற் கேட்டவுடன், பெண்டுகள் தங்கள் வாய்களைத் திறந்து ஒலமிட்டார்கள். இராமசாமி, "ஐயோ! ஐயோ, உம்—உம்," என்று திணறிக்கொண்டிருந்தான். நாராயண பிள்ளை ஒன்றும் பேசமுடியாமல், தூண்போல் நின்றிருந்தான். இதற்குள் சுப்பையன் மயக்க நீங்கி யெழுந்து, வண்டியை நேராகத் தூக்கி நிறுத்தி, காலொடிந்து அதினால் வருந்திக்கொண்டிருக்கும் தன் எசமானனை மெதுவாய்த் தூக்கி வண்டியில் கிடத்தினான். நாராயண பிள்ளை அசையாமலும் பேசாமலும் ஸ்தம்பம் போல் நிற்பது கண்டு சமீபத்தில் போய்ப் பார்த்து அவன் கட்டுகளை அவிழ்த்துவிட, அவன் தன்னுடைய வாயில் அடைத்திருந்த துணியை எடுத்துவிட்டு மிகுந்த விசாரத்துடன் நின்றிருந்தான். இரண்டாவது வண்டிக்காரன் இப்பொழுது தான் எழுந்துட்கார்ந்தான். மேல் கைகால்களிற் பட்டிருந்த மண்ணைத் துடைத்துக்கொண்டு, "எள்ளா வண்டியும் சேந்து போனா ஆகாதாம், மாட்டேமெண்டாலும் கோபிப்பாக, இந்த விதி வந்திச்சே!" என்று விசனித்தான்.

சுப்பையன்.—"கல்லு விளுகேண்டு பாக்கதுக்குள்ளே பின்னாலே நிண்டு போட்டுட்டாண்டா, இல்லாட்டிப்போனா அவனைக் கொண்டுபோடமாட்டேன், அந்தப் பயகளுக்கு

நல்லவேளை, அல்லாட்டா, எல்லா வண்டியும் தொயந்து வாரதா?'' என்று சொல்லி வாய்மூடுமுன் லெட்சுமியின் தகப்பனார் பெருமாள் செட்டியார் ஏறிவந்த மூன்றாவது வண்டி மற்ற வண்டிகளுடன் அவ்விடம் வந்து சேர, நடந்த சம்பவத்தைக் கேட்டு எல்லாரும் வண்டியைவிட்டுக் கீழே யிறங்கிவந்து, களவு போனவிடத்தில் நின்றுகொண்டு, ஒவ்வொருவரும் அவரவர்கள் மனம் போனபடியெல்லாம் பேசவாரம்பிக்க, அங்கே அப்போது ஒரு சந்தை கூடியிருந்தால் எப்படி யிருக்குமோ அப்படி ஒரு பெரிய இரைச்சலும் குழப்பமும் உண்டானது. ஆயினும் ஆகப்போகிறதென்ன! கைதவறிப் போனது போனதுதான். கடைசியாய், பெண்டுகளுக்குக் காது முதலியவைகள் அறுபடாமலும், கொலை விழாமலும் இத்துடன் நிகழ்ந்ததற்கு ஒருவாறு திருப்திப்பட்டுக்கொண்டு, கால்வாய்த் தண்ணீரில் துணியை நனைத்து அடிபட்ட இடங்களில் கட்டிக்கொண்டு அப்படியும் இப்படியுமாக மெதுவாய் வண்டிகளை ஒன்று சேர்த்துவிட்டுக்கொண்டு காரியாபட்டி வந்து சேர்ந்தார்கள்.

வந்த ஜனங்களெல்லாம் சத்திரத்திலிறங்கி இராத்திரி சாப்பாட்டுக்கு வேண்டிய எத்தனங்கள் செய்துகொண்டிருந்தார்கள். பெருமாள் செட்டியாருக்கு உண்டாயிருந்த கவலைகள் கொஞ்சநஞ்சமல்ல. "இருந்திருந்து முகூர்த்தத்திற்குப் புறப்படவும், இப்படி நேர்ந்ததே" யென்பார் "மூத்தோர் சொற்கேளாத பிள்ளைகளுக்கு எப்படியும் தீங்குவந்து சேரும்,' என்று கோபத்தாற் பல்லைக் கடிப்பார். "வந்த ஜனங்களில் யாரேனும் களவு போன விஷயத்தைப் போலீஸாருக்குத் தெரிவித்துவிட்டால், அதிகமான கஷ்டங்களும், பொருட் செல

வும் ஏற்பட்டுவிடுமே," என்று பெருமூச்செறிவார். "தன் புத்திமதிகளைச் சிறிதேனும் கவனியாத இராமசாமி விஷயத்தில் கொஞ்சமும் மனமிரங்கலாகாது," என்பார். "கால் ஒடிந்து கிடக்கிற தன்னுடைய தம்பிமகனுக்கு சொஸ்தப்படுத்தும்படியான மார்க்கம் தேடாமலிருக்கிறாரே, இவ்வளவு கல்நெஞ்சுடையவரா, என்பதாகப் பந்துக்கள் தன்மேல் குற்றஞ்சாட்டுவார்களே" என்று பயப்படுவார். முடிவில் தன் வேலைக்காரனையும், நாராயண பிள்ளையையும் அனுப்பி, "இவ்வூரில் யாராவது வைத்தியர்களிருந்தால் அழைத்து வாருங்கள்," என்று சொன்னார். அவர்கள் இரண்டுபேரும் வழியிற் சந்தித்தவர்களை நோக்கி, "கைகால் முறிந்தால் பார்க்கும்படியான வைத்தியர்கள் இங்கே யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்க, அவர்கள், "இந்த ஊருக்குக் கீழைக்கடைசியில் வேலுப்பண்டிதன் இருக்கிறான்," என்று சொன்னார்கள். அதன்பேரில், அவர்கள் அவ்வீட்டைத் தேடிப்பிடித்து, வாசற்கதவைத் தட்டி, "வேலுப்பண்டிதா, வேலுப்பண்டிதா" என்று கூப்பிட்டார்கள்.

பண்டிதன்.—"ஆரய்யா அது; என்ன சங்கதி?"

நாராயண பிள்ளை.—"ஒரு ஆளுக்குக் கால் முறிந்து போய்விட்டது, வந்து பார்க்கவேணும், தாமசம் ஆகாது, சீக்கிரம் வா."

பண்டிதன்.—(சமையல் அறையிலிருந்த தன்னுடைய பெண்சாதியைப் பார்த்து, "ஏ—ஏ."

பண்டிதன் மனைவி.—"என்னத்துக்கு?"

பண்டிதன், "ஒரு ஆளுக்குக் காலு முறிஞ்சு போச்சாம், போய்ப் பாத்திட்டு வாரேன், என்ன?"

பண்டிதன் மனைவி.—'கால் ஒடிஞ்சுது, கையொடிஞ்சுதுண்ணு

வந்து கூப்பிடுறவாளுக்கு குறைச்சலில்லே, நெல்லுக் காரன்தான் எட்டுநாளா வந்து நடக்கான், செத்த பண்டிதும் பாத்தா என்ன, பாக்காட்டா என்ன," என்று சிடு சிடுத்துப் பேசினுள்.

பண்டிதன்.—"அப்படிச் சொல்லாதே, வேறாரு அய்யாப் போலே இருக்கு. போனுக்கி ரூபா கொடுக்காமலா இருக் கப்போறுக ?"

பண்டிதன் மனைவி.—"அப்படிண்ணு பணத்தைக் குடுத்திட்டு கூட்டிக்கிட்டுப் போகட்டுமேன்? நெல்லுக்காரன் இப்ப வருவான். அவன் கிட்டே என்னுலே பேசக்களியாது".

நாராயண பிள்ளை.—"பண்டிதா, அதைப்பற்றி யோசிக்கவேண் டாம், இந்தா பத்து ரூபாய்," என்று ரூபாயைக் கொடுத்துவிட்டு, "வா, சீக்கிரம், நேரமாகிறது," என்று சொன்னுர். பண்டிதன் ரூபாயைக் கைநீட்டி வாங்கித் தன் பெண்சாதிகையில் கொடுக்கவும், அவள் கும்மாளம் கருடனைக்கண்ட சர்ப்பத்தைப்போல ஒடுங்கிவிட்டது. பிற்பாடு அவள் தன் புருஷன் காதில் ஏதோ சில வார்த் தைகள் சொல்லிவிட்டு வீட்டுள் நுழைந்தாள்.

பண்டிதன்.—(தன்னுடைய மகளைப்பார்த்து) "அனந்தீ, வெத் திலேப் பையை எடுத்தா போகணும், அய்யாமாரு காத் துக்கிட்டிருக்காக."

நாராயண பிள்ளை.—"பண்டிதா, தாமசம் கூடாது, மிகவும் அவ சரம், சீக்கிரம் போகவேண்டும்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே வெற்றிலேப்பை பண்டிதன் முன் பொட்டென வந்து விழுந்தது. அதைக் குனிந்தெடுத்து நசுக்கிப் பார்த்து,

பண்டிதன்.—"பாக்கில்லைப் போலிருக்கே, அனந்தீ, பாக்கு எங்கே இருக்கிண்ணு உங்க ஆத்தாட்டே கேளு"

அனந்தி.—"ஆத்தே, ஆத்தே, பாக்கு எங்கே வச்சிருக்கே."

பண்டிதன் மனைவி.—"அடுக்குப் பானையிலெ கிடக்கிண்ணு சொன்னமில்லையா மூதி"

உடனே அனந்தி முணு முணுத்துக்கொண்டு கொஞ்சம் பாக்கு எடுத்துக்கொண்டுவந்தாள். அவளுக்கு இடதுகை பாதியிலிருந்து கிடையாது.

நாராயண பிள்ளை.—(மனதுக்குள்) "இரண வயித்தியர் மகளா! பேஷ்! நம்முடைய இராமசாமிக்கும் இப்படித்தான் வருமோ?" ரூபாய் பத்துக் கொடுத்தாய்விட்டதே. எப்படியாவது இராமசாமி முன் பண்டிதனைக் கொண்டு போய்விட்டால் சரிதான்," என்று எண்ணிக்கொண்டு ஒருவிதத்தில் பண்டிதனை அவன் வீட்டைவிட்டு வெளியேற்றி வந்தார். வேறே ஆட்கள் அவர்கூட அப்போது வந்திராத பக்ஷத்தில் பண்டிதனைத் தன் கையோயுமட்டும் நாராயணபிள்ளை நையப் புடைத்திருப்பார்.

பண்டிதன் இராமசாமியை வந்து பார்த்ததும் "அடடா காலெல்லாம் நொறுங்கிப் போயிருக்கே! வலி ரொம்ப எடுக்குமே சாமி! நல்ல மனுசாளுக்கு இப்படியும் வாலாமா? ஆனு இதைவிட நொறுங்கித் தூள்தூளாத்தான் போயிருக்கட்டும் சாமி. பயவேலு கைப்பட்டா பறந்துபோயிடாதா! தெரியாமலா, மருதை முதஅருப்புக்கோட்டைவரைக்கும், "வேலு, வேலு"ண்ணு சொல்லிக்கிடுகாக. எந்தப் பிணியும் என்னைக் கண்டா ஓட்டமெடுக்கும் சாமி.கை வச்சாப்பிலெதானிருக்கும். இதுக்குக் கொஞ்சம் கருப்புத்தண்ணிமட்டும் உள்ளே போயி

விளுந்திச்சா, அப்பம் பாருங்கோ சாமி என் கைவேலையை," என்று சொல்லி வாய்மூடுமுன், அதற்கென்று இரண்டு பெயர்கள் அனுப்பப்பட்டார்கள். "கேளுங்கோ முந்தி யிப்படித் தான் ஒரு அய்யாவுக்கு வண்டியிலிருந்து விளுந்து கையொடிஞ்சி போச்சி. எத்தனை பேரோ போயித்தான் பாத்தாக. மருதை, பட்டணம், இங்கேயிருந்து எல்லாம் வந்து பாத்தாக. அந்த அய்யா திருப்பாங்குண்டத்துக்கு வந்த இடத்திலெ தான் கையொடிஞ்சது. நானும் அங்கே காத்திகைக்கிப் போயிருந்தேன். தைக்காத்தியலா, ஆடிக்காத்தியலா? உம்—கேளுங்கோ, சாமி இல்லே. (மூக்கின்மேல் விரலே வைத்துக் கொண்டு) அப்போ, அப்போ ஏன் பெஞ்சாதி பிள்ளெப் பெத்துக் கிடக்கா-ஆம-ஆம-பெரிய காத்திகை. மலையைச் சுத்திக் கிட்டு வாரபோது, மலேக்கி மேக்கிட்டு வந்தேன்.

அங்கெ ஒரு மடத்திலெ அந்த அய்யா இருந்தாரு அவரு பட்ட வருத்தம் கணக்கிலெ சொல்லமுடியாது சாமி. நான்போயி கைவச்சேனு, அவுக வலியெல்லாம் பஞ்சாப்பறந்திச்சி. கொஞ்சம் களிச்சதும், எங்கிட்டே சிரிச்சுக்கிட்டுப் பேச ஆரம்பிச்சாக. சாயங்காலம் ஒருவேளே வந்து பாக்கணுமிண்ணு சொல்லி, அப்பவே எங்கையிலெ அம்பது ரூபா கொடுத்தாக. சாயங்காலம், சொன்னுப்பிலே, போறேன், அதுக்குள்ளே சுகமாப்போச்சி போலெ இருக்கு, ஊருக்குப் புறப்பட்டுப் போயிட்டாக! (தன்னுடைய நெஞ்சைத் தட்டிக் கொண்டு) "இந்த வேலுக்கிட்டே ஒருத்தர் வீச்சும் நடக்காது சாமி. ஆம, ஆம," என்று சொல்லி வாய்மூடுமுன் சாராயம் வந்து சேர்ந்தது. வந்தது அனைத்தும் வேலுப்பண்டிதனின் வயிற்றிலிடங்கொண்டது. போய் இராமசாமி காலேத் தொட்டான். உடனே இயமனிடம் சிக்கிய உயிர்போல அவன் துடிக்க

லானன். "உளுத்தம்பருப்புப் பொடியும் கோளிமுட்டை யும் வேணும் சாமி" என்று சொல்லிவிட்டு வெற்றிலைபாக் குப் போட நினைத்துப் பையில் கைவைத்துக்கொண்டே" "சாமி நீங்களெல்லாம் மருதைக்காரரா? பாத்தவுடனே தான் அறிஞ்சுக்கிட்டேனே! எந்த சீக்குக்காரர் வந்தாலும் சரி, மருந்து குடுத்தனே? கையிலே பிடிச்சாப்பிலே கேக்கும் சாமி." "சாதாரணமா ஆருவந்து கூப்பிட்டாலும் போறதில்லை சாமி. ஆனா, உங்களைப்போலெ ஆராவது வந்திட்டாக, மாட்டேமின்னா நல்லா இருக்காதில்லே! படிச்சதுக்குத்தான் அடையாளமென்ன? (அங்கிருந்த ஒருவரைப் பார்த்து) சாமி நீங்க மருதைக்காரர்தானே? விட்ட வாசப்பொடியிருந்தா குடுங்கோ சாமி. இந்த வூருப்பொடி உப்புமண்ணுதான்." பக்கத்திலுள்ளவர் பொடி கொடுக்கவும், "இது வாணியன் கடைப்பொடியா சாமி" என்று சொல்லிக்கொண்டு "விர், விர்," என மூக்குத்துவாரங்களில் அவ்வளவையும் திணித்துக் கொண்டு, "அப்பாடே, நல்லகாரம், சுள்ளுண்ணு பிடிக்கிது சாமி, மருந்து வந்திச்சா சாமி?" எனக் கேட்டபோது, கடைக் குப் போனவர்களும் வந்து சேர்ந்தார்கள். கோடித்துணியை பாளம் பாளமாக் கிழித்துக்கொண்டு, உளுத்தம் பருப்புத் தூளில் முட்டையை உடைத்துவிட்டு நன்றாய்க் குழம்பாக்கித் துணியில் தோய்த்து இராமசாமியின் கணைக்காலைச்சுற்றிப் பல மாகக் கட்டினன். "தெச்சணை கொடுங்கோ சாமி, நாளைக் காலமே கட்டுற கட்டிலெ தீந்துபோம், சாமி" என்று சொன் னன். உடனே இருபதுரூபாய் கொடுத்தார்கள். வாங்கிக்கொண்டு பண்டிதன் சந்தோஷமாய்த் தன்வீடுபோய்ச் சேர்ந்தான். இரா வெல்லாம் நித்திரை வாராமல், இராமசாமி அலறிக்கொண்டே யிருந்தான். நோய் கொஞ்சமும் நிற்கவில்லை. பொழுதும்

புலர்ந்தது. அருப்புக்கோட்டைக்கு, இராமசாமிக்கு நோயாளியாகப்போக மனம்வாராமல், அதிசீக்கிரம் மதுரைக்குப்போய் இங்கிலீஷ் வைத்தியர்களிடம் காட்டிச் சொஸ்தப்படுத்த வேண்டுமென்று திரும்பினுன். மாப்பிள்ளை திரும்பவும், மற்றவர்களுக்கு வேலையென்ன ? எல்லாரும் அப்படியே திரும்பி விட்டார்கள். நடந்த சமாசாரத்தை தெரிவிக்கும்படி அருப்புக்கோட்டைக்கு ஒரு ஆளை நிச்சயித்து அனுப்பிவிட்டுப், பெருமாள் செட்டியாரும் அப்படியே மதுரைவழி கூடினுர்.

---

## 10—வது அத்தியாயம்

### கல்யாண வீடு

இப்போது அருப்புக்கோட்டையில், பெண் வீடாகிய பெரிய வீட்டில் நடக்கும் சங்கதிகளைக் கவனிப்போம். கலியாண வேலைகள் வீட்டில் அதிக மும்முரமாய் நடந்துகொண்டிருக்கின்றன. எவ்விதமென்றுல், வீடுமுழுவதும் வெண்மையானசுண்ணம் தீட்டி, வீட்டு முகப்பிலும், வாயிற்படிகளிலும், காவிமண்ணுல் பட்டை யடிக்கப்பட்டிருக்கிறது. சித்திரம் எழுதுவதில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்களைக்கொண்டு சுவர்களில் பலவர்ணங்களிஞலும், பார்த்தோர் பிரமிக்கும்படியாக, "சீதாகல்யாணம்," "ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்" முதலிய அநேக விசித்திரமான படங்கள் எழுதப்பட்டன. வீட்டின் முன்புறத்தில், அதிக உன்னதமான ஒரு கொட்டகை யமைத்து மிகவும் விநோதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பத்திபத்தியாய் நான்கு ஓரங்களிலும் இரட்டைத் தூணங்கள் நிறுத்தி, அவைகளுக்குமேல் கமான் தட்டிகள் கட்டி, ஓரங்களில் செகப்பு மஞ்சள் வர்ணச்சாலர்கள் சேர்த்தி, தாள்களிற்செய்த

பலவர்ணமுள்ள பெரியபூமாலைகள் அணியணியாய்த் தொங்க விட்டு, கொட்டகையில், நிலைக்கண்ணாடி, சரலாந்தர், லஸ்டர், குளோப்புகள் கட்டித்தூக்கி, தூண்களில் பச்சை செகப்புவால் சேட்டுகள் தவறாமல் சேர்த்து இறுக்கி, எந்தப் பக்கம் பார்த்தாலும் சித்திரப் பிரதிமைகள் அமைத்து, கண்டோர் கண் கூசும்படியான அழகிய பொற்றகட டால் விசித்திர விமானம் ஒன்று செய்து, கீழே ரசக்குண்டுகள் தூங்கக்கட்டி, அதன்கீழ் நேர்த்தியான ஊஞ்சல் ஒன்று போட்டுத் தேவசபையும் இதற்கிணையாகாதென்று சொல்லும்படி அவ்வளவு அலங்காரம் செய்து முடிந்திருந்தது.

வீட்டின் உள் முற்றத்தில் அழகான மணவறை போட்டு, அவைகளில் நாற்புறமும் வர்ணக் கோலமிட்டும், இடையிடையே, பூத்துக் காய்த்து நிரம்பியிருக்கும் சிங்காரப் பூஞ்செடிகள் வரையப்பட்டும், மேலே பட்டுவிதானம் கட்டித் தூக்கியும், சுற்றிலும் பரிமளமிகுந்த பூமாலைகள் தொங்கவிட்டும், தூண்களில் கன்னலும், தேங்காய்க் குலைகளும் ஒழுங்காய்க் கட்டி அலங்கரித்தும், இடை இடையே எலுமிச்சம் பழங்களாற் கோர்த்த சரங்கள் அநேகமாய்த் தூக்கியும், இவ்விதமாக மிகச்சிறப்பாய் அலங்கரித் திருக்கிறார்கள்.

மாப்பிள்ளை வீட்டாரும் அவரைச் சார்ந்தவர்களும் முதல்நாள் சாயங்காலம் வந்து சேருவார்கள் என்று, அவர்களுக்கு ஏற்கனவே கடிதம் வந்திருந்தது. வீட்டின் பின் புறத்தில் சமையலுக்கென்று போட்டிருக்கிற விசாலமான பந்தலில், சமையல் வேலைகள் அதிக தடபுடலாய் நடந்து கொண்டிருக்கின்றன. காய்கறி வகைகள், கிழங்கு தினுசுகள் மலை மலையாகக் குவித்திருக்கின்றன. அங்கங்கே அநேகர்கூடிக் காய்கறி வெட்டுகிறவர்களும், பெரிய அண்டாக்களில் முத்துப்

போன்ற சாதம் சமைத்துக் கொட்டுகிறவர்களும், பலவித மான பருப்புக்களால், சாம்பார், கூட்டு முதலியவை தயாரிக் கிறவர்களும், இன்னொரு மூலேயில் பெரிய பாத்திரங்களில் தண்ணீர் ஓயாமற் கொண்டுவந்து விட்டு நிரப்புகிறவர்களுமாய், வேலைகள் அதிஜாக்கிரதையாக நடந்துகொண்டிருக்க, அவை களை யெல்லாம் மேற்பார்த்து வருகிறுள் நம்முடைய லட்சுமி யம்மாள். எப்படி யென்றால், அங்குமிங்குமாய் ஓடிக் காய் கறி வெட்டுகிறவர்களுக்கு வெற்றிலை பாக்கு நிறையக் கொண்டுபோய்க் கொடுப்பதும், சோறு சமைக்கிறவர்களிடம் போய், சோற்றில் கல் முதலான மாசு மறு விருக்கலாகாதென் றும், மசால் பதார்த்தங்களைக் கூட்டிக் குறைத்து விடாமல், கணக்காய்ச் சேர்த்துப் பக்குவம் அணுவளவும் தவருமல் இருக்கவேண்டு மென்றும், அடிக்கடி உஷார்ப்படுத்தியும், வேலைக்காரர்களுக்குப் பலவகையில் உற்சாகமூட்டியும் வேலை வாங்கிவருகிறுள். வீட்டில் வந்திருக்கும்படியான பெண்டுக ளிடம் போய், "நான் ஒருத்தி என்ன செய்வேன்! இத்தனை வேலைகளையும் ஒண்டியாக மேற்பார்க்க வேண்டியதிருக்கிறது. நீங்கள் வந்திருப்பதை நான் கவனியாம லிருக்கவில்லை. இவ் வளவு பாராமுகமாயிருக்கிறுளே என்று என் பேரில் கோபம் வைத்துக்கொள்ளலாகாது, இது உங்கள்வீடு, உங்கள் சாமான், நீங்களே யிருந்து மனத்திருப்தியாய் காரியங்களை நடத்தி இந்த விவாக கிருத்தியத்தைச் சிறப்பித்து வைக்க வேண் டும்," என்று உபசார வார்த்தைகள் சொல்லியும், அவர்கள் சந்தோஷிக்கும் படியாக வெற்றிலை பாக்கு நிறம்பக்கொண்டு வந்து கொடுத்தும், "பொழுது விடியலாச்சுதே! இன்னம் அநேக வேலைகள் முடியாமல் இருக்கின்றனவே"! என்று எச்சரித்து வேலைக்காரர்களைத் துரிதப்படுத்துவதும், இவை

கள் எல்லா வற்றிற்கும் மேலாக, முக்கியமாய், மாப்பிள்ளை வீட்டார் முதலிய பந்து ஜனங்கள் வருகிறார்களா என்று அடிக்கடி வெளியே வந்து பார்ப்பதுமாயிருக்கிறாள். ஆனால் இராமலிங்கம் செட்டியாரோ கொட்டகையில் உட்கார்ந்துகொண்டு வந்த ஜனங்களுக்கு உபசாரவார்த்தைகள் சொல்லித் தாம்பூலம் கொடுத்துக்கொண்டும், எல்லா வேலைகளும் கிரமமாய் நடந்து வருகிறதாவென்று பார்த்துக்கொண்டும் இருக்கிறார்.

இதற்கெல்லாம் முத்துக்காமாக்ஷியம்மை என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்று பார்ப்போம். நிச்சய தாம்பூலம் வழங்கின நிமிஷமுதற்கொண்டு, சந்தோஷம் என்பது அவளை விட்டு நீங்கியது. தன்னறையை விட்டு எப்போதும்போல வெளியே வருவதில்லை. தனக்கு நேர்ந்திருப்பதை எண்ணியெண்ணிப் பலகால் வருந்துவாள். கண்ணீர் விடுவாள். பெருமூச்செறிவாள். துக்க மிகுதியால் சிலவேளை மயங்கிக் கிடப்பாள். மயக்கந்தீரவும், "சிறுபிராய முதலாய் உன்னைக் கதியென்று நம்பினேனே! சௌடாம்பிகே! உன் மனம் நான் படுந்துயருக்கு இரங்கவில்லையே! உன்னைப்போல நான் ஒரு பெண்பாலல்லவா? "தந்தையைப் பார்க்கிலும் தாய்க்கு இரக்கம் அதிகம்" என்று பெரியோர் கூறுகிறார்களே. அதுவும், என்மட்டில் பொய்யானது நான் ஜென்மமெடுத்த பாவமே! என்னை அருமையாகப் பெற்று வளர்த்த தாய் தந்தையரும் பொருளுக்காக ஒருவனுக்கு, என்னைக் கிரயம் செய்யத் துணிந்தார்களே! இது நம் முன்னோர்களின் விதிக்கு நேர் விரோதமல்லவோ? அம்பிகே, அம்பிகே, நம்பினேன் உன்னை!" என்று கூவிக்கூவி உயிர்சோர்ந்து விம்மியழுவாள். "உயிரை மாய்த்துக்கொள்ளுவமா" என்றும் நினைப்பாள். ஆ! ஆ! என்ன பைத்தியமிது! கிடைத்தற்கரிய மானுடவுடம்பைப்

பெற்று அதை வீணாகத் தொலைக்கவா? இஃது பாவம்! பாவம்! அத்தான் அவர்களைக் கண்டு கண்குளிரக் கண்டபின் னல்லவோ, ஆவியை இழக்கவேண்டும்! அவர்கள் தருணத் தில் என்னைவந்து ஆதரிப்பார்களோ! ஒருக்கால் நான் எழு திய கடிதம்தான் அவர்கள் கையிற் கிடைத்ததோ? அன் றேல் கிடைக்கவில்லையோ? அல்லது என் பிதாவின் செய் கைக்கு மனமுடைந்து, எனை முற்றிலும் வெறுத்து நீக்கி விட்டார்களோ? யாதொன்றும் தெரியவில்லையே. சமையமும் நெருங்குகிறதே!" என்று பலவாருகப் புலம்பித் துக்கசாக ரத்தில் ஆழ்ந்து போயிருக்கிருள்.

இதற்குமுன் எப்போதும் தன்னுடைய தாயைக் கண்டு மகிழ்ந்தவள், இப்போது அவள் வரக்கண்டால், இயமனைக் கண்டாங்கு நடுங்கி முகத்தை மாறவைத்துக்கொள்ளுவாள். இதைக் கண்டு லட்சுமியம்மாள், பக்கத்து வீட்டுப் பெண்டுக ளிடம்போய், "நீங்களாவது வந்து என் மகளுக்குப் புத்தி புகட்டலாகாதா" என்று பலதடவைகளிலும் சொன்னதின் பேரில், அவர்கள் வந்து, "முத்துக்காமாக்ஷி, நீ இவ்விதம் இருக்கலாமா? எல்லாம் நம்முடைய மனம்போல் ஆகிறதா? தலையெழுத்தின்படியல்லவோ நடக்கும். நீ பூருவத்திற் செய்த தவப்பலன் இருந்தால், உன்னிஷ்டப்படி ஒருவேளை முடிந்தா லும் முடியும். அப்படி முடிந்தபோதிலும்,

"நிதியுங் கணவனு நேர்படினுந் தத்தம்
விதியின் பயனே பயன்"

என்று நீ வாசித்து அறிந்தது கூட இல்லையா! இதெல்லாம் உனக்கும் நாங்கள் சொல்லவா? என்று பலவிதமாய்த் தன்னரு மைத் தோழியர் அடிக்கடி கூறக்கேட்டு, "சரி, நான் துக்கப்

படுவானேன்? சமையம் வரும்போது பார்த்துக்கொள்ளுவோம்" என்று மனந்தெளிந்து இருக்கிறாள். மணி ஏழு ஆயிற்று. உடனே லெட்சுமியம்மாள் இராமலிங்கம் செட்டியாரிடம் வந்து "இன்னம் வரவில்லையே! ஆரையாவது அனுப்பி, பாலையம் பட்டி வரைப்போய்ப் பார்த்து அவர்களையெல்லாம் கூட்டிக் கொண்டுவரச் செய்கிறதுதானே" என்று ஆத்திரத்துடன் சொல்லவும், அவர் அப்படியே ஒரு வேலைக்காரனை அனுப்பி வைத்தார். அவன்போய் நாலு நாழிகைவரையிலும் யாதொரு விவரமும் தெரியவில்லை. எல்லாருக்கும், முக்கியமாய் பெண் வீட்டாருக்குப் பலவிதமான எண்ணங்கள் பிறந்தன. கடைசி யாகப் பதினொரு மணிக்கு இராமலிங்கம் செட்டியார் அனுப்பி வைத்த வேலைக்காரனும், காரியாபட்டியிலிருந்துவந்த வேலைக் காரனும் வந்துசேர்ந்தார்கள். அவர்கள் மூலமாய் நடந்த சம்ப வம் தெரிந்து எல்லாரும் சொல்லொணாத் துயரமுற்றனர். மற்ற எல்லாரைப்பார்க்கிலும் லெட்சுமியம்மாள் அடைந்த துக் கத்துக்கும் வெட்கத்துக்கும் கணக்கில்லை. வாய்விட்டுத்தான் அழவில்லை. வயிற்றெரிச்சல் கொண்டவளாய், "இந்தச் சண்டாளி நிச்சயதாம்பூலம் செய்த நாள் முதற் கொண்டு, ஒரு நாளாவது, ஒரு நிமிஷமாவது சந்தோஷமாயிருக்க வேண்டாமா! இவளாலே நான் மனச் சந்தோஷமற்றுப் போயிருக்கிறேனே! எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு நஷ் டம்! இம்மட்டோடேயா நிற்கப்போகிறது? இன்னும் என் னென்ன சம்பவிக்கப் போகிறதோ? என்னென்ன கேட்டு அனுபவிக்க வேண்டிய திருக்கிறதோ, யார் கண்டார்கள்" என்று வயிறெரிந்து கோபத்திற்கும் துக்கத்திற்கும் எதுவாய் நின் றாள். நிகழ்ந்த சம்பவங்களைக்கேட்டு வெளியில் விசனமுற்றவர் கள் போல் இருந்தாலும் அந்தரங்கத்தில் சந்தோஷமடைந்

திருந்தவர்கள் இரண்டு பெயர்கள் உண்டு. இவர்களை இன்னு ரென்று குறிப்பிடாமலே, நம்முடைய நேயர்கள் அறிந்துகொள் ளுவார்கள் என்று நம்பி, விட்டு விடுகின்றனம்.

---

## 11-வது அத்தியாயம்

### ஆசுப்பத்திரி

பரோபகாரத்தை உத்தேசித்து, நம்மையாளும் காருண் ணிய ஆங்கில கவர்ன்மெண்டார் பிரஜைகளுக்குச் செய்திருக் கிற நன்மைகளில் ஒன்றாகிய இந்த ஆசுப்பத்திரியைக் கவனிக் கும்போது, அவர் செய்திருக்கிற அரிய பெரிய உபகாரங்கள் அனைத்தும் ஒன்றன்பின் னொன்றாய் நம்முடைய ஞாபகத் துக்கு வராமலிருக்கவில்லை. “ தினைத்துணை உதவி புரியினும் அதனைப் பனைத்துணையாகக் கொள்ளுவ[illegible]றோர்.” அப்படி யிருக்க, எப்பக்கங்களிற் பார்த்தாலும், [illegible]ரு விஷயங்க ளிலும் தங்கள் முழுமனதைச் செலுத்தி, அவை[illegible]ளிலுள்ள குறைபாடுகளைச் சீர்திருத்தம் பண்ணி, அவைகளின் மூல மாய் நமக்குப் பல வழிகளிலும் நன்மை செய்திருக்கிற ஆங்கில கவர்ன்மெண்டாரை, நாம் சகல விதத்திலும் புகழக் கடமைப் பட்டவராயிருக்க, இரண்டொரு வரிகளில் நிறுத்தி விடாமல், இன்னும் கொஞ்சம் சொல்லி எமது நன்றி பாராட்டலைக் காட் டத் துணிந்ததற்கு நேயர்கள் எம்மைக் குறை கூறார் என்று நம்புகின்றனம். “ நிழலின் அருமை வெயிலில் நடமாடுகிற வர்களுக்கு மாத்திரம் எவ்விதம் நன்கு புலப்படுமோ,” அவ் வாறு, சுகத்தின்கண் எப்போதும் மூழ்கியிருக்கிற ஒருவனைப் பார்த்து நீ சுகமாவென்று கேட்டால், அவன் சுகத்தின் நிலை மையை யுணராதிருந்துவிடவுங் கூடும். ஆனால் தற்காலம் கஷ்

டத்திலிருப்பவனுக்கு மாத்திரம் முன்னிருந்த சுகத்தின் நிலைமை தெளிவாய் விளங்கும். அதேமாதிரி, இங்கிலீஷ் கவர்ன் மெண்டாரால் அனேக சுகமடைந்திருக்கிற நமக்கு, நாமடைந் திருக்கும் சுகத்தின் நிலைமை நன்றாய்த் தெரியாது. இவர்கள் இந்தத் தேசத்திற்கு வருமுன்னிருந்த நம் முன்னோர்களின் ஸ்திதியையும், இப்பொழுது அவர்கள்வந்தபின் இருக்கிற நிலை மையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பெரிய வித்தியாசம் இருக் கிறதாகக் கூறுவோம். உண்மையும் அதுவே. இப்போது நாம் அடைந்திருக்கிற ஸ்திதியின் ஏற்றம் முதியோர்களுக்கு அநு பவ மூலமாய் நன்கு தெரியும். சிறுவர்களும் அதனைச் சரித்திர வாயிலாய் வாசித்தும் கேட்டும் அறிந்திருப்பார்கள். அந்தக் காலங்களில் நம்முடைய உயிரும் பொருளும் நம்முடையன என்று சொல்ல முடியாது. பலசாலிகளுக்கே அவை உரியன வாயிருந்தன. ஏனென்றால் ஆங்கிலேயர் நமது தேசத்திற்கு வருமுன் எத்தனை புறநாட்டார் இங்கே படையெடுத்து வந்தி ருக்கிறார்கள்! அவர்கள் அடித்த கொள்ளைகளுக்கும் செய்த கொலைகளுக்கும் கணக்கு வழக்குண்டா? எப்போது வருவார்க ளென்று தெரியாமலிருந்து, திடீரென்று ஏழை ஜனங்கள் மேல் விழுந்து வேட்டையாடி விடுவார்கள் என்றபயம் அவர்கள் மனதில் அல்லும் பகலும் குடியிருந்து வந்தது. எப்படி "வண் ணான் துறையிற் பதுங்கிய முயலுக்கு வண்ணான் புடவை தப்பும்போதெல்லாம் "திடுக்கு, திடுக்கு" என்று மனம் பதைக்குமோ, அப்படிக்கொஞ்சம் சத்தம் கேட்டாலே போதும், அவர்கள் உயிருக்கும் பொருளுக்கும் ஹானிவந்து விட்டது என்பது நிச்சயம். அம்மாதிரியான பயம் இப்பொழுது நமக்கு அணுவளவும் கிடையாது. இது முதலாவது நன்மை. சொற்ப காலத்தில், சுருக்கச்செலவில் அநேகமான சௌகரியங்களுடன்

பிரயாணம் பண்ணுவதற்கு இருப்புப்பாதைவண்டித்தொடர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். கடிதப்போக்குவரவுக்குத் தபாலாபீசுகளும், தொலைதேசங்களுக்குச் சீக்கிரத்தில் சமாசாரம் தெரிவிக்கத் தந்தி ஆபீசுகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பார்த்தவிடமெங்கும் போதனுமுறை தெரிந்த உபாத்தியாயர்களால் கற்பிக்கப்பட்டுவருகிற பாடசாலைகள் பல ஏற்படுத்தி யிருக்கிறார்கள். போக்குவரவுக்கு ஜனங்களுக்கு வசதியான நல்ல ரோட்டுகள், கால்வாய்கள், குளங்கள், கிணறுகள் இவைகள் எல்லாம் உண்டாயிருக்கின்றன. ஆசுப்பத்திரி வைத்து நோயாளிகளுக்கு இலவசமாய் மருந்து கொடுக்கும் பேருதவி புரிந்தும் வருகிறார்கள். ஆசுப்பத்திரிகளில், வைத்தியமுறை நன்றாய்க் கற்றுத் தேறின டாக்டர்களை நியமித்து, அவர்களுக்கு மாதாமாதம், அவர்களுடைய யோக்கியதைக்கும் அனுபோகத்துக்கும் தகுந்தவாறு, சர்க்காரிலிருந்து, சம்பளம் கொடுபட்டுவருகிறபடியால், அந்த டாக்டர்கள் நோயாளிகளில் இவர் ஏழை, இவர் பணக்காரர் என்னும் வித்தியாசம் பாராமல், சகலமான பேருக்கும் பாரபக்ஷமின்றிக் கவனம் செலுத்தி, அவர்களின் நோயின் நிலைமைகளைச் செவ்வையாகத் தெரிந்துகொண்டு அவைகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்து வாசிப்படுத்துகிறார்கள். உதாரணமாக,

மதுரை மேற்குமாசி வீதிக்கருகில் ஸ்தாபித்து இருக்கும் பெரிய ஆசுப்பத்திரியில் டாக்டராக இருப்பவர் கிருஷ்ண பிள்ளை. அவர் வைத்தியத்தில் கைதேர்ந்த நிபுணர். பொருளாசை அவருக்குக் கனவிலுங் கிடையாது. யாரிடத்திலும், குளிர்ந்த பார்வையும் அன்பான பேச்சும் உடையவர். சரியான மருந்துகளைக் கொடுத்து நோய்களை சீக்கிரத்தில் குணப்படுத்துவார். ஆசுப்பத்திரியின் உண்மையான நிலைமையை

அறியாத பாமர ஜனங்கள், அங்கே போனால் நோயாளிகளை அங்கே கொன்றுவிடுவார்கள், என்று கருதுகின்றனர். காரணம் என்னவெனில், நோய ஆரம்பத்திலேயே ஆசுப்பத்திரிக்குப் போனால் வியாதியஸ்தர்களை விரைவில் சுகப்படுத்துவார்கள். அப்படிக்கின்றி அரைகுறை வைத்தியம் படித்த நாட்டு வைத்தியர்களை முதலில் அடுக்கிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்! அவர்களில் பலர் வைத்திய முறைகளைத் தெரிந்தவரிடத்து நன்றாய்க் கேட்டுத் தெளியாமல், தம் முன்னோர்கள் எழுதிவைத்த பல ஏட்டுப் பிரதிகளை மிகுந்த கஷ்டத்துடன் வாசிப்பதும், யதார்த்தமான அருத்தம் விளங்காமல் ஒன்றுக்கொன்று செய்து "ஆயிரம் பேர்களைக் கொன்றவன் அரை வைத்தியன்," என்னும் வாக்கியத்தை நிலைநாட்டி விடுகிறார்கள். ஒரு நோயாளிக்கு மருந்து கொடுக்கவேண்டுமென்று யாராவது அழைக்கப்போனால், இவர்களில் அநேகர் "நான் தலைப்பக்கமே நிற்பேன், சம்மதமானால் வருவேன்" என்று உறுதிவாக்கு வாங்கிக்கொண்டு புறப்பட்டு வருவார் போலும்! நோய், மருந்து இவைகளின் குணாகுணங்களைச் செவ்வையாய் அறியாதவர்கள் ஆனபடியினாலே, கொடிய மருந்துகளை தம் மனம் போனபடி யெல்லாம் கொடுக்க வியாதியஸ்தனுக்கு நோயதிகரித்து விடுகிறது. உடனே நோயாளியின் பந்துக்கள், "இந்த வைத்தியன் கெட்டிக்காரன்தான். ஆனால் கைவிசேஷமில்லை. ஆகையால் இன்னொரு பண்டிதனைக் கூட்டிவந்து காட்டுவோம்," என்று மற்றொருவனைக் கூட்டிவருகிறார்கள். அவன் அவனுக்குத் தெரிந்த மருந்துகளை யெல்லாம் உரைத்துக் கொடுத்துவிடுகிறான். முன் கொடுத்தவன் மருந்துக்கும் இவன் கொடுத்த மருந்துக்கும் சற்றேனும் பிடியாமல், அவைகள் போட்டி போட்டுக்கொண்டு

நோயை அதிகரிக்கச் செய்து நோயாளியைப் பலிவாங்க எத்த னிக்கின்றன. இந்த விதமாக எல்லா வைத்தியர்களும் கை விரித்தபிற்பாடு வேறு போக்கும் தென்படாமல் அவனை ஆசுப் பத்திரிக்குக்கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள், அங்கே யிருக்கிற வர்கள் என்ன பிரமதேவர்களா! அவர்கள் என்னசெய்வார்கள்? ஒழுங்குப்படி ஏற்பட்ட மருந்தைக் கொடுப்பார்கள். நம்பிக்கை யற்ற ஸ்திதியில் ஆசுப்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டவர்கள் அநேகமாய் மீளுவது இரண்டாம் பக்ஷம். பெயரென்ன, ஆசுப் பத்திரியில் போய் இறந்தான் என்று எல்லாரிடமும் சொல்லித் தூற்றுவார்கள்.

இந்தத் தன்மைகள் எல்லாம் நன்றாய்க் கேட்டறிந்திருந் தான் ஆதலின், இராமசாமி ஒருநாள்கூடத் தங்காமல், மதுரை வந்து சேர்ந்த தக்ஷணமே, சரேலென்று ஆசுப்பத்திரிக்குப் போய் திரசர் கிருஷ்ண பிள்ளையிடம் நடந்த சமாசாரத்தைச் சொன்னான். அவர் உடனே அவன் காலில் முறிந்த பாகத்தை நன்றாய்ப் பரிசோதித்து அதற்கு வேண்டிய சாமான்களை யெல் லாம் விரைவில் தயார்ப்படுத்தி, முறிந்த பாகங்களை ஒன்று சேர்த்து இயற்கையில் ஏற்பட்ட நிலைமைக்குக் கொண்டுவந்து, பலமாகக் கட்டி, அந்தக் காலை அசையாது வைத்திருக்கும்படி எச்சரிக்கை செய்து, சமயத்துக்கு ஏற்ற மருந்துகளைப் போட்டு மூன்று தினத்துள் ஏறக்குறைய நல்ல நிலைமைக்குக் கொணர்ந்தார்.

இரண்டு வாரத்தில் பூராவும் சொஸ்தமாகிவிட்டது. அதன் பேரில் இராமசாமி அதிக மகிழ்ச்சிகொண்டு தன்னைச் சுகப் படுத்திய திரசருக்கு இருநூறு ரூபாய் வெகுமதி யளிக்கப் போனான். அந்தச் சங்கதியைக் கேள்விப்பட்ட கிருஷ்ண பிள்ளையவர்கள், "இராமசாமி, நான் எனக்கு ஏற்பட்ட

வேலையைமாத்திரம் செய்தேன். வெகுமதி எனக்கு வேண்டிய தில்லை. எனக்குப் போதுமான சம்பளம் சர்க்காரிலிருந்து கொடுத்து வருகிறார்கள். ஆகவே இந்தத்தொகையை ஏழைகளுக்கு உதவினால் பரோபகாரமாயிருக்கும். கடவுளின் அருளும் நமக்குண்டாகும்" என இதவார்த்தை சொல்லி அதைக் கொண்டுபோகும்படி மறுதலித்து விட்டனர். இராமசாமி அந்தத் தொகைக்கு ஏழை ஜனங்களுக்குத் திருப்தியாக ஒருநாள் விருந்து செய்தான்.

மறுநாள் இராமசாமியின் தாயார் தன்னரும்புதல்வனை யழைத்துத் தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு, "அப்பா, முதல் முதல் நீ முத்துக்காமாக்ஷியை மணமுடிக்கப் போய் களவுபோனதுமன்றி உன் காலு முறிய நேரிட்டது. ஆயினும் ஏதோ நாம் முன்செய்த புண்ணிய வசத்தால் பழையபடியும் கால் முன்போலக் கூடிக்கொண்டது. இப்படி நேர்ந்தது பெரிய சகுனத் தடையென்று நினைப்பாயாக. நாமெல்லாரும் புறப் பட்டுப் போகுங்காலத்திலேயே நல்ல சகுனம் கொடுக்கவில்லை. என்ன விளையப்போகிறதோ என்று கவலை கொண்டிருந்தேன். அது இம்மட்டோடு நின்றதைப்பற்றித் திருப்திப்பட்டுக் கொள்ளுகிறேன். கடவுள் உலகத்தார்க்குத் தம்முடைய திரு வுளக்கருத்தைச் சகுனமூலமாக இலேசாக அறிவிக்கின்றனர். அதை மீறினவர்கள் ஒருபோதும் நன்மை யடைந்ததில்லை. இது என் அநுபவசித்தம். ஆகவே இம்மட்டுப் போதுமென்றெண்ணாமல், இனிமேலும் அவளை விவாகம் செய்துகொள்ள எண்ணினால் நீ பிழைக்கப்போகிறதில்லை. நிச்சயம். ஆனதினாலே இனிமேலாக அவளைக் கனவிலும் கருதாதிருப்பதே தகுதி. உனக்கு வேண்டுமானால் வேறு எத்தனையோ நல்ல நல்ல பெண் கிடைக்கும். அதைப்பற்றிச் சிறிதும் நீ ஐய

முருதே." என்று பன்னிப்பன்னிப் பலவாகப் புத்திமதி கூறினாள். இதைக்கேட்டு இராமசாமி கொஞ்சம் திகிலடைந்தான். ஆயினும் அவனுக்கு, முத்துக்காமாக்ஷி பேரிலுள்ள மோகம் முற்றிலும் நீங்கவில்லை. அவளை மனதில் நினையாதவேளை கிடையாது. "கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போயிற்றே" என்று நினைந்து நினைந்து மனந்தளரலானான். சகிக்கமுடியாத மோகாக்கிராந்தனாய், எப்படியும் "அவளைச் சேராத ஜென்மம் வீண்" என்று சில வேளைகளில் மனதில் எண்ணிக்கொள்ளுவான்.

---

## 12-வது அத்தியாயம்

### பரமானந்தர்

உலகமே அநித்தியமாகவிருக்க, அந்த வுலகின்கண்ணுள்ள ஆத்மகோடிகளின் தன்மையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆயினும், சகல பிராணிகளினும் பகுத்தறிவோடு கூடிய இந்த மானுஷ ஜென்மம் இலகுவில் கிடைக்கக்கூடிய தன்று. ஆகவே சிறந்த மானிடப் பிறப்பெடுத்துப் பகவானுடைய கிருபாகடாக்ஷத்தால் காசாணுதிகளை யடைந்த நாம் இந்த உயர்வான ஜென்மத்தை அவலமாகக் கெடுத்துவிடாமல், இளமைதொட்டுப் பக்தியிற் சிறந்து, பரமசிவன் நாமமாகிய பஞ்சாக்ஷரத்தை உணவாகக்கொண்டு, பவமென்னும் நோயை வேரறக்களைந்து, மோரினுள் விளங்கும் நெய்போல அந்தப் பரம்பொருள் தம்மை யண்டினவர்களுக்குச் சுலபத்தில் அநுக்கிரகிக்கும் பொருட்டுச் சகள ரூபமாய் எழுந்தருளியிருக்கும் பல திவ்ய க்ஷேத்திரங்களடங்கிய பாதக்கண்டமென்னும் புண்ணிய பூமியாகிய நமது இந்தியா தேசத்தில் எங்குமுலாவி

சகலமான தேவாலயங்களையும் தெரிசித்து, இந்த நிலவுலகிற் பிறந்து மாயபாசத்தால் கட்டுண்ட மாந்தரனைவரும் பூர்வகர்ம, பரிபாகத்திற் கியைந்தவாறு சுகதுக்கங்களை அநுபவிப்பதுடன், ஒருவர்க்கொருவர் விருதாவாய்த் துன்பமிழைத்து, அதனால் மென்மேலும் பாவ மூட்டைகளை அதிகமாகச் சம்பாதித்து அவைகளுக்கேற்ற வண்ணம் கணக்கற்ற பல பிறவிகளிற் பிறந்திறந்துழலாமல், அவர் படுங் கஷ்டத்தினின்றும், அன்னோரைத் தம்மாலியன்ற அளவு விலக்கிக் காத்தலே எல்லாவற்றிற்கும் மேலான பரோபகாரம், அதுவே சிறந்த கைங்கர்யம் எனக் கரதலாமலகம்போற் கண்டறிந்து அதன்படியொழுகுபவரான பரமானந்தர் என்னும் யோகி யொருவர், ஒரு நாள் சென்னையில் பழைய வண்ணாரப்பேட்டை மார்க்கமாக வரும்பொழுது, அவ்வழியில் அவரை அகஸ்மாத்தாய்ச் சந்திக்க நேர்ந்த நம்முடைய ஜெகந்நாதம் செட்டியார், பரமானந்தரைக் கண்டு தண்டனிட்டு வணங்கி, “நானோ, அல்லது என் முன்னோர்களோ செய்த புண்ணிய விசேஷத்தால், என் குடிசையின் எதிரேயே, “கும்பிடப்போனதெய்வம் குறுக்கிட்டாற்போலக்,” கண்டு தெரிசிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றேன். ஆகையால் ஏழையேன் இல்லிற்குத் திருவுளமிரங்கி யெழுந்தருளி இரண்டு மூன்று நாள் வரையாகிலும் தங்கி, அடியேனைப் புனிதனாக்கி யாட்கொள்ளவேண்டும் சுவாமி”, என்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். யோகீஸ்பரரும் அன்னவரது உள்ளக்கருத்துக்கிசைந்து அவருடைய இல்லம் சென்று தங்கினார். அன்று சாயங்காலம் வழக்கம்போற் கடற்கரையிலிருந்து திரும்பின உத்தம நண்பர்களாகிய கோபாலனும் சங்கரனும் தத்தம் மாளிகைக்சேகினர். கோபாலன் தன்னுடைய வீட்டில் எழுந்தருளியிருக்கும்

படியான பெரியவரைக் கண்டு வணங்கி, அவர் மகிழ்வுடன் ஆசீர் வதித்துத் தரக்கொண்ட பிரசாதமாகிய திருநீற்றை மிகுந்த பக்தி சிரத்தையுடன் கையேற்று வாங்கித் தரையிற் சிறிதுஞ் சிந்தாதபடிக்குத் தன்னுடைய மெய்யெங்கும் உத்தூளனமாகப் பூசிக்கொண்டு, அதன் பிறகு அந்த மகானுக்குப் போசன முதலான சோடசோபசாரங்களும் செய்து, அவருக்குத் திருப்தி உண்டாக்கிய பின்னர் தான் போய் இன்னமுதுண்டான். அதன்பின் பொழுது போக்கை உத்தேசித்து சங்கரன் மாளிகைக்கேகி அவனோடு சற்றுநேரம் உற்சாகமாக வார்த்தையாடித் திரும்பலாமென்று கருதிச் சங்கரன் வீட்டுக்குப் போனான். அப்போது ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்த சங்கரன், அவன் தன்னுடைய எதிரில் சமீபத்தில் வந்து நிற்கும்வரைப் பார்க்கவில்லை. கண்டவுடன் திடுக்கென்றெழுந்து நின்று "சுவாமி, வாருங்கள், என்றான். "சுவாமியன்று, சங்கரா, கோபாலன் தான்," என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே கோபாலன் அவனருகிற்போயுட்கார்ந்தான்.

சங்கரன் (வெட்கமடைந்து) "நண்பனே, இன்று உன்னுடைய விபூதிப்பூச்சுத் தடபுடலைப் பார்த்ததும், சாம்பசிவமூர்த்திதான் இங்கு பிரசன்னமானாரோ, என்றல்லவோ சங்கையுற்றேன்."

கோபாலன். — "எங்கள் வீட்டில் பரமானந்த யோகிஸ்வரர் வந்திருக்கிறார். அவர் தந்த பிரசாதம் இது. அவரது குளிர்ந்த பார்வையும், கனிந்த சொற்களும் பட்டமரங்களையும் தழையப்பண்ணும்."

சங்கரன்.—ஆகா, அப்படியா! அவருடைய திவ்விய தரிசனம் எனக்கும் கிடைத்தால், என் கலி ஒருவாறு நீங்குமென்றெண்ணுகிறேன். இப்பொழுதே போய்ப் பார்க்கலாமோ?'

கோபாலன்.—"பார்க்கலாம். தடையென்ன? சாவகாசமாய்த் தான் இருக்கிறார். வேண்டுமானால் போவோம் வா" என்று கூறவும், நேசர்கள் இருவரும் கோபாலன் வீட்டில் பிரவேசித்தார்கள். சங்கரன் அவரைக் கண்டதும், "சுவாமி, வந்தனம்" என்று சொல்லி வாய் மூடுமுன் "மங்களம் உண்டாகுக," என்றாசீர்வதித்து விபூதியுமளித்து உட்காரும்படி ஆக்யாபித்தார். கோபாலன் யோகீஸ்வரருக்குச் சற்றுச் சமீபமாகவும் சங்கரன் சிறிது தூரத்திலுமாக உட்கார்ந்தார்கள்.

பரமானந்தர்.—"கோபு இவர் யார்?"

கோபாலன்.—"என்னருமை நண்பன். என்கூட வாசிக்கிறான்."

பரமானந்தர்.—"இந்த வூர்தானே?"

கோபாலன்.—"சுவாமி, அன்று" இவன் இருப்பது அருப்புக்கோட்டை., இங்கே வாசிக்கும் நிமித்தம் வந்திருக்கிறான்" என்று சொல்லக்கேட்டுப் பரமானந்தர் ஆச்சரியமுற்றாராயினும் அதனை வெளிக்குக் காட்டாமல், அவனை ஏற இறங்கப் பார்த்து சற்று மௌனம் சாதித்து, "அவன் விருத்தாந்தம் என்ன?" என்று கேட்டார்.

கோபாலன், சங்கரன் பிறந்தது முதல் நாளது வரையிலும் அவனைப்பற்றித் தனக்குத் தெரிந்த சகல சங்கதிகளையும் ஒன்றும் மறைத்து வைக்காமல், சவிஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டே வந்தான். ஆனால் சங்கரன் ஒன்றும் கூறாமல் தலைகவிழ்த்த வண்ணமாயிருந்தான். இடையிடையே பரமானந்தர் சங்கரனைப்பார்த்து, அவனுடைய தற்கால நிலைமைகளைக் கவனித்துணரும்போது, இவருக்கு ஆச்சரியமும் துக்கமும் உண்டாகிக் கண்ணீர் அவருடைய கண்களில் நிரம்பநின்றது. தன்னுயிர்போல மன்னுயிரை நேசிக்கும் இயல்புடைய இந்தக்

கருணைவள்ளலுக்குப் பிறர் துயரம்காண மனம் சகிக்குமோ? ஒருபோதும் சகிக்கவே சகிக்காது. அன்னியர் வருத்தம் கண்டும் அணுவளவும் இரங்காத மனிதர் விலங்கினும் கடையரே யாவரன்றோ?

> "அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழார்வலர்
> புன்கணீர் பூசறரும்."

என்ற முதுமொழிக்கிணங்க, அவர் காட்டாவிடினும் அவரிடமிருந்து உண்டாகும் கண்ணீர், அவரது மனத்தின்கண்ணுள்ள அன்பைப் பிறர் அறியத் தூற்றும். ஆகவே சங்கரனுக்கு இருந்தாற்போலிருந்து உண்டான சங்கடத்தைக் கண்டு, பரமானந்தருக்கு அவன்மீது ஆர்வமிருந்து தம்மாற் கூடிய அளவில் அவனுக்கு உதவிபுரியவேண்டும் என்று மனதில் தீர்மானித்துக் கொண்டார். வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில், சொல்லியும் ஒருவேளை அது நிறைவேறாவிடில், அதிக சஞ்சலம் உண்டாகும். "சொல்லாமற் செய்வதே விசேஷம்" என்று அவர் உணர்ந்திருக்கிறார். கடைசியாய் சங்கரனைப்பார்த்து "சங்கரா, உன் விருத்தாந்த மனைத்தும் சாங்கோபாங்கமாய்க் கேட்டறிந்தோம். ஆபத்துக்காலத்தில் ஒருவற்கு அறிவுகுன்றலாகாது. இப்பேயுலகம் பணத்தையே பெரிதும்மதிகின்றது. "செல்வம் சகடக்கால் போலே வரும்," "ஆறிடும்மேடும் மடுவும் போலாஞ் செல்வம்," என்னும் நீதிகளை நீ நன்றாகக் கற்றுணர்ந்தவன் தானே? இதனால் வருந்தலாகாது. "சுகம் சிலதுகாலம், துக்கம் சிறிதுகாலம்" இதுவுலக இயற்கை. ஆனால் நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவாய் ஒருவர் இருக்கிறார். "அவர் தம்மை யண்டின பேர்களை ஆதரிப்பார்" என்பதிற் சிறிதும் ஐயப்பாடில்லை. எல்லா உயிர்களையும் காத்து ரக்ஷிக்கும் கருணாகரக் கடவுள் நம்மை மாத்திரம் கைவிட்டு

விடப் போகிறுரா? ஒருக்காலும் விடமாட்டார். ஆனதினலே இதைவிட அதிகமான துன்பம் வந்த காலத்திலுங்கூட அவாது திருவடித்துணைகளே தஞ்சமேன்று உறுதியா யிருப்பாயாகில், அவருடைய அநுக்கிரகம் உனக்கில்லாமற் போகாது. ஆகவே மனத்துயரமாற்றிச் சந்தோஷமா யிருப்பாயாக. நேரம் ஆகிறது. நீங்கள் இனிமேல் போய் வாசிக்கக் கூடியவர்கள். பரீக்ஷைக்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது? என்று கேட்டதற்குச் சங்கரன், "இன்னும் இரண்டு மாதந்தான் இருக்கிறது" எனப் பதில் கூறினன். பரமானந்தர் "அப்படியா! போய் ஜாக்கிரதையாய் வாசியுங்கள். கருணாநிதி உங்களைக் காப்பாராக," என்று பூர்ண ஆசிகூறி அவர்களுக்குப் போகும்படி அநுமதி கொடுத்தனுப்பினர்.

---

## 13-வது அத்தியாயம்

### மலைக்கோட்டை

மதுரையம்பதிக்கு வடக்கே சுமார் ஒருகாத வழி தூரத்தில் ஒருமலை இருக்கிறது. அதை அழகர்மலையென்று சாதாரணமாய் வழங்குவார்கள். அதற்கும் கீழ்பாரிசத்தில், பெரிய மலையை யடுத்து அநேகம் சிறுமலைகள் வட்டமாய் ஒரு கோட்டைபோல் வளைந்து இருக்கின்றன. தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு இப்படிப் பிரத்யேகமாய் ஒரு மலைக்கோட்டையிருக்கிறது என்று தெரியாது. ஒரே பெரிய மலைதான் இருக்கிறதென்று அவர்கள் எண்ணுவார்கள். ஏனென்றால் மேற்சொன்ன மலைக்கோட்டையைச்சுற்றி நாலாபக்கங்களிலும் அதிக உன்னதமான விருக்ஷங்கள் நெருங்கி யோங்கி வளர்ந்திருக்கின்றன. அல்லாமலும் மலைத்தொடரின்மேலும் பல

வகையான மரங்கள் செறிந்திருப்பதால் மலையின் அம்சமே சிறிதும் புலப்படாமல், ஒரு விருக்ஷத்திரளாகவே தோற்றும். ஆகவே இந்த நுட்பம் தெரிந்தவர்களுக்குமாத்திரம் இம்மாதிரியான கோட்டையொன்று இருக்கிறதென்று விளங்கும். ஒருவேளை மலைக்கோட்டையைக் கண்டுபிடித்தபோதிலும், அதற்குள்ளே போகும்படியான மார்க்கம் தெரிந்துகொள்ளுவது மிகவும் கஷ்டம். சாதாரணமான ஜனங்கள் அங்கே போக முடியாது. போனாலும் செடிகளும் புதர்களும் மிகுந்திருப்பதினாலே வழி தெரியாமல் திண்டாடவேண்டியது வந்துசேரும். அஃதன்றியும், நரி, ஓநாய் முதலிய துஷ்டமிருக சஞ்சாரம் அதிகம். ஆகவே அதிக கஷ்டப்பட்டு மலைக்கோட்டையைப் பார்க்கப்போய் வழிதெரியாமல் திண்டாடுகிற பெயர்கள், பாதை கிடைக்காமல் அடவியிற் சிக்கிப் பசியால்வருந்தி உயிர் துறக்கவோ, அல்லது இந்தக் கொடிய மிருகங்களுக்கு இரையாகவோ போகவேண்டியதுதான். இவ்வித பயங்கரமான காடடர்ந்த மலைக்கோட்டையில் அநேகர் தங்கிவருகிறார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கவேண்டும் என்று சற்று நிதானிப்போம். அஞ்சா நெஞ்சர்களாகியும், வனவிலங்கினும் மூர்க்கமிகுந்த துஷ்டர்களான திருடர்களாகியு மிருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் அந்தக் கோட்டைக்குள் தங்குவதில்லை. அடிக்கடி வெளியேவந்து பொருள் வேட்டை, மிருகவேட்டைகளாடி, ஒருவர் கண்ணுக்குந் தென்படாமல் பழையபடி போய் அங்கே சிலகாலம் தங்குவார்கள். நாம் இந்த மலைக்கோட்டையைப் பார்க்க விரும்பினால், அநேகர் ஒன்றுசேர்ந்துகொண்டு, அங்குள்ள பாதை முழுதும் செம்மையாயுணர்ந்த இந்தத் திருடர்களில் ஒருவனை வழிகாட்டியாக வைத்துக்கொண்டால், இந்தப் பயங்கரமான வெளிக்

காட்டைச் சுலபமாய்க் கடந்து, கோட்டையின் வெளியே நிற்க லாம். எப்பக்கம் பார்த்தபோதிலும் செங்குத்தான மலைக ளாய் இருப்பதினால் கோட்டையினுட் புகுவதற்குச் சரியான மார்க்கம் கிடையாது. ஆனால், வடகீழ்த்திசையில் அநேகம் பெரிய காட்டு மாங்களுக்கிடையில், ஒரு பிரமாண்டமான ஆலவிருக்ஷம், நாலாபக்கமும் விழுதோடி ஓங்கி வளர்ந்து நிற்பதைப் பார்க்கலாம். அந்த மாத்தின் வீழ்களில் இரண்டு மாத்திரம் பிரத்யேகமாய்த் தொங்கிக்கொண்டிருக்க மற்றவைக ளெல்லாம் சமீபத்திலுள்ள பெரிய விருக்ஷக் கிளைகளோடு கலந்து பின்னி நிற்கின்றன. இந்த வீழ்களை நூலேணியாக உபயோகப்படுத்தி மனோதைரியத்துடன் மேலேறிப்போனால், மலையின் சார்பை அடையலாம். இயற்கையாயமைந்த இந்த வடவிருக்ஷத்து வீழ்களினுதவியில்லையேல், உள்ளே போக வழி யொருபோதும் இல்லாதாகிவிடும். மலைச்சார்பை யடுத்த ஒரு குன்றின்மீதேறி அம்மார்க்கமாய் சுமார் நாற்பது கெஜ தூரம் அஞ்சாமல் நடந்துபோனால், உள்ளே இறங்கிப் போகும் படியான படிக்கட்டுகள் தோன்றும். அவ்வழியாக இறங்கி கீழே ஈசான திசையில் எதிரேயிருக்கிற ஒருமடுவைக்கடந்து செல்ல வேண்டும். அந்த மடுவானது மலையை யடுத்து முழங்கால் அளவு ஆழமும், மற்றவிடங்களில் நிலைக்கமுடியாத ஆழமாக வும் இருக்கிறது. இந்தக் குளத்தைக் கடந்து, அதற்கப்பால் குவிந்துகிடக்கிற கற்களைத் தாண்டித் தென்முகமாகத் திரும்பி னால், முதலில் ஒரு இருண்ட குகை புலப்படும். அந்தக் குகைக் குள் கொஞ்சதூரம் துணிவுடன் நடந்துபோனால் அப்புறம் வெளிச்சம் தெரியும். மேற்சொன்ன இருண்ட குகையான முதல் வாசல் அடைபட்டிருந்தாலும், கோட்டையினுள்ளே பிரவேசிக்க முடியாதாகிவிடும். மேல், அதற்கப்பால் அநேகம் குகைகள்,

அறையறையாகக் கட்டிவிட்டிருப்பதுபோல இருக்கும். ஒவ்வொரு அறைக்கு முன்பாக இரண்டு மூன்று பேர்காவலிருப்பார்கள். மீதியான பெயர்கள் அவரவர்கள் சௌகரியம்போலக் கும்பல் கும்பலாய்க் கூடிப்பேசிக்கொண்டிருப்பார்கள். இப்பொழுதும் அப்படியே சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்று கவனிப்போம்.

ஒருவன்.—“ அண்ணே, வண்டிக்காரப்பயலெ சரியான போடு போட்டேன்’?

மற்றவன்.—“ அந்தப்பயெ முறட்டுப் பயலாச்சே! அவனெ எப்படி இறக்கிவச்சே’?

முதல்மனிதன்.—“ பக்கத்திலெ எப்ப வருவாமிண்டு பதுங்கியிருந்தேனு? வண்டி வந்திச்சி, பின்னுலெ போயிருடுத்த குடையிலெ, குப்புற அடிச்சு விழுந்திட்டாண்டா?

இரண்டாம்மனிதன்.—“ அப்படிச் சொல்லு, இல்லாட்டிப் போனு, உன் தம்பட்டையெ ஒடெச்சுப்போடுவானில்ல!”

முதல்மனிதன்.—“ தம்பட்டையும், கிம்பட்டையும்! நம்ப கிட்டேச் செல்லும் அவன் வரிசெ? அவன் தாலியை அறுக்துப் போடமாட்டேன்! ஒரு கல்லு விட்டேனுக்கி கிறுகிறுத்துப் போமாட்டான்! நம்ம கல்லு முன்னே எவண்டா நிப்பான்? எத்தினி பேரு வந்தாத்தான் என்ன?” (மூன்றும் மனிதனைப் பார்த்து) நீ வந்த பயலைக் கண்டியா?”

மூன்றும்மனிதன்.—“ ஆமண்ணே! நான் கிட்டத்தானே நிண்டிருந்தேன். செத்தைப் பொறுத்தாப்பிலெ எளுந்திச்சிட்டான் அண்ணே!”

முதல் மனிதன்.—“ கடுத்த பயலில்ல—மருதையிலெ வச்சி அவனைப் பாத்திருக்கேன்.”

இரண்டாம் மனிதன்.—"எந்தப் பயல்களாவது தொயந்து வாராகளாண்டு பாத்தேன். ஒத்தனுவது வாவுமில்லே. தொயந்து பிடிச்சுக்கிறனு மெங்கிற எண்ணமுமில்லே."

மூன்ரும் மனிதன்.—"அப்படி வந்திருந்தா பளி கொடுத்திற மாட்டேன்? மீண்டு போவாங்களா? அப்புறம்.—"

"உள்ளே மணிச்சத்தம் கேட்டது, உடனே பேச்சை நிறுத்திவிட்டு, "ஐயா கூப்பிடுருக. போயி என்னேண்டு கேளு" என்று சொல்லிமுடிக்குமுன், கருப்பன் விரைந்து சென்று வணங்கி ஒதுங்கி நின்ருன்.

தலைவன்.—"எல்லாம் போய் சேர்ந்து போச்சா?"

கருப்பன்.—"ஆமா, பத்தரமாப்பூட்டி வச்சிருக்கேன். துறப்பு எங்கிட்டேத்தான் இருக்கு."

தலைவன்.—"உன் சிநேகிதன், சுப்பன் ஊருக்குப் போயிட்டானு?"

கருப்பன்.—"ஆமா இதுக்குள்ளே பாதிவளி போயிருப்பான். கோட்டைக்கி வடக்கே ஊடு பாதையிலெ விளுந்து திரிச்சினுபள்ளிக்கிப்போயி அங்கெயிருந்து ரெயிலுவண்டி ஏறப்போனுன்."

தலைவன்.—"அவன் பட்டணத்திலெ இருக்கக் காரணமென்ன?"

கருப்பன்.—"அவனு. எனக்கு அடுத்த வீட்டுக்காரனில்லெ ரொம்பபளக்கம். ரெங்கத்துக்குப்போயிவாரமிண்டுபோயி, துட்டே விருதாவிலெ செலவளிச்சுப் போட்டு,கண்டபடி யாத்திரிஞ்சிட்டு—இப்ப பட்டணத்திலெ யிருக்கான்."

தலைவன்.—"வேட்டையாடின இடத்தில் ஆள்சேதமுண்டா?"

கருப்பன்.—"இல்லெயா. அப்படிச் செய்வமா? சும்மா பயமுறுத்திக்காரியத்தை சமாளிச்சுக்கிண்டு வந்திட்டோம்."

தலைவன்.—“ கருப்பா—நம்ம சொக்கத்தலைவர் எங்கே போயிருக்கிறார் தெரியுமா? ”

கருப்பன்.—“ அவுக தம்பி வீரனைக் கண்டு பேசிட்டு வாரதாப் போனாக, இண்ணைக்கு வந்திடுவாக. ”

தலைவன்.—“ ஆனால் சரி வந்தவுடனே என்னிடம் வந்து சொல்லு. அவரிடத்தில் ஒரு அவசரமான சங்கதி சொல்லவேண்டியதிருக்கிறது. மறந்துவிடாதே போ” என்றவுடன் கருப்பன் தன்னுடைய காவல் இடத்திற்கு வந்து சேரவும், (சொக்கத்தலைவர் வருகிறதைக் கண்டு) “ ஐயா, ஒங்களே, ஒங்க கூட்டாளி பாக்கணுமெண்டு சொன்னாக. சீக்கிரம் போங்க. ”

(சொக்கத்தலைவர் உள்ளே போகவும்) தலைவன் “ வாரும் அண்ணே உம்மிடத்தில் ஒரு சங்கதி சொல்லவேண்டுமென்று இருக்கிறேன். ”

சோக்கத் தலைவர்.—“ சொல்லும் பார்ப்போம். எனக்கும் ஒரு சங்கதி சொல்லவேண்டியதிருக்குது. நீர் சொன்னபிறகு நான் சொல்றேன். ”

தலைவன்.—“என்னவென்று கேட்டால் நம்மைப்போலவுள்ள மற்றத்தலைவரெல்லாம்—இங்கிலீஷ் ராசாங்கத்துக்குப் பயந்து ஒடுங்கிக், களவு வேலையை விட்டுப்போட்டு, எல்லாரையும் போலெ நல்ல சீவனம் பண்ணிக்கொண்டிருக்கிறாக. நாமும் இதுவரெ அவுக கண்ணுக்கு அகப்படாமேயிந்த மலைக்கோட்டையிலெயே—இருந்திட்டோம். ஆனாலும் ஒளிச்சிருந்தது போலெதானே? நேராத் திரிய இடமில்லையல்ல. நாமும் அப்படி யிருந்தா என்ன? ”

சோக்கத்தலைவர்.—“ என் சங்கதியும் அதுதான். இதுவரை நம்ப களவிலெ சம்பாதிச்சது ரெண்டுலெச்சத்தி அம்பதி

ணுயிரம் ஆகுது. நம்பளைச் சேர்ந்தவா மொத்தம் இருநூறு பேரல்ல? அவாளுக்கு ஆள் ஒண்ணுக்கு ஆயிரம் வீதம் குடுத்திட்டு போகச் சொல்லிப் போடுவோம். மிச்சமிருக்க அம்பதிணுயிரத்திலெ அளகமலைச்சாமிக்கு நாலாயிரத்திலே ஒரு நகை பண்ணிப் போட்டிட்டு, ஆறுயிரத்துக்கு ஒரு மடம் ஒண்ணு கட்டிவச்சிப் போடுவம். சொச்சம் நாப்பதிணுயிரத்தை ஆளுக்குப்பாதியா எடுத்துக் கொள்ளுவோம். நீரு இதுக்கு என்ன சொல்லுரீரு?"

குருவித்தலைவர்.—"அதுதான் சரி. கணக்குச் சரியா பார்த்து வச்சிருந்தீரா? ஏதாவது நிலங்கரைவாங்கி நல்ல குடித்தனம் பண்ணிட்டுப்போக. அதுதான் நல்லது."

சோக்கத்தலைவர். — "என் தம்பி வீரன் இந்த தொளிலெ விட்டுரு விட்டுரு"ண்ணு பல நாளாச் சொல்லிக்கிட்டு வாரான். எனக்கும் அப்படித்தானிருக்கு. நான் வார வளியிலெ இந்த யோசனை தான் பண்ணிக்கிட்டுவந்தேன்." எந்த இடத்திலெ நிலம் வாங்குவோம்?"

குருவித்தலைவர்.—"ஏன், நம்ப சோளவந்தான் பக்கம் நல்ல வயக்காடு வாங்கலாம். அங்கேதான் நம்ப குடும்பக்காரரும் இருக்காக. அவாளோடெ போயிச் சேந்துபோவோம்."

சோக்கத்தலைவர். — "அதுதான் சரி. அது நல்ல ஊருங்கூட ஆத்துப்பக்கம். ரொம்பச் சவுக்கியமா யிருக்கலாம்."

# 14-வது அத்தியாயம்

## பூஜைமடம்

அருப்புக்கோட்டையில் வடக்குக் கடைசியில் ஒரு சின்ன ஊருணியும் அதை யடுத்து ஒரு அழகிய நந்தன வனமும் இருக்கிறது. அந்த நந்தவனத்தில், கோடைகாலத்தில் குளிர்ந்த நிழலைத் தந்து, வௌவால் முதலிய பக்ஷிஜாதிகளுக்கு இனிய வுணவாகிய நல்லபழங்களை எக்காலமும் இடையறாது கொடுத்து வரும் அரசமரங்கள் அநேகமுண்டு. இதைச் சுற்றி நாற்புறமும் வளைந்து உன்னதமாக வளர்ந்திருக்கிற தென்னமரங்களில் எப்போதுங் காய்காய்த்த வண்ணமாகவே இருக்கும். இவைகள் அல்லாமலும், நாவல், வேம்பு, மா, பலா முதலிய விருக்ஷ வர்க்கங்களும் உள. இவைகளுக்கிடையில் மல்லிகை, பிச்சி, இருவாக்ஷி, மனோரஞ்சிதம், முல்லை யாதிய பரிமளங் கமழும் புஷ்பச் செடிகளும் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்புஷ்பங்களிலிருந்தொழுகும் தேனை யுண்ண, ஓயாமல் அங்குமிங்குமாய்ப் பறந்து திரியும் வண்டுகளின் ரீங்காரம் அல்லும் பகலும் அரை நிமிஷமாவது இல்லாமலிராது. மேலெழும்பி நிற்கும் மாக்கிளைகளில், குரங்குகள் தாவித் தாவிக் கனிகளைப் பறித்து வயிறார உண்டு களித்து அவைகளின் அடியில் வந்து நிழலுக்காகத் தங்குபவர்களுக்கும் ஏராளமாகக் கனிவகைகளைப் பறித்துப் போடுவதைப் பார்த்தால், இல்லற ஆச்சிரமத்தில் இருப்பவர்கள், நல்ல வழியிற் பொருளைச் சம்பாதித்து, இப்படித் தம்மை யண்டின அதிதி பரதேசிகளுக்குத் தருமம் பண்ண வேண்டுமென்ற கொள்கையைச் செய்து காட்டுவது போலிருக்கும். மாக்கிளை களிலும் செடிகளிலும், காய் கனிகள் நிரம்பியிருக்கும்போது, அவை

களைத் தாங்கமாட்டாமல் கிளைகள் நாலாபக்கமும் பரந்து தரை மட்டும் தாழ்ந்து நிற்கும் தோற்றம், நிரம்பிய கல்விக்கேள்வி யுடையவர் இவ்விதமாய் யாவர்க்கும் தாழ்ந்து அடங்கி நிற்பார் என்று காட்டும்.

இத்தகைய அழகு மிகுந்த நந்தவனத்தின் மத்தியில் ஒரு மடம் விளங்குகின்றது. அது சல் மடமன்று. காரையால் கட்டப்பட்டிருப்பது. இதற்குப் "பூஜைமடம்," என்று பெயர். இப்பெயர் எதினால் ஏற்பட்டதென்றால், இதனுள் தேவல மாயினர் யாவரும் காலை மாலைகளில் அனுஷ்டானம், சந்தியாவந்தனம், பூஜை முதலியன முடிப்பர். அன்றியும் வருடந்தோறும், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருஞான சம்பந்தர் முதலிய சைவ சமயாசார்யர்களின் குருபூஜையும், பாலகிருஷ்ணசுவாமி, மஹாராஜ சுவாமி முதலிய மஹானுபாவர்களின் குருபூஜைகளும், இன்னும் சமயோசிதமான வேறு குருபூஜைகளும் நடத்தப்பட்டு வருவதால் இப்பெயர் அந்த மடத்திற்கு விளங்கலாயிற்று. இந்தத் திருமடத்தில் அநேகம் பெரியவர்களும் அடிக்கடி வந்து தங்கிப் போவார்கள். இப்படியிருக்க ஆனிமாதம் இருபதாந்தேதி யன்று மாலைப் பொழுதில், புலித்தோலாசனமும் தண்டுகமண்டலங்களு முடையவராய், தேசமெங்கும் சஞ்சாரம் செய்துவரும் நம்முடைய பரமானந்தர் தற்செயலாய் அவ்வழியாக வந்தார். அவருக்கு அவ்விடத்தில் சில நாள் தங்கியிருக்க வேண்டுமென்று எண்ணம் உண்டானதை உத்தேசித்தால் அந்த மடம் கட்டினவர்களுக்குச் சிறந்த புண்ணியம் உண்டாக்க உத்தேசித்தனர் போலும்! அவர் இந்த இடத்தில் தங்கின நிமிஷ முதற்கொண்டு, இவ்வூரார் ஆண் பெண் ணென்னும் வித்தியாசமில்லாமல், அவர் முன்சென்று வணங்கி, அந்த

031, 5N08:3,M
113



மஹானுபாவரிடம் விபூதிப்பிரசாதம் வாங்கி பணிந்துகொண்டு போக ஆரம்பித்தார்கள். அன்னவரிடமிருக்கும், அருள், தவம், ஒழுக்கம் இவை முதலானவைகளைக் கண்டு, வேளை தவறாமல், பலரும் அவருக்கு மதுரமான உணவு பதார்த்தங்கள் அளித்து வந்தார்கள். காஷாயமணிந்தவர் எத்தகையராயினும் அவரைக் கண்டவுடன் பணிந்தெழும் இவ்வூர் மாந்தர்கள் சற்குணம், ஒழுக்கம், அருள், சக்தி முதலானவைகளை உண்மையில் உடைத்தாயிருக்கிறவர்களுக்கு மனமாரத் தொண்டு புரியத் தலைப்படுதல் ஆச்சரியமல்லவே!

நாடோறும் காலையில் ஸ்நானஞ் செய்து, மடத்துள் வழுந்தருளி பூஜை முதலானவைகளைக் கிரமமாய்ச் செய்து முடித்துப் பின் வெளியே சற்று நேரம் வந்து உட்காருவார். அந்தக் காலத்தில், "இவர் எப்போது வெளியே வருவார்," என்று எதிர்பார்த்திருக்கிறவர்கள், அவர் வந்தவுடன் அவரை வணங்கித் தெரிசித்து அன்னவரால் கொடுக்கப்படும் திருநீற்றை வாங்கி பணிந்து அவருடைய மகிமை மிகுந்த ஆசீர்வாதமும் பெற்றுப் போவார்கள். இப்படிச் சில நாள் கழிந்து வருகையில் ஒரு தினம் இரவில் முத்துக்காமாக்ஷியும் அவள் தாயாகிய லெட்சுமியம்மாளும், அடுத்த வீட்டுப் பெண்களிற் சிலரும் அந்தப் பூஜை மடத்துக்கு வந்து அவரைத் தரிசித்துப் போனார்கள். வந்து தரிசித்தவர்களுக்கெல்லாம், தங்களுடைய பாவ மூட்டை குறைவது போலத் தோற்றிபடியால் அவர்களும் அடிக்கடி வரலானார்கள். ஒரு நாள் முத்துக்காமாக்ஷியும் லெட்சுமியும் மாத்திரம் வந்தார்கள். அன்று வெள்ளிக்கிழமை. லெட்சுமியம்மாள் அன்றைபத்தினம் தன் மகளை யழைத்து வந்த காரணம், இந்தப் பெரியவருடைய அநுவிசேஷத்தால் முத்துக்காமாக்ஷிக்கு சங்கரன்மேலிருக்கும் காதற்கிறுக்கு

22539

(லெட்சுமியின் அபிப்பிராயம்) நீங்காதா வென்பதுவே. அப்படியே அவர்கள் இரண்டுபேருமாத்திரம் வந்து வணங்கும் போது, அங்கே வேறொருவரும் கிடையாது. முத்துக்காமாக்ஷி அவருடைய பாதாரவிந்தங்களிற் பணியவும், அவளை எழுந்திருக்கும்படி ஆக்யாபித்து, பரமானந்தர், தம்முடைய பையிலிருந்து விபூதி யெடுத்து மந்திரித்து, "உன்னைச் சங்கரன் காக்க," என்று மனமார வாழ்த்தி அவளுடைய சிரசின்மேல், போட்டார். இவர் பொதுவாய்ச் சிவபெருமான் திருப்பெயரைக் கூறினது, லெட்சுமியின் காதுகளில், பழுக்கக் காய்ச்சிய நாராசத்தை யேற்றியதுபோலிருந்தது. ஆனால் முத்துக்காமாக்ஷி யம்மைக்கோ, தன்னைச் சங்கரன் ஒருபோதுங் கைவிடான் என்று பெரியோர் வாக்குக் கிடைத்தமையால் அந்த வார்த்தைகளை யப்பொழுதே இருகாதாரப் பருகிச் சரீரமெங்கும் ஆனந்தத்தால் புளகமுற்றாள். உலகத்தில் எவரெவர் எந்தெந்தத் தெய்வங்களை உபாசிக்கிறார்களோ அந்தந்தத் தெய்வவுருவத்தோடு அவரவர்களுக்கு ஒப்பற்ற பரம்பொருளாகிய பகவான் தரிசனந் தருவார் என்பது உண்மை.

> "யாதொரு தெய்வங்கண்டீ ரத்தெய்வமாக வெங்கள்
> மாதொரு பாகன்றானே வருகுவன்"

என்பதுபோலாம். இதத்தில், முத்துக்காமாக்ஷி, தந்தை, தாய், குரு, தெய்வம், எல்லாம் தன்னத்தானாகிய சங்கரனையன்றி வேறில்லை, யென்றிருப்பவளாதலால், அவள் சித்தப்படியே பெரியோர் அனுக்கிரகமும் கிடைத்தது. அதிலும், ஐயந்திரிபற வுணர்ந்த சற்குரு முன்னிலையில் உபதேசம் பெற்றுக்கொண்ட உத்தம சிஷன் போலானாள். இதனால், சங்கரன்மேலுள்ள பிரீதி நாளுக்கு நாள் மேல்மேலாக வளர்ந்

தோங்கியது. ஆனால் லட்சுமியம்மாளுக்கு மாத்திரம் இவர் சாமான்னியராக இருந்தால் அவர் அந்த வார்த்தையை முத்துக்காமாக்ஷி முன் உச்சரித்ததற்கு, அவரை வாயில் வந்தபடி பேசிக் கோபித்திருப்பாள்.

என்ன செய்வாள் பாவம்! வந்தது பிசகு என்றெண்ணி அப்படியே புத்திரியுடன் வீட்டுக்குத் திரும்பப் போய்விட்டாள். இராமலிங்கம் செட்டியார் அடியார் பூஜையிற் சிறந்தவர் என்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறோ மல்லவா? அவர் ஒரு நாள் இந்தத் துறவியைத் தன் வீட்டுக்கழைத்துச் சென்று இன்னமுது படைக்கவேண்டுமென்று கருதினவராகி, இந்த விவரத்தைப் பரமானந்த யோகீசுரருக்கு அறிவிக்க, அவர் சில நாளைக்குப் பிறகு சம்மதங்கொடுத்தார். ஒரு நாள் சோமவாரம் பகல் பதினொரு மணிக்கு, இராமலிங்கம் செட்டியார் பரமானந்தரை அழைத்துக்கொண்டு வந்து, ஒரு பரிசுத்தமான ஆசனத்தில் உட்காருவித்து, தம்முடைய அரும்புதல்வி முத்துக்காமாக்ஷியைக்கொண்டு அன்னம் படைக்கச் செய்தார். அவரும் வயிறாரப் புசித்துக் கைகால் சுத்திசெய்துகொண்டு தமக்கிட்ட ஆசனத்தில் உட்கார்ந்து மிகுந்த சந்துஷ்டியடைந்தவராய், முத்துக்காமாக்ஷியைக் கூப்பிட்டு, "உன்னை சங்கரன் காக்க" என்று அன்புடன் ஆசீர்வதித்து விபூதிப்பிரசாதம் அளித்தார். இராமலிங்கம் செட்டியாரும் அளவற்ற பக்தி சிரத்தையுடன், யோகீஸ்வரருடைய அநுமதியின்பேரில் அவர் அருகில் உட்கார்ந்துகொண்டு, "சுவாமி, தங்களுக்கு இன்று நான் அமுதளிக்கப்பெற்ற பாக்கியமே பாக்கியம்" என்று உபசார வார்த்தை கூறினர். யோகியும் பரமானந்தத்துடன் அவரைப் பார்த்து முகமலர்ந்து, "பக்தசிகாமணி நும் குலம் விளங்க ஈசுவரன் கடாக்ஷிப்பார். மனதார நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க

வேண்டும். பிறர் மதிப்பை விரும்பிச்செய்வதனைத்தும் வீணும். புறத்தோற்றத்தால் ஒன்றையும் நிச்சயிக்கலாகாது. கண்ணுரக் காண்பதும் பொய், காதாரக்கேட்பதும் பொய், தீரவிசாரிப்பதே மெய்யென்று தேறக்கடவீர் இதுவே நான் உமக்குக் கூற விரும்பியது," என்று சொல்லிவிட்டு அவசரமாகத் தம திருப்பிடமாகிய மடத்துக்குத் திரும்பினர். செட்டியாரும் கொஞ்சதூரம் வரையில் வந்து அவரை வழியனுப்பிவைத்து விடைபெற்றுக்கொண்டு திரும்பித் தம்முடைய வீட்டில் ஒரு அறையில் தனிமையாக இருந்து பின் வருமாறு சிந்திக்கலானர். "சுவாமிகள் சொன்னதின் கருத்து ஒன்றும் எனக்கு நன்கு விளங்கவில்லையே. பிறர் மதிப்பை விரும்பாமல் தன் கடமையைச் செய்யவேண்டும். அவசரப்படாமல் எதையுந் தீர விசாரிக்கவேண்டும் என்று செப்பினர். அப்படியவசரத்துடன் பிறர் சொல்வதைக் கேட்டு, நான் எந்தக் கடமையைச் செய்யாமலிருக்கிறேன்? நினைக்க நினைக்கப் பல விதமான எண்ணங்கள் உண்டாகின்றனவே!

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்"

என்றாற்போல என்னுடைய மனக்குறைகளை என் முகபாவனையால் அறிந்தே சொல்லியிருக்கிறார். எனக்குண்டாயிருக்கிற கவலையெல்லாம், இராமசாமிக்கென்று என் மகள் முத்துக்காமாக்ஷியை நிச்சயம் பண்ணிக் கலியாணஞ் செய்யப்போக, அது தவறிப்போனது என்பதுதானே. நான் நினைத்த படிக்கு அஃது ஒன்றுதானே நிறைவேறவில்லை. எல்லாம் ஈசன் திருவுளப்படியல்லவோ நடக்கும். இந்த விவாக காரியம் தடைப்பட்டு நின்றதும் தெய்வாதீனந்தானே? அப்படி

யானால் முத்துக்காமாக்ஷியை சங்கானிடம் சேர்ப்பிக்க வேண்டியததுதான்போலும்! அதுவே என்னுடைய கடமையென்றும் வெகுகாலமாய் எண்ணியிருந்தேன். அவனுடைய தீய நடக்கைகளல்லவா அவனைப் புறக்கணிக்க வைத்தது. அவன் நடத்தை தீயதென்றுதான் நாம் என்ன கண்டோம். என் நாராயணபிள்ளை முதலானோர் அவனைக் கெட்டவன் என்று கூறினார்கள். ஒருவேளை அவர்கள் சொன்னது மோசடியாயிருக்குமோ? இருக்கவே இருக்காது. ஏனென்றால் அவர்கள் ஒரு கடிதத்தையும் காட்டி அவர்கள் செப்பியதை மெய்ப்பட ருசுப்படுத்தினார்கள். ஆனால் அந்தக் கடிதமும் உண்மையற்றதாயிருக்குமோ!" என்று சந்தேகங்கொண்டு விரைவுடன் எழுந்துபோய் தம்முடைய மேஜையைத் திறந்து அதில் பத்திரமாய் வைத்திருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தார். அதில் இப்பிரகாரம் எழுதியிருந்தது.

சென்னபட்டணம்.

என் அன்பார்ந்த லீலாவுக்கு,

"ஈசுவரன் கிருபையால் உனக்கு சகல நன்மையும் உண்டாகுக. நான் உனக்கு இதுவரை யாதொரு கடிதமும் எழுதாமலும், பணம் அனுப்பாமலும் இருந்ததற்கு விசனப்படாதே- எனக்கு நேர்ந்த பல சங்கடங்களின் நிமித்தம் உன்மேல் பராமுகமாய் இருக்க நேரிட்டது. ஆனால் இதைவிட என்ன கஷ்டங்கள் வந்தபோதிலும் உன்னைக் கைவிடமாட்டேன். இது நிச்சயம். உன்மேலுள்ள பக்ஷம் ஒருபோதும் என் நெஞ்சம்விட்டகலாது. கடவுள் உன்னைக் காப்பாராக.

இப்படிக்கு

**சங்கரன்.**

கடிதத்தை நன்றாய் உற்றுநோக்கினர். "இது சங்கரனுடைய கையெழுத்தே. அதற்கு யாதொரு ஆக்ஷேபனையும் கிடையாது. ஆனல் லீலா ஆரென்று தெரியவில்லையே. பெண்பால்தான் சிறிதும் ஐயமில்லை. எதுவும் விசாரித்தால் வெளியாகிறது. அவசரப்படலாகாது. ஒவ்வொன்றையும் சாவகாசமாய்த் தீர்க்க விசாரணை செய்து பின் தீர்மானித்தல் வேண்டும். அதுவே தக்கது" என்று நிச்சயித்துக்கொண்டு தாம் இருந்த அறையை விட்டு வெளியேறித் தம்முடைய வேலையில் யதாப்பிரகாரம் பிரவேசித்தார்.

---

## 15-வது அத்தியாயம்

### பெரிய கார்த்திகை

வருடந்தோறும் கார்த்திகை மாதத்தில் வருகிற கார்த்திகை நக்ஷத்திரத்திற்குப் பெரிய கார்த்திகை யென்று இந்தப் பாகங்களில் வழங்குவதுண்டு. ஆனல் வேறு சிலவிடங்களில் அதனைத் திருக்கார்த்திகை யென்றுங் கூறுவர். அந்தத் தினத்தில் கார்த்திகேயனை யன்புடன் பணிந்தால் விசேஷமான புண்ணியம் லபிக்குமெனக் கருதி நாலாபக்கங்களிலுமிருந்து திருப்பரங்குன்றத்துக்கு ஜனங்கள் போவது வழக்கம். இந்தக் காலத்தில் நாட்டு ரோட்டுக்களில் நடந்து செல்வது பெருங் கஷ்டமாக விருக்கும். ஏனெனில் பட்டிக்காடுகளிலிருந்து ஜனங்கள் ஏறிக்கொண்டுவரும் வண்டிகள் அவ்வளவு மிகுதியாய் வரும். இங்கேமாத்திரமல்ல. ரெயில்வே ஸ்டேஷன்களிலும், ஜனநெருக்கத்தாற் படும் அவஸ்தை இம்மட்டு அம்மட்டென்றில்லை. டிக்கட்டு எடுப்பதும் கஷ்டம். ஒருவேளை மிகுந்த பிரயாசையுடன் டிக்கட்டு பெற்றுக்கொண்டபோதிலும்

வண்டியிற்போய் ஏறிக்கொள்ளுமுன் படுகிற துன்பம் அதை விட அதிகம். தலையில் போதுமான பாரமூட்டைகளைச் சுமந்து கொண்டு நிற்கிற வாலிபர்களில் அநேகர் நீ முன், நான் முன், என்று ஒருவரையொருவர் நெட்டித்தள்ளி ஒருவர்மேல் ஒருவர் சாய்வதும், கவலையீனமாக நின்றிருந்தவர்கள் கீழே விழுவதும், விழுந்தவர்மேலே இவர்கள் விழுந்து காலால் மிதித்து உழக்கு வதும், மிதிபடுகிறவர்கள் அந்த வேளையில் போடுங் கூச்சலும் யாரால் கண்டு கேட்டுச் சகிக்கக்கூடும். இவ்விதமாய்க் கீழே விழுந்து அரைபடுகிறவர்கள் விருத்தராகவோ அல்லது அதி பாலியராகவோ விருந்து, சத்திவடிவேலன் கிருபையை எதிர் நோக்கி அவரை வணங்க வந்திராதபக்ஷத்தில், அவர்களை யப் பொழுதே இயமன் தன்னுலகத்துக்கு அழைத்துக்கொண்டு போயிருப்பான் என்பதிற் சந்தேகமிராது.

இந்த உபத்திரவத்தோடு நிற்காமல், போலீஸ்காரர் ஆராவேசங்கொண்டு அவர்களை யொழுங்குபெற நிறுத்த முயன்று தங்கள் இடுப்புவாரைக் கழற்றி மாட்டுவார்கள். இதனை நினைக்கும்போதே மனம் நடுங்குகின்றது! இதைவிட அதிகமாக ஜனங்கள் வந்தாலும், அவர்களை யெல்லாம் இவ்விதமான கஷ்டத்திற்கு ஆளாக்காமல், " ரயிற் பிரயாணம் " பரமசுகம், " என்ற வாக்கியத்தை இந்த விசேஷ காலங்களில் ரூபிப்பது கலமாயிருக்கும். துன்பம் இம்மட்டோடு ஒழிந்ததா? வண்டிகளில் ஏறிப்பார்த்தால் ஜனநெருக்கம் வண்டிக்கு வண்டி அதிகமாயிருப்பதினாலே, உட்காருவதற்குக்கூட இடமில்லாமல் நெருக்கத்தில் அரைபடவேண்டியதிருக்கிறது. இவ்வளவு கஷ்டத்துடன், நின்றுகொண்டாவது பிரயாணஞ் செய்கிறவர் பலர். எதற்காக வென்றால், வண்டி கிடைக்காமல் நின்று விடுவதைப் பார்க்கினும், எவ்வளவு கஷ்டப்பட்டாயினும் கார்த்திகையில்

சரவணபவனைக் கண்டு தெரிசித்து நேத்திரானந்த மடைவது விசேஷம் என்றெண்ணி இவ்விதம் ரெயிலில் பிரயாணம்பண்ணு கிறார்கள். ஆகவே உற்சவ காலங்களில் ஜனங்கள் அவஸ்தைப் படாமல் சௌகரியமாகப் பிரயாணஞ் செய்யும்படி அதிகம் வண்டிகள் கோர்த்திருந்தால் மிகுந்த சிலாக்கியமுண்டு. மேற் கூறிய விதமாய் அதிகம் துன்பப்படாமல், விருதுபட்டி ஸ்டேஷனில் இரண்டாவது கிளாசுக்கு டிக்கட் வாங்கி வண்டி யிலேறி யுட்கார்ந்து போய்த் திருப்பரங்குன்றத்தில் இறங்கிய வர்களில் நம்முடைய இராமலிங்கம் செட்டியார் ஒருவர்.

அவர் ஸ்டேஷன் கடந்ததும், சரேலென்று நடந்து போய் சன்னிதித்தெருவில் இரதத்தண்டை கீழ்மேல் வீதியில் தென்பாரிசத்தில் வடக்குமுகமாகக் கட்டப்பட்டிருக்கிற தேவாங்கர் மடத்தில் போயிறங்கி, தம்முடைய சாமான்களை மடத்திலிருப்பவர் வசம் ஒப்புவித்துவிட்டு, சரவணப் பொய்கையை யணுகி, அதில் ஸ்நானஞ் செய்து சந்தியானுஷ் டான முடித்துக்கொண்டு, கிரிவலம் வந்து கோயிலுட் புகுந்து சண்முகக் கடவுளைக் கண்குளிரக் கண்டு தரிசித்து,

1. கருவடைந்து பத்துற்றதிங்கள்
வயிறிருந்து முற்றிப்பயின்று
கடையில்வந்து தித்துக்குழந்தை வடிவாகி

2. கருவியங்கெ டுத்துச்சுரந்த
முலையருந்தி விக்கிக்கிடந்து
கதறியங்கை கொட்டித்தவழ்ந்து நடமாடி

3. அரைவடங்கள் கட்டிச்சதங்கை
பிடுகுதம்பை பொற்சுட்டிதண்டை
பவையணிந்து முற்றிக்கிளர்ந்து வயதேறி

4. அரியபெண்க ணட்பைப்புணர்ந்து
பிணியுழன்று சுற்றித்திரிந்த
வடியனுன்க்ரு பைச்சித்தமென்று பெறுவேனோ

5. இரவியிந்த்ரன் வெற்றிக்குரங்கி
னரசரென்று மொப்பற்றவுந்தி
யிறைவனெண்கி ளர்க்கர்த்தனென்று நெடுநீலன்

6. எரியனும்ப ருத்துச்சிறந்த
வனுமனென்று மொப்பற்றவண்ட
ரெவருமந்தி வர்க்கத்தில்வந்து புனமேவ

7. அரியதன்ப டைக்கர்த்தனென்று
மசுரர்தன்கி ளைக்கட்டைவென்ற
வரிமுகுந்தன் மெய்ப்பித்தபண்பின் மருகோனே

8. அயனையும்ப டைத்துச்சினந்து
வுலகமும்ப டைத்துப்பரிந்து
வருள்பரங்கி ரிக்குட்சிறந்த பெருமாளே

என்று தோத்திரம் பாடிப் புகழ்ந்து பிரசாதம் வாங்கிக்கொண்டு பழையபடி மடத்துக்குத் திரும்பினார். மத்தியான வேளையில் மடத்தில் விரதமிட்டு விட்டு, வெளித்திண்ணையில் ஒரு சேலம் ஜமுக்காளத்தை விரித்து அதில் சற்று ஆயாசந்தீரப் படுத்துறங்கினார். சுற்றுப் பக்கங்களிலிருந்தும் அநேகர் இந்த மடத்துக்கு வருவார்கள். எல்லாரும் அநேகமாய் மத்தியானத்துக்குள் சாப்பிட்டார்கும். அதன்பின் ஒவ்வொருவரும் தமது நேபர்களையும் மற்றவர்களையும் கண்டு பலபல சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். அப்படி சம்பாஷித்துக்கொண்டிருப்பவர்களில் முக்கியமாய் நம்முடைய இராமலிங்

கம் செட்டியார் ஒருவர், சேலத்திலிருந்து வந்த சுப்பராயச் செட்டியார் மற்றொருவர். இவர்களுக்குள் நடந்த சம்பாஷணை பின்வருமாறு.

இராமலிங்கம்.—“ ஐயா, தாங்களிருப்பது கோயம்புத்தூரா ?”

சுப்பராயச் செட்டியார்.—“ இல்லை, நாங்களிருக்கின்றது சேலம். உங்களுடைய ஊர் எது ?”

இராமலிங்கம் — “ அப்படியா, நான் இருப்பது அருப்புக் கோட்டை. சேலத்திலிருந்து வியாபாரிகள் அநேகர் அடிக்கடி இந்த வட்டகைக்கு வருகிறார்கள். அவர்களது ஆசார முதலியவைகளைக் கவனித்தால், இன்ன ஊரார் என்று தெரிந்துகொள்ளுகிறது. ஆனால் இந்தத் திருப்பாங்குன்றத்துக்கு இதற்குமுன் பலதடவையாக வந்திருக்கிறேன். உங்களை யிதுவரையில் பார்த்ததில்லை. யாத்திரை விஷயமாக வந்தீர்களோ ? அல்லது வியாபார விஷயமாய் வந்தீர்களோ ?”

சுப்பராயச் செட்டியார்.—“ யாத்திரை விசயமாத்தான். யாபார விசயமாயில்லை. இந்தத் திருபாங்குண்டத்துக்கு வந்ததில், இதுதான் எனக்கு முதல்தடவை. மைத்த காரியங்களுக்கு இங்கே ஏன் வரப்போகின்றேன்? கேளுங்கோ, எங்க நாட்டுக்கு இந்த நாடு ஒருவிதமாகத்தான் இருக்கின்றது. ஆனால் “ மதுரை ஒரு நல்ல பட்டண”மென்று எங்கள் ஊருக்கு வருகின்ற பலரும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேன். ஆகையினாலே கார்த்திகைக்குத் திருப்பாங்குண்டம் வந்து சுப்பிரமணிய சுவாமியைத் தெரிசனம் செய்துவிட்டுப் போறபோது, மதுரைப் பட்டணத்தையும் பார்த்துக்கொண்டு போகலாமென்று வந்தேன்.”

இராமலிங்கம்.—"நல்லாச்செய்கிறது. மதுரை பாராதவர்களை மாபாவி யென்று இந்தப் பாகங்களிற் சொல்லிக் கொள்ளுவார்கள். அந்த மதுரைப் பட்டணத்தின் அமைப்பும், அதன் மத்தியில் மீனாக்ஷிசுந்தரேசுவருடைய ஆலயமும், ஆலயப்புறமதில்களை யொட்டி நான்கு திசைகளிலுமிருக்கிற உன்னதமான கோபுரங்களின் அலங்காரமும் வியக்கத்தக்கன. ஸ்தல, தீர்த்த, மூர்த்தி விசேடங்களும் அடங்கியிருக்கின்றன. சொக்கநாதருடைய அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் நடந்த ஸ்தலமானதினாலே, அவசியமாய்க் கண் படைத்தவர் பார்க்கவேண்டிய நகரமே. எங்கெங்கே போனாலும் இந்த அலங்காரம் கிடையாதென்று சொல்லுகிறார்கள்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே, சுப்பராயச்செட்டியார் தூங்கிவிழத் தொடங்கினார். அதைக்கண்டு:

இராமலிங்கம்.—"ஏனய்யா தூக்கமோ? வேண்டுமானால் இந்த ஜமுக்காளத்தில் கொஞ்சம் படுத்துத் தூங்குகிறது தானே" என்றார்.

சுப்பராயச்செட்டியார்.—(சற்றே வெட்க மடைந்தவராய்) "நேற்றுத் திருச்சினாப்பள்ளியில் நாடகக் கொட்டகைக்குப் போயிருந்தேன். இரவெல்லாம் தூக்கங் கிடையாது. நாடகம் முடியவும் ரயிலேறி விட்டேன்!"

இராமலிங்கம்.—"உங்களை பார்க்கும்போது சிறந்த வைதீகர் போலத் தோன்றுகிறீர்கள். நாடகம் பார்ப்பதில் உங்களுக்கு அதிக விருப்பம் போலும்!"

சுப்பராயச்செட்டியார்.—"இல்லை, இல்லை, திருச்சினாப்பள்ளியில் என் நண்பருடைய வீட்டில் நேற்று சாயங்காலம் உளுக்காந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுது, தெருவில்

பாண்டுவாத்தியம் வாசிக்கும் சத்தம் கேட்டது. "அதென்ன விசேசம்" என்று என்னுடைய சிநேகிதரைக் கேட்டேன். "பார்ஸி நாடகம்" நடக்கிறதென்று சொல்லி வாய் மூடுமுன், அவருடைய வேலைக்காரர்களில் ஒருவன், அந்த நாடகக் காகித நோட்டீசு கொண்டுவந்து கொடுத்தான். அதை என்நண்பர் வாங்கி வாசித்து முடித்துவிட்டு, "பாருங்கள்," என்று என்னிடம் கொடுத்தார். நானும் அதை வாசித்து "இதென்ன துலுக்காள் நாடகம்! இந்தத் துலுக்காள் நாடகத்துக்கா, பாரீசு நாடகம் என்று சொன்னீர்கள்," என்று அலக்ஷியமாகக் கேட்டேன். உடனே அவர், "நீங்கள் இவ்வளவு அலக்ஷியமாகப் பேசவொண்ணாது. துலுக்கர் கதையாக விருந்தாலும், சீன்கள் வெகு விமரிசையா யிருக்கும். கடவுள் சிருஷ்டிப்பிலுள்ள கடல், மலை, ஆறு, தடாகம் இவைகளைத் தத்ரூபத்தில் காட்டுவார்கள். பார்த்தவர் மனம் பிரமித்துப் போகும்படியாக விருக்கும். இது மாத்திரமா? மழை பெய்வது போலவும், இடி முழங்குவதும் மின்னல் பளிச் பளிச்சென்று வெட்டுவதும், வெகு நேர்த்தியாயிருக்கும். இயற்கைக்கும், இவர்கள் செய்து காட்டுவதற்கும் இறையளவும் வித்தியாசமிராது. அவர்கள் பேசும் பாஷை நமக்குத் தெரியாமற்போனபோதிலுங்கூட, அவர்கள் காட்டுகிற பாவனையினாலும், இந்த நோட்டீசின் உதவியினாலும், கதையின் சாராம்சத்தைச் செவ்வையாகத் தெரிந்துகொள்ளலாம்," என்று மிகுந்த உற்சாகத்தோடும், ஆத்திரத்தோடும் பேசினார். அல்லாமலும் என்னையும் கட்டாயம் கூடப்போய்ப் பார்க்கவேண்டும் என்றும் வற்புறுத்திப் பேசினார். அதன்பேரில்

அவருடைய வேண்டுகோளுக்கிணங்கி நேற்றுப் போய்ப் பார்க்க நேரிட்டது. கொட்டகைக்குள் நுழையும் பொழுதே மனம் பிரமித்துவிட்டது. கடற்சீன் காட்டும் போது உண்மையாய்க் கடலாகவே தோன்றிற்று. நான் அப்பொழுது கடற்கரையில் இருப்பதாகவே எண்ணிக் கொண்டுவிட்டேன். மழைசீன் காட்டும்பொழுது யதார்த் தமாய் மழை பெய்கையில் எப்படியிருக்குமோ அப் படியே, மேகவிருளும், குமுறுதலும், இடியும், மின்ன லும், மழையும் இவைகளைப் பார்த்தோர்கள் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்! கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டவைகளைப்போல மனிதரால் ஒருபோதும் செய்ய முடியாதென்று நான் கொண்டிருந்த எண்ணம் என்னை விட்டு நேற்றுடன் தொலைந்தது."

இராமலிங்கம்.—"அப்படியா! அது என்ன நாடகம்? பாரீசு நாடகமா? கதை தெரியாமற்போனாலும் போகட்டும். நீங்கள் சொன்னதைக் கேட்டது முதற்கொண்டு, எனக் கும் அதைப் பார்க்கும் விருப்பமுண்டாயிருக்கிறது. திரிச்சிக்கு நீங்கள் எப்பொழுது போகிறீர்கள்? போகும் போது நானுங்கூடக் கட்டாயமாய் வருகிறேன்."

சுப்பராயச் செட்டியார்.—"சரி, அப்படியே செய்கின்றது. மதுரைக்கு நீங்கள் எப்பொழுது புறப்படுகின்றீர்கள்?"

இராமலிங்கம்.—"சாயங்காலம், கொஞ்சம் வெயிலிறங்கவும் போவோம்" என்பதோடு வேறு பலபல கார்யங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவைகளை எல் லாம் இங்கு எழுதினால் மிகவும் விரியுமென்றஞ்சி இம் மட்டில் நிறுத்துகிறோம். அவர்கள் பேசிக்கொண்ட

பிரகாரம், ஒரு ஜட்கா வண்டி வாடகைக்குப் பேசி அதி லேறிக்கொண்டு சுமார் அரைநாழிகைப்பொழுது இருக் கும்போது மதுரை வந்து இறங்கினார்கள்.

---

## 16-வது அத்தியாயம்

### நேசர் வருகை

சென்னையிலிருக்கும் நமது நேயர்களுக்குப் பரீக்ஷை முடிந்தது. சங்கரனுடைய நிலைமையானது முன்னிருந்ததற் குக் கொஞ்சமும் குறையவில்லை. அநேகமாய் இப்பொழுது மேலென்றே செப்பல்வேண்டும். மத்தியானம் சாப்பிட்டான தும், சங்கரன் தன்னுடைய மாளிகையில் சமாசாரப் பத்திரி கையொன்று வாசித்துக்கொண்டிருந்தான். கோபாலன் அங்கே வழக்கம்போல் வந்து சங்கரன் அருகில் உட்கார்ந்தான்.

கோபாலன்.—“நண்பனே, எப்பொழுது பரீக்ஷை முடிவு பெறும், எப்பொழுது ஊருக்குப் புறப்பட்டுப் போ வோம் என்று ஆத்திரப்படக்கூடிய நீ, இப்பொழுது பரீக்ஷை முடிந்து வெகுநாளாகியும் யாதொரு கவலையு மில்லாதவனாய் இங்கே தங்கியிருக்கிறது, எனக்கு அள வற்ற சந்தோஷத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. உன் மனத்தின் நிலைமை எவ்விதம் இருக்கிறது?”

சங்கரன்.—“சிநேகனாகிய உன்னைவிட்டுப் பிரிய என் மனம் எப்படித் துணியும்? துணியாது. ஆனாலும் காமாக்ஷி யின் ஞாபகம் உண்டாகும்போது, இப்பொழுதே ஊருக் குப் புறப்பட்டுப் போவோமா என்று எண்ணமுண்டா கின்றது. அந்தக் கருத்தின்படியே நான் அருப்புக் கோட்டைக்குப் போனேன் என்று வைத்துக்கொண்டா

லும், எங்கே போய்த் தங்குகிறது? அம்மானுடைய மனங் கோணியபின், அவர் வீட்டிலிருக்க என்னுடைய உள்ள மிசையவில்லை. அதவா போயிருந்தாலும் பார்த்தவர்கள், என்னை என்ன சொல்லமாட்டார்கள்? ஏளனம் பண்ணு வார்கள் அல்லவா? ஆகவே இவைகளை யெல்லாம் எண்ணி யெண்ணி என் மனம் வருந்துகிறபடியால், அங்கே போக வேண்டுமென்கிற கருத்து அடியோடு நீங்கினது. இன் னொரு சங்கதி, பரீக்ஷை முடியும் வரையில் நான் உங்க ளுடைய ஆதரவில் இருந்தது சரி. இனிமேலும் உன் பிதாவிடமிருந்து பொருளுதவி யெதிர்பார்ப்பது நியாய மல்ல. ஆகையால் இதற்கென்ன செய்யலாமென்று பல வகையிலும் ஆலோசித்துப் பார்க்கிறேன். ஒருவகை தீர் மானத்துக்கும் வரவில்லை. எதற்கும் உன்னிடம் கலந்து பேசி யோசித்து முடிவு பண்ணிக்கொள்ளுவோம் என்று நினைத்திருக்கிறேன். இது விஷயத்தில் நீ என்ன சொல்லுகிறாய்?"

கோபாலன்.—"அருமைத் தோழா, முத்துக்காமாக்ஷியைக் கண்டு களிக்கவேண்டுமென்கிற உத்தேசம் உண்மையாக உன்னிடம் இராவிட்டால், அதாவது வெளிப்படையாக, இங்குதானே இருக்க விரும்பினால், எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம். அதில் தடையில்லை. ஏனென்றால் என் பிதாவிற்கு உன்னைப்போல இன்னும் இரண்டு மூன்று நண்பர்கள் இருந்தால் அவர்களையும் ஆதரிக்க ஆசைகொண்டவரா யிருக்கிறார். அதுவும் நீ நன்றாய் அறிந்ததுதான். இப்படி அவர் ஆதரிக்க விரும்புகிறது, கைம்மாறு கருதியன்று, என நிச்சய மாய் நம்புவாயாக. உன்னைக் குறித்து அநேக சந்தர்ப்

பங்களிலும் என்னிடம் கேட்டிருக்கிறார். நான் அவைகளை யெல்லாம் உன்னிடம் சொல்லாமலே வைத்திருக்கிறேன். நீ அவையனைத்தும் கேள்விப்பட்டிருந்தால், உன் மீது அவர் எவ்வளவு பக்ஷம்வைத்திருக்கிறார் என்று அறிந்துகொள்ளுவாய். இயற்கையில் அப்படிப்பட்ட சுபாவகுண முடையவர். அதற்குமேல், பரமானந்த யோகீஸ்வரரும், உன் விஷயத்தில் அதிக கவலையெடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்தி எச்சரிக்கைபண்ணியிருக்கையில் அவர் எம்மாத்திரம் அன்பு உன்மேல் வைத்திருப்பார் என்று யூகித்துக் கொள்ளக்கடவாய். ஆனதால், பொருள்விஷயத்தில் கவலைகொஞ்சமும் உனக்கு வேண்டியதில்லை."

சங்கரன்.—"பாங்கனே, கையிற் கடிதம் ஒன்று வைத்திருக்கிறாயே. என்ன விசேஷம்? எந்த வூரிலிருந்து வந்த கடிதம்?"

கோபாலன்.—"இது திருச்சிறுப்பள்ளியிலிருந்து என்னுத்தம நண்பன் சுப்பிரமணியன் எழுதியது. அவனுடைய தங்கைக்குக் கலியாணம். அவசியம் வரவேண்டுமென்று எழுதியிருக்கிறான். ஆகவே, உன்னையுங்கூட அழைத்துச் செல்லலாமென்று வந்தேன். தடைசொல்லாமல் என்னுத்தேசத்திற்கு இணங்கி வரவேண்டும்."

சங்கரன்.—"நானும் வந்தே தீரவேண்டும் என்றிருக்கிறபக்ஷத்தில் நான் வருவதில் தடை கிடையாது. எனக்கு இங்கென்ன வேலையிருக்கிறது? ஓய்வு நாளும் சுலபமாய்க் கழியும். ஆனால், அந்த நண்பன் யார்? எப்படிப்பட்டவன்? அவனுடைய குணகுணங்களை யறிய ஆவலுள்ளவனாகவிருக்கிறேன்."

கோபாலன்.—"அவன் எனக்குத் தாய்வழியில் பந்துவும், சிநேகனுமாயிருக்கிறான். அவன் எப்போதுமிருப்பது திருச்சி. மிகுந்த பணக்காரன். இங்கிலீஷில் பி. ஏ. பரிக்ஷை கொடுத்தும் யாதொரு சர்க்கார் வேலைக்கும் போகாமல் வீட்டுக்காரியங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய தகப்பனாருக்கு அதிகம் வயசாகி விட்டது. தாயாரும் புத்திரன் கருத்துக்கு ஒருபோதும் மாறுபட்டுக்கொள்வதில்லை. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன்பிள்ளை தானே வளரும்" என்ற கொள்கையுடையவர்கள் அவன் பெற்றோர்கள். சுப்பிரமணியனை "நல்லதோழன், சற்குணக்குன்று, அருட்கடல்" என்றே சொல்லவேண்டும். கலியாணத்துக்கு நாம் கட்டாயம் போகவேண்டும்"

சங்கரன்.—"ஆனால் நல்லது. அப்படியே செய்கிறது. எப்பொழுது பிரயாணம் வைத்துக்கொள்ளுவோம்."

கோபாலன்.—"காலை மெயிலுக்குப் புறப்படுவோம். அதற்குள் பிரயாணத்துக்குச் சித்தமாயிருப்பாயாக. என்னுடைய தந்தை உன்னைக் கூட்டிக்கொண்டு போகும்படிக்கு என்னிடம் சொல்லியிருக்கிறார்," என்று சொல்லிவிட்டு சங்கரனிடம் விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய வீட்டுக்குத் திரும்பினான். சங்கரன், தன்னுருயிர்க்காதலியாகிய முத்துக்காமாக்ஷிக்கும் ஒரு கடிதம் கீழே வரும் விதத்தில் எழுதியனுப்பினான்.

சென்னை,
24-4-08

ஆருயிர்க் காதலிக்கு,

உன் கடிதம் பார்த்து ஆனந்தித்தேன். என்னுடைய் பரீக்ஷை போனமாதத்தில் முடிந்தது. தேறி விடுவேன் என்

பதிற் சந்தேகமில்லை. இடையிலுண்டான குழப்பத்தினால், தற்சமயம் அவ்வூருக்கு வந்து உன்னை யென்னிரு கண் குளிரப் பார்ப்பதற்கு ஏதுவில்லாமல் இருக்கிறது. எப்பொழுது உன்னைக் கண்டு ஆனந்திப்பேன் என்பது இறைவற்கே வெளிச்சம். பரீக்ஷை முடிந்தபின் ஒவ்வொரு நாளையும் ஒரு யுகம் போல் கழித்து வருகிறேன்.

இப்படிக்கு உன்னன்பிற்குரிய

சங்கரன்.

முதனாள் பேசிக்கொண்ட பிரகாரம், நம்முடைய நண்பர்களிருவரும், காலை மெயிலிற் புறப்பட்டு, திருச்சினாப்பள்ளியில் சுப்ரமணியன் வீடு வந்து சேர்ந்தார்கள். அங்கே மத்தியான போஜனமான பின்பு, மூன்று பேர்களும் கொஞ்சம் நேரம் வரையில் பலபல சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, அப்புறம் பிரயாணஞ் செய்துவந்த அலுப்பாறுவதற்காகச் சற்று நேரம் படுத்து நித்திரைபோனார்கள். இரவில் சாப்பிட்டானபின், தோழர்கள் மூவரும், கொட்டகைக்குப் போகும் விஷயமாய் சம்பாஷிக்கத் தலைப்பட்டார்கள்.

**சங்கரன்.**—“அது எதற்காக நாடகம்? நான் இதுவரையில் நாடகம் பார்த்ததுமில்லை. பார்க்க இஷ்டமுங் கிடையாது.”

**சுப்பிரமணியன்.**—“அப்படியல்ல. இயற்கை யமைப்பினை அப்படியே செய்து காட்டுவதென்றால் சாமான்னியமா? அவசியம் பார்க்கத்தக்கது. ஒரு தடவையாவது பார்த்தால் மாத்திரம் உன்னைப் போன்றவர்களுக்குப், பார்ஸித் தியேட்டர்களின் பெருமை புலப்படும். இது விஷயமாக அவர்கள் நாடோறும் செல்வழிக்கும் தொகை கொஞ்சமா?”

கோபாலன்.—“சென்னையில் பார்ஸிக் கொட்டகை போட்டிருக்கும்போது அநேகர் அதன் பெருமைகளை அதிக சிலாக்கியமாகப் பேசிக்கொண்டார்கள். எனக்கும் ஒரு நாளைக்காவது போய்ப் பார்க்கவேண்டும் என்று எண்ணம் இருந்தது. ஆனால் சௌகரியப்படவில்லை. இன்றுதான் அது பார்க்கும் பாக்கியம் கிடைத்தது போலும்!” என்று கோபாலனும், சுப்பிரமணியனும், போய்ப் பார்க்கத்தான் வேண்டும் என்று முடிவு கட்டி யிருப்பதை யறிந்து, அவர்களுக்கிணங்கித் தானும் நடத்தலே உசிதம்” என்று கருதி, அவர்கள் கட்டாயத்தின் பேரில், சங்கரனும் ஒப்புக்கொண்டான்.

---

## 17-வது அத்தியாயம்

### கண்காக்ஷி

திருச்சினாப்பள்ளிக் கோட்டை ரெயில்வே ஸ்டேஷனை யடுத்து ஒரு பெரிய காம்பவுண்டுக்கு உள்பட்ட காலியிடத்தில், அதிக பிரமாண்டமான கொட்டகையொன்று அமைக்கப் பட்டிருந்தது. அதற்கு உன்னதமாக வளர்ந்தோங்கிய தென்னை மரங்களே தூண்களா யமைந்திருந்தன. அவைகள் மரங்களென்று தெரியாதபடிக்கு, பந்தலுக்குள் அடங்கிய பாகங்களுக்குமாத்திரம், வெள்ளைத்துணி, செகப்புத் துணிகளால் பட்டிகள் சுற்றப்பட்டிருந்தமையால், பார்ப்போருக்கு அவை உண்மையாய் நிறுத்தப்பட்ட அழகிய தூண்போல் தோன்றின. மேலே மூங்கிற்பாய் போடப்பட்ட கூரையானது தெரியாதபடி விதானம் கட்டப்பட்டிருந்தது. கொட்டகைக்கு வரும் ஜனங்களுக்குச் சரியான காற்றோட்டமாயிருப்பதற்கு, மூன்று

பக்கங்களிலும் வரிசை வரிசையாய் ஜன்னல்களும், வாயில்களும் ஏற்பட்டிருந்தன. சமதளமான தரையில், ஸ்டேஜை யடுத்து நாற்காலிகளும் அவைகளுக்குப் பின் பெஞ்சுகளும், வகுப்புவாரியாய் போடப்பட்டிருந்தன. இவைகளுக்கும் பின்னுலிருந்து நாடகம் பார்ப்பவர்களுக்குச் செவ்வையாய்த் தெரியும்படி, மரப்பலகைகளால் அமைத்த காலரி போடப்பட்டிருந்தது. ஆயிரம் சந்திரர்கள் ஒன்று சேர்ந்து பிரகாசித்தாற் போல அவ்வளவு பிரகாசம் கொடுக்கும்படி அநேக காஸ்லயிட் விளக்குகள் வரிசைப்படக் கட்டித் தூக்கி யிருந்தார்கள். கொட்டகை முழுவதும் பரிமள வாசனை கமழ்ந்துகொண்டிருந்தது. ஹார்மோனியப் பெட்டி வாசிப்பவரும், மத்தளம், தாளம், இவைகளுக்கு ஏற்பட்டவரும் பிரத்யேக நாற்காலிகளில் ஸ்டேஜுக்கு வெளியே தியேட்டரைப் பார்த்து உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இத்தகைய ஒழுங்கில் அமைக்கப்பட்ட கொட்டகையின் சிங்காரத்தை மாத்திரம் பார்ப்பதற்கு ஆயிரம் கண் படைத்த இந்திரனும் இன்னும் அதிகம் நேத்திரம் வேண்டுமென்று விரும்புவானேல், மற்றையோர்கள் எவ்வளவு வியப்படைந்திருக்க மாட்டார்கள்!

ஒன்பது மணியாகவும் ஸ்டேஜுக்குள் கணீர், கணீர், என்று மணியடிக்கிற சத்தம் கேட்டது. பதினைந்து நிமிஷத்துக்குப் பின் ஒரு தரம் இதேமாதிரி மணி யடித்தார்கள். சரியாய் ஒன்பதரை மணிக்கு, மூன்றாவது மணியடிக்கும் ஓசை கேட்கவும், முன்னால் விடப்பட்டிருந்த திரை உயர்த்தப்பட்டது. அதிக விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த ஸ்டேஜில், சுமார் நாற்பது பையன்கள் வரையில், கண்கூசும்படியான ஜோதி மிகுந்த வர்ணவுடைகள் தரித்துக்கொண்டு, பல பாகங்களிலும் உட்கார்ந்து, ஒரே தொனியிற் பாடிக்கொண்

டிருந்தார்கள். ஒரு வேட்டு சப்தம் கேட்கவே, பாட்டின் தாளத்திற்கிசைய மெதுவாக எழுந்து, வரிசை வரிசையாக பலபாகங்களாகப் பிரிந்து முன்னும் பின்னும் இப்புறமும் அப்புறமுமாய் ஆடிக்கொண்டு நடந்தார்கள். இதன் மத்தியில், ஒரு பையன் முன்வந்து நின்று உயர்ந்த குரலிற் பாடிக்கொண்டே போய், நடுவிற் போட்டிருந்த ஆசனத்தில் சயனித்த பாவனையில் இருந்தான். அந்த ஆசனத்துக்கு, கால்களுக்குப் பதிலாக மூன்று சிறிய கோல்கள் மாத்திரம் நிறுத்தப்பட்டிருந்தன. மற்றைச் சிறுவர்கள் எல்லாரும் அவனைச் சுற்றித் தாளம் பிசகாமல் கொஞ்ச நேரம் வரையில் ஆடிக்கொண்டிருந்து திடீரென்று இரண்டு வரிசையாகப் பிரிந்து அவனுக்கு வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலுமாக நின்றிருந்தார்கள். பாடலின் மத்தியில் சிறுவன் ஒருவன் போய் அந்த ஆசனத்தின் கால்களில் ஒன்றை மெதுவாய் அசைத்துப் பிடுங்கி எறிந்துவிட்டான். இப்படி மூன்று தடவையாக மூன்று சிறுவர்கள் அந்த ஆசனத்தின் மூன்று கால்களையும் எடுத்துவிட்ட பிறகு, சயனித்திருந்த பையன் அந்தரத்தில் நிராதாரமாகப் படுத்துத் தூங்குவதுபோலத் தோற்றினன். இதில் விசேஷமென்னவென்றால் இத்தனை சிறுவர்கள் படிப்படியாய் உயரமுள்ளவர்களாய் கிடைப்பது அருமை. இவ்விதமாய் பதினைந்து நிமிஷம் செல்லவும் சிறுவர்களின் நாட்டியமாடும் சீன் முடிந்தது.

இரண்டாம் முறை "படீர்" என்று ஒரு வேட்டோசை கிளம்பவே, ஒரு பிரமாண்ட மலையும் அதைச்சேர்ந்த குன்றுகளும், அதன் சார்பில் ஒரு வெள்ளருவியும் தோன்றின. பார்த்த விடமெங்கும் தினுசு தினுசான மரங்களும், செடிகளும், புதர்களும் நிறைந்திருந்தன. மேற்சொன்ன குன்றுகளில் ஒன்றில் ஒரு இருண்ட குகை காணப்பட்டது. அந்தக்

குகையின் வாயிலில் ஒரு வீரன் நின்றிருந்தான். இதற்கடுத்த சீன் ஒரு விசாலமான நதி. அதன் இருகரைகளில் அடர்ந்த காடுகளும் சோலைகளும் விளங்கின. ஆற்றில் ஜலம் பிரவாக மெடுத்தால் எப்படி வருமோ அப்படிப் பொங்கி மிகுந்த கொந்தளிப்புடன் வந்துகொண்டிருந்தது. ஆற்று வெள்ளத்தின் மத்தியில் ஒருவன் ஒரு சிறு படவோட்டிக்கொண்டு வந்தான். அவன் ஒரு கரையை அடுக்கவே, ஆறு மறைந்து, பெரிய சிறைச்சாலையாகக் காணப்பட்டது. அதில் அநேக இருட்டறைகளும், ஒரு அறைக்குள் கைதியொருவன் அதிக அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிற பாவனையாகத் தெரிந்தது. படவோட்டி இந்தக் கைதியை விடுவித்து அழைத்துக் கொண்டு வரும்போது அதிகப் பயங்கரமாகத் தோற்றிய சிறைச்சாலையின் புறமதிலை, ஒரு நூலேணி மூலமாய் ஏறித் தாண்டி வரவும், சிறைச்சாலை யப்படியே சின்னபின்னப்பட்டு சிதறி விழ, முன்னிருந்தபடி பெரிய நதி தோன்றிற்று. மேற்கூறிய இரண்டு பெயர்களும் ஆற்றங்கரையில் நின்றிருந்த படவிலேறிக்கொண்டு அதிகப் பிரயாசத்துடன் ஆற்றின் மறுகரை போய்ச் சேர்ந்தார்கள். இதில் அதிசயிக்கத்தக்கது யாதெனில், ஒரு சீன், மத்தியில் இன்னொன்றாக மாறிப், பழையபடியும் முன்போல மாறிநிற்பதுதான். பார்த்திருந்த ஜனங்கள் எல்லாரும் ஆச்சரிய மிகுந்தவராய் அடங்கா மகிழ்ச்சியால் ஏகமாய்க் கரகோஷம்பண்ணி ஆரவாரித்தார்கள். இதற்கடுத்தது கடல்சீன், உண்மையான கருங்கடல்போலவும், காற்றின் மிகுதியால் அலைகள் உயர்ந்து கிளம்பிப் பாய்வதும், சமுத்திரத்தின் கொந்தளிப்பும், இரைச்சலும், பாய்க்கப்பல் ஒன்று அந்தக் கடலின்மீது போவதும், அதிக தூரத்தில் கருங்கற் பாறையின்மேல் கட்டப்பட்ட தீபஸ்தம்ப

விளக்கின் பிரகாசமும் கண்டோர், இது வாஸ்தவமான கடல் தான் என்று மதிமயங்கி யிருந்தார்கள். இராமலிங்கம் செட்டியார் இவைகளை யெல்லாம் இமைகொட்டாமல் பார்த்துப் பிரமித்திருந்தார். இதன்பின், யாவருக்கும் அளவற்ற வியப்பைத் தந்தது மழைசீன். முதல்முதல் கொட்டகையையும் எங்கே தூக்கி யெறிந்துவிடுமோ என்று சங்கையுறும்படி செய்த கொடுங்காற்று, இருண்ட மேகங்கள் பாவி நாலாபக்கமும் கவிந்துநிற்றல், பேரிரைச்சலுடன் மும்முரமாய்ப் பெய்யும் மழை, இடையிடையே கண்கூசும்படியாக வெட்டுகிற மின்னல், செவிடு படத்தக்கதாக வுண்டான இடிமுழக்கம் ஆகிய இவைகள் இயற்கையில் எவ்வாறு நடக்குமோ அவ்வாறு செய்து காட்டப்பட்டன. கடைசியாக ஒரு நபாபுவின் தர்பார் சீன் காட்டி முடிக்கப்பட்டது. பளபள வென்று மின்னல் தரும் பொற்றகடு வேய்ந்த சிம்மாசனமும், அதற்கருகில் மந்திரி முதலியவர்களின் இருக்கைகளும், வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. பூர்வ காலங்களில் மகம்மதிய அரசர்களது ஆடம்பரம் இத்தன்மையது என்று தெளிவாக இதனால் விளங்கலாயிற்று. இந்த சீன் காட்டுமுன், வெளியில் இரண்டு சேனை வீரர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்குப் பின் போடப்பட்டிருந்த திரையைத் தூக்கினவுடன், இவர்கள் திடுக்கென்று எழுந்து, அதிக வினயத்துடனும், பயபக்தியுடனும் இப்புறமும் அப்புறமுமாய் ஒதுங்கி நிற்க, இவர்கள் முன்னுட்கார்ந்திருந்த நாற்காலிகள் இரண்டும் திடீரென்று திரும்பி, பூச்செடிகளாய் மாறிநின்றன. மேற்கூறின சீன்களுடன், அன்றையக் கதையை நடத்தி முடித்தார்கள் சரியாய் இரண்டரை மணிக்கு. நடத்திக் காண்பிக்கப்பட்ட சீன்களின் விசித்திரங்களிற் காற்பங்குகூட

தமக்கு சுப்பராயச் செட்டியார் சொல்லவில்லையென்று இராமலிங்கம் செட்டியார் கருதினர். கொட்டகைவிட்டு வெளியேறவும், சங்கரன் அவனுடைய தோழருடன் வெளியே வந்தான். அதைக் கண்டு இராமலிங்கம் செட்டியாருக்குக் கோபமும் ஆச்சரியமும் உண்டாக அப்படியே மெய்ம் மறந்து நின்றுவிட்டார். ஆனல், சங்கரன் அவரைப் பார்க்காமல் அப்படியே தன் சிநேகிதருடன் போய் குதிரைவண்டியில் உட்கார்ந்தான். சுந்தரமிருந்த இரண்டு வாலிபப்பெண்களும் அதேவண்டியில் வந்தேறி உட்கார்ந்தவுடன் வண்டி புறப்பட்டு விட்டது.

இதுவரை தாம் நேத்திரானந்தமுறும்படியாகப் பார்த்து மகிழ்ந்த சீன்களை நினைத்து சந்தோஷப்பட்டுக்கொண்டுவந்த நம்முடைய இராமலிங்கம் செட்டியாருக்கு, சந்தோஷமெல்லாம் மாறி யொருவிதமான கவலையாகிவிட்டது.

சுப்பராயச் செட்டியார்.—"என்னய்யா, சீன் பார்த்தீங்களே, நல்லா இருக்கிறதென்று ஏதேதோ சொல்லிக்கொண்டு வரும்போதே திடீரென்று உங்கள் பேச்சை நிறுத்திவிட்டீங்களே. என்ன சங்கதி?"

இராமலிங்கம்.—"அவ்விதம் ஒன்றுமில்லை. இயற்கையமைப்பை இந்தவிதமாகச் செய்து காட்டவேண்டுமென்று எப்படி முதலிற் கண்டறிந்தார்களென்று யோசித்துக்கொண்டே வந்தேன். வேறொன்றுமில்லை" எனப் பிரயாசையுடன் முக மலர்ச்சி காட்டினர். இராத்திரிகாலமானதால் இவருடைய முகக்குறிப்பை சுப்பராயச்செட்டியாருக்கு நன்ருய்க் கவனிக்க மார்க்கமில்லாமற் போயிற்று. இரண்டு பேர்களும் அப்படியே பேசிக்கொண்டு வந்து, தம்முடைய இருப்பிடத்தை யணுகவும், சுப்பராயச் செட்டியார், "போய்விட்டு வாரீங்களா?"

என்று அநுமதி பெற்றுக்கொண்டு நின்றுகொண்டார். ஆனால் இராமலிங்கம் செட்டியாருக்கு அன்றிரவு வெகுநேரம் வரையில் நித்திரை வரவில்லை. கண்ட காட்சிகளின் பெருமையொரு பக்கமும், சங்கரனைக்கண்ட விசனமொரு பக்கமும் இழுக்க, இவருடைய மனம் இங்குமங்குமா யூசலாடி, ஒன்றுந் தெரியாமல் கடைசியில் அப்படியே நித்திரை போய்விட்டனர்.

---

## 18-வது அத்தியாயம்

### உண்மை விளக்கம்

மறுநாட் காலையில் எழுந்து, இராமலிங்கம் செட்டியார், காலைக்கடனை முடித்துப் பின் போஜனம் அருந்தி விட்டு, வீட்டு வெளித்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, மனதுள் பலவாறுக எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறார். "தாய்தந்தையரை இழந்த சங்கரனை, நான் வளர்த்துக் கல்வி கற்பித்து, என்னருமைப் புதல்வியை அவனுக்கு மணமுடித்துக்கொடுத்து எனக்குப்பின், அவனை என் குடும்பத்தலைவனுக்கக் கருதியிருந்த வெண்ணம் நிறைவேறுமற் போயிற்றே! நாராயண பிள்ளை முதலானவர்களின் பேச்சைக் கேட்டுச் சகிக்கொணுத் துன்பத்தில் மூழ்கி, அவன்மேல் வெறுப்படைந்து, மாதந் தோறும் அவனுடைய படிப்புக்கென்று அனுப்பிவந்த துகையை நிறுத்திவிட்டால், சங்கரன், இது தன்னுடைய நடக்கைப் பிசகால் நேர்ந்ததென்றெண்ணி, என் முன்னிலையில் தான் செய்த குற்றங்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுவான், அதன்பேரில் பழைய படியும் மாதா மாதம் ஐம்பது ரூபாய் அனுப்பி அவனுடைய கல்விப்பயிற்சியில் அதிக ஜாக்கிரதையாயிருந்துவா எச்ச

ரிக்கை செய்து முன்னுக்குக் கொண்டு வரலாமென்று நினைத்திருந்ததும் பாழாய்விட்டதே! பொருளுதவி யில்லாததைக் குறித்துச் சிறிதும் கவலையுறுமலிருப்பது மன்றி, கெட்ட வழக்கங்களில் நாளுக்கு நாள் அதிகமாக வல்லவோ பழகிவருகிறுன். நேற்றுஇராத்திரி, நான் கொட்டகைவிட்டு வெளிவரும் தறுவாயில் என் கண்ணெதிரே, லேடிகள் சகிதம் குதிரைவண்டியேறிப்போனுனே! அவனையப்பொழுதே கூப்பிடலாமென்று கூட யோசித்தேனே! அவ்விதம் நான் கூப்பிட்டிருந்து, என்னைக் கண்டதும், அவன் நாணமடைந்து, குற்றவாளியைப் போலத் தலைகுனிந்து நின்று, என் சொல்லைக் கேட்டு என் பிறகே வந்தால்தானுயிற்று; அப்படிக்கன்றி, என் வார்த்தைகளை திரஸ்கரித்துவிட்டால், நான் வாயிழந்தவனுகப் போவதுமல்லாமல், எனக்கு என்ன மதிப்பு ஏற்படும்! "வளர்த்தகடா மார்பிற் பாய்ந்த கதை"யாக வல்லவோ முடியும்! இப்படியல்லாமலா, அடா சண்டாளா, உன்மேலிருந்த விருப்பெல்லாம், இப்பொழுது வெறுப்பாக மாறி நிற்கிறது! ஆயினும் புத்திரவாஞ்சை யொருபக்கமிருந்து என்னை அலலும் பகலும் அலக்கழிக்கிறதே! "நான் பெற்ற மைந்தனுகவிருந்தால், இப்படி சுயேச்சையாகத் திரிந்து கெட்டுப்போக விடுவாரா" என்று என்னுடைய சுற்றத்தாரெல்லாம், என்னைப் பழிக்கும்படியான காலமும் வந்ததே! அந்தோ! தெய்வமே! என்னை யிக்கதிக்கோ ஆளாகவிட்டனை! இந்த விசனம் ஒரு பக்கம் இருக்க, என்னருந்தவப் புத்திரி முத்துக்காமாக்ஷியின் விவாகம் முடிவுபெறுமல் தடைப்பட்டுப்போன வருத்தம், இன்னெரு பக்கம் வாதிக்கிறதே! அந்தக் கலியாணம் யாதொரு குறைவுமின்றி, மங்களமாக நிறைவேறியிருந்தால், இப்பொழுது எனக்கு இவன் விஷயத்தில் இவ்வளவு பரிதாபம் உண்

டாகமாட்டாதே! காமாக்ஷி உன் விதியின் திறமிதோ? அதிக அருமையாகப் பெற்று வளர்த்த உன்னை, என்னிரு கண் மணியை, இனிய உயிரை, இந்தக் கொலைபாதகன் கையிலா ஒப்புவிக்கவெண்ணியிருந்தேன். காமாக்ஷி, என் கண்ணே, நீயும் என்னைப்போல நேற்றையக் காட்சியைக் கண்ணுற்றிருப்பை யாகில், இனிமேல், இந்தக் காதகன்மீது கனவிலாயினும் காதல் வைப்பாயோ? என் இருகண்ணாரக் கண்டபின்னும், இந்தப் பேயனுக்கா என்னருமைப் பெண்மணியைக் கொடுப்பது? பளா! பளா! நன்றாயிருந்தது. மிகுந்த ஏழையாக விருப்பி னும், சற்குணம் வாய்ந்த வொருவனே எனக்கு மருமகனாகற் குரியான். "உம்" என்று பெருமூச்செறிந்து கோபத்தால் படபடக்கப் பேசினார். சற்று நேரம் செல்லவும், சங்கரன்மீது கருணை பிறந்தவராய், அவனுடைய துர்நடக்கைகளுக்காக, மனமுடைந்து புலம்பலானார். "நான் ஒன்று நினைக்கத் தெய் வம் ஒன்றல்லோ நினைத்தது! ஆண்மகவில்லாப் பரிபவம் என்னை யிங்ஙனம் அலக்கழிக்கின்றதே! —"லீலா." என்ற மூதேவி யாரோ? என் புத்திரியைக் கைப்பிடித்தாலும், ஏ கடையா, நீ கிரமமாய் அவளை வைத்து ஆதரிப்பாயோ? ஒரு போதும் இல்லை. சிறு பிராய முதற்கொண்டே, நீ செய்த அற்ப குற்றங்களுக்கெல்லாம், உன்னை உடனுக்குடனே தண் டித்திருந்தால், நீ இக்கதிக்கு ஆளாவாயா? அட பாதகா," என வாய்விட்டுப் புலம்பிக் கண்ணீர் சிந்தினார். அந்த வேளை யில்,

பழனிக்குப் போய்விட்டுத் திருச்சிறுப்பள்ளிக்குத் தற் செயலாக வர நேரிட்ட, நம்முடைய பரமானந்த யோகீஸ்வரர் அவ்வழியாக வந்தார். அவர் இராமலிங்கம் செட்டியாரைக் கண்டு, "ஏது, இங்கே வந்தது?" என்று கேட்கவும், இராமலிங்

கம் செட்டியார், திடுக்கென்றெழுந்து, அடியற்ற மரம்போல் அவருடைய திருப்பாதங்களில் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, அன்போடழைத்துப் போய் ஒரு பரிசுத்தமான விடத்தில் உட்காரவைத்தார். இவருடைய விசனத்தை முகக்குறியாலுய்த்துணர்ந்த,

பரமானந்தர்.—“ஏது விசனமுற்றவர்போல் இருக்கிறீர்கள். சங்கதி யென்ன ?”

இராமலிங்கம்.—“ஒன்றுமில்லை சுவாமி.”

பரமானந்தர்.—“உங்களுடைய முகமானது இயற்கையான மலர்ச்சி பெறுமல், கன்றி வாடியிருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் உங்களுக்குண்டான வருத்தத்தை என்னிடம் கூறினல், என்னலியன்ற அளவு ஒத்தாசை புரிகிறேன்.

இராமலிங்கம்.—“சுவாமி, என் மனக்குறைகளைத் தங்களிடம் செப்பாமல் வேறு யாரிடம் தெரிவிக்கப்போகிறேன்? என் மருமகன் சங்கரனுடைய நடவடிக்கைகள் சுத்தக் கேவலமா யிருக்கின்றன என்று சிலரால் கேள்விப்பட்டேன். அதன்பேரில் என் அருந்தவப் புதல்வி முத்துக்காமாக்ஷியம்மாளை, இராமசாமிக்கு விவாக முடிப்பதாகத் தீர்மானித்துக் கலியாணத்துக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் யாதொரு குறைவுமின்றித் தயார் செய்தும், அது நிறைவேறுமல் போய்விட்டது. இதெல்லாம் நீங்கள் அருப்புக்கோட்டைக்கு எழுந்தருளி யிருக்கும்போது கேள்விப்பட்டிருப்பீர்கள். நேற்றுத் தற்செயலாய் இவ்வூரில் போட்டிருக்கும் பார்சிக் கொட்டகைக்குப் போய்த் திரும்புகையில், சங்கரன் அவனுக்கிசைந்த சில தோழருடன் கூடிக்கொண்டு, இரண்டு லேடிகள் சகிதமாய்க் குதிரைவண்டியேறிப் போவதை என் கண்ணுரப் பார்த்

தேன். பிறர் மூலமாகக் கேள்விப்பட்டது ஒருவேளை பொய்யாயிருக்குமோ என்று சந்தேகப்பதத்தில் வைத்திருந்தேன். நேற்று அவனுடைய ஆடம்பரங்களை நான் நேரில் கண்ணுற்றபின், என் சந்தேகம் பலத்துப்போனது. என்னுடைய குடும்ப விருத்தாந்தம் அனைத்தும் நீங்கள் அறிந்தவர்கள்தானே? ஆகவே என் மனம் ஒரு நிலைமையிலில்லாதபடி புண்பட்டுப் போயிருக்கிறது."

பரமானந்தர்.—"ஐயா, நான் அருப்புக்கோட்டையில் பூசை மடத்தில் தங்கியிருந்தபோது, உங்களிடம் ஒருநாள், "கண்ணாரக் காண்பதும் பொய், காதாரக் கேட்பதும் பொய், தீரவிசாரிப்பது மெய்," என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா?"

இராமலிங்கம்.—"ஆம், சுவாமி, அஃது இப்பொழுதும் என்னுடைய ஞாபகத்தில் இல்லாமல் இருக்கவில்லை. கேள்விப்பட்டவைகளை உறுதிப்படுத்த, கண்ணாலே பார்த்தும் ஆய்விட்டது. இதைப்பார்க்கிலும் தீர்க்காலோசனை வேறென்ன வேண்டும்?"

பரமானந்தர்.—"சரி, நான் சொல்லுவதைக் கேளுங்கள். நாடகம் முதலானவைகளைப் பார்க்கப் போகாத தாங்களே நேற்றுக் கொட்டகைக்குப் போயிருந்ததாக, நேரில் ஒப்புக்கொண்டீர்கள். இதனாலே, நீங்கள் எப்பொழுதும் நாடகம் பார்க்க அந்தரங்கமான பிரீதி உடையவர்கள் என்று நான் தீர்மானித்துக்கொள்ளலாம், அல்லவா? தங்களுடைய குணம் எனக்கு நன்றாகத் தெரிந்திராத பக்ஷத்தில், உங்களையும் நான் அவ்விதமாகவே மதித்திருப்பேன்."

இராமலிங்கம்.—“ கொட்டகைக்குள் வந்ததுதான் போகட்டும். தாசிகள் சகிதம் போனுனே !”

பரமானந்தர்.—“ தாசிகள் என்று அவர்களை நீங்கள் எப்படிக் கண்டீர்கள் ? ”

இராமலிங்கம்.—“ என்ன சுவாமி ! அவர்களுடைய நடை கொடிப் பாவனைகளைக் கவனித்தால், தெரியாதா ? ”

பரமானந்தர்.—“ஏதாவது சிருங்காரமான வார்த்தைகள் பேசிக் கொண்டு போனுர்களா ? ”

இராமலிங்கம்.—“ அப்படிக் கொன்றுமில்லை.”

பரமானந்தர்.—“ ஆனுல் அவர்களைத் தாசிகள் என்று எவ் விதம் நிச்சயித்தீர்கள் ? ”

இராமலிங்கம்.—“ அவர்கள், ஆடை யாபரணங்களினுல், தங் களை அலங்கிருதம் பண்ணியிருந்த மோடி காட்டிற்று.”

பரமானந்தர்.—“ பெரிய நகரவாசிகளாயிருக்கக் கூடியவர்கள், செல்வவான்களாக இருந்தால், தங்களுடைய குடும்பப் பெண்களுக்கு, அதிக விலையுயர்ந்த பட்டு வஸ்திரங்கள், மதிப்பிலடங்காத பணிமணிகள், வாங்கிக்கொடுக்கலா காது என்பது உங்கள் அபிப்பிராயமோ? தற்கால நாகரீக மும் இதுதானே ! அதிலும் விசேஷமான இடங்களுக் குப் போகுங்காலத்தில், பெண்டுகள், நல்ல ஆடையாப ரணங்களால் அலங்கரித்துக்கொள்ளுதல் குற்றமாகுமா ?

இராமலிங்கம்.—“ சுவாமி, அப்படியானுல் அந்தப் பெண்மணி கள் யாராயிருக்கக் கூடும் ?”

பரமானந்தர்.—(சிரித்துக்கொண்டு)“ நீங்கள்தான் தீர்மானித்து விட்டீர்களே “ தாசிகள் ” என்று. ”

இராமலிங்கம்.—“ இன்னும் முடிவாகவில்லை. சந்தேக ஸ்திதி

யில்தான் இருக்கிறது. ஆனால், சங்கரனைப்பற்றி, நீங்கள் என்ன அபிப்பிராயம் கொள்ளுகிறீர்கள், சுவாமி ?"

பரமானந்தர்.—"நான் சென்னபட்டணத்தில் ஜெகநாதஞ் செட்டியார் வீட்டிலிருக்குங் காலத்தில் நான் சங்கரனைப் பற்றிக் கொஞ்சம் கவனித்த மட்டிலும், அவன் சற்குணன், யோக்கியன் என்று தெளிந்தேன். அவனுடைய சுபாவத்தை நன்கு தெரிந்தவர்கள் அவனைத் தாசிலோலன் என்று ஒருபோதும் செப்பத் துணியார்கள். ஆனால் இன்னொன்று; நேற்று சங்கரன் கூட வந்தவர்களின் இலக்ஷணங்களை மாத்திரம் எடுத்துரைத்தால், நான் அவர்களை இன்னார், இன்னார், என்று சொல்லக்கூடும் என்று நினைக்கிறேன். தெளிவாக அங்க லட்சணங்களையெல்லாம் கூறவேண்டும்."

இராமலிங்கம்.—"நேற்று வந்தவர்களில், சங்கரன்தான் ஒன்று. ஒருவர் அநேகமாய்ச் சங்கரனைப்போல விருந்தாலும், கொஞ்சம் புதுநிறமானவர். இன்னொருவர், அதே உயரத்திலிருந்தாலும், சற்றே ஸ்தூலித்த தேகமுடையவர். மற்றொருவர் ஏறக்குறைய சகலவிதத்திலும், என்னைப் போலிருக்கிறார். பெண்மணிகளில் சுமார் இருபத்தைந்து வயதுள்ள அழகான ஸ்திரீ ஒருத்தி. மற்றவள், பதினாறு வயதுக்கும் குறைவாகவே காணப்பட்டாள். அதிக ரூபலாவண்ணியம் பொருந்தியவள். இந்த ஆறு பெயர்கள் மாத்திரம் குதிரைக் கோச்சேறிப் போனார்கள்."

பரமானந்தர்.—"இவர்களில், சங்கரனைத்தான் உங்களுக்கு நன்றாய்த் தெரியுமே. அவனைப்போல் சற்றுப் புதுநிறமுடையவன், சென்னப்பட்டணம் ஜெகந்நாதம் செட்டியார் மகன் கோபாலன். அவன்கூட ஒரே வகுப்பில்

சேர்ந்து வாசிக்கிருன். சரீரம் சற்றே கனத்திராவிட்டால், அதே உயரத்தில் சங்கரனைப்போல் காணப்பட்டவன் சுப்பிரமணியன். இவ்வூர் வாசி. கோபாலனுடைய பந்து. உங்களைப்போல் காணப்பட்டவர், அந்த சுப்பிரமணியனுடைய தமக்கை புருஷன். ஸ்திரீரத்னங்களில் வயது கூடினவள் சுப்பிரமணியனுடைய தமக்கை. மற்றவள் சுப்பிரமணியனுடைய மனைவி. சுப்பிரமணியனுடைய வீட்டுக்குச் சமீபத்தில்தான் நான் இருப்பது. நேற்று அவன் தங்கைக்குக் கலியாணமான படியால், சங்கரனும், கோபாலனும், நேற்று மத்தியானம் பட்டணமிருந்து புறப்பட்டுவந்து சேர்ந்தார்கள். இவைகள் அனைத்தும் எனக்குத் தெரிந்திருந்தபடியினுலே, நான் தெரிவித்தேன்."

இராமலிங்கம்.—"சுவாமி உண்மை இப்படியிருக்க, சங்கரனைப் பற்றி ஏதேதோ நினைத்த என் மடமையை என்னென்று சொல்வேன்? நன்றாய் விசாரித்தாலன்றி ஒன்றும விளங்காதுதான். தங்களை இன்று நான் காண நேரிடாவிடில், சங்கரனை முழுக் குற்றவாளியாக்கி வைத்துவிட்டு, இந்தத் தப்பெண்ணத்துடன் ஊருக்குப் போவேன்."

பரமானந்தர்.—"உலகத்தில், ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய மன நோக்கத்திற்கேற்றபடி, காண்பனவற்றையும், கேள்விப்படுவனவற்றையும், அருத்தப்படுத்திக் கொள்ளுதல் வழக்கமாயிருந்து வருகிறது. இது உலக வியற்கை. இதினுலேயே கண்களையும் நம்பலாகாது என்று சொன்னேன். ஆகவே இது விஷயமாய் மனம் வருந்தாதீர்."

இராமலிங்கம்.—"சுவாமி, இன்ஞென்று, சங்கரன் லீலாவுக்

கென்று ஒரு கடிதம் எழுதியிருப்பதைப் பார்த்தேன். அதைக் குறித்த சந்தேகம் இன்னும் தீராமலிருக்கிறது. அதையும் நிவர்த்தித்துக்கொள்ள விரும்புகிறேன்."

பரமானந்தர்.—"ஏன்! இன்று சாயங்காலமே, சங்கரனை உம்மிடம் அழைத்துக்கொண்டு வருகிறேன்."

இராமலிங்கம்.—"நான் இங்கே வந்திருப்பதாக அவனுக்குத் தெரிவிக்காமல், அவனை யிங்கே கூட்டிக்கொண்டு வரவேண்டும். அவ்வளவு தயவு செய்யவேண்டும். ஏனென்றால் அப்பொழுதுதான் யதார்த்தம் விளங்கும்."

பரமானந்தர்.—"அது எனக்குத் தெரியாதா? அப்படியே அழைத்து வருகிறேன்" என்று சொல்லி அவசரமாக எழுந்துபோய்விட்டார்.

---

## 19-வது அத்தியாயம்

### சந்தேக நிவர்த்தி

சாயங்காலவேளை சுமார் ஐந்து மணியாகும் சமையத்தில் ஜனங்கள் அநேகமாய்த் தங்கள் வேலைகளை முடித்து விட்டுத் தங்களுடைய வீடுகளுக்கு, அதிக அவசியமான பதார்த்தங்களை வாங்கும்படி, கடைத்தெருப்பக்கமாக இங்கும் அங்கும் போய்க்கொண்டிருந்தபடியால், கடைத்தெரு வழியாய் அந்த வேளையில் வண்டிகள் போய் வருவது மிகவும் பிரயாசையாயிருந்தது. அந்தச் சமயத்தில் நம்முடைய பரமானந்தரும், சங்கரனும் கடைத்தெருவை, மிகுந்த ஜன நெருக்கத்தால், கஷ்டத்துடன் கடந்து அடுத்த மேற்குப்பக்கமாய் வரவும், பரமானந்தர் சங்கரனை நோக்கி, "சங்கரா, இதோ எதிரில் தெரிகிற வீட்டில் நமது நண்பர் ஒருவர் இருக்கிறார். அவரிடத்தில்

அத்தியாவசியமான சங்கதியொன்று சொல்லிவிட்டு, வேண்டு மானல் அவரையும் கூட அழைத்துக்கொண்டு போய்த் தாயு மான சுவாமியைத் தரிசித்துவிட்டு வரலாம்," என்றார். சங் கரன் அதற்குடன்பட்டு, "சுவாமி, தங்களிஷ்டப்பிரகாரம் எதுவும் செய்யத் தயாராயிருக்கிறேன்," என்றான். குறிப் பிட்ட வீட்டு வாயிலண்டை வரவும், "ஐயா, ஐயா" என்று வீட்டுள் இருந்தவரைப் பரமானந்தர் கூப்பிட்டார். அந்தச் சமயம் வீட்டுள் உட்கார்ந்து ஊருக்கு ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்த அந்த நண்பர், கடிதம் வரைவதை யப்படியே நிறுத்திவிட்டு அவசரமாக எழுந்து, "சுவாமி இதோ வந்து விட்டேன்," என்று பதிலுத்தரம் கொடுத்தார். உடனே பர மானந்தரும், சங்கரனும் அந்த வீட்டு வெளித்திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

சங்கரனுக்குப் பரமானந்தருடைய நண்பர் யாரோ? அவர் எப்படிப்பட்டவரோ? என்று யோசனை பிறந்து, "குரலைக் கவ னித்தால், சற்றுக் கம்மலாகக் கேட்கிறது. பேச்சின் நடை யைக் கவனிக்கும்போது, நாம் இதற்கு முன் பார்த்திருக்கக் கூடியவரின் நடையாகத் தோற்றுகிறது, ஆனால் திட்டமாக இன்னார்தானென்று சொல்ல முடியவில்லை. எதற்கும் வெளியே வந்தவுடன் பார்த்துக் கொள்ளுவோம்" என்று அவனுடன் மவுனத்தோடு, பரமானந்தருக்குச் சற்று தூரத்தில் உட் கார்ந்திருந்தான். இராமலிங்கம் செட்டியார் வெளியே வரவும், சங்கரனுக்கு உண்டாகிய ஆச்சரியத்துக்கு அள வில்லை. திகிலடைந்து நின்றான். மனம் படபடெனத் துடித்தது. இவ்வளவு குழப்ப ஸ்திதியிலிருப்பினும், மனத் தின்கண் கள்ளங்கபடு அற்றவனாதலால், அம்மானைத் தாழ்ந்த குரலில் வணங்கி, அவர் களிப்புடன் ஆசி கூறக்கேட்டு மகிழ்ந்து

கீழே உட்கார்ந்தான். இராமலிங்கம் செட்டியாரோ, பளிங்கை யும் பழிக்கும்படியான களங்கமற்ற ஒருவனை, அவனுடைய குணங்கள் முழுதும் யோசித்து உண்மையுணராமல், தமக்குச் சம்பந்த மில்லாத யார் யாரோ செப்பியதைக் கேட்டு, அவன் மீது தப்பெண்ணங் கொண்டவராதலின், சங்கரனைக் கண்ட வுடன், சிறிது நாணமுற்றவரா யிருந்தார். ஆனபோதிலும், வெகுநாளாகத் தம்மைவிட்டகன்ற சொந்தப் புதல்வனைக் கண் டாங்கு சந்தோஷமடைந்திருந்தார்.

பரமானந்தர்.—(சங்கரனைப் பார்த்து,) "சங்கரா, உன்னம்மா னுகிய நமது நண்பர், இங்குள்ள புண்ணிய ஸ்தலங்களைக் கண்டு தரிசித்துப்போக வந்திருக்கிறார். வந்தவிடத்தில் நீயும் அவரைத் தற்செயலாய்க் காணக்கிடைத்தது சந் தோஷமல்லவோ?"

சங்கரன்.—"ஏன் இருக்கமாட்டாது, சுவாமி?"

பரமானந்தர்.—"சங்கரா, அஃதிருக்கட்டும். நீ கொஞ்ச நாட் களுக்கு முன், மதுரையிலிருக்கும் "லீலா" வுக்கு ஒரு கடிதம் எழுதினையாமே, அவள் யார்? அவள்மீது அள வற்ற அன்பு பாராட்டி நீ கடிதம் எழுதினது எதற் காக? இதையெல்லாம் எங்களுக்குச் சவிஸ்தாரமாய் உரைப்பாயாக."

சங்கரன்.—(அப்பொழுதே கண்களில் நீர் பெருக) "சுவாமி, நான் மதுரையில் வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒருதினம் மாலைக்காலத்தில், நானும், என் நண்பரிற் சிலருமாக, நம்முடைய மடத்தின் மேல்மெத்தையினின் றும் உலகத்திற் பல பாகங்களினுமுள்ள நாகரீக விஷய மாய் வெகுநேரம் வரையில் சம்பாஷித்துக்கொண்டிருந் தோம். அப்படியிருக்கும்போது, வடதேசங்களிலிருந்து

வந்த நம்மவராகிய சாமியார் ஒருவர் தம்முடன் ஒரு சிறு பெண் குழந்தையையும் கூட்டிக்கொண்டு வந்திருந்தார். நாங்கள், அந்தக் குழந்தை யாருடையது? என்று கேட்க, அவர் சந்தோஷமாக அவருடைய விருத்தாந்தத்தைப் பின்வருகிறபடி சொல்லிக்கொண்டு வந்தார்.

“நான் பிறந்து வளர்ந்தவூர் மைசூர். என்னுடைய குலம் தேவாங்கர்குலம். என் பெற்றோர் என்னைச் சிறுவயதிலேயே, இந்த உலகத்தில் ஒருவனாக இருந்து தத்தளிக்கும்படி விட்டுவிட்டு, இவ்வுலகத்தைத் துறந்தார்கள். ஆகையினாலே ஆதரிப்பாரின்றி பாலியமுதல் பலவிதத் துன்பத்துக்கும் ஆளாகி, இவ்வுலக வாஞ்சையை வெறுத்துச் சந்நியாசமடைந்தேன். என்னுடைய ஆசிரம தருமத்துக்கியைந்தபடி ஊரூராய் பிக்ஷை பண்ணிக்கொண்டு ஜகந்நாதம் போய்த் திரும்பி வருகையில், ஒருநாளிரவு ஒரு குக்கிராமத்தில் தங்க நேரிட்டது. நான் இருந்த மடத்தில் இந்தக் குழந்தை என்னருகில் வெகு நேரமாக நின்றுகொண்டிருந்தமையால், அதைக் கவனித்து “இது யாருடைய குழந்தை? வெகு நேரமாய் இங்கேயே நிற்கிறதே! யாரும் தேடிவரக்காணோமே,” என, என்னருகில் இருந்தவர்களைக் கேட்க, அவர்கள் சொன்னதாவது, “இது தேவல மாபில் வந்த குழந்தை. இதன் பெற்றோர்கள் சுமார் மூன்று வாரத்துக்கு முன்புதான் விஷஜ்வரத்தால் இறந்துபோயினர். அவர்களுடைய கைவசமிருந்த பொருளனைத்தையும், தன் கைவசப்படுத்திக்கொண்ட தாயாதிக்காரன் ஒருவன் இந்தப் பெண்குழந்தையை இந்த ஸ்திதியில் விட்டிருக்கிறான். தன்னை ஆதரிப்பார் ஆருமின்றி இது பாதவித்துக்கொண்டு திரிகிறது,” என்றார்கள்.

“நானும் ஜாதியில் தேவாங்கனானபடியினாலே, சுய

ஜாதியின்மீது அபிமானம் வைத்தும், நானும் என் சிறு பிராயத்தில் பெற்றோரை யிழந்து பலவிதமான கஷ்டங்களை அநுபவித்தவனாதலால், இக்குழந்தையின்மீது இரக்கம் வைத்தும், இதை என் குழந்தையாகவே பாவித்து, சென்ற இரண்டு மூன்று வருடங்களாக, என்னாலியன்ற அளவு அன்ன வஸ்திரம் கொடுத்துவருகிறேன். இவ்வுலகத்தை வெறுத்துச் சந்நியாசங் கொண்ட எனக்கு, இந்தக் குழந்தையைக் காப்பாற்றுங் கவலை, அல்லும் பகலும் என் மனதுட் குடிகொண்டது. ஆகையினாலே, இதைக் குறைவறக் காப்பாற்றி யாதரிக்கும்படியான புண்ணியவான்கள் கிடைத்தால், இதை யவர்களிடம் விட்டுவிடக் கருதியிருக்கிறேன். உங்களைப் பார்க்குங்காலத்தில் தகுந்த சீமான் வீட்டுக் குழந்தைகளாகத் தோற்றுகிறீர்கள். நீங்கள் இந்த ஏழைக் குழந்தைமீது கிருபை வைத்து, அதை முன்னுக்குக் கொண்டு வரும்படியான ஒரு வழியைத் தேடி என் கவலையைக் களைவீர்களானால், உங்களுக்கு மேலான நன்மையுண்டு," என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

உடனே நாங்கள் நாலு பெயர்களும், அவருடைய சொல்லுக்கு இணங்கினவர்களாய் மாதாமாதம் அந்தக் குழந்தை விஷயமாய், ஆளுக்கு இரண்டு ரூபாய் வீதம் செலவழிப்பதாக உடன்படிக்கை பண்ணிக்கொண்டு, அந்தப் பெண்குழந்தையை ஒப்புக்கொண்டு, மடத்தில் தானே அதற்குச் சாப்பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்துவைத்து, அந்தப் பெண்மணியை அங்குள்ள அமெரிக்கன் மிஷன் பெண் கலாசாலையில் படிக்க வைத்து வருகிறோம். இப்பொழுது அது ஐந்தாவது பரீக்ஷை கொடுத்திருக்கிறது. நான் சென்னைக்குப் போன பிறகு எனக்கு நேர்ந்த பல சங்கடத்தின் நிமித்தமாக, இரண்டொரு

மாதமாய் ரூபாய் அனுப்பவில்லை. அதன் காரணமாக இந்தக் கடிதம் அவளுக்கு எழுதலாயினேன். அதற்குப் பிற்பாடு, இராமேஸ்வரம் போயிருந்த அந்தச் சன்னியாசி யிடமிருந்து யாதொரு கடிதப் போக்குவரவும் கிடையாது. தம்மைப் பிடித்த பாரம் நீங்கியது என்று கவலையற்றிருக்கிறார் போலும்!" என்று சொல்லி முடித்தான்.

இதனைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு வந்த பரமானந்தரும், இராமலிங்கம் செட்டியாரும், சங்கரனுடைய பரோபகாரச் சிந்தைக்கும், தயாள குணத்துக்கும் அவனை வியந்து, ஆனந்த மேலீட்டால் பரவசமடைந்து இருந்தனர். ஆனால் இந்தப் பரிதாபமான சரித்திரத்தைக் கேட்டு, பரமானந்தருக்கு அடிக்கடி ஆனந்த பாஷ்பம் பொழியாநின்றது. பரோபகாரமே முதற்கடமை யென எண்ணி அதை நிறைவேற்றும் மார்க்கத்தையே முக்கிய தொழிலாகவுடைய பரமானந்தரைப் போன்றவர்களுக்குப் பிறர் செய்த பரோபகாரச் செயல்களைக் கேட்குந்தோறும், சந்தோஷம் உண்டாவது சகஜமல்லவா?

இராமலிங்கம்.—"நீ சென்னையில் இருக்குங்காலத்தில் உன்னுடைய தோழருடன் கூடிக் கடற்கரைக்குப் போயுலாவி வருவதுண்டோ?" "ஆம்" என்று சங்கரன் உடனே மறுமொழி யுரைத்தானேனும், தன்னுடைய அம்மான், எது நிமித்தமாக இந்தக் கேள்வி கேட்கிறார் என்று முதலில் திகைத்துக்கொண்டிருந்தான். ஆனாலும் இதைப்போன்ற சந்தேகம் அதிலும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்து, "பகற்காலங்களில் படிப்பு முடிந்தபின், என்னினை பிரியாத் தோழனும், துணைவனுமான, கோபாலனும், நானும், களைப்பாறுவதற்காகவும், சரீர ஆரோக்கியத்திற்காகவும், பிரதிதினமும் சாயங்கால வேளையில்

கடற்கரைக்குப் போய் வருவதுண்டு. சில வேளைகளில், எனக்குத் தாதாவாயிருந்து அநேக விதங்களில் உதவி புரிந்துவரும் ம-ா-ா-ஸ்ரீ, ஜெகந்நாதம் செட்டியார் அவர்கள் புத்திரிகளும் கூடவருவார்கள். கோபாலனுக்கு என்கூட வரமுடியாத தினங்களிலுங்கூட, சகோதர வாஞ்சை மிகுந்த அந்த ஸ்திரீரத்னங்கள், "எங்களை இன்று கடற்கரைக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்று விரும்பினால், அவர்களையும், அன்னவர்கள் கருத்தின்படியே அழைத்துக்கொண்டு போய் ஆங்காங்குள்ள பல விசேஷங்களையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்கள் மனமகிழச்செய்து பிற்பாடு வீட்டுக்கு இட்டுக்கொண்டு வருவேன்" என்று சங்கரன் சொன்னான்.

இராமலிங்கம் செட்டியார் (பரமானந்தரைப் பார்த்து), "சுவாமி, எதையும் தேர விசாரித்த பின்னரே தீர்மானஞ் செய்யவேண்டும்" என்பதனை, நான் இன்றுதான் கரதலாமலகமாய்க் கண்டறிந்தேன் என்று சொல்லிவிட்டுச் சங்கரன் பக்கந் திரும்பி, "அப்பா, சில வஞ்சகர்களின் பேச்சில் நம்பிக்கை வைத்து, அணுவளவும் களங்கமில்லாத உன்மீது சந்தேகப்பட்ட என் மூடத்தனத்துக்கு என்னை மன்னிக்கவும்," எனக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

இந்தத்தருவாயில் சுப்பிரமணியனுடைய வேலைக்காரர்களில் ஒருவன் சங்கரனைத் தேடி வந்து அவன் கையில் ஒரு தந்திக் கடிதத்தைக் கொடுத்தான். சங்கரன் அதனைப் பிரித்து வாசிக்கும்பொழுது அவனுடைய முகமலர்ச்சியைக் கண்ட பரமாநந்தரும், இராமலிங்கம் செட்டியாரும், அதில் ஏதோ சந்தோஷ சமாசாரம் இருக்கவேண்டுமென்று மதித்தார்கள். அது ஜெகந்நாதம் செட்டியாரால் அனுப்பப்பட்டது. அதில்

கோபாலனுக்கும், சங்காரனுக்கும் பரீக்ஷை தேறியிருக்கிறது என்று வரையப்பட்டிருந்தது. இதைக் கேட்ட மற்ற இருவரும் அடங்கா மகிழ்ச்சி பூத்து விளங்கினார்கள். சங்காரனுக்கு ஆவணி மாதம் கட்டாயம் கலியாண முடிக்கவேண்டும் என்றும், அது விஷயமாய் சகல காரியங்களையும் பரமானந்தரே வந்திருந்து சம்பிரமமாய் முடிக்கவேண்டுமென்றும், இராமலிங்கம் செட்டியார் கூறினார்.

பரமானந்தர்.—"அதற்கென்ன தடை? உங்களுடைய இஷ்டப்படிக்கு நானே வந்திருந்து சங்காரனுடைய கலியாண மகோற்சவத்தை நடத்திவைக்கிறேன்" எனச் சந்தோஷமாக வாக்களித்தனர். பிற்பாடு மூவரும் பரமானந்தருடைய அபிப்பிராயப்படி தாயுமானவர் சுவாமி ஆலயத்துக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து, அளவிறந்த சந்துஷ்டியுடன் அவரவர் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

---

## 20-வது அத்தியாயம்

### கலியாணம்

அருப்புக்கோட்டையில் இராமலிங்கம் செட்டியார் இப்பொழுது தமது அருமை மருமகனும், இனிமேல் அபிமான புத்திரனுமாகப் போகிற சங்காரனுடைய கலியாணத்துக்கு வேண்டிய சகல சாமான்களையும் சேகரிக்கலானார். இதற்கு முன் முத்துக்காமாக்ஷியை மதுரைவாசியான இராமசாமிக்கு நிச்சயித்திருந்த காலத்திற்கூட இவருக்கு இவ்வளவு உற்சாகமும் ஊக்கமும் கிடையாதென்று கண்டோர் யாவரும் துணிவுடன் அவர் முன்பாக உரைக்கத்தக்கதாக அவ்வளவு மும்முரமான வேலைகள் பார்த்துவருகிறார். ஏன் பார்க்கமாட்

டார்? ஒருவர் வெகுநாளாய்க் கொண்ட எண்ணம் அவர் மனப் படியே நிகழவிருக்கையில், அவர் மகிழ்ச்சியுறுவது ஆச்சரிய மல்ல. அதுபோல இராமலிங்கம் செட்டியார் விஷயத்திலும், அடங்கா மகிழ்ச்சியும் குதூகலமும் இறைப்பொழுதேனும் அவரை விட்டு நீங்காதிருந்து வருகிறது. இவர் மாத்திரமோ? பொதுவாக இவ்வூரார் அனைவருக்கும் இப்போது நடக்கப் போகிற விவாக காரியத்தில் சந்தோஷமும் உற்சாகமும் உண்டா யிருந்தன. இதனினும் மேலாக, சங்கரன் வீட்டில் பண்ணைத் தொழிலுக்கு அமர்ந்திருக்கிற வீரனுக்கு உண்டாயிருக்கிற ஆனந்தத்துக்கு அளவேது? அவனுடைய அட்டகாசமே, அட்டகாசம். இவனுடைய சொந்த மைந்தன் கலியாண காலத் திலும்கூட இவனுக்கு இவ்வளவு உற்சாக உற்சாகம் ஏற்பட மாட்டாது. ஆகவே, கலியாணத்துக்கு ஆகவேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றையும், தானே நேரிற் பார்த்தும், செய்தும், ஏவியும் வருகிருன். இந்தக் கலியாணவிஷயத்தில் இயற்கையாய் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேண்டிய இந்த இருவர் அல்லாமலும், பர மானந்த சுவாமிகளும், இராமலிங்கம் செட்டியாருடைய வேண்டு கோளுக்கு இணங்கி, தாம் பூசை பண்ணுகிற காலங்கள் தவிர, மற்ற நேரத்தை யெல்லாம் இவர்களுடன் சேர்ந்து, சகல கா ரியங்களும் ஒழுங்காய் நடந்து வருகின்றனவா என்று பார்ப் பதிற் செலவு செய்து, ஒவ்வொன்றும் தமக்கு மனத்திருப்தி யாக நடந்து வருவதைக்கண்டு, அந்தரங்கமாய், ஆனந்தக்கட லில் மூழ்கி, உடலம் பொங்கிப் பூரித்து வருகிருர்.

பிலவங்க வருடம் ஆவணிமாதம் இருபத்துமூன்ரும் தேதி புதன்கிழமை விவாக முகூர்த்தம் நடக்கவேண்டியதிருப்ப தால், அதற்கு இன்னும் மூன்று தினங்கள் தாமிருக்கின்றன. எல்லாம் தயாராகிவிட்டது. அயலூர்களிலிருந்து சுற்றத்தா

களும், நண்பர்களும் கும்பல் கும்பலாய்த் திரண்டுவந்து இறங்கியவண்ணமாகவே இருக்கிறார்கள். தெருமுழுவதும், மகா தோரணங்களும், பூம்பந்தல்களுமாக விருக்கின்றன. கலியாணத்துக்கு ஐந்து நாளைக்கு முன்பதாகவே எல்லா வருணத்தார்களுக்கும் அன்னதானம் நடந்துவருகிறது. நாள் ஒன்றுக்கு சுமார் ஆயிரம் பேர் வரையில் அன்னம் புசித்து வருகிறார்கள். இதன்றியும், சாஸ்திர விற்பன்னர்களும், பிராமணோத்தமர்களும், இதர வருணத்தைச் சேர்ந்தவர்களும், வாலிபர் முதல் வயதுசென்றவர் வரையில் யாவரும் வந்திருக்கிறார்கள். தரித்திரமென்னும் நோயினாற்பீடிக்கப்பட்டு மிகவும் வருந்தாநிற்கும் பரம ஏழைகளும், தங்களுடைய துன்பத்தை யொழிக்க இதுவே ஏற்றவிடமெனக் கருதி வந்து வயிறார வுண்டு களித்து, அரிய பெரிய தானங்களும் பூரிகளும் பெற்றுத் தம்பதிகளையும் இராமலிங்கம் செட்டியாரையும் அன்புடன் வாழ்த்தி அவரவர் வீடுநோக்கிச் செல்லுகிறார்கள்.

கலியாண தினத்தன்று காலை சுபமுகூர்த்தவேளையில் ஊர்த்தலைவர்களும், மற்றப் பெரியோர்களும் வந்திருந்து மேளம் தாம்தாமென்று முழங்க, மிகுந்த ஆடம்பரத்துடன் முகூர்த்தக்கால் நாட்டினார்கள். பிறகு மாப்பிள்ளையான சங்கரனுக்கு சௌளம் செய்துவித்துப் புதுவஸ்திரம் தரிப்பித்தபின், கங்கணதாரணம் பண்ணுவித்தார்கள். அதற்குப் பிறகு சிறந்த வாத்திய கோஷ்டியுடன் பிள்ளையார் கோவிலுக்குப்போய்த் தெய்வம் வாழ்த்தித் தேங்காயுடைத்துத் திரும்பினதும், குல தெய்வம் போற்றும் சாஸ்திரம் குறைவற முடித்தனர். பிற்பாடு மாங்கல்யதாரணம் செய்யவேண்டியகாலம் சமீபிக்கவும், பெண் வீட்டுக்குப் புறப்பட்டான். கலியாணவீட்டுத் தலைவாசலில் விளங்கும் முக்காலியி லேறிநிற்க, மாமியானவள், பால்கொண்டு

கால்கழுவிப், பட்டால் ஈரந்துடைத்து. கால்விரல் அழகு மிஞ்சித் துலங்க மிஞ்சியணிந்து உபசரித்தாள். ஏனைய மாமி யார்கள் ஆர்த்தியெடுக்க, அவர்களுக்கும் தக்க மரியாதை புரிந்து, உள்ளே கொட்டகையில், தன்னண்பர்கள் புடை சூழ்ந்துவா வுட்புகுந்தான். அங்கே சிறப்பாய், வாழை, கமுகு, கூந்தற்பனை, மாந்தோரணம், மகரதோரணம, பரிமளங்கமழும் நறுமலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டத் திருமணவறையின் மீது பரப்பியிருக்கும் சித்திரப் பட்டுப்பாயில் சங்கரன் கம் பீரமாய் வீற்றிருந்தான். அடுத்தாற்போல், கோபாலன் முத லிய சிநேகிதர்களும் இருக்கிறார்கள். பெண்ணையும் அலங் கரித்துக் கூட்டிவந்தார்கள்.

வம்சகுரு, புரோகிதர்கள், வேத முழக்கத்துடன் ஓமம் வளர்த்து, பின் நெற்கோட்டையிலிருந்து, மணமகனுக்கும் மணமகளுக்கும் வாத்திய முழங்க, நெற்றியில் பட்டம் திகழக் கட்டினார்கள். மாங்கல்யதாரணம் செய்யும் சுபவேளை வரவும், சூரிய சந்திரர் அரசாணியறிய, "சங்கரன்," தனது இடப் பாகத்தில் வீற்றிருக்கும், "முத்துக்காமாக்ஷி யம்மாளின்" கழுத்தில் மணமாலையுடன், திருமாங்கில்யமும் சூட்டினான். வாத்தியவொலியும், பேரிகை முழக்கமும், கடலினைச்சலையும், இடியோசையையும் பின்னிடச்செய்தன. குரு, புரோகிதர், ஊர்த்தலைவர், இதர பெரியோர், மற்ற எல்லா ஜனங்களும் ஒன்றுசேர்ந்து ஒருங்கே, "தம்பதிகள் நீடூழி வாழ்க," என வாழ்த்தி ஆசீர்வதித்தார்கள். இவர்களையெல்லாம் பார்க்கிலும், பரமானந்த யோகீஸ்வரர், கடவுளர்தம் அடிமலர் பணிந்து, ஆனந்தபாஷ்பம் இருகண்களிலும் பெருக, மணமக்கள் இருவ ருக்கும், நெற்றியில் விபூதியணிந்து, மனமார்ந்த ஆசிகூறினார். வந்த ஜனங்கள் யாவருக்கும் முறைபிறழாமல் ஒழுங்காய் சந்த

னம், தாம்பூலம் முதலானவைகள் எதேஷ்டமாக அளிக்கப்பட்டன. பூரிதக்ஷிணைகளும் திருப்திகரமாய்க் கொடுக்கப்பட்டன. முடிவில், தம்பதிகள் பெரியோர்களின் பூர்ண ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டபின், சங்கரன் மணமகளை கைப்பிடித்த வண்ணமாய், திருவிளக்கு முன்னர் பணிந்தெழுந்து பிரிந்தனர்.

அன்றிரவு போஜனமானபின், கொட்டகையிற் பெரிய ஜமுக்காளங்களும், பந்திப்பாய்களும், இரத்தினக் கம்பளங்களும் அலங்காரமாய் விரிக்கப்பட்டிருந்தன. சரலாந்தர், குளோப்பு, பவர்லயிட்டு, வால்சேட்டு முதலியவைகள் பல வர்ணங்களிலும் பிரகாசித்துக்கொண்டிருக்க, இந்திரசபைக்குச் சமானமாய் விளங்கிக்கொண்டிருந்தது. பாட்டுக்கச்சேரி, சதுர்க்கச்சேரி, கதாப்பிரசங்கங்கள் முறையே விவாகச் சடங்குகள் நடத்தும் ஐந்து தினங்களிலும் நடத்திவரப்பட்டன. எவர் எவர்களுக்கு, எவைகளின்மேற் பிரியமோ, அவைகளைக் கேட்டும் கண்டும் ஆனந்தித்து வருகிறார்கள். செலவு செய்யப்படும் பன்னீர், சந்தனம், வெற்றிலைப்பாக்குகளுக்கு அளவில்லை. கலியாணவீட்டுக்கு வந்தவர்கள் எல்லாரும் "இஃதென்ன கோலாகலம்! என்ன ஆடம்பரம்! என்ன செலவு! என்ன சாப்பாடு! கணக்காய் தேவாமிர்தம் போல் இருந்தது" என்பாரும்; இம்மாதிரி "தளிர் வெற்றிலையும், மைப்போன்ற சுண்ணாம்பும், பலவகை நேர்த்தியான பாக்கும், எல்லாருக்கும் வித்தியாசமின்றி அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்களே" என சொல்வார் சிலரும்; "இப்படி வேறொருவரால் செலவிட முடியுமா? ஒருக்காலும் முடியாது. இது தான் போகட்டும், வந்தவர்களுக்கு எல்லாம் பன்னீராலும் சந்தனத்தாலும் அபிஷேகம்பண்ணி வைக்கிறார்களே! எவ்வளவு பன்னீர் இதற்கு வரவழைத் திருக்கமாட்டார்கள்!

எவ்வளவு சந்தனம் அரைத்து வைத்திருக்கமாட்டார்கள்! ஓய்வு ஒழிச்சல் உண்டோ." என்பார் இன்னும் சிலர். இந்த மாதிரி வைபவத்தை எந்தவிடத்திலும் கண்டிருக்கவும் மாட்டோம், கேள்விப்பட்டிருக்கவும் மாட்டோம், இனிமேலும் இதைப்போல வேறெங்கும் நடக்கவும் மாட்டாது. ஜென்மா ஜென்மங்களிலும் இப்படி நடந்திராது," என்றனர் மற்றும் சிலர். எங்கே பார்த்தாலும் செட்டியாரின் பிரபாவமே யாவருடைய வாயினின்றும் வெளிப்போந்த வண்ணமாயிருந்தது. அன்றிரவு ஒன்பது மணிக்குமேல், இவ்வூரில் பாட்டுப் பாடுவதிலும், நாட்டியஞ் செய்வதிலும், பேர்போன தாசியாகிய "கமலா" என்பவளின் சதுர்க்கச்சேரி யாரம்பித்தது. இந்த சதுர்க்கச்சேரியில் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்டவன் நம்முடைய இராமசாமியே.

"முத்துக்காமாக்ஷியை பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே" என்று கவலைகொண்டிருந்த இராமசாமிக்கு இந்தக் கலியாண மஹோற்சவத்தைப் பார்த்துப்பார்த்து அவன் மனம் எரிந்து சாம்பலாயிற்று. அடிக்கடி தனியேயிருந்து வருந்தி வருந்திக் கண்ணீரும் வடிப்பான்.

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தானினைந்து
துஞ்சுவது மாந்தர் தொழில்"

என்னும் நீதி வாக்கியத்தை அநுசரித்துத் தவித்துப் பரிதவிக்கலானான்; முத்துக்காமாக்ஷி சர்வாபரணாலங்கிருதத்தோடும் மணமகளாக மணவறைமுன் தோன்றிய அளவில்

இவன் அடைந்த பரிதாபத்திற்கும் எல்லையுண்டோ ! கைக் கெட்டினது வாய்க்கெட்டாமற் போயிற்றே ! வழியில் திருடர் கையில் அகப்படாதிருந்தால், அழகில் மிகுந்த முத்துக் காமாக்ஷியை நான் அடைந்து எவ்வளவு காலமாயிருக்கும் ! உலகத்தில் ஒருவன் விரும்புகிறபடி யொன்றும் வாய்க்கிற தில்லையே ! மிகவும் விருபமாயிருக்கிற ஒரு அங்கவீனனுக்கு இரதியையும் பழிக்கும்படியான ஒரு ஏந்திழை மாலை சூட்டு கிருள். எல்லா லக்ஷணங்களும் ஒருங்கே வாய்ந்த ஒரு ஆட வனுக்கும், பார்த்தவுடன் வெறுக்கத்தக்க அவலக்ஷணம் பொருந்திய ஒரு பெண்ணுருவம் வாய்க்கின்றது. ஆணிலும் பெண்ணிலும், சகல லக்ஷணங்களும், குணங்களும் பொருந் திய சதிபதிகளாயிருப்பது இலக்ஷத்திலும் ஒன்று இருக் குமோ என்று நினைக்க எண்ணமோடுகிறது. பூர்வ புண் ணிய முடையோருக்கே, இத்தகைய பெண்மணி எளிதில் வாய்ப்பாள். இவள் கைப்பற்றுதற்கு நான் எவ்வளவு பிர யாசை எடுத்தேன் ! சங்கரன் இது விஷயத்தில் கொஞ்சமே னும் பிரயாசை யெடுத்திருப்பானு ? இல்லையே. அப்படியிருந் தும் முத்துக்காமாக்ஷி அவனை வலிய மணந்தனளே. ஆகவே, சங்கரன் கொடுத்துவைத்தவன்தான்—யோகசாலி. அப்படி இருந்திராவிட்டால், அவள் அவன்மீது இளம்பிராயமா யிருக் கும்பொழுதே, காதல்கொள்ளுவாளா ? ஆனல் இப்பொழுது இதுவிஷயத்தில் நான் ஏன் இவ்வளவு கவலைப்பட வேண்டும் ? “நான் பாக்யஞ்செய்யவில்லை” யென்றெண்ணி சும்மா இருந்து விடக்கூடாதோவெனின், இருக்கலாம். ஆனல், இந்த முத் துக்காமாக்ஷியை எனக்குப் பேசிமுடிக்காமல் இருந்து, சங்கர னுக்கே அவளைக் கலியாணம்பண்ணிக் கொடுத்துவிட்டாலும்,

பாதகமில்லாமற் போகுமே. அவ்விதமின்றி, நான் நிச்சயமாய் முத்துக்காமாக்ஷியின் புருஷனுய் விட்டேன் என்று ஸ்திரமா யிருக்க, இப்படியாயிற்றே! “காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டுபோனுன். அறைகாத்தான், பெண்டிழந்தான்” என்னும் பழமொழிகள் எனக்காக ஏற்பட்டனபோல ஆய்விட்டதே! மணமாலை சூட்டுந்தறுவாயில், முத்துக்காமாக்ஷியின் சுந்தரத்தைப் பூரணமாய்க் கண்ணுற்ற வர்கள், அவள்மீது அணுவளவாகிலும் இச்சை வைககா திருப்பார்களோ? இருக்க மாட்டார்களே, (சற்று நேரம் பொறுத்து) உம், இதெல்லாம் ஏன் சொல்லுகிறேன்? சொல்லித் தான் ஆவதென்ன? ஆனல் சொல்லாமலும் இருக்க முடிய வில்லை. நான் அந்தப் புண்ணியஞ் செய்திருந்தால், அவள் எனக்குக் கிடைத்திருக்க மாட்டாளா? உம், இப்பொழுதுதான் என்ன மோசம் போனது! என்னை வெறுத்து விலக்கிய முத்துக் காமாக்ஷியை, நான் இலகுவில் விடப்போகிறேனு? என்று மனதில் அவன் வர்மம் வைத்துக்கொள்ள, அது மனதினுள் அடங்காது வெளிவருதல் போல பெருமூச்செறிவான். இப் படி யிருக்க,

தாலிகட்டிய மறுநாள் சதுர்க்கச்சேரி நடந்தது. அது முதல், இராமசாமியின் மனம் வேருெரு வழியில் திரும்பினது. எப்படியென்ருல் சதுர் நடத்திய கமலாபேரில் இவனுடைய மனம் நாடி நின்றது. ஆகவே சற்று நேரத்தில் தன்னெண்ணம் அவள்மீது படியவும், “கமலா, கமலா,” என்ன திவ்ய மான நாமம்! இப்பெயர் உனக்கே தகும். உன்னுடைய சுந்தர சொரூபமும், இனிமையான கானமும், புன்முறுவலும், பாட்டுக்கிசைந்த நடனமும், பார்க்கப்பார்க்கப் பதினுயிரம் கண்கள்

வேண்டுமே! நடனமத்தியில், அப்படியே எடுத்துப் பருகுவது போல், கடைக்கண்ணால் அடிக்கடி நீ என்னைப் பார்த்த பார்வை நினைக்குந்தோறும் என்னுள்ளத்தை உருக்குதடி, எந்நும் பொழுதே என்னிதயத்துக்கு இன்பங்கொடுத்து ஆனந்திப் பிக்கும் கோமளமே! நீ இருப்பது இவ்வூர்தானே? என்று தானாகச் சில வேளைகளிற் புலம்பிக்கொண்டிருப்பான். ஆனால் இந்த உத்தேசத்தை இவன் சற்றே வெளியிட வேண்டியது தான் தாமதம். இவன் குறையை முடிப்பதற்குச் சமீபத்தில் இருக்கிறார் நாராயண பிள்ளை. இராமசாமி யென்ன வுரைத்த போதிலும் கேட்டு அதின்படி நடந்து, இவனிடம்பொருள்பறிக் கக் காத்திருப்பவர்களில் அதிகம் பேர்போன பேர்வழி இவர். ஆகவே இராமசாமிக்குக் கமலாபேரில் ஆசையுண்டாயிருக்கிற தென்று கண்ஜாடையாய்க் கண்ட நாராயண பிள்ளை, தனக்குச் சமையம் வாய்த்தபோதெல்லாம், அவளுடைய நடனத்தின் பெருமைகளை இராமசாமியிடம் சொல்ல வாரம்பித்துவிட் டார். எப்படியும் இராமசாமியை அவளுடைய மயக்கவலையில் குப்புற வீழ்த்திப் பொருள் சம்பாதிக்கும் மார்க்கத்தில் அதிகம் சிரத்தை வைத்துக்கொண்டார்.

---

## 21-வது அத்தியாயம்

### கமலா

இந்தப் பிரபஞ்சமும், அதின்கண்ணுள்ள எல்லாப் பொருள்களும், மாயா சக்தியினால் மாந்தர் மனதைக் கொள்ளை கொண்டு, அவர் தம்மிடத்துக் கொண்ட பிரியத்தால், தம்மை யெப்பொழுதும் விட்டகலாதிருக்கும்படி, அவருடைய மன

த்தை வசீகரித்துக்கொண்டிருக்கின்றன என்பதை யாவரும் அறிவர். அவைகளில் அதிமுக்கியமானவை, பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை ஆகிய ஈஷண திரவியங்களாகின்றன. இவைகளிலும் அதிக விசேஷமான பெண்ணாசையாற் கட்டுண்டு ஈடழியாதிருப்பவர் நிரம்ப அருமை. ஆகவே பெரும்பாலார், இந்தக் கொடிய பெண்ணாசை காரணமாக எஞ்சிய இரண்டாசைகளைத் துறப்பினும் துறப்பர். இதனிலும் மிகக் கொடியதாயும், இதற்கு மேற்பட்ட கொடுமை செய்யத்தக்கது வேறொன்றுமில்லை என்று சொல்லத்தக்கதாகவும் அமைந்திருக்கிறார்கள், கணிகை மாதர்கள். இது எதுபோல் இருக்கிறதென்னில், ஏற்கனவே மாயை என்னும் இருளிற் சிக்கிய வொருவன், பெண்கள் என்னும் அமாவாசையிருள், தன்னைச் சூழ்ந்திருக்க, அதிலும் மழைக்காலிருட்டான விலைமாதருடைய வலையிற் சிக்கி, தான் கிரமமாகச் செல்லவேண்டிய பாதை விட்டுவிலகி, அங்கும் இங்கும் அலைந்து நிலைகெட்டுத் தடுமாறி சுத்தக் குருடனைப்போல் மதிமயங்கி வழிதெரியாமல் திண்டாடுவான் என்பதிற் சிறிதேனும் ஐயமுளதோ? அப்படியிருக்க, தம்மைப் பார்த்தமாத்திரத்தில், தம்முடைய கண்வலை வீசி மயக்கித் தம் வசப்படுத்தி, எப்பேர்ப்பட்டவர்களையும் ஏவல் கொள்ளும் திறமைவாய்ந்த பொதுமகளிரின் சாமார்த்தியத்தை என்ன சொல்வது? காட்டகத்தில் சுயேச்சையாகத் திரியும் மதயானைகளைப் படுகுழியில் விழுத்தி அடிமையாக்கிக் கொள்ளும் மானிடரைப்போல, இவர்கள் பணக்கார வாலிபர்களைத் தம்முடைய படுகுழியில் விழச்செய்து வருத்திப் பின் ஒருவகையிலும் மீளாவண்ணம் தமக்கு அடிமைகளாக்கிக் கெடுத்து விடுகின்றனர்.

இத்தகைய வல்லமை வாய்ந்த இவ்வூர்த் தாசிகளில் ஒருத்தியே, நம்முடைய இராமலிங்கம் செட்டியார் கிருகத்தில் சதுராடின கமலாவும். இவளுடைய மையலிற் சிக்காத பணக்காரரே இவ்வூரில் கிடையாது. அதுமாத்திரமல்ல, அவளுடைய மாயவலையுள்பட்டு இரவும் பகலும் இடைவிடாமல் அவள் வீட்டைக்காத்து, "அவள் காலாலிட்ட வேலைகளை யெல்லாம் சிரசாற்செய்தேனும் அவளுடைய பிரீதியைச் சம்பாதித்துக்கொள்ளமாட்டோமா," என்றலைகிறவர் பலர். இவளுடைய தயவை எதிர்பார்த்து, எந்த இழிவான வேலைகளையுந் துணிவாய்ச் செய்து வருகிறார்கள் சிலர். "இவள் எப்போது வெளியே வருவாள், அவளுக்குக் கொடுக்கவேணு" மென்று பலகாரம், புஷ்பமாலை முதலானவைகளை வைத்துக்கொண்டு அவள் வீட்டுவாயிலில் இரவில் காத்திருக்கின்றனர் வேறு சிலர். "இவளை நம்முடைய கண்குளிரக் கண்டாலாவது நம்மாசை ஒழியாதா" என்று அந்தத் தெருவழியாக அடிக்கடி ஜம்பமாய் அலைந்து திரிகிறவர் அநேகர். இயற்கையில் அதிக சௌந்தரவதியாகிய இவ்விலைமகள், "விலைமகட்கழகு தன் மேனி மினுக்குதல்," என்றாற்போல, பன்னீர், சந்தன முதலிய பரிமளவாடைக்கலவைகள் தன் மேனியில் திமிர்ந்து, விலையுயர்ந்த பட்டாடைகளை வேளைக்கு வேளை புனைந்து, மிகுந்த நாகரீகமானவையாயும், மதிப்பில் அடங்காதன வாகியும் உள்ள ஆபரணங்களை யணிந்து இருப்பாளேயாகில், இவள் மீது பிராந்திகொண்டு, இத்துணைவீணர்கள் அலைகிறது ஆச்சரியமல்லவே!

நம்முடைய சங்கரன் விவாகத்தில், நாட்டியம் புரிந்து பார்த்தோர் மனதைப் பிரமிக்கச் செய்து, யாழையும் பழிக்கும்

படியான இனிய குரலிற் பாடி, காலில் இட்ட சலங்கை, "கலீர்," "கலீர்," என அடி பெயர்த்து வைத்து வருவதைக் கண்ட இராமசாமியை, இன்னார் என்று தெரிந்துகொண்டு, ஆட்டத்தின் மத்தியில் அடிக்கடி அவனைக் கடைக்கண்ணுறல் நோக்கி, கமலா, அபிநயம் புரியும்போது, "என்மீது யதார்த்தமாகக் காதல் கொண்டிருக்கிறாள்" என்று அவன் எண்ணும்படி பண்ணுவித்து அவனை வசப்படுத்தினாள். விவாகமஹோற்சவம் நடந்த மூன்றாம் நாள் சனிக்கிழமை இரவு சுமார் பத்து மணி இருக்கலாம். கமலா தன்னுடைய வீட்டு மேல்மாடியில், ஒரு கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். எதிரே ஒரு நாற்காலியின்மீது நம்முடைய இராமசாமி உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அடியில் வரும் சம்பாஷணை அவர்களுக்குள் நடந்தது.

இராமசாமி.—"கண்மணி, உன்னைப் பார்த்த கண்களுக்கு வேறொருவரையும் பார்க்க வருமோ? அன்று திருமணப் பந்தலில் உன்னுடைய திவ்விய தேஜஸைக் கண்டபோதே, காமவெறிகொண்டு கலங்கி அவ்விடத்திலேயே உன்னை இறுகக் கட்டித் தழுவி யொரு முத்தங்கொடுக்க எண்ணினேன். ஆனால் அங்கு ஜனங்கள் அதிகமாய் அப்பொழுது கூடியிருந்தபடியால், என் மனதை ஒருவிதத்தில் ஒடுக்கித் திடப்படுத்திக்கொண்டு சும்மா இருந்துவிட்டேன். எப்படியும், தெய்வாநுகூலமாக, இன்று நாமிருவரும் ஏகாந்தமாயிருந்து, சரசசல்லாப வார்த்தை யாடிக் கொண்டிருக்க வாய்த்தது, என் நல்வினைப் பயனேயன்றி வேறல்ல. நான் இந்த ஊருக்கு வரவேண்டுமென்று சொற்பனத்திலாவது எண்ணியிருந்ததுண்டா? கிடட

யாது. இருந்தாற்போலிருந்து என் மனம் திடீரென்று புறப்படத் திரும்பினது, உன்னை யிங்கே கண்டு களித்து, அதிக உல்லாசமாய் உன்னைக்கூடிச் சுகித்திருக்க வேண்டும் என்பதற்குப் போலும்!"

கமலா.—"அப்படியல்ல, அது நான் செய்த பாக்கியம். நான் உங்களைக் கொட்டகையிற் கண்டபோதே, என் மனம் என்னைவிட் டகன்றது. உங்களைப் பார்த்த நிமிஷமுதற் கொண்டு, எப்பொழுது உங்களைத் தனிமையாகச் சந்தித்து வார்த்தையாடுவோம், என்று இரவும் பகலும் சரியான நித்திரையின்றி யேங்கித் தவித்துக்கொண்டிருக்கிறேன். யாரையாவது அனுப்பித் தங்களை வரவழைத்துக்கொள்ளவேண்டும் என்று விருப்பங்கொண்டிருக்கையில், "கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல" தாங்களே என்வீடு தேடிவந்துவிட்டீர்கள். இனிமேல் எனக்கென்ன குறைவு! எல்லாம் தங்கள் உடைமையே. எனக்கேற்ற சுந்தர புருஷன் எப்போது வருவான், என்று ஒரேமனதாய் இதுநாள்வரையும் ஸ்ரீ சௌடாம்பிகையை நான் போற்றிவந்தது, இன்றுதான் எனக்குக் கைமேற் பலித்தது."

இராமசாமி.—"என்னுயிர்க்குரிய அமிர்தே! என்றென்றைக்கும் இன்ப சாகரத்துள் என்னை முழுகுவிப்ப துன்பாரம். நானும் உன்னை யொருபோதும் விட்டகலேன். இது சத்தியம்."

கமலா.—"இதற்குமுன் இவ்வூரில் எத்தனை பேர்களோ என்னை விரும்பி வந்திருக்கிறார்கள். நான் அவர்களில்

யாரையாகிலும் கண்ணெடுத்தாவது பார்த்திருப்பேனா? ஏதோ என்னுடைய பிராரத்துவமானது உங்களுடன் கூட்டிவைத்தது. ஆகையினாலே ஏழையேன்மேல் கிருபை வைத்து என்னைப் பிரியாதிருக்க வேண்டும்."

இராமசாமி.—"என்னெண்ணமும் அதுவே. ஆனால் அது முற்றுப் பெறவேண்டுமென்றால், நீ என்கூட மதுரைக்கு வந்துவிடுவது நலமென் றெண்ணுகிறேன். அங்கே வந்த பின், என்னிடமுள்ள சகலமான பண்ட பதார்த்தங்களெல்லாம் உன்னுடையனவே யாகும்."

கமலா.—"நான் தங்கள்கூட மதுரைக்கு வருவதற்கு யாதொரு ஆக்ஷேபனையுங் கிடையாது. தங்களைவிட்டு இனி யரைக் கணமேனும் பிரிந்திருப்பேனா? பிரியத்தான் மனமும் வருமா? ஆனால் ஒன்று இருக்கிறது. அதாவது, எனக்கு வயது முதிர்ந்த தாயொருத்தி யிருக்கிறாள். அவள் என்னைவிட்டு அரை நிமிஷமும் பிரிந்திருக்க மனஞ் சகியாள். ஆனதினாலே அவளை யெப்படியாகிலும் சம்மதப் படுத்தி, அதன்பேரில் தங்கள் கருத்தின்படி செய்தலே உசிதம். ஆகவே இங்கேதானே இருங்கள், நான் கீழே யிறங்கிப்போய் அவளிடம் கலந்துபேசி அவள் அபிப்பிராயமுந் தெரிந்து வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டு அவசரமாய்க் கீழேயிறங்கி வந்தாள். வந்து ஒரு நிமிஷ நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் மேல்மாடியி லிருந்த இராமசாமிக்கு, கீழே வெளிவாசற் கதவைத் தட்டுகிற சத்தம் ஒன்று கேட்டது. திகில் பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான். சற்று நேரத்தில் தாய்க் கிழவி அங்கே வந்து, சற்று நாணத்தோடும் ஒதுங்கி

நின்று, இராமசாமியை நோக்கி, "ஐயா, நீர்கொண்ட கருத்தின்படி நடப்பதில் யாதொரு தடையுமில்லை. ஆனால் நான் இவளைப் பெறுமுன் எனக்கு சுமார் மூவாயிர ரூபாய் வரையில் கடனிருந்தது, ஏதோ என் சொற்ப சம்பாத்தியத்தைக் கொண்டு அவளைப் பெரியவளாகும் வரை வளர்த்ததோடு, ஆயிரரூபாய் வரையில் கடனும் தீர்த்திருக்கிறேன். இந்தக் கடன் இனிமேல் எங்களுக்கு ஒரு பெரிதா? இதற்குமுன் எத்தனையோ பணக்கார மாப்பிள்ளைகள் வந்தார்கள், அவர்களில் யாரையும் விரும்பாமல் பேய்ப்பிள்ளைத்தனமாய் இருந்துவிட்டபடி யால், கடன் சிறிதும் குறைந்தபாடில்லை. இனிமேல் நாங்கள் சுகப்படவேண்டிய காலம்போல் இருக்கிறது! அதினாலேதான் தங்களை எங்களுடைய நல்வினை இங்கே கொண்டுவந்து விட்டது. நீங்கள் மதுரையில் போயிருந்துகொள்ளவேண்டு மென்கிறீர்கள் கடன்காரன் போகவிடுவானா? அதற்கும் ஒரு போக்கு செய்துவிட் டால் தானே போகலாம். தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை."

இராமசாமி.—"அதற்கென்ன வந்தது? இரண்டாயிரந்தானே என்ன பிரமாதம்! ஒரு வாரத்துக்குள் உங்களுக்கு அந் தத் தொகையை இந்த இடத்திலே சவதரித்துக் கொடுத்து விட்டு அப்புறம் அவளைக் கூட்டிக்கொண்டு போகிறேன். எதற்கும் விடியட்டும் பேசிக்கொள்ளுவோம்."

தாய்க்கிழவி, "சரி," என்று சொல்லி இரண்டு இருமல் இருமிக்கொண்டு மெள்ள கீழே யிறங்கி வந்தாள். அதற்குள் வீட்டினுள்ளிருந்த ஒரு ஆள் கதவைத் திறந்துகொண்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 22 OCT 1913 MADRAS

வெளியே போனது. மேல்மாடியில் இராமசாமி தனியே உட்கார்ந்துகொண்டு "கமலா இன்னும் ஏன் வரவில்லை" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்து அப்படியே தூங்கிப் போய்விட்டான். இராமசாமியிடம் கமலா எப்பொழுது வந்திருப்பாளோ, அதை வாசிப்பவர்கள் நிதானித்துக்கொள்ளும்படி விட்டு விடுகிறேன். இராத்திரி முழுவதும் வெளிக்கதவு இங்குமங்கும் அசைந்த வண்ணமாகவே இருந்தது.

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று"

என்பதை இராமசாமி அறியான் போலும்!

பொழுது விடிந்தது. இராமசாமி எழுந்திருக்கும்போது கமலா, தன்னருகிலிருக்கக் கண்டான்.

கமலா.—"இன்றைக்கென்ன இவ்வளவு தூக்கமயக்கம். அயர்ந்து நித்திரை செய்கிறவர்களை எழுப்புதல் கூடாதென இருந்து விட்டேன்."

இராமசாமி.—"கீழே போன நீ வருதற்கு ஏன் இவ்வளவு தாமசம்?"

கமலா.—"இரண்டு நாளாக சதுர்க்கச்சேரியானதினுலும், உங்கள்பேரிலுள்ள மையலினுலும், சரியான தூக்கம் கிடையாது. உணவும் சரியானபடி ஜீரணமாகவில்லை. அதனுல் வயிற்றுவலி யுண்டானது. மருந்துக்கு வேலைக்காரியை அனுப்பவும், வைத்தியன் வரவும், மருந்து சாப்பிடவுமாயிருந்து, கோழி கூவுதற்குச் சற்று முன்புதான் வயிற்றுவலி நின்றது. அது முதலாகத் தங்கள் அருகில்

உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன்" என்று சமாதானங் கூறினாள்.

இம்மாதிரியான சாக்குப் போக்குகளுக்கு இசைந்த நோய்கள், அன்று இராத்திரி மாத்திரம் வந்ததோ ? அல்லது எல்லா இராக்காலங்களிலும் வருமோ ? என்பது இறைவற்கே வெளிச்சம்.

"இரவினி லென்னுடன் றுயின்ற கோதை யடிக்கடி வெளி யே யேகி மீண்டாள், காவறிவான் பின்றொடர்ந்தேன் கொல்லை யிலோர் காளையுடன் கலந்து நின்றாள்"

என்னும் நீதி இவள் போல்வார்க்கு எக்காலத்திலும் ஏற் பட்டதன்றோ ?

---

## 22-வது அத்தியாயம்

### சாமி கும்பிடு

விவாகம் யாதொரு குறைவுமில்லாமல், அதிக சம்பிரமமாக நடந்தேறியது. கலியாணத்திற்கென்று, பலவூர்களிலுமிருந்து வந்த பந்துக்களும், உறவினரும், சிநேகிதர்களும, அவரவர்கள் செய்யவேண்டிய உரிமைக்காரியங்களைச் செய்து முடித்து, அநுமதி பெற்றுக்கொண்டு தத்தம் ஊர்களுக்குப் பிரயாணப் பட்டுப் போய்விட்டார்கள். ஆனால் சென்னையிலிருந்து வந்த கோபாலன் மாத்திரம், சங்கரனுடைய கட்டாயத்தின் பேரிலும், இராமலிங்கம் செட்டியாருடைய வேண்டுகோளின் பேரிலும், இங்கே தங்கியிருந்தான். இவ்வூரிலும், இவ்வூரை யடுத்த பல கிராமங்களிலும் அடிக்கடிப்போய், ஆங்காங்குள்ள விசேஷங் களைப் பார்த்து ஆனந்திப்பதில், நாட்களைச் சந்தோஷமாய்க் கழித்துவந்தான். இவ்விதம் சிலநாள் செல்ல,முத்துக்காமாக்ஷி

யம்மாள், புஷ்பவதியாயினள். ருதுச்சடங்குகள் அனைத்தும், கிரமமாய் மிகுந்த கோலாகலத்துடன் நடப்பிக்கப்பட்டன. பிறகு ருதிசாந்திமுகூர்த்தமும் நிறைவேற, சங்கரனும், முத்துக்காமாக்ஷியும், அந்நியோந்நியமாய், அளவற்ற பரமானந்தத்துடன் வாழ்ந்து வந்தார்கள். சங்கரனுக்கு, பட்டணத்தில் பி. ஏ. க்குப் போய் வாசிக்குங்காலம் சமீபித்தது. இது சம்பந்தமாக, தன்னின்னுயிர்க்கொழுநனைப் பிரிந்து சிலகாலம்வரைக்கும் இருக்கவேண்டியது வருகிறதே யென்று முத்துக்காமாட்சி யம்மாள் சிந்தித்துப் பலதடவைகளிலும் வருந்துவாளாயினும், கற்றவளானபடியாலும், சங்கரன் எப்படியாகிலும், பி. ஏ. பரீக்ஷையும் தேறியிருக்கவேண்டுமென்ற நோக்கமுடையவளானபடியாலும், மனோதைரியத்தோடும் பிரிவினையை ஒருவிதத்தில் சகித்துக்கொண்டாள். சங்கரனும் தன் காதலியிடம் பிரியா விடைபெற்றுக்கொண்டு கோபாலன் சகிதம் சென்னப்பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

ஐப்பசி மாசத்தில் ஒருநாள் இராமலிங்கம் செட்டியார் தமது நேச மனைவியுடனும், அருமைப் புதல்வியுடனும், பலபல விஷயங்களைப்பற்றி உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, காடுபட்டியிலிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதை முத்துக்காமாக்ஷியம்மாள், அவசரமாய்ப் பிரித்துப் பின்வருமாறு வாசித்தாள்.

காடுபட்டி,
ஐப்பசிமீ 16உ

க்ஷேமம். சிரஞ்சீவி மைத்துனருக்குச் சௌடேஸ்பரி கிருபையினாலே சகல பாக்கியமும் மென்மேலும் பெருக வுண்டாவதாகவும். இப்பவும் நம்முடைய ஊரில் இந்த வருஷம் சாமி கும்

பிடு 23உ வெள்ளிக்கிழமையானபடியால, அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னாடியே, தாங்களும் தங்கள் குடும்பத்தி னரும், இதர பந்து ஜனங்களும் கட்டாயம் வந்திருந்து கண் குளிரப் பார்த்து ஆனந்தித்து அம்மனுடைய அருட் பாக்கி யத்தை யடையவேண்டியது. மற்றக் காரியங்கள் எல்லாம் முகதாவில் வேணும். சௌடேஸ்பரி துணை.

இப்படிக்கு
சிவசங்கரன் செட்டியார்.

இதை வாசித்துக் கேட்டதும், கடிதத்தில் கண்டபடி காடுபட்டிக்குச் சாமிகும்பிடு பார்க்கப்போகிறதா, வேண்டாமா என்று இராமலிங்கம் செட்டியார் இருமனதாயிருந்தார். ஆனால் இம்மாதிரியான விசேஷங்களுக்குப் போய்ப்பார்த்து சந்தோ ஷிப்பதில் அதிக உற்சாகங்கொண்ட லெட்சுமியம்மாள், இதற் குக் கட்டாயம் போகவேண்டுமென்று மனத்துள் தீர்மானித்து விட்டபடியால், தன்னுத்தேசத்தை நிறைவேற்றக் கருதி, "உங்கள் கருத்தென்ன" என்று நாயகனைக் கேட்டாள்.

இராமலிங்கம்.—"என் கருத்தென்ன! அநேகமாய் இந்தத் தடவை போகச் சரிப்படாதென்று மதிக்கிறேன்."

லெட்சுமி.—"இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு, நாம் போகா விட்டால், நம்முடைய ஊர் விசேஷங்களுக்கு அவர்கள் வருவார்களா? வரமாட்டார்கள் அல்லவா? அப்படி யில் லாமற் போனபோதிலுங்கூட, நம்மையொரு பொருட் டாக மதித்து எழுதினவர்களுக்கு, நாம் போய் திருப்தி கொடுக்க வேண்டியது நம்முடைய கடமையல்லவா?" என்று இதமாய்ப் பேசினாள்.

முத்துக்காமாக்ஷியம்மையோ, தன்னுடைய ஆருயிர்க் காதலனைப் பிரிந்த நாள் முதற்கொண்டு ஒவ்வொரு நிமிஷத்

தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்து வருகிறவள் ஆனபடியால், இதன் மூலமாகவேனும் தன்னுடைய நாயகனைப் பிரிந்திருக்குங்கவலை சிறிது மாருதா? என்று நினைத்துத் தன்னுடைய பிதாவினிடம், "கட்டாயம் போகவேண்டும்," என்றாள். அதன்பேரில் கொஞ்சம் யோசனைபண்ணி, தன்னுடைய புதல்வியின் நோக்கத்துக்கு மாருக நடக்கச் சகிக்காதவராய், "உங்கள் கருத்தின்படியே, செய்கிறது" என்று தம்முடைய மனதை யொருவழிப்படுத்தி யொப்புக்கொண்டார்.

குறித்த தினத்திற்கு முதல் நாளாகிய இருபத்திரண்டாந் தேதியாகிய வியாழக்கிழமை யன்றுதான் இராமலிங்கம் செட்டியாரும், அவருடைய மனையாட்டியும், நேசப்புத்திரியும் காடுபட்டிபோய்ச் சேர்ந்தார்கள். காடுபட்டி, ஒரு சிறிய கிராமமாயினும், துரோபதை யம்மன் கும்பிடும் நிமித்தமாக, அது, "இந்திரன் வாழும் அமராவதி நகரமோ" என்று பார்த்தோர் ஐயமுறும் வண்ணம் அவ்வளவு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பார்த்தவிடமெங்கும் பந்தல் மயமாகவே காணப்பட்டது. மாவிலை வேப்பிலைத் தோரணங்கள் வீதிகடோறும் துலங்கின. ஆயிரக் கணக்கான ஜனங்கள் அடுத்த கிராமங்களினின்றும் கும்பல் கும்பலாய் வந்துகொண்டே யிருக்கிருர்கள். அம்மனுடைய திருச்சன்னிதி முன்பாக பதினறடி நீளத்திலும், பத்தடி அகலத்திலும், இரண்டரை அடி ஆழத்திலும் ஒரு அக்கினி குண்டம் வெட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தீக்குழி யிறங்குவதைப் பார்க்கவென்றே இவ்வளவு ஜனப்பெருக்கம் இந்த வூரில் வருஷந்தோறும் ஏற்படுகிறது வழக்கம். வெள்ளிக்கிழமை மாலை மூன்றுமணிதான் தீக்குழி யிறங்கவேண்டிய சமயம். ஆனதினலே இதற்கு முந்தின மூன்று தினங்க

ளாக, பருத்த விறகுக்கட்டைகளை அந்தக் குழியில் மலைமலை யாகக் குவித்து எரித்து, நெருப்பு வளர்த்துப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தீச்சுவாலையானது ஒருவரையும் அண்மையில் நெருங்கவிடவில்லை. அப்படியிருந்தும் ஒரு வேளை ஜனங்களுக்கு அக்கினியினால் எங்கே ஆபத்து நேர்ந்துவிடுகிறதோ வெனப் பயந்து, அந்த அக்கினி குண்டத்தைச் சுற்றிலும், கொஞ்ச தூரத்தில் மூங்கிற்கோல்களால் பலமான வேலியொன்று போட்டிருக்கிறார்கள். உள்ளே பிரவேசிப்பவர்களுக்கு அதாவது தீக்குழி யிறங்குவோருக்கு மாத்திரம் ஒரு பக்கத்தில் சிறுவழி யொன்று விடப்பட்டிருந்தது. பூசாரியும், பக்தி சிரத்தையோடு சின்னாளாய் விரதம் அனுஷ்டித்து நோன்பு நோற்றுவருகிற வேறு ஐந்துபேர்களு மாத்திரம் அதில் இறங்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் இப்பொழுது: ஆற்றில் ஸ்நானஞ் செய்யப் போயிருக்கிறார்கள்.

இங்கே அக்கினி குண்டத்தின் முன்னிற்கிறவர்கள், நீளமான மூங்கில் கோர்த்த பலகைகளால், நெருப்புக் கங்குகளை மேடுபள்ளமில்லாமல் சமமாகத் தட்டிப் பரப்பிக்கொண்டு வருகிறவர்களும், நெருப்புமேற் பூத்திருக்கும் சாம்பரை வேப்பந் தழைகளால் வீசுபவர்களும், பொடிபண்ணிய மஞ்சளைத் தாம்பாளங்களில் வைத்துக்கொண்டு நாலா பக்கங்களிலும் நின்று, அதை யள்ளியள்ளி நெருப்பில் போட்டுச் சிதறுவார்களும், அப்படிச் சிதறிய மாத்திரத்தில், கருப்புப் புகையுடன் நெருப்புச் சுவாலை குப்பென்று எழும்பி யெரிவதும், இவ்விதமான ஆரவாரங்களைக் காணுந்தோறும் அங்கிருந்த ஜனங்களுக்கு ஒருவிதமான அச்சமும் திகிலும் உண்டானது. "இதில் இறங்குவது சாமான்னியமான காரியமல்ல, அந்த அம்மனு

டைய அருளில்லா விட்டால் இக்காரியம் நிறைவேறுவது அருமை" என்பார் சிலர். "கடவுளது பூரணமான கிருபை பெற்ற பக்தர்களுக்கு இதுவும் ஒரு பெரிதோ?" என்பார் வேறுசிலர். கலிகாலத்தில் இத்தகைய அதிசயமான காக்ஷி யில்லையென்றால், கடவுளை, மனிதர்கள் முற்றிலும் மறந்துவிடு வார்கள் அல்லவா!" என்று கூறுவார் இன்னொரு கூட்டத் தார். இப்படியாக அவரவர்கள் மனதிற் றோன்றியவற்றை அங் கே கூடிநின்றவர்கள் பேசிக்கொண்டிருக்குந் தருணத்தில், மேளதாளங்களின் சப்தம் காதிற்படவும், அந்த வோசைவரும் வழிநோக்கி "அதோ வருகிறார்கள், இதோ வந்துவிட்டார்கள்," என்று சொல்லிக்கொண்டு தாம் தாம் குறித்த விடங்களுக்கு ஓடி நின்றுகொண்டு அவர்கள் வரும் ஆரவாரத்தைப் பார்த்த வண்ணமாய்ச் சிறிதும் சப்தம் போடாமல் நின்றிருந்தார்கள்.

பூசாரியும், மற்றையோர்களும், ஆற்றிலிறங்கி ஸ்நானம் பண்ணி, தங்களுடைய மேனிகளை விபூதி சந்தனங்களால் அலங்கிருதம் செய்து, நறுமலர் மாலைகள் அணிந்து, மிகுந்த பயபக்தியோடும் அம்மனை மனதில் தியானித்தவர்களாய், மெய்ம் மறந்து பக்தி மேலீட்டால் புளகாங்கித முற்றுப் பாவசராகி மேள தாளங்களுக் கிசைய ஆடிக்கொண்டு வருகிறார்கள், ஆனால் பூசாரி மாத்திரம் தலைமேற் கரகம் வைத்துக் கொண்டு வருகிறார். மற்றவர்கள் கைகட்டிய வண்ணமாய் வந்து, அக்னிகுண்டத்தை மூன்று தரம் வலப் பிரதக்ஷணம் செய்து, தீக்குழிக்கு எதிரேநின்று நேரில் எழுந்தருளப் பண் ணியிருக்கும் அம்மனை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டி ருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் மேளத்தொனியானது கடலோசையினும் இடிமுழக்கத்தினும் மிஞ்சி யாரவாரிக்கக் காது செவிடுபட நின்றது. அங்கு நிற்கும் ஜனங்களின் மன

தில் ஒருவித பயமும், திகிலும் அதினால் உடல் நடுக்கமும் உண்டாயின. பூசாரியானவர் தந்தலைமேற்கொண்ட காகத் துடன் முன்னேறி நிற்கிறார்.

அம்மனுக்குக் கற்பூர தீபாராதனை காட்டி முடிந்ததோ இல்லையோ, அதற்குள் மெய்ம்மறந்தவர்களாகி ஒருவர் பின் னொருவராய் திடுதிடென்று நெருப்பிற் பாய்ந்து விரைந்தோடி மறு கரையிலுள்ள அம்மனை யெட்டி நின்றார்கள். ஆனால் பூசாரி மாத்திரம் மூன்று தரம் பூக்குழி யிறங்கிவந்தார். மற் றவர்களை, ஒருதடவை அக்கினி குண்டத்தில் இறங்கி விளை யாடி வந்தது போதுமானதென்று அங்கு அம்மன் ஓரத்தில் நின்றிருந்தவர்கள் பலாத்காரம்பண்ணித் தடுத்து நிறுத்திவிட்ட னர். தீக்குழியிறங்கும் விசேஷம் இம்மட்டோடு நிற்க, மேல் அம்மனுக்குப் பொங்கல் இடுபவர்களும் பூஜைநைவேத்தியம் பண்ணிவைப்பவர்களும், சிறப்பு நடத்துகிறவர்களுமாய், இரவு எட்டு மணிவரை கழிந்தது. அதற்கப்பால், அம்மனை நன்றாய் அலங்காரம் பண்ணி, தீவர்த்தி, மத்தாப்பு வாணங்கள் சகித மாய், ஊர்க்கோலம் வரச்செய்து, ஒவ்வொரு வீட்டாரும் தவறா மல், திருக்கண்வைத்து, சர்வாலங்கிருதத்தோடு கூடிய, அம்பிகையை தங்கள் இருகண்குளிரக் கண்டு தரிசித்து பிரமா னந்த முற்றவர்களாயிருக்கிறார்கள். இராமலிங்கம் செட்டி யார் முதலானவர்கள் இவ்வதிசயங்களைக் கண்டு, ஆனந்த மடைந்து,“ இதுவரையிலும் நாம் இங்கே வந்து பாராதிருந்தது நம்முடைய அசட்டையினாலல்லவா? “என்று வருந்தி அம்மனு டைய அருட்டிறத்துக்கு மெச்சி வியப்புற்றார்கள். அப் பொழுது இராமலிங்கம் செட்டியார், திரிகாண சுத்தியோடும் அம்பிகை முன் விழுந்து, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து கைகட்டி நின்று பக்தியுடனே,

தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன தந்ததான.

அதிகவுர னுறுமவுணர் நாடோறு மூவுலகி
லுலவுபல மனிதரொடு வானோரி யாவரையு
மழிவுசெய வவரைமகி டாசூர னோடிகலி யெங்கும்வீழ

அரிபிரமர் தருபடைகள் கீழாக வேசிதறி
யனைவரையு மமரினிடை வாளாலே வீசிவரு
மமலைகிரி புரைகவுரி மாகாளி வீரியுமை சிங்கவூர்தி

நிதியமிகு நவமணிகொள் காதோலை காரைமணி
கொலுசுசர முருகுவளை காசார மேகலையும்
நிறையவணி கலைகளிலெ பாவாடை தாவணிய ணிந்துமேனி

நிறமொளிர வெதிரில்வரு வோராசை யான்மருவ
மலர்பரவு மமளிதனி லேசேரும் வேசையர்தம்
நினைவுடனே அவனிமிசை நீடூழி வாழவுனு சிந்தையாலெ

கதியுதவு முனதருகில் வாராத பாவியெனை
யசடர்வழி யொருதினமு மேகாம லேநிறுவு
கமலபத முறுதிதரு மானேக பாலிகுளிர் கங்கைவேணி

கருணைமழை பொழியவரு டாராய்க டாவிலிவர்
கரியநம னுலகுசெல நேர்பாதை யாகுமொரு
கவலைபெறு மயல்வலையி லோயாமல் வேறுயிர்வ ருந்தும்வேளை

மதியையுயர் சடையிலணி மாதேவி பாதமதில்
மதிபதிய விதியதுகொல் மேதாவி யானவர்கள்
மனமுருகி விழியருவி யாறோடல் போலுநனி யின்பமான

மதுசொரியு மகவிதழ்க ளார்சோலை நீழலிடை
தவமருவு முநிவர்களில் மேலான தேவலவன்
மாபினர்க ளமருநலை யூர்கோயின் மேவுசவு டம்பதேவி-

எனத் தோத்திரம் புரிந்துநின்று பேரானந்தக்கடலின் மூழ்கி யிருந்தனர். தன்னுடைய ஆசைநாயகனும் அருகிலிருந்தால், அவனும் இவ்வற்புதச் செய்கை கண்டு மகிழ்ந்து ஆனந்திக்கக் கூடுமே! என்று முத்துக்காமாக்ஷியம்மையும் எண்ணினாள். ஏனெனில், கற்புடைய மங்கையர், கணவரில்லாதபோது களிப்படையக் காரணமேயில்லை. நிற்க, மறுநாள் முதற் கொண்டு, கூட்டம் சன்னஞ் சன்னமாய்க் கலையலாயிற்று.

---

## 23-வது அத்தியாயம்

### சிங்காரத் தோப்பு

இருபத்தைந்தாம் தேதி ஞாயிற்றுக்கிழமை, இராமலிங்கம் செட்டியார் முதலானவர்கள், காடுபட்டியிலிருந்து ஊருக்குப் பிரயாணம் புறப்பட்டார்கள். இவர்கள் புறப்படும்போது மாலை மூன்றுமணி. சுமார் இரண்டு மைலுக்கப்பால் வரவும், ஆகாயத்தில் மழை மேகந்திரண்டு, இடியுமின்னலு மாரவாரிக்கப் பெருத்த மழை ஓயாமற் பெய்ய ஆரம்பித்ததாலும், அவர்கள் வண்டியேறிவரும் மார்க்கம், சாதாரணமாகக் கிராமாந்தரங்களை யடுத்துக் காணுகிறபடி சீர்கேடாயிருந்தபடியாலும், வழியில் அதிக கஷ்டப்பட்டு எப்படியும் இருட்டுமுன் சோழவந்தான் போய்ச் சேரவேண்டுமென்று கருதி, மிகுந்த பிரயாசையின்மேல், அப்படியே வந்து சேர்ந்தார்கள். இந்தக் கடுமழையில் ரயில்வண்டியேறுவது மிகுந்த அவஸ்தை யென்றெண்ணி,

அன்றிரவு அந்த ஊரில்தானே தங்கியிருந்து, மறுநாள் சௌக ரியமாகப் புறப்பட்டுப் போகலாம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். எந்த ஜாகையில் இறங்குவோமென யோசிக் கையில், லெட்சுமியம்மாள், "இந்த ஊரில் இராமசாமிக்குப் பங்களா வொன்றுண்டு, அதை விசாரிக்க வேண்டும்," என்ற னள். அப்பிரகாரமே சில ஆட்கள் மூலமாய் அதனை விசா ரித்தறிந்து, அவ்விடம் வண்டியை விட்டுக்கொண்டு போக, அது ஒரு சிறந்த மாளிகையாய் இருக்கக்கண்டு, யாவரும் சந்தோஷமாகப் போயிறங்கினார்கள். இராமசாமியும், அவ னுடைய நண்பர்களிற் சிலரும், அப்போது அங்கே இருந்ததி னாலே, அவர்கள், இவர்களை மிகுந்த முகமலர்ச்சியுடன் வர வேற்று உபசரித்தார்கள். ஆனாலும் முத்துக்காமாக்ஷிக்கு இந்த விடத்தில் இறங்கித் தங்குவதற்குக் கொஞ்சமேனும் மனம் ஒப்பவில்லை. ஏனென்றால், அவள் சுபாவத்திலேயே, இராமசாமிமீது மிகுந்த மனவெறுப்புக் கொண்டவள் ஆதலா னும், அவனுடைய கட்டடத்தில் எப்படியிருப்பதென்ற எண் ணம் ஒரு பக்கத்தில் பாதிப்பதாலும், கூடுமானால், அவன் தனக்கு எவ்விதத்திலும் கேடு விளைவிப்பான் என்று எண்ணி னாள். ஆனால் இந்த உத்தேசத்தை வெளியிடவில்லை. வெளி யிட்டால் ஒருவேளை தன் தாயாருக்கு மனவருத்தம் உண் டாக்கக் கூடும் என்றஞ்சினள் போலும்!

இந்தச் சமயத்தில், இராமசாமியினுடைய மனநிலைமை எப்படியிருக்கிறதென்று கவனிப்போம். இவனுக்குக் காமா க்ஷியின் ஞாபகம் மனதில் பலத்திருந்தது. அவள் இவனு டைய உள்ளத்தை விட்டு ஒரு நிமிஷமும் அகன்றிலள். அவள் தன்னுடைய ஜாகைக்கு வலுவில் வந்ததைப்பற்றி அளவிலா மகிழ்ச்சி யடைந்து, "உரலில் அகப்பட்டது உலக்கைக்குத்

தப்புமா ?" என்ற பழமொழியை எண்ணியிருந்தான். வந்த விருந்தினர்களுக்கு உணவு முதலானவைகள் கிரமமாக அளிக்கப்பட்டன. இவர்களை மறுநாளும் அங்கேதானே தங்கியிருந்து போகும்படிக்கு இராமசாமி அநேகமாய்க் கேட்டுக்கொண்டதின் பேரில், இராமலிங்கம் செட்டியார் லெட்சுமியைத் திருப்தி பண்ணுவதற்காக, அவனுடைய வேண்டுகோளுக்கு இசையும்படி நேர்ந்தது.

மறுதினம் இராமசாமி தன்னுடைய சிங்காரத் தோப்பிலிருந்து அதிக விசேஷமான காய்கறி முதலானவைகளைத் தருவித்து, வந்தவர்களுக்கு அதிக விமரிசையுடன் விருந்தளித்தான். அவன் அன்று செய்த ஆடம்பரத்துக்கு முத்துக்காமாட்சியைத் தவிர மற்றெல்லாரும் ஆச்சரியப்பட்டு மகிழ்ந்திருந்தார்கள். சாப்பிட்டான பிற்பாடு தன்னறைக்கு அடுத்த அறையில் ஒரு அழகான ஸ்திரீயிருப்பதைக் கண்ணுற்று, முத்துக்காமாக்ஷி, "இவள் யாராயிருக்கலாம்" என்று தன்னறிவிற்கெட்டிய மட்டிலும் யோசித்துப்பார்த்து, இராமசாமியின் வைப்பாட்டியா யிருக்கலாம் என்று தீர்மானித்தாள். ஆயினும் இதன் உண்மையை அவள் வாயிலாகக் கேட்டு ஸ்திரப்படுத்த உத்தேசித்து அதற்குச் சமயம் பார்த்திருந்தாள். சுமார் ஒருமணி சமயத்தில், அந்த ஸ்திரீ தன்னைப்போல் தனிமையாக விருக்கப் பார்த்து, முத்துக்காமாக்ஷி அவளிடம் போய், "நான் உன்னுடன் சில சங்கதி பேசவேண்டுமென்றிருக்கிறேன், உன்னபிப்பிராயம் என்ன ?" என்று கேட்டாள். அவள், "தடையறப் பேசலாம், அதற்கென்ன வந்தது" என்றனள்.

முத்துக் காமாக்ஷி.—"உன் பெயரென்ன ? நீ யார் ? எப்போதும் இங்கே இருக்கக் கூடியவள் தானோ?"

அவள்.—"நான் இருப்பது மதுரை. என் பெயர் காந்திமதி. இந்த வீட்டு முதலாளியின் நண்பர்களில் ஒருவருடைய மனைவி. இங்கே வந்து இரண்டு மூன்று தினந்தாளு கிறது."

முத்துக்காமாக்ஷி.—"என்னை உனக்குத் தெரியுமோ?"

காந்திமதி.—"அதிகமாய்த் தெரியாது. ஆனாலும் இந்த வீட்டெசமானுடைய பந்துவென்று இன்று காலையில்தான் கேள்விப்பட்டேன்."

முத்துக்காமாக்ஷி.—"அதோ தெரிகிற பூஞ்சோலை யாருடையது?

காந்திமதி.—"இவர்களுடையதுதான் என்று சொன்னார்கள். சீமையில் உண்டாகிற பலவகையான நூதனச் செடி வகைகள் எல்லாம் அதில் வைத்து உண்டுபண்ணி யிருக்கிறார்களாம். எண்ணிலடங்காப் பூச்செடிகளும், கனி வர்க்கத் தருக்களும் இருக்கின்றனவாம். அந்தச் சிங்காரத்தோப்பின் மத்தியில் ஒரு அழகிய தெப்பக்குளமும் இருக்கிறதாம். இதை அநுபவிக்கிறவர் மிகுந்த பாக்கியசாலிதான். பெருத்த பணக்காரர்களில் இதைக் கைவசப்படுத்த ஆசைப்படாதவர்கள் கிடையாது."

முத்துக்காமாக்ஷி.—அதன் பெயரென்ன? சிங்காரத்தோப்பா! அவ்வளவு அழகு வாய்ந்ததா! அதை இன்று போய்ப் பார்க்கலாமா?

காந்திமதி.—"சௌகரியப்பட்டால் போய்ப் பார்க்கலாம். வேறே அந்நியர்களை உள்ளே போக விடுகிறதில்லை. நீங்கள் சொந்தமானபடியால், உங்கள் விஷயத்தில் தடுதலை யேற்படாதென்று நம்புகிறேன். உங்களுடைய அபிப்பிரா

யத்தை முன்னிட்டு நானும் போய்ப் பார்க்கவேண்டு மென்று ஆசைப்படுகிறேன். "பூவோடு நாரும் மணம் பெற்றாற்போல" எனக்கும் இன்று அதைப்போய்ப் பார்க்கும்படியான பாக்கியம் லபித்தது. ஆகையினாலே, நீங்கள் அங்கே போவதாயிருந்தால், என்னையுங்கூட அழைத்தேக வேண்டுகிறேன்."

முத்துக்காமாக்ஷி.—"தடையில்லை. ஆனால், நான் இது விஷயத்தில் முயற்சி யெடுத்துக்கொள்ள இஷ்டமில்லாதவளாயிருக்கிறேன்."

காந்திமதி—"அப்படியானால் இது சம்பந்தமாக நானே முயற்சித்து, சற்று நேரத்தில் விவரம் தெரிவிக்கிறேன்."

முத்துக்காமாக்ஷி, ஆனால், சந்தோஷம். போய்வா" என்று சொல்லிவிட்டு, அந்த அறைக்குள் இருந்த சமாசாரப்பத்திரிகையை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தாள். அப்படியே சற்று அயர்ந்து நித்திரைபோனாள். மாலை நாலுமணி யடிக்கவும், அவள் (காந்திமதி) திரும்பி வந்து "அம்மா," என்று கூப்பிட்டாள். உடனே முத்துக்காமாக்ஷி திடுக்கென்று எழுந்து, "இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிக்கொண்டே அடுத்த அறையில் புகுந்து தண்ணீர்கொண்டு முகம் கைகால் அலம்பிக்கொண்டு திரும்பி வந்து "என்ன சமாசாரம்" என்றாள்.

காந்திமதி.—அனுகூலந்தான். வருகிறீர்களா? எனக்கேட்கவும் முத்துக்காமாக்ஷி சந்தோஷப்பட்டு, "அப்படியே வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டு தன் தாயாரிடம் போய் இதைத் தெரிவித்துவிட்டு உடனே திரும்பினாள்.

இருவருமாக சிங்காரத் தோப்புக்குப் புறப்பட்டனர்.

அந்த அலங்காரச் சோலை இவர்கள் புறப்பட்ட இடத்தில் இருந்து இரண்டு பர்லாங்கு தூரந்தானிருக்கும். அதை யடுத்துப் போகும்போதே அங்குள்ள புஷ்பஜாதிகளின் நறு மணம் இவர்களைஉள்ளேயிழுக்கும் ஒருவசியம்போன்றிருந்தது. காந்திமதி தான் கொண்டுவந்த திறவுகோலால் வெளிக் கத வைத் திறக்க உள்ளே பிரவேசித்ததும் தாளிட்டுவிட்டு சோலையிற் புகுந்தார்கள். புகுந்த மாத்திரத்தில் முத்துக் காமாக்ஷி தன்னை சொர்க்க லோகத்தில் வாழும் அப்சர ஸ்திரீயாக மதித்தாள். ஏனென்றால் அது அவ்வளவு சந்தோஷத்தையும் மனோற்சாகத்தையுங் கொடுக்க வாரம்பித் தது. எவ்விதமெனில், கனிதரு மரங்களாகிய மா, பலா, கொய்யா, முதலானவைகள் மேனோக்கி யோங்கிவளர்ந்திருப் பினும் நாலாபக்கங்களிலும் படர்ந்து தரையைத் தொட்டுக் கொண்டிருப்பதையும் பார்க்கும்போது வனதேவதையானவள் அங்கே வரக்கூடியவர்களுக்குத் தலைதொட்டு வணங்குவது போலவும்; இளமாந்துளிர்கள் தென்றற்காற்றினால் அசையுந் தோற்றம் 'என்னைப்போல் மேனிபடைத்த முத்துக்காமாக்ஷி இங்கே வா வென்றழைத்து உபசரிப்பது போலவும்; இத்து டன் குரா, பாதிரி, கோங்கு, சண்பகம், புன்னை முதலிய பலவர் ணமான பூந்தருக்களினின்றும், தரையில் உதிர்ந்து கிடக்கிற புஷ்பங்கள் வாசனை கமழும் இரத்னக்கம்பளம் விரித்திருந்தாற் போன்றும்; கிளைகள்மீது தங்கும் கிள்ளையுங்குயிலும் தம்மினிய குரலாற்பேசிச் சந்தோஷத்துடன் அழைக்கும் காக்ஷியும்; மற்றொருபக்கத்தில், மல்லிகை, ரோஜா, ஜெவந்தி, இவ்வகை யான மலர்கள் அலர்ந்திருக்கும் விநோதமும்; இன்னொரு பக்கத் தில் கிழங்குவகைச்செடிகள் வகைவகையாய்ச்செழித்து வளர்ந் திருக்கும் சோபிதமும்; வேறொரு பக்கத்தில், சீமையிலிருந்து

நூதனமாய் நமது தேசத்துக்குக் கொண்டுவந்து பயிர் செய்யப்பட்ட செடிவகைகள் பார்ப்போருக்கு ஆச்சரியம் விளைக்கும் பான்மையும்; பூஞ்சோலையின் மத்தியில் ஒரு தடாகம் அமைந்திருக்கும் அழகும்; அந்த வாவியில், தாமரை, குமுதம், காவி முதலிய அற்புதமான புஷ்பங்கள் பூத்திருக்கும் கோலமும்; அவைகளிலிருந்து இடையறாது ஒழுகும் மதுவையுண்டு வண்டுகள் மகிழ்ந்து ரீங்காரம்பண்ணும் தன்மையும்; அதைச் சுற்றி நாற்புறமும், அழகியமலர்கள் பரிமளிக்கும் கொடிப் பந்தர் மேவிய லதாக்கிருகங்களும்; இப்படியாகப் பற்பல விநோதங்களைக் கண்ணுற்றுப் பரவச மடைந்தாள். இதுவரையிலும் தன்னருகாமையைவிட்டு நீங்காமல், தன்னைப்போல் ஒவ்வொரு காட்சியினையுங் கண்டுமகிழ்ந்து காந்திமதி தன்னைப் பின்பற்றிவருகிறாளா, இல்லையா? என்றுகூடப் பார்க்காமல் அவ்வளவு பிரமானந்தத்தில் மூழ்கினாள். நாயகனில்லாத் தனிமையை நினைத்து வருந்தினாள். நாட்டை வெறுத்துக் காட்டின்கண் முநிவர்கள் வசிப்பதற்கும் காரணமிதுவெனத் தேர்ந்தாள்.

கொஞ்சநேரம் கழித்து தான் தனிமையாக அச்சோலையின்மத்தியில் இருப்பதைச் சிந்தித்து, காந்திமதி வேறொரு பக்கமாகப்போய் உலாவி வருகிறாள்போலும்! என்று மதித்தாள். இத்தகைய ஒரு அழகிய பூங்காவனத்தில் தன்னுருயிர்க் காதலனோடு சற்றுநேரமாவது சம்பாஷித்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும் என்று கருதினாள். எத்துணை மனோரம்மியமான சிங்காரவனமாயிருப்பினும், அல்லது, வெப்பமிகுந்த கொடிய பாலைவனமாயிருப்பினும், கற்புடைய மாதர் தங் கொழுநனை விட்டிரார். இதினாலன்றோ, சீதை, தமையந்தி முதலானவர்கள், "நாயகனில்லா நாடு சுடுகாடாகும்,"

என நினைத்துத் தத்தம் பர்த்தாக்களுடன் வனம் புகுந்தார்கள், என்று பலபல விதமாய் யோசனைபண்ணிக் கொண்டு சமீபத்திலிருந்த ஒரு சிங்காரமான கொடிப்பந்தருள் பிரவேசித்து அங்கு போடப்பட்டிருந்த ஆசனங்களில் ஒன்றில் அமர்ந்தாள். சிறிது தூரத்தில் காலடிசப்தம் கேட்கவே, காந்திமதி தன்னிடம் வருகிறாள் என்று நினைத்தாள். ஆனால் இராமசாமி, திடீரென முத்துக்காமாக்ஷிமுன் தோன்றினன். உடனே அவள் திடுக்கிட்டு மெய்பதறி வனக்காக்ஷியால் அடைந்த சந்தோஷ மனத்தையும் பறக்கடித்தாள். "இனி என்ன செய்வது! காந்திமதி என்னை மோசப்படுத்தினளோ? அல்லது இது இராமசாமியின் வஞ்சகச் செயலோ? யாதாயிருப்பினும் தன் பேற்றோரைவிட்டு இதற்குமுன் கண்டிராத காந்திமதியை நம்பி அவளைப் பின்பற்றி வந்தது பெரும் பிசகு," என்று மனதில் விசாரமிட்டாளாயினும் மனோதைரியத்தை விடாமல் சற்று மௌனம் சாதித்து நின்றாள்.

இராமசாமி.—"இந்த சிங்காரப் பூஞ்சோலையில், காமாக்ஷி", நீ ஏகாந்தமாக வீற்றிருக்கும்போது உன்னை நான் காணப் பெற்றது என்பாக்கிய வசமல்லவோ!"

முத்துக்காமாக்ஷி.—"எதனல் இவ்விதம் கூறுகின்றீர்?"

இராமசாமி.—"உன்னை எனக்கு விவாகம்பண்ண நிச்சயித்த நாள் முதலாக உன்மீது தீராத மையல்கொண்டு நைந்து வருந்துகிற என்னை இத்தருணம் ஈடேறச் செய்யவேண்டும் இன்பரசமே!"

முத்துக்காமாக்ஷி.—"விவாகம் தடைப்பட்டபோதே தாங்கள் என்னை மறந்துவிட வேண்டியது அவசியமல்லவோ? இன்னொருவருடைய பாரியாகிய என்மீது தாங்கள் மோகங் கொள்ளுவது தர்மமாகுமோ?"

இராமசாமி.—“ ஆயினும், உன்னுடைய அழகென்னும் வலையிற் பட்ட என் மனத்துள் நீ சதா வாசஞ்செய்துகொண்டிருக்கிறாய். அரைக்கணமேனும் அதை விட்டகன்றவளல்லை. மேலும், பார்த்தவிட மெங்கும் நின்னுரு வெளித்தோற்ற மயமாகவே காணப்படுகிறது. ஆகவே இன்பக் கடலில் மூழ்குவித்து ஆதரிக்கவேண்டும், ஆரணங்கே!”

முத்துக்காமாக்ஷி.—“ அயல் மாதர்மீது ஆர்வங் கொள்வதால் பழிபாவத்தோடு தீராத வசையும் ஏற்படும். மேலும், தங்கள்மீது நான் அணுவளவாகிலும் ஆசை வைத்தவளல்ல. இருதிறத்தார்க்கும் அன்பு ஏற்பட்டால் தானே சுகமுண்டு. ஆனபடியினாலே என்மேல் கருணை வைத்து என்னை முற்றும் மறந்துவிடுவதே விசேஷம்.”

இராமசாமி.—“நான் எவ்வளவு சொல்லியும்கேட்காமலிருப்பது நீதியோ? நான் என்ன அந்நியனா? இத்தருண மென்னைக் கலந்து சுகியாவிடில், என்னுயிர் தரியாதென்றெண்ணுகிறேன். சரணம் வேண்டுமானாலும் செய்கிறேன் தையலே.”

முத்துக்காமாக்ஷி.—“ உம்முடைய எண்ணத்திற்கு நான் ஒருபோதும் இணங்கமாட்டேன். என்னுயிர் போவதாயிருப்பினும் சரியே. இப்படிப் பேசியதற்கு வேறொருவராயிருந்தால் நடக்கும் காரியம் வேறு.”

இராமசாமி.—“ இணங்காவிடில் பலாத்காரஞ் செய்வேன். உன் பெற்றோர்கள் என்னை என்ன செய்வார்கள்? என்னதான் அவர்களால் செய்யக்கூடும்? ஆனதினாலே நான் கொண்ட எண்ணத்தைப் பூர்த்திசெய்து வைத்தால், உன்மீதுள்ள பக்ஷத்தை என்னுயிருள்ளளவும் மறக்கமாட்டேன்.

இணங்காத பக்ஷத்தில் உன்னை நான் இலகுவில் விடமாட்டேன்."

முத்துக்காமாக்ஷி (இனி இங்கிருந்தால் மோசம் வருமென்றெண்ணி) "அடா பாதகா! பேதையாகிய என்னைவருத்தி என் வீணாய் விரோதங்கட்டிக் கொள்ளுகிறாய்," என்று சொல்லிக்கொண்டே, சரேலென்றெழுந்து தோட்டவாயிலை நோக்கி நடந்தாள் அஞ்சி யொதுங்கி ஓடுகிற ஒரு மானை ஒரு புலி தொடர்ந்தாற் போல, இராமசாமி அவளைத் துரத்தி நெருங்கினான். கதவைத் திறந்துகொண்டு முத்துக்காமாக்ஷி வாயிலைத்தாண்டி வெளியே வந்தாள். இராமசாமியும் ஓடிவந்து வாயிற்படி தாண்டி இவளுடைய கையை எட்டிப்பிடிக்க நீட்டுகையில், திடீரென்று முதுகில் ஒரு அடி விழ, மின்சாரம் பட்ட பிராணி போல் நடுங்கி, அப்படியே ஸ்தம்பம்போல் நின்றிட்டான். முத்துக்காமாக்ஷி உடனே திரும்பிப்பார்க்கையில், பலத்த சரீரமுடைத்த மூன்று மனிதர்கள் நிற்கக்கண்டு, ஆச்சரிய முற்றவளாகிச் சற்றுக்கூட நிற்காமல் தன் பெற்றோர் இருக்குமிடம் நோக்கி விரைவாய் நடந்தாள். இராமசாமி செய்த அக்கிரமத்திற்கு அவனுக்குத் தருணத்தில் சரியான தண்டனை கிடைத்ததைப்பற்றி சந்தோஷப்பட்டாள். இது சங்கதியைத் தெரிவித்தால், ஒருவேளை எங்கே தன் பெற்றோர்கள் மனவருத்தப்படுவார்களோ என்று ஐயங்கொண்டு, சமையம்வரும்போது சொல்லிக்கொள்ளலாம் என்று அப்படியே மனத்துள் அடக்கிவிட்டாள். அன்று தனக்குத் தருணத்தில்வந்து உதவி புரிந்தவர்களுக்கு நீண்ட ஆயுளையும் பாக்கியத்தையும் கொடுக்கும்படி கடவுளை மனமாரப் பிரார்த்தித்தாள்.

## 24-வது அத்தியாயம்

### சம்பாஷணை

இரவு பன்னிரண்டுமணியாகியும், இராமசாமி கண்மூட வில்லை. தொலையா விசாரமுற்றவனாகவிருந்தான். "எவ்வளவு ஏற்பாடுசெய்தும் என் எண்ணம் முடிவுபெறவில்லையே. அவள் எவ்வளவு உரத்த மனதுடையவளாயிருக்கிறாள்! எத்தனையோ விதத்தில் கெஞ்சியும், இதம்பதமாக வார்த்தையாடியும், முடிவில் சரணம்பண்ணுகிறேன் என்று செப்பியும், இணங்கா மற்போனாளே! இதற்குமுன் நான் எடுத்த காரியங்களுள் ஒன்றாவது சித்திபெறாமல் பழுதுபோனதில்லையே! ஆனால் இவள் விஷயத்தில்மாத்திரம் இப்படி இடையூறு நேர்ந்து விடுகிறதே! சமையத்தில், சனியன்போல் எங்கிருந்து வந்தார் கள் இந்தத் தடிப்பயல்கள்? முதுவஷி நிற்பதற்கு மூன்று நாள் செல்லும்போலிருக்கிறதே! அன்று காரியாபட்டிக்குச் சமீபத்தில் என்கால் ஒடிந்தது சொஸ்தமாவதற்கு இரண்டு வாரம் சென்றதே! அதுவும், இவளை மணஞ்சூட்டப் புறப் பட்டுப்போனதினாலன்றோ நேர்ந்தது! ஐயோ! வெகுநாளாய்க் கொண்ட கருத்து வீணாய்ப்போனதே! என் சாமர்த்திய மெல்லாம் இவள் விஷயத்தில்மாத்திரம் செல்லாதாகின்றதே! வேட்டையாடித் தூரத்தப்பட்டமுயல், சமையல் வீட்டினுள் தற்செயலாய்ப் புகுந்தும், அகப்படாமற்போனது ஆச்சரியத்தி லும் வெகு ஆச்சரியமாகவல்லவோ இருக்கிறது! ஆகவே இவளைக்கூடி நான் அநுபவிப்பதற்கு, தெய்வசம்மதம் இல்லை போலிருக்கிறது! ஆனதினாலேதான் இவள் விஷயமாய் நான் மனதில் கொண்டிருக்கிற வன்மங்கள் கைகூடாதாகின்றன. எப்படியாவது சமையத்தில் ஒரு இடையூறு வருவதல்லா

மனும் உடம்புக்கும் சொம்பலம் ஏற்பட்டு விடுகிறதே! இவ்வித மாக நான் அவமானமடைந்த சங்கதி ரகஸ்யமாகவாவது போயிற்ரு? இல்லையே! எனக்கு இவ்வூரில் பலவகையிலும் எதிரிகளாயிருக்கிற பயல்களுக்கும் தெரியவந்ததே! அவர் களாயினும் தங்கள் மட்டில் அந்தரங்கமாக வைத்திருக்கப் போகிருர்களா? நாலுபேரறிய நடந்த சங்கதிகளைச் சொல்லிச் சொல்லி நான் வெளியேவந்து திரியாவண்ணம், என் மானத் தைப் போக்குவார்களே! ஆகையால் இனிமேல் இந்த வூரிலுள்ள நஞ்செய்களை வந்து பார்க்கும்படியான யோக்கியதை கூட இல்லாமற் போயிற்றே! ஆ தெய்வமே! எனக்கு இப்படியா ஆபத்து வரவேண்டும்? "கலியாணம் தடைப்பட்டபோதே இனிமேல் முத்துக்காமாக்ஷி பேரில் உனக்கு எள்ளளவும் ஆசைவேண்டாம். ஆசைவைத்தால் பெரிய ஆபத்து வரும், தடையில்லை. உன்மனதிற் கிசைந்த பெண்கள் வேறே தேடிக் கலியாணம் பண்ணிவைக்கிறேன்," என்று பன்னிப் பன்னிப் பலவாருக என்னுடைய தாயார் எனக்குப் போதித்ததை நான் நிராகரித்துவிட்டேனே! அவள் உபதேசப்படி அன்றுமுதல் நடந்திருந்தால், இன்று இப்படி அவமானம் அடையவும், ஒரு கேவலமான பயல் கையால் அடிபட்டு வருந்தவும் நேரிடுமா? யாரைச் சொல்கிறது? நம்முடைய விதி! படவேண்டியது பட்டுத்தானே ஆகவேண்டும், மாட்டேன் என்ருல் விடுமா? உம்! நடந்துபோனதைப்பற்றி வருந்துவதால் பிரயோஜன மென்ன? இனிமேல் ஆவது அவளைக் கனவிலும் கருதாதிருப் பதே யோசனை. ஆனல் இன்று நடந்த சங்கதியை, முத்துக் காமாக்ஷி, ஒருகே தன் பெற்ருேர்களிடம் தெரிவித்து அவர்கள் முகத்திலும் விழிக்கவொட்டாதபடி செய்துவிடுகிருளோ! யார்கண்டார்கள்? நம்மை இதுகாறும் பெருமையாக மதித்து

வந்தவர்களெல்லாம், இனிமேலாக என்னை ஒரு துராத்மா வென்று வெளியிற் சொல்லாவிட்டாலும், மனதிலாவது வைத்துக் கொள்வார்களே! அருப்புக்கோட்டைக்கு நான் போய் வருவது எப்படி? காந்திமதி மூலமாக, இதைத் தயவுசெய்து இரகஸ்யமாய் மனதில் அடக்கிக்கொள்ளென்று சொல்லியனுப்பவும் ஏதுவில்லாமற் போயிற்றே, அவளுடன் முத்துக்காமாக்ஷி முகந் திரும்பியாகிலும் பேசுவாளா" என்று தன் மனம்போன படியெல்லாம் வாய்விட்டுப் புலம்பிக்கொண்டிருந்து, அதற்கு வேறு நிவர்த்தி யொன்றும் காணப் பெறாதது கண்டு, "இனி மேல் உள்ளபடியாகிறது," என்று தேறியிருந்தான்.

மேற்சொல்லியபடி இராமசாமி பிரலாபித்துக்கொண்டு இருக்கும் சமையத்தில், அதே ஊரில் மறவர் தெருவில் ஒரு பெரிய வீட்டுத்திண்ணையில் இரண்டு மூன்று பேர் கூடிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் அவர்களுடைய பேச்சைக் காதுகொடுத்துக் கேட்போம்.

கருப்பத்தேவர்.—"அடலே, குருவி, நீ அங்கிட்டு எங்கிடாலெ போயிருந்தே?"

குருவித்தேவர்.—"வயிலுலெ வெள்ளம் பாஞ்சிருக்கா எண்டு பாத்திட்டுத் தோப்புப்பக்கமா வரச்சிலெ அங்கே ஆரோ பேச்சுப் பேசிக்கிண்டு இருக்க சத்தம் காதுலெ விளுந்திச்சி இக்நோம்போலே அது ஆரிண்டு ஒண்ணுக்கிருந்துக்கிண்டே கேட்டிருந்தேன். நம்ப புள்ளிக்காறன் சத்தம் கேட்டிச்சி. வரட்டுமிண்டே இருந்தேன். நீங்களும் வந்தியளா வெளியே வந்தான். வச்சேன் ஒரு போடு முதுகிலெ. அப்படியே நிண்டிட்டாண்டா!"

சோக்கத்தேவர்.—"நீயிதான் குருவி பாஞ்சாப்பிலெ பாஞ்சி

ருவியே தெரியாமலா வச்சான் ஒங்கப்பன் ஒனக்குப் பேரு."

க்ருப்பன்.—"வீரன் ஒனக்குக் காயிதம் எளுதியிருக்காண்டு சொன்னியே, என்ன எளுதியிருந்தான்?"

சோக்கன்.—"எனக்குத்தானே அவா முதலாளி ராமலிங்கம் செட்டியாரு அம்மாக்கமாருடனே காடுபட்டிக்கிச் சாமி கும்பிட வாறதுனலே, சில்லறை இல்லறை நடக்காமே பார்த்துக்கிடணுமெண்டு எளுதியிருந்தான்."

குருவி.—"அதுக்கா வுங்க பயலே கட்டாயப்படுத்தி காடுபட்டிக்கி அணிப்பிவச்சே? அவன் எப்பவந்து சேர்ந்தான்?"

சோக்கன்.—"நேத்துத்தேன், அவாளுக்குப் புறம்பாலெ தெரியாமெ தொயந்து வந்தேமிண்டு சொன்னன். அது இருக் கட்டும் புள்ளிக்காரனே சரியான போடு போட்டியா?"

கருப்பன்.—அதென்ன? இப்படி கேக்கிறே?"

சோக்கன்.—அதென்னவா? கம்மாயித்தண்ணிக்கிப் போயிட்டா அவன் கிட்டெ எளவு குடுத்தாப்பிலெ தானே இருக்கு. ரெண்டொரு முறட்டுப்பயக அவங்கிட்டே இருக்காக."

குருவி.—இருந்தாக்கிஎன்ன? சமயத்திலே வச்சி விட்டுறணும் நம்பளே விடவா? என்னமோ, என்னத்துக்கெண்டு இருக்கோம். ரெண்டு புள்ளேயுங்குட்டியுமாச்சா? உம்."

கருப்பன்.—சாதித்தொளிலு போயி சமுசாரித் தொளிலுக்கு வந்தாக்கி அதுக்குத் தக்கனெ இருக்கேண்டாமா? பளேய காலமா? நம்பப் பயக சத்தமே தட்டுப்படலியே?"

சோக்கன்.—காலத்துக்குத் தக்கனே கோலம், செட்டிமாறு எப்போ ஊருக்குப் போறுகளாம்? (தன் மகனைப் பார்த்து விசாரிச்சுக்கிட்டியா அடேலே.?"

சோக்கன்மகன்.—"ஆம, காளம்பெறப் போருகளாம். ரயிலுத்தானே!

சோக்கன்.—"ஆனாலும், என்னமாம் வந்திச்சிண்ணு, வீரன் சடச்சுக்கிறு வாண்டா, நீயுங் கஞ்சியைக் குடிச்சிட்டு, அவா ரயிலேறிப் போறவரைக்கும் அப்படியே போயி சாடையாப் பாத்திட்டுவா';

கருப்பன.—சாயங்காலம் ரெண்டு அம்மாக்கமாரு தோப்புப்பக்கமாப்போனுகளே! இந்தம்மாதான் ஒண்ணுச்சி. இன்னொரு அம்மாளைக் காணமே?"

சோக்கன்.—ஏ குருவி புள்ளி! வீட்டுலெ ஒருத்தி யிருக்காளே அவ ஆருரா?

குருவி.—அவளா புள்ளிக்காறன் வப்பாட்டியாம்.

சோக்கத்தேவன்.—"அவதேன் இந்தம்மாளே ஏமாத்திக் கூட்டிக்கிட்டு தோப்புக்குச் செவ்வெ போயிருப்பாளோ? அப்படித் தாண்டலே இருக்கும்.

கருப்பன்.—முந்தியொரு சாமியாரு இஞ்சே வந்திருந்தாரே. அவரு பேரென்ன-பரமந்தரா? அவருகிட்டே நம்பவீரன் நாக்குட்டிபோலெ காத்துக்கிண்டிருந்தானே. அவரு இப்ப எங்கே இருக்காரு."

சோக்கன்.—பளனிக்கிப் போகச்சிலெ தெரியும். அப்புறம் எங்கே போனுரோ. அவரைப்பத்தி, நம்ப வீரன் ரொம்ப ரொம்பச்சொல்லுவான்."

---

## 25-வது அத்தியாயம்

### லீலா

முந்தின அத்தியாயத்தில் கூறிய சங்கதிகள் நடந்த தினத்தில், மதுரை தெற்குமாசி வீதியிலுள்ள தேவாங்கர் மடத்தில் நடந்த சங்கதிகளையும் கவனிப்போம். நம்முடைய சங்கரனுலும், அவனுடைய உத்தம நண்பர்களாலும், ஆதரித்துவரப்படும், லீலாவென்கிற பெண்மணி, மதுரையில் அமெரிக்கன் மிஷன் பெண்பாடசாலையில் படித்து வருகிருள் என்பதை நமது நேயர்கள் யாவரும் அறிவார்கள். அவள் அன்றையத்தினம் பள்ளிக்கூடம்விட்டுத் திரும்பி மடத்துக்கு வந்து சாப்பிட்டுவிட்டு மேல்மெத்தையில் உட்கார்ந்து ஒருகதைப் புஸ்தகம் வாசித்துக்கொண்டிருந்தாள். அப்போது பரமானந்த யோகீஸ்வரர், திண்டுக்கல்லுக்கு ஒரு காரியமாகப் போய்த்திரும்பி மதுரைமடம் வந்துசேர்ந்தார். அவரைக் கண்டவுடன் லீலா திடீரென்று எழுந்து பயபக்தியுடன் வணங்கிச் சற்று தூரத்தில் மரியாதையுடன் ஒதுங்கி நின்ருள். பரமானந்தர் தம்முடைய மடியில் வைத்திருந்த விபூதிப்பையை அவிழ்த்துக் கொஞ்சம் திருநீறு எடுத்து மந்திரித்து அவள் கையிற் கொடுத்தார். அதை லீலா மிகுந்த பரிவுடன் இருகரமும் நீட்டி வாங்கிச் சிரசின் மீதும் நெற்றியிலும் அணிந்துகொண்டாள். லீலாவின் பணிவான குணமும் ஒழுக்கமும், கண்டு ஆச்சரியப்பட்ட பரமானந்தர், "ஏ பெண்மணி, நீயார், உன் பெயரென்ன ?" என்று கேட்டார். அதற்கு அவள், "என்னை லீலா என்று சொல்லுவார்கள் நான் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு—"என்று பதிலுத்தரம் செப்பி|முடியுமுன், கரையை

உடைத்துக்கொண்டெழும் வெள்ளம்போல, திடீரென்று தம் மிருக்கை விட்டெழுந்து ஓடிப்போய் அவளைக் கட்டித்தழுவி உச்சிமோந்து முத்தமிட்டு சந்தோஷத்தால் ஆனந்தபாஷ்பம் பெருக்கினார். லீலாவும் காரியம் இன்னதென்று உணராமல் தன்னைப்பெற்ற பிதாவைக் கண்டாங்கு மகிழ்ந்து ஒன்றும்பேச நாவெழாமல் அப்படியே கண்ணீர் உதிர்த்தனள். சிறிது நேரம் பொறுத்து பரமானந்தர் அவளுக்குச் சங்கரனுடைய நிலைமையனைத்தும் எடுத்துச்சொல்லி, "குழந்தாய், நீ என்னை இனிமேலாக ஸ்வீகாரத் தந்தையாகப் பாவித்துக்கொள். உனக்கு எவ்விதமான உதவிகள் புரிவதற்கும் நாம் சித்தமாய் இருக்கின்றோம்," என்று உரைத்தார். அளவுகடந்த ஆனந்தப்பெருக்கால் லீலாவுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றாமல், "எல்லாம் திருவுளச் செயல்" என்று மனதில் நினைத்து மவுனமுற்றிருந்தாள். கடைசியாய் அவளுடைய கல்வி யபிவிருத்தியைப்பற்றிக் கேட்டு ஆனந்தமடைந்து இருந்தார்.

மறுநாள் இராமலிங்கம் செட்டியார், லெட்சுமியம்மாள் முத்துக்காமாக்ஷியம்மை இவர்கள் சகிதம் திருமெயில் விட்டிறங்கி சரேலென்று மடத்துக்கு வந்து சேர்ந்து அங்கு எழுந்தருளியிருக்கும் பரமானந்தரைக் கண்டு பணிந்து சந்தோஷமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தார். அப்போது பரமானந்த சுவாமி, லீலாவை வரவழைத்து, "ஐயா, இது யார், தங்களுக்குத் தெரியுமோ?" என்று கேட்க, இராமலிங்கம் செட்டியார், "தெரியாது சுவாமி" என்று விடையளித்தார். உடனே யோகீஸ்வரர், அவளை இராமலிங்கம் செட்டியார் கரத்தில் ஒப்புவித்து, "லீலா என்னும் இந்தப் பெண்கள்சிகாமணியைத் தாங்கள் தங்களுடைய இரண்டாம் புத்திரியைப்

போல வைத்து ஆதரிக்கவேண்டியது. அந்தக் கடமையைக் கைக்கொள்ளத் தகுந்தவர் தாங்களே," என்று சொல்லவும், அவர் வாக்கியத்தை யன்புடன் ஏற்று இராமலிங்கம் செட்டியார், "தங்கள் சித்தம் என் பாக்கியம்" எனக் கூறி அவளை லெட்சுமி கையில் ஒப்புவித்தார். அப்பொழுது லெட்சுமியம்மாளும், முத்துக்காமாக்ஷியம்மாளும், மறுவார்த்தை யொன்றும் பகாாமல் அப்படியே முறையாகப் புத்திரியாகவும் சகோதரியாகவும் பாவித்துப் பேரின்பக்கடலில் மூழ்கியிருந்தார்கள். பிற்பாடு, லீலாவின் விருத்தாந்தம் முழுவதும் ஒன்றும் விடாமல் பரமானந்தர் மூலமாய்க் கேள்விப்பட்டு, அவள் பேரில் மிகுந்த பக்ஷம்காட்டி தங்கள் கூடவே மதுரையில் இரண்டு மூன்று தினம் வைத்திருந்து அப்பால் எல்லாரும் (பரமானந்தர் உட்பட) புறப்பட்டு அருப்புக்கோட்டை வந்து சேர்ந்தார்கள்.

இராமலிங்கம் செட்டியார் மதுரைக்குப் போயிருந்த காலத்து, அகஸ்மாத்தாக, கடவுளானவர் பரமானந்தர் மூலமாய்த் தமக்குக் கொடுத்த லீலாவை அதிக அன்புடன் தம்முடைய சொந்த மகள்போல் வளர்த்துவரும் காலத்தில் ஓர்நாள் பரமானந்தர் அவருடைய வீட்டுக்கு எழுந்தருளி பலபல சங்கதிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்தத் தருணத்தில்,

பரமானந்தர்.—"ஐயா, உங்களுடைய இரண்டாம்புத்திரி லீலாவுக்கு விவாகம் பண்ணும் பருவம் சமீபிக்கிறதே, அது விஷயமாய் என்ன யோசனை செய்திருக்கிறீர்கள்?"

இராமலிங்கம்.—"சுவாமி, யோசனை யென்ன வந்தது? பலவிடங்களில் இருந்தும் பெண்வந்து கேட்கிறார்கள். அவர்களில், தகுதியானவர்களுக்கு, தங்களுக்கும் இஷ்டம் இருக்கும் பக்ஷத்தில், கன்னிகாதானம் பண்ணிவைக்க வேண்டுவதுதான்" என்று சொன்னார்.

பரமானந்தர்.—"இவளுக்கு ஏற்ற நாயகன் திண்டுக்கல்லில் இருக்கிறான். அவன் பெயர் சபாபதி. அவனும் சிறு வயதில் தன்னுடைய தந்தையை இழந்தான். ஆயினும் தனக்கிருந்த கொஞ்சம் பொருளைக்கொண்டும், தன் தாயாருடைய தேக வுழைப்பினாலும், கொஞ்சம் கொஞ்சமாய்க் கல்விகற்று இப்போது மதுரையில் பத்தாவதில் வாசித்து வருகிறான். பலதடவைகளிலும் நான் அவனைக் கண்டு பேசியிருக்கிறேன். அவனுடைய சாந்தகுணமும், நல்லொழுக்கமும், இனிய பேச்சும், கல்வியில் விடாமுயற்சியும் கண்டு, வியப்புற்று, நான் அந்த மார்க்கமாகப் போகும்பொழுதெல்லாம், அவனைக்கண்டு பேசாமலாவது, அல்லது அவனுடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரியாமலாவது, போகிறதில்லை. நான் லீலாம்பாளைக் கண்டது முதல், அவனுக்கே அவளைப் பாரியாளாக்க நிச்சயித்து விட்டேன். சங்கரனுக்கும், இந்த லீலாவைச் சபாபதிக்குக் கலியாணம் பண்ணிவைப்பதில் அதிக சந்தோஷந்தான். விவாகமான பின் அவனை நம்முடைய குடும்பத்துடன் வைத்துக்கொள்ளலாம். இவனை விட்டால் வேறு என்மனதிற் கிசைந்த மாப்பிள்ளை, நான் சஞ்சாரம் பண்ணிவந்த இடங்களில் பார்த்தமட்டிலும், தென்படவில்லை. அப்புறம் உங்கள் மனோபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள்."

இராமலிங்கம்.—"சுவாமி தாங்கள் சஞ்சாரம் செய்யாத இடமில்லை. பார்க்காத புண்ணியஸ்தலங்களுமில்லை. கல்விக்களஞ்சியமாக இருக்கிறீர்கள். அத்துடன் தேச சஞ்சாரத்தால் உலகானுபவங்களையும் நன்றாய் உணர்ந்தவர்கள். சகல கார்யங்களையும், என்னைப்போல் அவசரப்

படாமல், நன்ருய் ஆலோசித்தறிந்த பின்புதான், வெளி யிடுவீர்கள். ஆகையால் தங்களது கருத்தினையே தெய் வப்பிரமாணமாகக்கொண்டு அதின்படி நடக்கத் தயாராக இருக்கிருேம். உங்கள் அபிப்பிராயத்தை மீறி நடக்க நாங்கள் அருகர் அல்லர். தங்கள் சித்தப்படியே செய்து முடிப்போம்" என்ருர்.

அப்படியே சௌமிய வருடம் ஐப்பசிமாதம் பதினேழாந் தேதி, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட சுபவேளையில் சபா பதிக்கு லீலாம்பாளை விவாகம் செய்வது எனத் தீர்மானித்து நிச்சயதாம்பூலமும் வழங்கியாயிற்று. கலியாணத்திற்கு வேண் டிய எத்தனங்களெல்லாம் குறைவில்லாமல் நடந்து வருகின் றன. எல்லாவூர்களிலுமிருக்கிற பந்து ஜனங்களுக்கும் சிநே கிதர்களுக்கும் விவாக முகூர்த்தப் பத்திரிகைகள் அனுப்பப் பட்டன. பெண்வீட்டில் கொட்டகை முதலானவைகள் எல் லாம் அலங்கரித்தாய்விட்டது. பந்து ஜனங்கள் எல்லாரும் பன் னிரண்டாம் தேதி முதல் வந்துகொண்டேயிருக்கிருர்கள். சங்கரனும் சென்னப்பட்டணமிருந்து வந்திருக்கிருன். அவர் களுடைய வருகையைக்கண்ட இராமலிங்கம் செட்டியார், மூத் தோருக்கு வந்தனுேபசாரம் புரிந்தும், இளையோருக்கு ஆசீர் வாதம் கூறியும், கலியாணத்துக்கு வரக்கூடியவர்களுக்கு ஏற் கனவே அநேக ஜாகைகள் அமர்த்திவைத்திருந்தபடியால், வீர னைக்கொண்டு அவரவர்களுக்கு ஏற்ற இடம் அமைத்துக் கொடுத்தும், வந்தவர்களுக்கு மனத்திருப்தியாக சகல சாமான் களையும் சப்ளைபண்ணும்படி வீரனையே நியமித்துவிட்டார். பரமானந்த யோகிகளின் ஆக்ஞைப்படி எல்லாம் வீரன் நடந்து அனைவோருக்கும் திருப்திபண்ணி வருகிருன். முகூர்த்தம் பதினேழாந்தேதி வெள்ளிக்கிழமை காலையில் குறிக்கப்பட்டிருக்

கிறது. சுபமுகூர்த்தவேளை கிட்டிவர, நவரத்னகசிதமாய் விளங்கும்படியாக ஜோடித்த மணவரைப் பந்தலில் சகலத்திராளும் வந்திருக்க, பௌரோகிதர்கள் ஓமம்வளர்க்கலாயினர். சபாபதிக்கும், லீலாம்பாளுக்கும் மங்களஸ்நானம் பண்ணுவித்து, மங்கிலியஸ்திரீகளால் நலங்கணிவித்தார்கள். நேர்த்தியான ஆடையாபரணங்களால் சிங்காரித்து மணவறையில் இருக்கச்செய்து, குரு, பௌரோகிதர் முதலிய பெரியோர்கள் அக்ஷதை தூவியாசிர்வதிக்க, இராமலிங்கம் செட்டியார் லீலாவைத் தாரை வார்த்துக் கொடுத்தனர். பிற்பாடு அங்குள்ளார் யாவரும் கண்டானந்திக்கும்படியாக சபாபதியின் கையினுல் லீலாம்பாளின் கழுத்தில் திருமங்கலியம் அணிவித்தனர்.இதின்பின் விவாகசம்பந்தமாய்ச் செய்யவேண்டிய சடங்குகள் அனைத்தும் குறைவில்லாமல் ஐந்துநாள்பரியந்தம் செய்துமுடித்தார்கள் சபாபதி தன்னுடைய தாயார் சகிதம் சுந்தரஞ்செட்டியார் வீட்டில் இருந்து சந்தோஷமாய்க் காலங்கழித்து வருகிறுன். அவனுடைய குடும்ப கார்யங்களெல்லாம் பரமானந்த சுவாமிகளின் மேற்பார்வையால் நடந்துவருகின்றன. சுந்தரஞ்செட்டியார் இருக்கும்போது எவ்வளவு சுறுசுறுப்புடன் வேலைகள் நடந்துவருமோ, அதேவிதமாக வீரன், சபாபதியின் வீட்டுக்காரியங்களை குறைவில்லாமல் நடத்திவருகிறுன். சங்கரன், கலியாண முடிந்து பத்துநாள் வரையில் இங்கே இருந்துவிட்டு மறுபடியும் சென்னைக்குத் திரும்பிவிட்டான். ஏனென்றுல் பங்குனிமாதத்தோடு அவனுக்கு பி. ஏ. பரீக்ஷையும் முடிவாகிறது. அல்லாமலும் இவ்வூர் சௌடாம்பிகை கோயிலில் கும்பாபிஷேகம் அநேகமாய் சித்திரைமாதத்தில் நடந்தேறும் போலிருக்கிறது. அதற்கு வேண்டிய எத்தனங்கள் குறைவின்றி மும்முரமாய் நடந்துவருகின்றன. பல ஊர்களிலும் பணம் வசூலித்துக்

கொண்டு வருகிருர்கள். கோபுரவேலையும் பூர்த்தியாகிவிட்டது. இன்னும் வர்ணமாத்திரம் கொடுக்கவேண்டியதிருக்கிறது. அதுவும் ஒரு வாரத்துக்குள் முடிவுபெறும். வாகன மண்டபமும் அநேகமாய்க் கட்டியாகிவிட்டது. ஸ்ரீ சௌடாம்பிகைக்கு வெள்ளியால் ரிஷபவாகனம் ஒன்றும் சொக்கலிங்கபுரத்தில் வைத்து தயாராக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கோவில் கும்பாபிஷேக வேலைக்கு வேண்டிய சாதனங்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு வருகிறபடியால், எப்படியும் சித்திரை மாதத்தில் நிறைவேறும். தானும் அதற்குள் பரீக்ஷை ஜோலியை முடித்துவிட்டால் சௌக்கியமாயிருக்குமென்று நினைத்து சங்கரன் பட்டணத்திற்குப் போய்விட்டான்.

---

## 26-வது அத்தியாயம்

### கும்பாபிஷேகம்

சென்னப்பட்டணத்தில் வாசித்துக்கொண்டிருக்கிற நம்முடைய சங்கரனுக்கும் கோபாலனுக்கும் பி. ஏ. பரீக்ஷை மார்ச்சு மாதத்தில் முடிந்தது. அருப்புக்கோட்டையில் நடக்கப்போகிற கும்பாபிஷேகத்திற்கு, தன்னுடைய தோழர்களையும், நேசர்களையும், தான் கூடவேயிருந்து கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று சங்கரன் சென்னையில் தாமசித்து வருகிருன். ஆனல் கும்பாபிஷேகம் எப்பொழுது நடக்கப்போகிறதென்று இன்னும் கடிதம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இப்படியிருக்க ஒருநாள் கோபாலன் வீட்டில், கோபாலனும் சங்கரனும் வேடிக்கையாகப் பேசி பொழுது போக்கிக்கொண்டிருக்கையில், அவர்கள் இரண்டு பேருக்கும் அருப்புக்கோட்டையி

விருந்து கடிதங்கள் வந்தன. அவைகளை இரண்டு பேர்களும் ஆவலுடன் பிரித்துப்பார்க்கையில், கடிதங்களுக்குள் ஒவ்வொருவருக்கும், மஞ்சள் வர்ணமுடைய பத்திரிகைகள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. மிகுந்த ஆத்திரத்தோடும் உற்சாகத்தோடும், அவைகளைக் கீழ்கண்டபிரகாரம் வாசிக்கலானார்கள்.

## திருநல்லூர் என்னும் அருப்புக்கோட்டை
## ஸ்ரீராமலிங்க சௌடேஸ்பரி
## கும்பாபிஷேக மஹோற்சவப் பத்திரிகை

---

திருச்சிற்றம்பலம்

சத்தியாய்ச் சிவமாகி தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெய
சுத்தியாகிய சொற்பொரு ணல்குவ
சித்தியானை தன் செய்யபொற் பாதமே

சிவநேயச் செல்வர்காள்,

பார்மகள் தனக்கோர் திலகமாயிலங்கும் பாண்டிய நாட்டின்கண், திருநல்லூரென்னும் அருப்புக்கோட்டைத் தேவாலயத்தில், எம்மனோரை வாழ்விக்கும் பொருட்டு எழுந்தருளியிராநின்ற, ஸ்ரீமத் அகண்டாகார சச்சிதானந்த சொரூபராய், அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராய், அனுதிமலமுத்தராய், நித்த வியாபகராய், சர்வக்ஞ சக்திமுதல் அனந்த சக்தியீருயுள்ள சுத்த சாட்குண்ய சம்பூர்ணப் பொருளாய் விளங்கும், சாக்ஷாத் இராமலிங்கேசுரர், அவரது அருட்சக்தியும், சர்வலோக ஜனனீயும், தேவலமுனிவர்க் கநுக்கிரகித்த பராசக்தியு

மான, ஸ்ரீசௌடேஸ்பரி, நடேசப் பெருமான், சிவகாமியம்மன், இதா மாயேசுர மூர்த்திகள் முதலிய கடவுளர்க்கும், சமயா சாரியர் முதலிய திருத்தொண்டர்களுக்கும்,

நிகழும் சாதாரணஸு சித்திரைமீ 8உ புதன்கிழமை யன்று பூர்வபக்ஷ ஏகாதசியும், பூரநக்ஷத்திரமும் கூடிய சுப தினத்தில், அன்று பகல் நாழிகை அ-க்கு மேல் ௰கவ-க்குள் மிதுனலக்கனத்தில் கும்பம்வைத்தும், ஷ தினம் உதயாதி நாழிகை ௰அஞ-க்கு மேல் உஉ-க்குள், சிம்மலக்கனத்தில் அஷ்டபந்தன, ஜெடிபந்தனப் பிரதிஷ்டை முகூர்த்தம் செய்தும், 16உ வெள்ளிக்கிழமை திரயோதசியும் அஸ்தநக்ஷத்திரமும், அமிர்தயோகமுங் கூடிய சுபதினத்தன்று பகல் நாழிகை ௰அ௭-க்கு மேல் உ௰-க்குள்ளாக சிம்மலக்கனத்தில், கும்பாபிஷேக மஹோற்சவம் நடத்தியும், மறுநாள் ஶ்ரீயன் சேர்மன் மெ. உ. அண்ணாமலை செட்டியாரவர்களின் உபயமாகிய வெள்ளி ரிஷபத்தில் ஸ்ரீ சௌடாம்பிகை யாரோகணித்து எழுந்தருளி வரும் திருவோலக்கமும், நடத்துவதாக நிச்சயித்திருப்பதால், இத்தகைய மஹாவைபவ விஷயத்தைத் தாங்கள் இஷ்டமித்திர பந்துஜன சகிதம் வந்திருந்து சிறப்பித்துப் பேரானந்தம் அடையும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம் தேவாங்கர் குலம்
ஐம்பதூர்-பட்டத்து - ஆ. ஆலப்பசெட்டியார்
உள்ளிட்ட "ஆலய பரிபாலன சபையார்"

---

இந்த சந்தோஷ சமாசாரத்தை, அவ்வூரில் தங்களுக்குத் தெரிந்த பெரிய மனுஷாளுக்கும், இஷ்டர்களுக்கும் தெரிவிக்க, அவர்கள் சந்தோஷமடைந்து தங்களுக்கும் கும்பாபிஷேகப் பத்திரிகை வந்திருப்பதாகவும், இந்த மகாவைபவத்

னைத் தாங்களும் கண்ணாரக்கண்டு களிக்க வெண்ணியிருப்ப தால், தடையின்றி வருவதாகவும் சொன்னார்கள். ஆகவே ஆங்குள்ளார் அனைவரும் பிரயாணத்துக்குவேண்டிய எத்தனங் கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியே ஒவ்வொரு ஊருக்கும் தவறாமல் பத்திரிகைகள் அனுப்பப்பட்டிருந்தபடியி னாலே அங்கங்கே உள்ளவர்களும் வருவதற்குத் தயாராயிருக் கிறார்கள். ஆனால்,

இப்போது அருப்புக்கோட்டையில் ஸ்ரீ சௌடாம்பிகை கோயிலில் என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன வென்பதையும் பார்ப்போம். கோபுரவேலை பூராவும் முடிந் தது. கோவிலைச்சுற்றி நாலுபக்கங்களிலும் அதியுன்னதமான பலத்த பந்தல்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆலயத்திற்கு முன்பாக மிகவும் நேர்த்தியா யலங்கரிக்கப்பட்ட பெரிய கொட் டகை யொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அலங்காரத்தை யுத்தேசித்தும், கும்பாபிஷேகத்திற்கு அயலூர்களிலிருந்து வரக்கூடிய ஜனங்களின் சௌகரியத்தைக் கருதியும் தெருக் ளில் எல்லாம் பந்தல் போட்டிருக்கிறார்கள். பந்தல் போடாத வீதிகளே கிடையாது.

கிருஷ்ணாஜில்லா வேட்டபாளையத்தில் வசிக்கும் தேவாங் கர் குலகுரு ஸ்ரீமான் ருத்திரமுனி சுவாமியவர்கள் கும்பாபி ஷேக காரியத்தைக் குறைவன்னியில் முடித்துவைப்பதாக ஒப்புக்கொண்டு தைமாதம் முதல் பூஜைமடத்தில் தங்கி வரு கிறார்கள். ஒவ்வொரு விக்கிரகத்திற்கும் உரிய பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் தயார் செய்யப்பட்ட இயந்திரத் தகடுகள், பிரதிஷ்டை தினத்துக்குமுன் ஒரு மண் டலம் வரைக்கும், பூஜை பண்ணியாகவேண்டியதிருப்பதால் அதற்கென்று குறிப்பிடப்பட்ட பௌரோகிதர்களால்பிரதி தின

மும், காலை, உச்சி, மாலை யாகிய மூன்று காலங்களிலும் பூஜிக்கப்பட்டு வருகின்றன. கோவிலுக்கு எதிராக விருந்த வீட்டுநிலத்தைக் கிரையத்துக்குவாங்கி, அதனை யாகசாலைக் கென்று ஏற்படுத்திவிட்டார்கள். குருசுவாமிகள் சமீபத்தில் இருந்துகொண்டு, யாகசாலை அமைக்கவேண்டிய கிரமமும், ஒவ்வொரு தேவதைகளுக்குமுரிய ஓமகுண்டங்களின் ஸ்தானமும், வடிவமும், நீளம், அகலம், கனம் அல்லது உயரம் இவைகளின் பரிமாணமும், இவ்வளவு இவ்வளவு இருக்கவேண்டுமென்று கொத்தர்களுக்கு ஆக்யாபித்து, சாஸ்திரரீதி அணுவளவும் பிசகாமல் கட்டிமுடித்தனர். அவைகளுக்கு அவசியமான ஆயிரக்கணக்கான மட்பாத்திரங்களும், பலவித அளவில் சேகரிக்கப்பட்டு, அவைகளுக்குச் சித்திரக் கோலங்கள் தீட்டி, பிரமாணப்படி நூல்சுற்றித் தயாரித்து வைத்திருக்கிறார்கள். ஓமகுண்டங்களுக்கு அவசியப்படுகிற நானாவித சமித்துக்களை, நாளாவட்டத்தில் பலவூர்களுக்கும் ஆட்களனுப்பி சேகரித்துவைத்திருக்கிறார்கள். கலசங்களுக்கு உபயோகப்படுத்தவும், முந்நூறுபாகம் கயிறுதிரிக்கவும், தருப்பைப் புல் கட்டுக்கட்டாகக் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருக்கிறது. அபிஷேகத்திற்குரிய பதார்த்தங்கள் வைப்பதற்கும், கோவில் பூஜைக்குவேண்டிய சாமான்கள் வைப்பதற்கும், வந்த ஜனங்களுக்கு யாதொரு இடைஞ்சலுமுண்டாகாதபடி கேட்டபொழுது இல்லையென்றுசொல்லாமல் கொடுப்பதற்கான உணவு பதார்த்தங்களும் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களும், வைப்பதற்கு கோயிலுக்குச் சுற்றிலுமுள்ள அநேகம் விடுதிகள் தயார்செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. அயலூர் ஜனங்களுக்குக் காலம் தவறாமலும், இடைஞ்சல் நேராமலும், வசதியாய் உணவு அளிப்பதற்கு இருபத்தேழு இடங்களைத்திட்டப்

படுத்தி, இன்ன ஊர்க்காரர்களுக்கு இன்ன இடமென்றும் குறிப்பிட்டு, அவரவர்களுக்கு உணவளிக்கும் விஷயத்தில் ஏதாவது குறைவு ஏற்பட்டால் அதைச் சரியாய் நடத்துவதாக ஒப்புக்கொண்டவர்கள் ஜவாப்தாரியாகவேண்டும் என்பதாகவும் ஏற்பாடாயிற்று. இந்த இருபத்தேழு உணவுச் சாலைகளிலும் ஒரே சமையத்தில் பந்திவைக்கக்கருதி மத்தியானம் அணிவேட்டு சப்தம் கேட்டவுடன் பந்திவைக்க வேண்டும் என்றும் வரையறை செய்யப்பட்டது. முந்திப் பிந்தி பந்திவைப்பவர்களுக்கு அபராதம்விதிக்கப்படுவதாகவும் தீர்மானிக்கலாயிற்று இவைகள் அல்லாமலும் புதிதாக வருகிறவர்களை எந்த ஊரென்று விசாரித்து, அவர்களுக்கு ஏற்பட்ட ஜாகைக்கு உபசாரத்துடன் கூப்பிட்டுக்கொண்டுபோகவும் பிரத்யேகம் ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். சமையல் பண்ணுவதற்கும், தாகசாந்தி செய்வதற்கும், சந்திகள்தோறும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து அவைகளுக்கு ஓயாமல் சப்ளை பண்ணுவதற்கு அநேக தண்ணீர்வண்டிகளை அமர்த்தியும், எந்த ராத்திரியில் தண்ணீர் வண்டிவந்தாலும் குழாய் நிரம்பியிருக்கும்படி சந்தைப்பேட்டைக் கிணற்று இயந்திரவேலை இடையறுமல் நடத்துவதற்கும் ஆட்கள் பிரத்யேகம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ஆகவே நாடோறும், நிமிஷந்தோறும் சாமான்கள்வந்து இறங்கியவண்ணமாகவே யிருக்கின்றன.

அபிஷேக தினத்துக்கு ஐந்துநாளைக்கு முந்தியே திருச்சுழிகையிலிருந்து ஒரு யானையும், அடுத்தநாள் எட்டயாபுரத்திலிருந்து வேறொரு யானையும் வந்துசேர்ந்தன. கொட்டகையில் அலங்காரமாய்க் கட்டவேண்டிய இலை, கொடி, காய், பழம், முதலிய நூதன தினுசுகள் மலையாள வட்டகையிலிருந்து கொண்டுவந்து நேர்த்தியாகச் சிங்காரித்தாய்விட்டது. இந்தப்

பதார்த்தங்களுள் சில இன்னவையெனத் தெரியாமல் இன்னும் அநேகர் இருக்கிறார்கள். அபிஷேக நாள் அடுத்து வரவும், இவ்வூர் ஜனங்கள், வேறூர்களிலிருக்கிற தங்கள் உற்றார்களுக்கும், இஷ்டமித்திரர்களுக்கும், கடிதம் எழுதியனுப்ப, அவர்கள் கால்நடையாகவும், வண்டிகளிலேறியும் வந்து இறங்கிக்கொண்டே யிருக்கிறார்கள். இப்படி வந்து இறங்கக் கூடியவர்கள், நாள் ஒன்றுக்கு, மூவாயிரம் பெயர்களுக்குக் குறைவில்லை. ஆனதினாலே ஜட்கா வண்டிகளுக்கு எப்போதும் ஏற்பட்ட சார்ஜ் ஒன்றரை ரூபாயாக இருந்தது போக, இப்பொழுது, நாலு ரூபாய் கொடுத்தும் வண்டி கிடைக்காமல் திண்டாடுகிறவர் அநேகர். இவ்விதமாக சென்னை இராஜதானியில் வடகோடியாகிய காங்கய நாடு முதல், தென்கோடியாகிய கன்னியாகுமரி வரையிலும் இருந்து ஜனங்கள் வந்திருக்கிறார்கள்; இன்னும் வந்துகொண்டே இருக்கிறார்கள்; இனிமேல் வரக்கூடியவர்களும் அநேகர் இருக்கிறார்கள். யாகாதி கிரியைகளை நடத்துவதற்கு உள்ளூர் புரோகிதர்கள் நீங்கலாக, சுமார் இருபது பெயர்கள் வரையில் சென்னபட்டணம், ஆற்காடு, பங்களூர் முதலான இடங்களிலிருந்தும் பௌரோகிதர்கள் வந்து சேர்ந்தார்கள். அவரவர்கள் செய்ய வேண்டிய வேலைகளையும், முடிக்கவேண்டிய ரீதிகளையும், குலகுரு ருத்திரமுநிசுவாமிகள் திட்டப்படுத்திக்கொடுக்க, அன்னவர்கள் சந்தோஷமாய் அந்த வேலைகளை யொப்புக்கொண்டு தயாராக விருக்கின்றனர்.

சாதாரண வருடம் சித்திரை மாதம் ஏழாந்தேதி செவ்வாய்க்கிழமை ...கது. கோடையிடிக்குச் சமானமாக ஓயாமல் படாங்கு வேட்டுப் போ...கொண்டிருந்தபடியால் ஜனங்களுக்குக் காது செவிடுபட்டுப் போயிற்று. ... இரவு

சோயிலைச்சுற்றி நான்கு திசைகளிலும், சில்லறைப் பலிக்கிரியைகள் செய்யவேண்டிய திருந்தபடியினாலே இராக்காலத்தில், பெண்டுகளாவது, சிறு பிள்ளைகளாவது வெளியேதிரியலாகாதென்று யாவத்திராளுக்கும் வீடுதவருமல் தெரிவிக்கலாயிற்று. பலிகாரியங்கள் எல்லாம் ஒழுங்காக அர்த்த ஜாமத்தில் நிறைவேறின.

புதன்கிழமை கும்பம் வைப்பதற்குக் குறிப்பிட்ட சுப வேளை அடுத்து வரவும், பல்லாயிரம் கும்பகலசங்களை, பௌரோகிதர்கள், ஒருங்கே யலங்கரித்து, அவைகளுக்கு ஏற்பட்ட பீடங்களில் வரிசை வரிசையாக அமைத்தார்கள். ஓம குண்டங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள், பலவகை ஸமித்துக்களால் அவைகளை நிரப்பி, புண்ணியாக்கினி மூட்டி, அததற்குரிய தேவதைகளைத் தியானித்து, மந்திர பூர்வமாய் ஆகுதிகளைத் தேவதைகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். அக்னிச்சுவாலை மேனோக்கி யெழும்பிச் சமீபத்தில் நிற்பவர்களையும் தகிப்பது போல ஓங்கி வளர்ந்து நின்றது. மத்தியானம் விக்கிரகப் பிரதிஷ்டைக்குரிய காரியங்கள் எல்லாம் செவ்வையாக நடந்தேறின. இனிமேல் அபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

இராத்திரி காலங்களில், கோவிலைச்சுற்றி, பஜனை கோஷ்டிகள் ஒரு பக்கம்; கதாப்பிரசங்கம் இன்னொரு பக்கம். மேளக்கச்சேரி (போட்டியின்பேரில்) வேறொரு பக்கம்; சிறுவர்களின் தேவார பஜனை மற்றொரு பக்கம்; அபிஷேகப் பிரபாவப் பிரசங்கம் வேறொரு பக்கம், சதுர்க்கச்சேரி இன்னொரு பக்கம்; இப்படியாக வந்த ஜனங்களுக்கு நல்ல கால[illegible]பம் நடந்து வருகின்றன. அதில் செலவாகி[illegible]தனம், பன்னீர், அத்தர், தாம்பூலம் இ[illegible]றுக்குக் கணக்கு வழக்கு கிடையாது.

தோன்றியபடி யெல்லாம் எதேஷ்டமாகச் செலவழிக்கிறார்கள். "இவ்வளவு ஆடம்பரம் வேறு எந்த விடங்களிலும் நடந்திராது நடக்கவு மாட்டாது" என்று புகழ்ந்து கொண்டாடாதார் இல்லை. இப்படியிருக்க,

பத்தாந்தேதி வெள்ளிக்கிழமை நடக்கவேண்டிய அபிஷேக வேளை அணுகிற்று. தெருவெங்கும் பந்தல் போட்டிருந்தமையால், கும்பத்துக்கு அபிஷேகம், பூஜை முதலானவைகள் நடத்தப்படுவதைப்பார்க்க வழியில்லாமல், ஜனங்கள் அவரவர்கள் வீட்டு மேல்மெத்தைகளில் தகுந்த இடங்களைத் தெரிந்து கொண்டு தெரிசனம் பண்ணக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சங்கரன் முத்துக்காமாக்ஷி சமேதனுகவும், சபாபதி லீலாம்பாள் சமேதனுகவும், கோயிலுக்கு அடுத்த மேற்குக்காரைவீட்டின் மேல் மெத்தையில் நிற்கிறார்கள். தென்பாரிசத்துக் காரைவீட்டின்மேல் இராமலிங்கம் செட்டியார், லெட்சுமியம்மாள், பட்டணம் ஜெகந்நாதன் செட்டியார், இவர்கள் நிற்கிறார்கள். பரமானந்தர், கோபாலன் முதலியோர் கோயில்மேல் ஏறிக் கோபுரத்தடியில் நிற்கிறார்கள். இப்படி எல்லா ஜனங்களும் வீட்டு மேல் நிற்குங்காக்ஷி யெவ்வாறிருந்ததென்றால், மேல் லோகவாசிகளான முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களும், யக்ஷ, கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தர்வ, சித்த, வித்தியாதரர்கள் எல்லாம், பூலோகத்தில் இந் நல்லைமாநகரில் அமர்ந்தருளியிராநின்ற ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரியின் திருக்கோயில் கும்பாபிஷேக மஹோற்சவத்தைக் கண்டு ஆனந்திக்கும்பொருட்டு, அவரவர்கள் பத்தினி சமேதராய் தத்தம் வாகனங்களில் ஊர்ந்து வந்து அந்தரமாக நின்று இருப்பதை யொத்திருந்தது. குறித்த சுபவேளையில் ஒரு விநாடி கூடப் பிசகாதபடி அபிஷேகம், பூஜை முதலானவைகளெல்லாம்

விதிப்படி நடந்தன. "இவைகளைக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம் அதனால், உய்ந்தோம், உய்ந்தோம்", என்று ஒவ்வொருவரும் தங்கள் வாய்விட்டுச்சொல்லி பரமானந்தக்கடலில் மூழ்கியிருந்தார்கள்.

மறுநாள் இரவில் ஸ்ரீ சௌடாம்பிகை, புதிதாய் நியமிக்கப்பட்ட வெள்ளி ரிஷபத்தில் ஆரோகணம் செய்து நகர்வலம் வந்த காக்ஷியை இத்தன்மையது என்று என்னாற்கூற வியலாது. அவ்வளவு சிறப்பாக விருந்தது. பார்த்தவிடமெங்கும் ஜனத்திரள். "இவ்வளவு ஜனங்களும் இந்த வூரில்தானா இருக்கிறார்கள்? இத்தனை பெயர்களுக்கும் இவ்வூர் எப்படி இடங்கொடுத்தது! இந்தவூர் ஏற்பட்ட கால முதலாய், இந்நாள் வரையிலும், இவ்வளவு கூட்டம் இங்கே ஒருபோதும் கூடினதில்லை" யென்று வியந்து கொண்டாடினார்கள். நகர்வலம் வந்து கோவிற் சந்நிதியை யடுக்கவும், இராமலிங்கம் செட்டியார் அம்பிகையை நோக்கி,

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன தனதான

வண்டாடு கார்குழலும் வாணுதலு மாரனுயர்
மென்சாப நேர்புருவ வேல்விழியு மூசல்புரை
வண்காது மேசுகுமிழ் நாசிகளு மாடியென வுரைகூற

மண்டோர்க (போலமரை வாயுமலி தூதுவளை
யென்றோது தீதில்கனி யாமிதழ்கள் சூழ்பழனம்
வந்தாடு வால்வளையி னாரநகை தேமொழியு முலகோர்கள்

கொண்டாடு வாமதிய மேய்முகமு நீள்கமுகு
தன்சாய லார்மிடறும் வேயொடிமை தோளுமருள்
குண்டீரன் வீணைகர மாழ்திறவு கோல்விரலு மெதுவேனை

கொஞ்சாடு மோககிளி வாய்நகமு மாரமணி
சிந்தாத கோகனக மாமுலையு நீலவொளி
குன்றாத சூசுகமு நாளமுறழ் ரோமவரி யழகாலே

தண்டார்ச ரோருகமெ னுபியுட னுவிலையை
மிஞ்சாத சாண்வயிறு நூலிடையு மாழியிது
சந்தேக மேதெனவே கூறுமல்கு லுகமுட னிணையாக

தங்கீடில் தூணமதை யேய்துடையு மேல்வருமு
முங்கால்க ளாமலவ னேகணைவ ரால்பரடு
சந்தான மேவுதலை தாண்முளரி மாதர்களி னுருவாலே

திண்டாடு மேழையெனை வாழவருள் தேவலவர்
கும்பாபி ஷேகமுறு கோதெவிளர் பூதிதுவர்
செந்தூர மீதிலணி தேவிபரி பூரணியெ கவுமாரி

சிங்கேறு மீதிவர் தேனெயபி ராமர்தொழு
லிங்கேசர் பாகமுறு மானெவளம் யாவுநிறை
சிங்கார மானநலை யூரிலமர் பாயொளிச வுடதேவி

எனத் தோத்திரம் புரிந்து எத்தித் துதித்தனர். ஆனால் இதில் ஒரு விசேஷமென்னவென்றால், இந்த விசேஷம் நடந்து வருகிற ஐந்து தினங்களிலும், களவு முதலானவைகளாவது, வேறு எந்த விதமான துர்நிமித்தமாவது ஏற்படாதிருந்தபடியினாலே, அந்த அம்பிகைதானே தானாய் எல்லாச்சிறப்புக்களையும் அங்கீகரிக்கிறாளென்று அநேகர் அந்த அம்பிகைமீது பக்தியிற் செழித்து மிஞ்சினார்கள். "ஆதிகாலத்தில் சகல அண்டங்

களையும் தம்முதாத்தில் அடக்கிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை யொத்திருக்கிறது இப்போது இந்தத் திருநல்லூர். இவ்வூருக்கு இப்பெயரே தகும்" என்று புகழ்ந்தனர் பலர். "இவ்வளவு காரியங்களும், இந்த ஜகதீஸ்வரியின் அருளில்லாவிடில் நடந்தேறியிருக்கமாட்டாது, இது நிச்சயம்" எனப் பெருமையுடன் பேசிக்கொண்டாடினார்கள் அநேகர்.

---

## 27-வது அத்தியாயம்

### முடிவு

கும்பாபிஷேகத்திற்குப் பிறகு நடத்தவேண்டிய மண்டலாபிஷேகமும் அதிக ஆடம்பரமாக முடித்தபின்னர், கோவில் தானீகர்களுக்கும், பௌரோகிதர்களுக்கும், இதாளுக்கும், செய்யவேண்டிய மரியாதைகளும், வெகுமானங்களும் ஒழுங்காய் நடத்தினார்கள். எந்தவிடத்தில் பார்த்தபோதிலும், ஜனங்கள் கும்பல் கும்பலாய்க் கூடிக்கொண்டு, கும்பாபிஷேக மஹோத்சவம் அதிவிமரிசையாக நடத்தப்பட்ட விதத்தைப் பற்றியும், அவரவர்கள் ஒப்புக்கொண்ட ஜோலிகளைத் தங்கள் தங்களால் இயன்றமட்டும் சாமார்த்தியமாய் யாதொரு குறையும் ஏற்படாமல், செய்து திருப்திப் படுத்தியவிதங்களைப் பற்றியும், இவ்விதமான ஒழுங்குடன் கும்பாபிஷேகம் நடத்தின தினைதைப்பற்றி மற்றையோர்கள் சொல்லிக்கொள்ளுகிற அபிப்பிராயங்களைப்பற்றியும், பேசிக்கொண்டிருக்கிறார்கள். பாமானந்த சுவாமி கூறியதாவது, "நாமும் பலவிடங்களிற் சஞ்சாரம்பண்ணி, அநேக புண்ணிய ஸ்தலங்களையும், ஆங்காங்குள்ள விசேஷங்களையும் நேரில் கண்ணுற் பார்த்தும், கேள்விப் பட்டுமிருக்கிறோம். ஆனால், இவ்வளவு மகாத்மியத்துடன் ஒரு ஸ்தலத்திலும் நடந்ததாக அறிந்திலம்."

அப்போது அங்கு கூடியிருந்தவர்களிற் சில பெரிய மனுஷாள், "ஸ்வாமி, தாங்கள் துறவற வாச்சிரமமடைந்து, யாதொரு கவலையுமில்லாமல், அநேக புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து வந்திருக்கிறீர்கள். அதிகமான அநுபவஸ்தர்களும்கூட, அப்படியிருப்பதால் தங்களைத் தரிசிக்கப்பெற்றதே எங்களுடைய பாக்கியவசம். தங்களுக்கு இன்னவூர்தான் சொந்தமென்றில்லை. எல்லாம் சொந்தவூர்தான். அங்ஙனம் இருப்பதினாலே, தாங்கள் இனிமேலாக இந்தவூரில் எங்கள் மத்தியில் இருந்து, இல்லறத்தில் இருப்பவர்களான எங்களுக்கு வேளாவேளைகளில் இதோபதேசம் செய்து எங்களைக் கிருதார்த்தராக்கும்படி வணக்கமாய்ப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று பலவாறாக இரந்துவேண்டிக்கொண்டதின்பேரில், நம்முடைய பரமானந்தர் மிகவும் சித்தங்களித்தவராய், "அவ்விதமே, உங்கள் இஷ்டப்படிசெய்கிறது. நமக்கு எங்கிருந்தால்தான் என்ன? ஸ்ரீ சௌடாம்பிகையின் திவ்விய தரிசனம் நாடோறும் செய்துகொண்டு, இங்குதானே இருந்து விடுகிறோம்" என்று, அவர்கள் அளவற்ற சந்தோஷமுறும்படியாக வாக்களித்துவிட்டு, இராமலிங்கம் செட்டியாரது இல்லத்திற்கு எழுந்தருளினார்.

அப்போது அங்கே இராமலிங்கம் செட்டியாரும், அவரது பிரியபத்தினியாகிய லெட்சுமியம்மாளும் தங்களுடைய குடும்ப சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். முத்துக்காமாக்ஷியம்மை சமையல் அறையில் சாதம் சமைத்துக் கொண்டிருந்தாள். ஸ்நானம் பண்ணப்போயிருந்த சங்கரன் அப்பொழுதுதான் வீட்டுள் பிரவேசித்தான். பரமானந்தர் சங்கரனையனுப்பிச், ச்பாபதியையும் லீலாம்பாளையும் அழைத்து வரும்படி ஆக்யாபித்தார். அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் எல்லாம், என்னசங்கதி நடக்கப்போகிறதோவென ஆச்சரியமடைந்திருந்தார்கள். பரமானந்தர், அவர்கள் அனைவோரையும், அவரவர்கட்கேற்ற விடங்களில் உட்காரவைத்து, அன்னோரை யன்புடன்நோக்கி, "நான் உங்களுக்கு அந்தரங்கமான சங்கதி யொன்று சொல்ல வுத்தேசித்து இருக்கிறேன் அதைக்கேட்டுப் பரிபாலிக்கவேண்டியது உங்களில் ஒவ்வொருவருடைய கடமையாகும். அதாவது, (இராமலிங்கம் செட்டியாரைநோக்கி) "உங்களுடைய தங்கைபுருடனும், சங்கரனைப் பெற்ற தந்தையுமாகிய, சுந்தரம் செட்டியாரைக்குறித்து சில சமாசாரம் நான கேள்விப்பட்ட மட்டிலும் சொல்லுகிறேன்.

"அவர் வியாபாரநிமித்தம் கொளும்புக்குப் போகும் போது, அவர் ஏறிச்சென்ற மரக்கலமானது, கடல்நடுவில் திடீரென்று உண்டாகிய ஒரு சுழற்காற்றிலகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது,

> "நீரிற்குமிழி யிளமை நிறை செல்வம்
> நீரிற்சுருட்டு நெடுந் திரைகள்—நீரில்
> எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
> வழுத்தாத தெம்பிரான் மன்று"

என்றாற்போல, துன்பமே நிறைந்த இப்பிரபஞ்சவாழ்க்கையின் நிலைமை, நீர்மேற் குமிழிபோல் நிலையற்றதெனக் கண்டறிந்து,பகவான் அடித்துணைகளைக் கதியெனப்பற்றி ஸ்தோத்திரம் புரியக் கருணாநிதியானவர் அக்கப்பலில் உள்ளார் மீது கிருபை பாலித்துக் கொடும்புயலை யொருவாறு தணியச்செய்தனர். இது முதலாகச், சுந்தரம் செட்டியார், இகவாழ்வைச் சதமென நம்பாது, கடவுளைப் பணிவதும், பரோபகாரம் புரிவதும், எடுத்த ஜன்மத்தை ஈடேறவைக்கும் என்று நினைத்து அதின்படி நடக்க எப்பொழுது வாய்க்குமென்று எதிர்பார்த்